[illegible]

[illegible]

# எபேசியர்

ரன்சு பீட்டர்மேன்

[illegible]

# எபேசியர்

## ரஸ்டி பீட்டர்மேன்


எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் வரைக்குறிப்பு

அறிமுகம்

தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் (1:3, 4)

சுவிகரிக்கப்பட்டவர்கள் (1:6)

மீட்கப்பட்டவர்கள் (1:7,8)

சுதந்திரம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது (1:11ஜீ14)

ஆவிக்குரிய வளர்ச்சியை உற்சாகப்படுத்துதல் (1:15, 16)

பிரகாசமுள்ள கண்கள் (1:17ஜீ19)

வல்லமையின் மகத்துவம் (1:19ஜீ23)

மரித்தவர்கள் அல்லது ஜீவனுள்ளவர்கள் (2:1ஜீ7)

கிருபையினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் (2:8ஜீ10)

மூன்றாம் இனம் (2:11ஜீ18)

பரிசுத்த ஆலயம் (2:19ஜீ22)

சபைக்கு ஒப்புக்கொடுத்தல் (3:1ஜீ13)

அன்புகூருவதற்ககு பலன் (3:14ஜீ21)

தேவனுடைய மக்களாக வாழ்தல் (4:1)

ஒருமைப்பட்டிருத்தல் (4:2ஜீ6)

சபை வளர்ச்சியின் நியமனங்கள் (4:7ஜீ16)

உங்கள் அலமாரியைக் கவனியுங்கள் (4:7ஜீ24)

கோபம் கொள்வதற்குச் சரியான வழி (4:25ஜீ27)

மக்களைக் கட்டியெழுப்புபவர்கள் (4:29ஜீ32)

தூய்மை (5:1ஜீ7)

“வெளிச்சத்தின் பிள்ளைகள்” (5:8ஜீ13)

விழித்தெழுவதற்கான வேளை(யாயிற்று) (5:14ஜீ18)

இன்னிசை ஏற்படுத்துபவர்கள் (5:19, 20)

பரஸ்பரம் கீழ்ப்படிதல் (5:21)

மனைவிகளுக்கு ஒரு வார்த்தை (5:22ஜீ24)

கணவராய் இருத்தல் (5:25ஜீ33)

பிள்ளைகளுக்குக் கட்டளை (6:1ஜீ3)

தந்தையருக்குத் தேவனுடைய வார்த்தை (6:4)

கிறிஸ்தவர்கள் வேலைக்குச் செல்லும் பொழுது (6:5ஜீ9)

இது ஒரு யுத்தம்! (6:10ஜீ12)

தேவனுடைய சர்வாயுத வர்க்கம் (6:13ஜீ18)

# எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் வரைக்குறிப்பு

*அறிமுகம் (1:1, 2)*

- I. *தேவனுடைய புதிய மனுக்குலத்தின் மகிமை (1:3-3:21)*
  - *அ. இயேசுவின் மூலம் மீட்பதற்கான தேவனுடைய திட்டம் (1:3-14)*
    1. *பிதா (1:3-6)*
    2. *குமாரன் (1:7-12)*
    3. *பரிசுத்த ஆவி (1:13, 14)*
  - *ஆ. மீட்கப்பட்டவர்களுக்கு, நன்றி செலுத்தலின் ஜெபமும் வேண்டுதலும் (1:15-23)*
    1. *விசுவாசம் மற்றும் அன்பிற்காக நன்றி செலுத்துதல் (1:15, 16அ)*
    2. *வேண்டுதல் (1:16ஆ-23)*
  - *இ. மீட்கப்பட்டுள்ள மக்கள் (2:1-22)*
    1. *பாவிகள் ஜீவனுக்கென்று உயிர்ப்பிக்கப்படுதல் (2:1-10)*
    2. *யூதர்களும் புறஜாதியாரும் ஒரே புதிய மனிதனாக இணைக்கப்படுதல் (2:11-22)*
  - *ஈ. மீட்கப்பட்ட மனுக்குலத்திற்கான தேவனுடைய அநாதி தீர்மானம் (3:1-12)*
  - *உ. மீட்கப்பட்டவர்களின் பலத்திற்காக ஜெபம் (3:13-21)*
- II. *தேவனுடைய புதிய மனுக்குலத்தின் நடை (4:1-6:20)*
  - *அ. ஒருமைப்பாட்டில் (4:1-6)*
  - *ஆ. வரம் பெற்றதன்மையில் (4:7-16)*
  - *இ. பரிசுத்தத்தில் (4:17-5:17)*
  - *ஈ. ஆவியில் (5:18-21)*
  - *உ. இல்லற உறவுகளில் (5:22-6:9)*
    1. *மனைவியர் (5:22-24)*
    2. *கணவர்கள் (5:25-33)*
    3. *பிள்ளைகள் (6:1-3)*
    4. *பெற்றோர்கள் (6:4)*
    5. *வேலைக்காரர்கள் (6:5-8)*
    6. *எஜமானர்கள் (6:9)*
  - *ஊ. பொல்லாங்குடனான யுத்தத்தில் (6:10-20)*
    1. *தேவனுடைய பலம் மற்றும் சர்வாயுத வர்க்கத்தின் அவசியம் (6:10-13)*
    2. *தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தின் இயல்பு (6:14-17)*
    3. *ஜெபத்திற்கான அவசியம் (6:18-20)*

*முடிவுரை (6:21-24)*

# அறிமுகம்

எபேசியருக்கு எழுதிய நிருபமானது இன்றைய நாட்களில் சபையினால் கவனத்துடன் வாசிக்கப்பட வேண்டியதற்குத் தகுதியானதாக உள்ளது. நாம் அடையாளப்படுத்துவதின் இடர்ப்பாட்டின் மத்தியில் இருப்பவர் களாய் நம்மைக் காண்கின்றோம், அதிலும் சிறப்பாக, சபையின் இயல்பை யும் கிறிஸ்துவுக்குள் நமது அழைப்பின் தனித் தன்மையையும் அடையாளப் படுத்துவதின் இடர்ப்பாட்டில் இருக்கிறோம். இன்றைய நாட்களில் சராசரியான சபை உறுப்பினர் சபையினிடம் உயர்தரமான மதிப்பீட்டைப் பிணைத்திருப்பதில்லை. எவ்வகையானதொரு சபையின் இணைவுமில்லா மலேயே தங்கள் சொந்த மதக் கண்ணோட்டங்களை அடையக் கூடுமென்று அமெரிக்கர்களில் 81 சதவிகிதம் பேர் நம்புகின்றார்கள் என்று புள்ளியியல் விவரங்கள் தெரிவிக்கின்றன.[1] சபை என்பது அவர்களின் வாழ்வில் காரணியற்ற தன்மை கொண்டதாக உள்ளது, அவர்கள் அக்கண்ணோட்டத்தில் பிரச்சனை எதையும் காணுவதில்லை. கிறிஸ்தவர் கள் பலரது சிந்தைகளில் கர்த்தரின் சபையானது அவர்களுக்கான தனது மிகுவனப்பை இழந்து போகின்ற அளவுக்கு இந்த எண்ணப்போக்கானது மெதுவாக ஆக்கிரமித்துள்ளது.

கர்த்தருடைய சபையின் பல உள்ளூர்க் குழுக்கள் உலகம் சார்ந்தவை யாய் ஆகியுள்ளன என்பது, எபேசியருக்கு எழுதிய நிருபம் நம் கவனத்தைப் பெறத் தகுந்ததாயுள்ளது என்பதற்கு இன்னொரு காரணமாகும். சபையைப் பற்றிய தேவனுடைய கண்ணோட்டம் தவற விடப்பட்டுள்ளது. தேவன் தமது சபை எவ்வாறு இருக்கும்படி விரும்புகின்றார் என்பதைக் காண வேதாகமத்தை ஆய்வு செய்வதற்குப் பதிலாக, சிலர் சபைக்கென்று தாங்கள் தேர்ந்து கொள்கின்ற உருவகத்தின்படி அதை வடிவமைக்க விழைகின்றனர். உலகப் பிரகாரமான சமுதாயத்தில் பெருகி வரும் "தேவைகள்" மற்றும் "அக்கறைகள்" ஆகியவற்றினால் அதிகமதிகமாய் விவரிக்கப்படும் நோக்கமும் ஊழியமும் கொண்ட நிறுவனமாக சபையானது மாற்றப்பட்டு விடுகின்றது. கிறிஸ்தவர்களைக் கவருவதற்காகச் சபைக்குழுமங்கள் சந்தை ஆய்வு, தேவைகளை மதிப்பீடு செய்தல், மற்றும் திட்ட மேம்பாடு ஆகிய வற்றைச் செய்து கொண்டிருந்தாலும் அதற்கு நேர்மாறான வகையில் மக்கள் தங்கள் வாழ்வில் உயர்ந்த முன்னுரிமைகளின் பட்டியலில் சபையை வைப்பதில்லை.

எல்லாக் கிறிஸ்தவர்களும் சபைக்கான தங்கள் மதிப்பையும் அன்பை யும் இழந்து போய் விடவில்லை என்பது நிச்சயம். கர்த்தருடைய சபையின் எல்லா உள்ளூர்க் குழுமங்களும் உலகப்படியான சிந்தனையில் மாறிப் போய் நிலைத்திருப்பதில்லை. எல்லா சபைகளும் தங்கள் தனித்தன்மையை இழந்து போயிருப்பதில்லை, ஆனால் தேவன் தமது சபை மற்றும் தமது மக்களுக்காகத் தம்முடைய சிந்தையில் கொண்டிருப்பவற்றைத் தவற விடும் அபாயத்தை எல்லாக் கிறிஸ்தவர்களும், எல்லா உள்ளூர் சபைக்குழுமங்

களும் எதிர்கொள்ளுகின்றன. சபை என்பது மக்கள் - மீட்கப்பட்ட மக்கள் -என்பதை எபேசியருக்கு எழுதிய நிருபமானது நமக்கு நினைவு படுத்துகின்றது. சபையானது தேவனுடைய புதிய மனுக்குலமாயிருக்கிறது. இதனுடைய மகிமையை எபேசியருக்கு எழுதிய நிருபம் உறுதிப் படுத்துகின்றது. இது சபையின் இயல்பு பற்றிய பவுலின் விவரிப்பை இந்த அற்புதமான புதிய மனுக்குலத்தின் இயல்பு என்ற வகையில் உள்ளடக் குகின்றது. அவர் கிறிஸ்தவர்களை தேவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்படி கொண்டு வந்துள்ள புதிய மனுக்குலமாக வாழும்படி அழைத்தார்.

புதிய ஏற்பாட்டின் நிருபம் ஒன்றிடம் நாம் வரும் போதெல்லாம், அடிப்படையான ஐந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட வேண்டி யுள்ளது: (1) அந்த நிருபத்தை எழுதியது யார்? (2) யாருக்கு அது எழுதப் பட்டது? (3) அது எப்பொழுது எழுதப்பட்டது? (4) அது ஏன் எழுதப் பட்டது? (5) அதன் அடிப்படைச் செய்தி என்ன? எபேசியருக்கு எழுதிய நிருபம் பற்றியும் தேவனுடைய புதிய மனுக்குலத்தைப் பற்றி அது கூறுவதற்குக் கொண்டுள்ளதென்ன என்பதைப் பற்றியும் நமது படிப்பை நாம் தொடங்கு முன்பு நாம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

## எழுத்தாளர்

எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதல் வசனமே அதன் எழுத்தாளரை அடையாளப்படுத்துகின்றது: “தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக” (1:1, 2). கடிதங்களை எழுதத் தொடங்குகையிலேயே அவற்றை எழுதுபவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் காட்டுவது என்பது முதல் நூற்றாண்டில் பொதுவான ஒரு வழக்கமாய் இருந்தது. அந்த நடைமுறையைப் பவுல் பின்பற்றினார்.

இயேசு பன்னிருவருக்குக் கொடுத்திருந்த பட்டம் ஒன்றைப் பவுல் தமக்கு(ம்) உரிமைகோரினார் (லூக். 6:12, 13). அவர் சிறப்பாய்த் தேர்ந்து கொள்ளப்பட்டவரும், அதிகாரத்துவமான செய்தியை அளிக்க அனுப்பப் பட்டவருமான “அப்போஸ்தலராக” (Gk.: *apostolos*) இருந்தார். பவுல் எழுதியவற்றிற்குப் பின்னால் அதற்கான அதிகாரம் இருந்தது. அது பவுலின் சொந்த கொள்கைகள், கருத்துக்கள், அல்லது ஆலோசனைகள் என்பதைக் காட்டிலும் மேலானதாயிருந்தது. அவர் கொடுத்த செய்தியானது அவருக் குள்ளிருந்து தோன்றியிருந்ததில்லை; பவுலின் செய்தியானது அவருக்கு இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டிருந்தது. அவரது எழுத்துக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பதாகவே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பவுல் தமது அப்போஸ்தலத்துவமானது ஏதோ தாமாகவே ஏற்படுத்திக்

*கொண்டதாக இருந்ததில்லை என்பதைத் தமது வாசகர்கள் அறியும்படி அனுமதித்தார். அவர் அந்தப் பதவிக்காக விண்ணப்பித்திருந்ததில்லை. எந்த ஒரு சபையும் அவரை அதற்கு நியமித்திருந்ததில்லை. அதற்குப் பதிலாக, அவர் மிக உயர்ந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு அப்போஸ்தலரா யிருக்கும்படி வந்தார்: பிதாவாகிய தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் கட்டளையினால்.*

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் படிக்கும் பொழுது, நம்மை நாமே பரிசுத்த களத்தில் நிற்பவர்களாய்க் காண வேண்டும். நாம் வாசிக் கின்ற வசனங்கள் வெறுமனே அழிந்து போகின்றவர்களின் வார்த்தைகளாக இருப்பதில்லை. அவை தேவனுடைய வார்த்தைகளாக உள்ளன. அப்போஸ்தலரான பவுல் எழுதியவற்றின் மூலம் தேவனே நம்மிடம் பேசுகின்றார்.*

## பெற்றுக் கொண்டவர்கள்

*இந்த நிருபமானது, "எபேசுவில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளா யிருக்கிற பரிசுத்தவான்களுக்கு" எழுதப்பட்டது. பவுல் தமது வாசகர்களைப் பற்றி என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள்.*

*முதலாவது, அவர்கள் "பரிசுத்தவான்களாய்"* (Gk.: *hagios*) *இருந்தார் கள். இந்த வார்த்தையானது மற்ற யாவருக்கும் மேலாக இருக்கின்ற(னர் என்ற வகையிலான) கிறிஸ்தவர்களின் ஒரு விசேஷித்த வகுப்பினரைக் குறிப்பதில்லை. பரிசுத்தவான்கள் என்பவர்கள் சாதாரண கிறிஸ்தவர் களுக்கு மேலாக பரிசுத்த தன்மை உயர்ந்து காணப்படும் ஒரு விதிவிலக்கான கிறிஸ்தவர்களின் சிறு குழுவினர் என்பதாக இருப்பதில்லை. "பரிசுத்தவான்" என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்துகின்ற ஒரு பட்டம் ஆகும். தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற ஒவ்வொருவரும் அவன் அல்லது அவள் தாம் தேவனுக்குரியவராகப் பிரித்தெடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்தில் ஒரு பரிசுத்தவானாகவே இருக்கின்றார். இச்சொற்றொடரானது முதன்முறையாக இஸ்ரவேல் இனத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது. இஸ்ரவேல் "பரிசுத்த இனமாக" இருந்தது. இப்பொழுது இந்தச் சொற்றொடரானது கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குரியவர்களாகும்படி வந்துள்ள எல்லா மக்களையும் உள்ளடக்குகின்றது. கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய புதிய மனுக்குலமே இப்பொழுது தேவனுடைய இஸ்ர வேலாக உள்ளது (கலா. 6:16).*

*இரண்டாவது, அவர்கள் "விசுவாசிகளாய்"* (Gk.: *pistos*) *இருந்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பவுல் தமது வாசகர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை வைத்திருந்தவர் களாய்க் கருதினார். அவர்கள் அவிசுவாசிகளுக்கு நேர் மாறான வகையில் கிறிஸ்துவில் விசுவாசிகளாய் இருந்தார்கள்.*

*மூன்றாவதாக, அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருந்தார்கள். இந்தத் திறவுகோல் சொற்றொடர் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் வசனம் 1ல் தோன்றுகின்றது. தேவனுடைய புதிய மனுக்குலமானது*

“கிறிஸ்துவுக்குள்” தனது வாழ்வில், அதன் இருப்பையும் அனுபவங்களையும் கொண்டுள்ளது. “கிறிஸ்துவுக்குள்” இருத்தல் என்பது திராட்சச் செடியுடன் இணைக்கப்பட்ட கிளைகள் அல்லது உடலுடன் இணைக்கப்பட்ட உறுப்புகள் போன்று அவருடன் ஒன்றுபட்டிருத்தலாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கையைக் கிறிஸ்துவின்மேல் வைக்கின்றார்கள் மற்றும் அவர்மீது நம்பிக்கையைக் காண்பிக்கிற வாழ்வை வாழ முயற்சிக்கின்றார்கள்.

கடைசியாக, இதை(இந்நிருபத்தை)ப் பெறுகின்றவர்கள் “எபேசுவில்” இருந்தார்கள். எபேசு என்பது ஆசியாவின் ரோம மாகாணத்தின் தலைநகரா யிருந்தது, மற்றும் அது ஒரு மிகப் பெரிய, மக்கள் கூட்டம் மிகுந்த, வர்த்தகத் துறைமுகமாய் இருந்தது. மேலும் அது புறதெய்வ வணக்கத்தவர்களின் பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் (தியானாள்) என்பவளை ஆராதிப் பதற்கான மையமாகவும் இருந்தது. அவளைக் கனப்படுத்தும் வகையில் அங்கு கட்டப்பட்ட கோவிலானது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்று என்று இன்றும் கருதப்படுகின்றது.

பவுல் முதல் முறையாக எபேசுவுக்கு தமது இரண்டாம் ஊழியப் பயணத்தின்போது குறுகிய காலப் பயணமாக வந்திருந்தார் (அப். 18:18-21). பிற்பாடு அவர் அங்கு மீண்டும் வந்து தமது மூன்றாம் ஊழியப் பயணத்தின் போது அங்கு இரு ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கியிருந்தார். அவர் யூத ஜெப ஆலயத்தில் மூன்று மாதங்கள் அளவாகப் போதித்த பிறகு, வேறெங்காவது செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு, திறன்னுவின் பள்ளியில் போதிக்கத் தொடங்கினார் (அப். 19:8, 9). பவுல் ஒரு கூடாரத் தொழிலாளி யாக வேலை பார்த்து தம் தேவைகளைக் கவனித்துக் கொண்டார். அவருடைய போதனையைப் பற்றிய செய்தியானது அப்பகுதி முழுவதிலும் பரவிற்று (அப். 19:10). அற்புதங்கள் நடைபெற்றன. பவுலினால் தொடப் பட்டிருந்த உறுமால்கள் மற்றும் கச்சைகள் ஆகியவை நோயாளிகளைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன (அப். 19:11, 12). யூத மந்திரவாதி களாலும் கூட (அப். 19:13-16) அசுத்த ஆவிகள் இயேசுவின் பெயரால் துரத்தப்பட்டன. மனம் மாற்றப்பட்ட புறதெய்வ வணக்கத்தார்கள், தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு விட்டு தங்கள் பில்லிசூனியப் புத்தகங் களை எரித்தார்கள் (அப். 19:18-20). இதன் விளைவாக, கடைசியில், திமெத்திரியு என்ற தட்டான், பவுலின் வெற்றியானது அந்நகரின் பொருளாதார வளத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபொழுது, அங்கு ஒரு கலகம் எழும்பிற்று. பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் (என்பவளின் கோவில் போன்று) வெள்ளிச் சிற்பங்கள் செய்து அவைகளை விற்பனை செய்யும் தொழிலானது பவுலின் பிரசங்கத் தினால் பாதிக்கப்பட்டது (அப். 19:23-41). இது கடைசியில், பவுல் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லக் காரணமாயிற்று, ஆனால் சபை அங்கு உறுதியாக நிலைநாட்டப்படுவதற்கு முன்பு அவர் அங்கிருந்து செல்லவில்லை.

பவுல் மீண்டும் எபேசுவுக்கு ஒருக்காலும் வந்ததில்லை, ஆனால் எருசலேமுக்கு அவர் திரும்பிச் சென்று கொண்டிருந்த பொழுது எபேசுவின்

மூப்பர்களை அவர் மிலேத்து துறைமுகத்தில் சந்தித்தார். அவர்களுக்கு அவர் இருதயத்தை அசையச் செய்யும் பிரியாவிடை உரையாற்றினார் (அப். 20:13-38).

"எபேசுவில்" என்ற குறிப்பிடுதலானது தொடக்க காலக் கைப்பிரதி களில் இல்லை என்பது இவ்விடத்தில் கவனிக்கப்பட வேண்டும். இது எபேசுவுக்கு மட்டுமின்றி, ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகள் யாவற்றுக்கும் ஒரு சுற்றறிக்கை நிருபமாய் நினைக்கப்பட வேண்டும் என்று சிலர் யோசனை தெரிவித்துள்ளனர். மேலும் பவுல் எபேசுவில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த வேளையில் சந்தித்து (பழகி) இருக்கக் கூடிய குறிப்பிட்ட தனிநபர்களுக்கான அவருக்கே உரிய பாணியிலான வாழ்த்துக் களும் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படுவதில்லை. இந்த நிருபமானது பொதுவான அனுபவங்களைக் குறிப்பிடுவதில்லை. பவுலின் பிற நிருபங்களில் நாம் எதிர்கொள்ளுகின்ற தனிப்பட்ட குறிப்புகளின் வகையும் கூட இந்த நிருபத்தில் குறைவுபடுவதாகக் காணப்படுகின்றது. இது, சிலரை எபேசியருக்கு எழுதிய நிருபம் ஒரு சுற்றறிக்கைக் கடிதம் தான் என்ற கருத்துக்கு ஆதரவு தெரிவிக்க வைத்திருக்கலாம். ஆயினும், (இந்நிருபத்தைப்) பெற்றுக் கொள்பவர்கள் உண்மையில் வாழும் புவியியல் பகுதியானது இதன் அடிப்படைச் செய்தியை மாற்றுவதில்லை. இந்த நிருபமானது எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள சபைக்கான செய்தியாக உள்ளது.

## தேதி

பவுல் தாம் ஒரு கைதியாக இருந்து இந்நிருபத்தை எழுதியதாக இதில் மும்முறை குறிப்பிடுகின்றார் (3:1; 4:1; 6:20). இது சிறை நிருபங்கள் நான்கில் (எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்) ஒன்று என்று நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. குறிப்பிட்ட இந்தச் சிறை வாசத்தின் (கி.பி. 60-62) இடம் ரோமாபுரியாய் இருந்தது என்று நாம் நம்புவதற்கு நல்ல காரணம் உள்ளது. பவுல் ரோமாபுரிச் சிறையில் இரு ஆண்டுகளைச் செலவிட்டார் (அப். 28:16-31). மற்றும், பாரம்பரியமானது -தொடக்க கால சபையிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை- ரோமாபுரியை சிறை நிருபங்களின் தொடக்க இடம் என்று எப்பொழுதுமே கருதியுள்ளது.

பவுலைக் காண்பதற்கும் கொலோசெ சபையைப் பற்றிய கலவர மூட்டும் செய்தி சிலவற்றை அப்போஸ்தலருக்கு அறிவிக்கவும் எப்பாப்பிரா வந்தார். கள்ள போதனையானது அந்த சபையை அழித்துக் கொண்டிருந்தது என்பது உறுதி, எனவே பவுல் கொலோசெயருக்கு ஒரு நிருபத்தை எழுதினார். மேலும் அவர் அந்த சபையின் உறுப்பினராயிருந்த பிலேமோன் என்ற பெயர் கொண்டவருக்கு தனிப்பட்ட நிருபம் ஒன்றையும் எழுதினார். அது பிலேமோனின் உடைமையாயிருந்திருந்த, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தனது எஜமானரிடத்தில் திரும்பி அனுப்பப்பட்ட ஒனேசிமு என்ற அடிமையைப் பற்றியதாக இருந்தது. இதே வேளையில்தான், எபேசுவில்

*இருந்த சபைக்கோ அல்லது ஆசியாவின் ரோம மாகாணத்தில் இருந்த சபைகளுக்கோ எபேசியருக்கு எழுதிய நிருபம் எழுதப்பட்டது. இம்மூன்று நிருபங்களுமே பவுலின் "பிரியமான சகோதரனும் கர்த்தருக்குள் உண்மை யுள்ள ஊழியக்காரனுமாய்" (6:21) இருந்த தீகிக்குவால் கையளிக்கப் பட்டன. இதே ரோமச் சிறையிருப்பின் வேளையில் இன்னொரு சமயத்தில் பிலிப்பியருக்கு நிருபம் எழுதப்பட்டது என்பது தெளிவு.*

## நோக்கம்

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் வாசிக்கும் பொழுது, இரண்டு முதன்மையான நோக்கங்களை நாம் உய்த்துணர முடிகின்றது. முதலாவது, பவுல், தேவனுடைய புதிய மனித குலமான சபையின் தோற்றம், யூதர் மற்றும் புறஜாதியார் ஆகியோரிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களை அடக்கி யுள்ளமை, மற்றும் அதன் நித்திய நோக்கம் (அதிகாரங்கள் 1-3) ஆகிய வற்றைக் காண்பிப்பதினால் சபையின் இயல்பை விளக்கப்படுத்த விரும்பினார். இரண்டாவது, பவுல் தேவனுடைய புதிய மனித குலத்தைத் தகுதியானபடி நடந்து கொள்ளும்படி (அதிகாரங்கள் 4-6) அழைப்பு விடுத்தார். தகுதியான நடக்கை என்பது கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப் பாட்டின் மீது மிக உயர்வான முன்னுரிமை இடுதலை (4:1-16) உள்ளடக்கி, அன்றாட வாழ்வில் தேவபக்தியைத் தீவிரமாய்த் தேடி (4:17-6:9), வழிநெடுகிலும் சாத்தானுடைய எதிர்ப்பை ஜாக்கிரதையுடன் எதிர் கொள்ளுதல் ஆகியவற்றையும் (6:10-20) உள்ளடக்குகிறது. (இப்புத்தகத்தில் இந்நிருபத்தின் முழுமையான வரைக்குறிப்பொன்று இடம் பெற்றுள்ளது.)*

## செய்தி

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் மையக் கருத்தானது பின்வரும் வசனங்களில் பதியப்பட்டுள்ளது:*

> *... இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவை யினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். ... தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக (2:15ஆ, 16; 3:9, 10).*

*பழைய மனுக்குலத்தின் மத்தியிலிருந்து தேவனுடைய புதிய மனுக் குலத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிக்கும் தேவனுடைய செயலின் மீதே இதன் முதன்மைச் செய்தியானது மையங்கொண்டுள்ளது. இந்த நிருபமானது, "கிறிஸ்தவ உபதேசத்தையும் கிறிஸ்தவ கடமையையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்தவ வாழ்வையும், கிறிஸ்துவின் மூலம் தேவன் செய்துள்ளவற்றையும், அதன் விளைவாக நாம் எவ்வாறு இருக்க*

*வேண்டும் மற்றும் என்ன செய்ய வேண்டும் என்பவற்றையும் இணைக்கின்றது.”*[2]

## *முடிவுரை*

*கிறிஸ்தவராயுள்ள தனிநபர்களுக்கும், கர்த்தருடைய சபையின் குழுமங்களுக்கும், எபேசியருக்கும் எழுதிய நிருபத்தைப் பற்றிய படிப்பானது எவ்வளவு குறிப்பிடத் தக்கதாக இருக்க முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். இது—தேவனுடைய புதிய மனுக்குலமான—சபையின் இயல்பையும் தனிச்சிறப்பையும் விளக்குவதற்கு மிகச் சிறந்த புத்தகமாக நிலைத்துள்ளது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் படிப்பை மக்கள் மூன்று வழிமுறைகளில் அணுக முடியும்:*

*சிலர், எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நீண்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களுக்கு எழுதப்பட்ட நிருபம் என்ற வகையில் வாசிக்கின்றனர், எனவே அவர்கள் அதில் இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கு அடங்கியுள்ள செய்தியை கவனிக்கத் தவறுகிறார்கள். அவர்கள் எபேசியருக்கு எழுதிய நிருபத்திற்கான படிப்பை, ஒரு பழங்கால ஆவணத்தின் படிப்பு மற்றும் அதில் தற்காலத்திற்கு ஏற்புடைய கருத்து எதுவுமில்லை என்பதைத் தவிர வேறு எதுவுமாக மேற்கொள்ளுவதில்லை. நாம் இதை இவ்வாறு அணுகுவோமென்றால், பெரும்பாலும் நாம் இதன் செய்தியைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ளமாட்டோம் மற்றும் இந்தப் படிப்பில் நாம் சலிப்பு கூட அடைய நேரிடலாம்.*

*மற்றவர்கள், எபேசியருக்கு எழுதிய நிருபத்தை படிப்பிற்கான உபதேசப் பாடம் என்ற வகையில் வாசிக்கின்றனர், எனவே இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கான அதன் செய்தியில் பாதியைக் கவனிக்கத் தவறி விடுகின்றனர். எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உபதேசத்தின் மாபெரும் அளவு அடங்கியுள்ளது. இது சபையைப் பற்றியும் மனிதரை இரட்சிக்க தேவனுடைய திட்டம் பற்றியும் அடிப்படை இறையியல் கருத்துக்கள் சிலவற்றை முன்னிறுத்துகின்றது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம், உபதேசத்தின் மீதான பாடபுத்தகம் மட்டுமே என்ற வகையில் அணுகி, அது அளிக்கின்ற நடைமுறைப் பயன்பாடுகளைக் காணாமல் விட்டோமென்றால், நாம் அதன் செய்தியில் பாதியை மட்டுமே பெறுவோம். இந்த அணுகுமுறையானது நாம் இந்நிருபத்தின் முதன்மையான இலக்கு ஒன்றை—தேவனுடைய புதிய மனுக்குலத்தில் பங்கு கொள்ள வந்துள்ள மக்கள் என்ற வகையில் நமது வாழ்வை மாற்றுதல் என்பதை—தவற விடுவதற்குக் காரணமாகிவிடும்.*

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம், தேவனிடத்திலிருந்து நமக்கு வந்த செய்தி என்ற வகையில் வாசிப்போமாக. எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் இவ்விதமாய் அணுக வேண்டும் என்றுதான் தேவன் விரும்புகின்றார். இது தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது. நாம் இந்த எண்ணப்போக்குடன் இதை அணுகுவோமென்றால், நாம் மாறிய மக்களாக வருவோம். அதைத்தான் தேவன் விரும்புகின்றார். அதுவே உங்களுக்கு*

*நடக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். இந்த அற்புதமான புத்தகத்தினூடே நீங்கள் ஒரு பயணத்தைத் தொடங்கும் (இவ்)வேளையில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

---

*குறிப்புகள்*

[1]Robert Bellah, *Habits of the Heart* (New York: Harper and Row, 1985), 221. [2]John R.W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R.W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 25.

# தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் (1:3, 4)

ஃப்ளோரிடாவின் மேற்கு பாம் பீச் என்ற இடத்தில் சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண்மணி தமது 71ம் வயதில் இறந்து போனார். பிரேத பரிசோதனை செய்தவரின் அறிக்கையானது, சத்துக் குறைந்த உணவே அம்மரணத்திற்குக் காரணமாயிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தது. மரண வேளையில் அந்தப் பெண்மணியின் உடலின் எடை வெறும் இருபத்தி மூன்று கிலோவாகவே இருந்தது.

அந்தப் பெண்மணி மிகவும் கடினமான வாழ்க்கை வாழ்ந்திருந்ததாகத் தோற்றம் அளித்தார். அதிகாரிகள் அப்பெண்மணியின் வீடானது விவரிக்க இயலாத அளவுக்கு அசுத்தமாயிருந்ததாகக் கண்டார்கள். அண்டை அயலகத்தார்கள், அப்பெண்மணி உணவிற்குப் பிச்சை எடுப்பதற்காகத் தங்கள் வீட்டுப் பின்கதவுகளின் அருகில் அடிக்கடி வந்ததாக அறிவித்தார்கள். அந்தப் பெண்மணிக்கு உடுத்த உடைகளை ஒரு சேவை நிறுவனம் வழங்கிற்று. பணம் இல்லாத ஒரு பெண் கடைசியில் தனது கடினமான வாழ்வின் முடிவுக்கு வந்திருந்ததாகக் காணப்பட்டது.

காவலர்கள், குப்பை கூளமாயிருந்த அப்பெண்மணியின் வீட்டைச் சோதனையிடுகையில், அவர்கள் இரு சாவிகளைக் கண்டறிந்தார்கள். அந்தச் சாவிகள் உள்ளூர் வங்கிகள் இரண்டில் இருந்த பாதுகாப்புப் பெட்டகங்களுக்கு அவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்தன. அந்தப் பெட்டகங்களில் ஒன்றை அதிகாரிகள் திறந்து பார்த்த பொழுது, அதில் எழு நூறுக்கும் மேற்பட்ட, மதிப்பு வாய்ந்த இருப்புச் சான்றிதழ்களும் பாதுகாப்புப் பத்திரங்களும், ரொக்கப்பணமான 200,000 டாலர்களுடன் (சுமார் தொன்னூறு லட்சம் ரூபாய்) இருந்தன. இரண்டாவது பெட்டியில் ரொக்கமாக 600,000 டாலர்கள் (சுமார் இண்டே முக்கால் கோடி ரூபாய்) இருந்தது. அந்தப் பெண்ணின் சொத்து மதிப்பு 1,000,000 டாலர்களாக (சுமார் நாலரைக் கோடி ரூபாய்) இருந்த போதிலும், அவள் உணவிற்காகப் பிச்சையெடுத்துக் கொண்டும், உடுத்திக் கழித்த துணியை உடுத்திக் கொண்டும் இருந்திருந்தாள், உணவுப் பற்றாக்குறையினால் மரித்திருந்தாள்![1]

ஃப்ளோரிடாவில் இருந்த அந்தப் பெண் திரளான தனது செல்வங்களை என்ன செய்திருந்தாளோ, அதையே தங்கள் மாபெரும் ஆவிக்குரிய ஆதாரவளங்களுக்குச் செய்திருந்த—அவற்றை நற்பயன்பாட்டில்

இடத்தவறியிருந்த - கிறிஸ்தவர்களுக்குப் பவுல் இந்த எபேசிய நிருபத்தை எழுதினார். இதே தவறை இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவர்கள் செய்யக் கூடும். நாம் கிறிஸ்துவுக்குள் மிகப் பெரிய அளவுக்கு உடமைகளைக் கொண்டுள்ளோம், மற்றும் எந்த ஒரு கிறிஸ்தவரும் எக்காலத்திலும் ஆவிக்குரிய வகையில், பற்றாக் குறையுள்ளவராகவோ அல்லது வீணாக்கப் பட்டவராகவோ ஆகிவிடக் கூடாது. தேவன் நமக்கு அளித்துள்ளவற்றை நாம் நற்பயன்பாட்டில் இட வேண்டும், அவ்வளவே.

எபேசியருக்கு எழுதிய நிருபம், தேவனுடைய பரலோக பொக்கிஷங் களின் எல்லையற்ற தன்மையை உறுதிப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் எதையும் இழந்து போனவர்களாய் இருக்கத் தேவை யில்லை என்பதை இந்த நிருபம் செயல்விளக்கப்படுத்துகின்றது. தேவனு டைய பிள்ளைகள் என்ற வகையில் நாம், தேவனுக்குள் நம்மை நம்புதற் கரிய அளவுக்குச் செல்வந்தர்களாக்குகின்ற ஆதாரவளங்கள் கிடைக்கப் பெற்றவர்களாய் இருக்கின்றோம். இவைகளைப் பவுல், "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே ... எங்களிடத்தில் பெருகப் பண்ணி னார்" (1:7ஆ, 8) என்று விவரித்தார்.

தேவனுடைய ஐசுவரியங்களைப் பற்றிய இருப்புக் கணக்கொன்றை மேற்கொள்ளும்படியான தொனியை எபேசியர் 1:3-14 வசனப் பகுதி யானது கிறிஸ்தவர்களுக்கு முன் அமைத்து வைக்கிறது. கிரேக்க மூலப் பிரதி யில் வசனங்கள் 3 முதல் 14 வரையுள்ள பகுதியானது ஒரே ஒரு விரிவான வாக்கியமாக உள்ளது. இது தேவனுக்குப் புகழ்ச்சியின் ஆரவாரமிக்க புயற் காற்றாக, கடந்த கால (3-6அ), நிகழ் கால (6ஆ-11) மற்றும் எதிர் (12-14) காலங்களைக் கொண்டு விளங்குகிறது.

துதிக்கும்படியாக அழைக்கும் பவுலின் பரவசம் நிறைந்த அழைப்பி லிருந்து இரு வசனங்களின் மீது நாம் கவனம் செலுத்துவோம்:

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே ... (1:3, 4).

இவ்வசனப் பகுதியானது காலங் கடந்து நிற்கும் ஒரு சத்தியத்தை முன் வைக்கின்றது: கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களுக்குத் தேவன் ஆவிக்குரிய வகையில் சாத்தியமான ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் அருளுகின்றார். நீங்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ளது என்ன? தேவன் அருள வேண்டி யிருக்கிற ஒவ்வொன்றையும் நீங்கள் கொண்டுள்ளீர்கள்!

# தேவன் தம்முடைய சுயமான தேர்ந்து கொள்ளுதலினாலேயே நமக்கு ஆசீர்வாதங்களை அருளுகின்றார்

பவுலின் வார்த்தைகள், தேவனைத் துதிக்கும்படி கிறிஸ்தவர்களை அழைக்கின்றன: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக் குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக ... நம்மைத் தெரிந்து[2] கொண்டபடியே" (வ. 3, 4). பூமியானது நிலவுவதற்கு முன்பாகவே, தேவன் ''உன்னதங்களில்'' உள்ள தமது அன்பையும் ஐசுவரியத்தையும் கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி விருப்பங் கொண்டிருந்தார். தேவனுடைய இயல்பானது, பிறர்மீது அவருடைய அன்பை வெளிப்படுத்தும்படியும் தமது ஐசுவரியத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படியும் அவரைத் தூண்டுகின்றது.

தேவன் தமது சுயாதீனமான தேர்ந்து கொள்ளுதலினால் தமது சொந்த சாயலில் குமாரர்களையும், குமாரத்திகளையும் உருவாக்கத் தீர்மானித்தார். அவர்கள் தம்முடன் இருக்கவும், தம்மீது அன்புகூரவும், தம்முடைய இல்லத்தைப் பகிர்ந்து கொள்ளவும், தம்முடைய நாமத்தைத் துதிக்கவும் அவர்களுக்குத் திறன் அளித்தார். தேவன் தமது திட்டத்தைப் பற்றி வான மண்டலங்கள் முதன் முதலில் அறிய அனுமதித்த பொழுது ஏற்பட்ட பதில்செயலை நாம் கற்பனை செய்வதற்கு W. பிலிப் கெல்லர் அவர்களின் விவரிப்பு நமக்கு உதவுகிறது:

> மனிதர்களாகிய நாம் இது வரையிலும் உறுதிப்படுத்த முடிந்த அளவில், இது தேவனுடைய ஆலோசனை மன்றங்களில் உண்டாக்கப் பட்டவைகளிலேயே மிகவும் துணிவான கருத்துக்களில் ஒன்றா யிருந்தது. இந்தத் திட்டம் அறியப்படுத்தப்பட்டபோது நித்திய விரிவு களினூடே உணர்வெழுச்சியின் அலையொன்று வேகமாய் அடித்தது என்பதில் நாம் மிகவும் உறுதியாய் இருக்கலாம். தூதர்களில் யாருமோ அல்லது பணிவிடை ஆவிகளில் எவருமோ இப்படிப்பட்ட எழுச்சி யூட்டும் திட்டம் பற்றி ஒருக்காலும் கனவு கண்டதில்லை.
>
> தேவன் தம்மையே மறு உற்பத்தி செய்துகொள்ளத் தீர்மானித்தார்.
>
> அவர் மற்றவர்களை(யும்) தம்மைப் போல் ஆகச் செய்யும் மகவுரிமை/புத்திர சுவிகாரம் அடையச் செய்யவும் கொண்டு வருவார்.
>
> அவர் தமது சொந்தப் பண்பில் வடிவமைக்கப்பட்ட சுயாதீன முள்ளவர்களைக் கொண்டு தமது பரலோக இல்லிடத்தை நிரப்பத் தீர்மானித்தார்/நோக்கம் கொண்டார்.
>
> அவர்கள் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவுடன் சுதந்திரர் களும் உடன் சுதந்திரர்களுமாய் இருந்து, பரவச நிலையில் நித்தியத்தை மகிழ்வுடன் அனுபவிக்க நியமிக்கப்படுவார்கள்.
>
> இந்தச் சிந்தனையானது குமாரனாகிய தேவனுக்கு மாபெரும் மெய்சிலிர்ப்பாய் இருந்திருக்க வேண்டும். இப்பொழுது அவர்,

*தம்முடன் நித்தியத்தின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கு சகோதரர்களையும் சகோதரிகளையும் கொண்டிருப்பார். இனியும் அவர் (தேவனுக்கு) ஒரே குமாரன் என்றிருக்க மாட்டார். இது அறைகூவல் விடுக்கும் பிரயாசமாய் இருந்தது. இதை முடிவு வரைக்கும் நடத்திச் செல்லுகின்ற பொறுப்பு அவர் மீது வீழும்.*[3]

*தேவன், நம்மை (தமது) குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் ஆக்குவதைச் சுயாதீனமாகத் தேர்ந்து கொண்டார். தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தமது பிள்ளைகளாய் இருக்கும்படி தேர்ந்து கொண்டார் என்ற கருத்தைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்?*

*நாம் குறைவானவைகளோடு திருப்தியடையக் கூடும். தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாயிருக்கும்படி விரும்புகின்றார் என்ற கருத்தை நாம் தள்ளி விடக் கூடும். உண்மையில் பெரும்பாலான மக்கள் இதைச் செய்கின் றார்கள். எழுத்தாளர் C. S. லூயிஸ் அவர்கள் இதைச் செய்தார். பல ஆண்டு களாக லூயிஸ், தம்மை ஒரு நாத்திகராக அடையாளப்படுத்திக் கொண்டார். அந்த ஆங்கிலப் பேராசிரியர் தமது வாழ்வில் தேவனுக்கென்று ஒரு இடம் கொண்டிராதிருந்தார். வாழ்வின் பிற்பகுதியில் அவர் மாறினார். அவர் ஒரு காலத்தில் குறைவானவைகளுடன் திருப்தியடைந்தவராய் இருந்த ஒருவரைப் பற்றிய நோக்கில் இருந்து எழுதக் கூடிய விசுவாசியாக ஆனார்:*

*கடற்கரையில் விடுமுறை நாள் கொண்டாட்டத்தின் அர்த்தத்தை அறியாத சிறு குழந்தையொன்று சேரிப் பகுதியில் மணலில் பணியாரம் சுட்டு விளையாட விரும்புவதைப் போன்று, அளவற்ற மகிழ்ச்சி நமக்கு அருளப்படும் என்ற நிலை இருக்கும் பொழுது(ம்) குடிவெறியிலும், பாலுறவிலும் மற்றும் பேராவலிலும் மதியிழந்து திரியும் அரைமனதான உயிர்களாய் நாம் இருக்கின்றோம். நாம் சுலபமாகச் சந்தோஷப் படுத்தப்படுவதற்கு வெகு தொலைவிலேயே இருக்கின்றோம்.*[4]

*தேவன் பரலோகத்தின் பொக்கிஷ அறையைத் தாம் திறந்து வைத்துக் காண்பிக்கக் கூடிய குமாரர்களையும் குமாரத்திகளையும் நாடுகின்றார். நமக்குத் தேர்ந்து கொள்ளுதல் தரப்பட்டுள்ளது; நாம் குறைவானவை களுடன் திருப்தியடையக் கூடும். பலர் இதையே செய்கின்றனர்.*

*இதற்கு மறுபுறத்தில், நாம் தேவனுடைய மிகச் சிறந்தவைகளை ஏற்றுக் கொள்ள முடியும். நம்மைச் சுவிகரித்துத் தமது பிள்ளைகளாக்குவதே அவரது குறிக்கோளாய் உள்ளது. இதை அவர், தமது ஐசுவரியங்களுக்கு நம்மைச் சுதந்தரவாளிகளாக்குவதற்காகவும், தமது சாயலை நமக்குள் கொண்டு வருவதற்காகவும், பரலோகத்தை என்றென்றும் நம்முடன் பகிர்ந்து கொள்வதற்காகவும் செய்கின்றார்.*

*ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். இவை எல்லாவற்றிலும் நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள்? நீங்கள் குறைவானவைகளுடன் திருப்தியடைந்தவர் களாய் இருக்கின்றீர்களா? உங்களைத் தமது பிள்ளைகளாக்கி, உங்களுக்குப்*

*பரலோகத்தின் ஐசுவரியங்களைத் தருவதற்கான தேவனுடைய தெரிந்து கொள்ளுதலானது உங்களை பிரம்மிக்கச் செய்வதாக உள்ளதா? உங்கள் வாழ்வில் இது நடைபெறச் செய்ய அனுமதிப்பதற்கு நீங்கள் விரும்புகிறதில்லையா?*

## தேவன் தம்முடைய சொந்த வழி வகையிலேயே தம்முடைய ஆசீர்வாதத்தை நமக்கு அருளுகின்றார்

*தேவன் நமக்கு "கிறிஸ்துவுக்குள்" சகல ஆசீர்வாதங்களையும் அருளுகின்றார். "கிறிஸ்துவுக்குள்" என்ற அல்லது அதற்குச் சமமான சொற்றொடரானது எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இருபது முறைகளுக்கும் அதிகமாக வருகின்றது. பின்வரும் தொடக்க வசனங்களில் பவுல் இதன் முக்கியத்துவம் வாய்ந்த பயன்பாட்டை ஏற்படுத்தினார்:*

*விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றனர் (வ. 1).*
*ஆவிக்குரிய சகல ஆசீர்வாதமும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது (வ. 3).*
*நாம் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தராயும் குற்றமற்றவர்களாயும் இருக்கின்றோம் (வ. 4).*
*கிறிஸ்துவுக்குள் கிருபையானது தாராளமாய்ப் பொழியப்படுகிறது (வ. 5).*
*மீட்பும் பாவங்களுக்கு மன்னிப்பும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன (வ. 7).*
*தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றனர் (வ. 12).*
*கிறிஸ்துவுக்குள் நமது சுதந்தரத்தின் அச்சாரமாக நாம் பரிசுத்த ஆவியானவரால் குறிக்கப்பட்டு அல்லது முத்திரையிடப்பட்டு இருக்கின்றோம் (வ. 14).*

*கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதின் தனிச் சிறப்புக்களை இந்த உறுதிப்பாடுகள் சுட்டிக்காண்பிக்கின்றன.*

*கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதை, நாம் அறிந்துள்ள சில விஷயங்களுடன் ஒப்பிட்டு நோக்கினால், நாம் இன்னும் அதிகமாய் அந்நிலையை மதிப்பவர்களாய் இருப்போம். "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக நாம், "குடும்பத்திற்குள்" என்பதை இடுவோம். நீங்கள் பிறப்பினாலோ, அல்லது திருமணத்தினாலோ அல்லது சுவிகரித்தலினாலோ ஒரு குடும்பத்தைச் சார்ந்தவராய் இருக்கும் பொழுது, அது அர்த்தப்படுத்துவது என்ன?*

*நீங்கள் "குடும்பத்திற்குள்" இருந்தால், நீங்கள் குறிப்பிட்ட சில அனுகூலங்களைக் கொண்டுள்ளீர்கள். நான் எனது இல்லத்தின் கதவைக் கடந்து செல்லுகையில் எவரொருவரும், "உன்னை உள்ளே யார் அனுமதித்தார்?" என்று கேட்பதில்லை. எனது மனைவி சால்லி, நான் அத்துமீறி உட்புகுந்துள்ளவன் என்ற வகையில் என்னிடம் நடந்து கொள்ளமாட்டார்கள். எனது*

மகன் என்னைக் கதவுக்கு வெளியே பிடித்துத் தள்ளுவதற்குத் தனது பலத்தைப் பயன்படுத்த மாட்டான். எனது மகள் காவல் துறையினரை அழைக்க மாட்டாள். நான் குடும்பத்திற்குள் இருப்பதால் அவர்களின் வீட்டுக்கு உரியவனாக இருக்கின்றேன் என்பதை அவர்கள் யாவரும் அறிகின்றனர். அனுகூலங்கள், பொறுப்புகள், மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவை யாவும் குடும்பத்திற்குள் இருப்பதன் பகுதியாக உள்ளன.

"கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது நீங்கள் அவருக்கு உரியவராய் இருக்கின்றீர்கள் என்று அர்த்தப்படுத்துகின்றது. நீங்கள் அவருடன் ஒன்றாக்கப்பட்டிருக்கின்றீர்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கிற அனுகூலங்கள், பொறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகள் யாவும் உங்களுடையவைகளாய் உள்ளன. தேவன் தமது இராஜ்யத்தில் உங்களுக்கு ஒரு இடத்தை அருளு கின்ற பொழுது அச்செயலானது பரலோகத்தின் இடைவழி நடை களினூடே அதிர்ச்சி அலைகளை அனுப்புவதில்லை. அது கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதுடன் வருகின்றது. தேவன் தம்முடைய ஆவியானவரை உங்களுக்குள் வாசம் பண்ணும்படி அனுப்புகின்ற பொழுது, தூதர்கள் மயங்கி விழுவதில்லை. அது கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதுடன் வருகின்றது. தேவன் உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிக்கும் போது எவரொருவரும் மறுப்பதில்லை. அது கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதுடன் வருகின்றது.

பூமியின் மீது உங்கள் வாழ்வு முடிந்த பிறகு, உங்களுக்குத் தேவனு டைய பரலோக இல்லத்தில் ஒரு இடம் கிடைப்பது ஏன் என்று பரலோக ஜீவிகள் எவரும் வியப்படைவதில்லை. அது கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதுடன் வருகின்றது. கிறிஸ்துவுக்குள் நீங்கள் பாவ மன்னிப்பை உரிமை கொள்ள, வருகின்றீர்கள். தேவனுடைய பிள்ளையாக சுவிகரிக்கப்பட, பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற, நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெற, பரிசுத்தம், நீதி, நற்பண்பு, மகிமை, பலம், உறுதிப்பாடு, சமாதானம், அதிகாரம் மற்றும் தேவனுடைய ஐசுவரியத்தின் எஞ்சியுள்ள பிற யாவற்றையும் பெறுவதற்கு வருகின்றீர்கள். இந்த அனுகூலங்கள் மிகவும் வியப்புக்குரியவைகளாய் ஒலிக்கின்றன அல்லவா? கிறிஸ்துவுக்குள் ஒரு நபர் உரிமை கொள்ள வருகின்ற யாவையும் விவரிப்புக்கு அறைகூவல் விடுக்கின்றன!

நான் கிறிஸ்துவுக்குள் இவை எல்லாவற்றையும் உரிமை கொண்டிருந் தால், இன்னும் நான் சில வேளைகளில் குற்ற உணர்வினால் தத்தளிப்பது ஏன்? நான் ஏன் (என்னை) பரிசுத்தவானாக, நீதிமானாக அல்லது நல்லவ னாக உணருவதில்லை? சில பகுதிகளில் நான் ஏன் மிகவும் பலவீனனாக இருக்கின்றேன்? நான் ஏன் இன்னும் பாவம் செய்கின்றேன்? நான் தேவனு டைய பிள்ளையாக இருக்கின்றேன் என்று வேத வசனங்கள் கூறுகின்றன. ஆனால் எல்லா வேளைகளிலும் நான் அது போலச் செயல்படுவதில்லை. நான் அடிக்கடி "சுயத்தை" முதலிடத்தில் வைத்து விடுகின்றேன். நான் என்னையும் பிறரையும் வீழ்ந்து போக அனுமதித்து விடுகின்றேன்.

சமீபத்தில் நான் பல மனிதர்கள் அடங்கிய குழுவுடன் வேதாகமக்குழுப் படிப்பைப் பகிர்ந்து கொண்டேன். நாங்கள் எல்லாரும் இந்தக் கேள்விகளை

வெளிப்படுத்தி எங்களைக் குறித்து அக்கறைகளையும் வெளிப்படுத்தி னோம். எங்கள் கலந்துரையாடலானது, மிகப் பெரும்பாலான கிறிஸ்தவர் கள் பின்வரும் சிந்தனையுடன் போராடிக் கொண்டிருப்பதாக நாங்கள் முடிவு செய்யும்படி எங்களை வழிநடத்திற்று: "என்னிடத்தில் ஏதோ தவறு இருக்க வேண்டும். கிறிஸ்தவம் மற்றவர்களுக்கு நடைமுறைப்படுவதை நான் காண்கின்றேன், ஆனால் கர்த்தருடனான எனது நடக்கையில் சீரான போக்கு எதனையும் நான் மேம்படுத்தியுள்ளதாகக் காணப்பட முடிய வில்லையே."

மூப்பர்கள், பெற்றோர்கள் மற்றும் பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர் களாய் இருக்கின்றவர்கள் உட்பட பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் இது போன்ற கேள்விகளைத் தங்களுக்குள் கேட்டுக் கொள்கின்றனர். நான் இது போன்று சிந்திக்கத் தொடங்கும் பொழுது, இரு ஆலோசனைகள் (எனக்கு) உதவுகின்றன.

*அடிப்படைகளுக்குத் திரும்புதல்.* நான் எனது அடையாளத்தை மறுஉறுதிப்படுத்த வேண்டும்: நான் தேவனுடைய பிள்ளையாக இருக்கின் றேன். தேவன் என்னை இயேசுவின் மூலம் தம்முடைய பிள்ளையாக்கி யுள்ளார். நான் அவ்வாறு இருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்பு கின்றார். அடுத்ததாக நான் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறேன் என்பதை எனக்கு நானே மறு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கலாத்தியர் 3:26, 27 வசனங்கள், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்று கூறுகின்றது. அதுவே அடிப்படையானதாக உள்ளது. நான் கிறிஸ்துவுக் குள்ளான விசுவாசத்தில் செயல்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என்று அர்த்தமா கின்றது. கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் என்னுடைய வைகளாயிருக்கின்றன!

*அடிப்படைகளைப் பயன்படுத்துதல்.* என்னிலேயே நான் ஏமாற்றம் அடையும் பொழுது/உற்சாகம் இழக்கும் பொழுது, அந்த உற்சாகம் இழத்தல் என்பது பெரும்பாலும், அடிப்படைகளைப் புறக்கணித்த தாலேயே ஏற்பட்டது என்பதைக் கண்டறிய முடியும். ஃபுளோரிடாவில் இருந்த அந்த "ஏழை" பெண்ணைப் போலவே, நான் எனது உடமைகளைப் பயன்படுத்தாமல் இருந்துள்ளேன். அது என்னை ஆவிக்குரிய பட்டினி கிடத்தலுக்கு நடத்திற்று. அடிப்படைகளில் பின்வருபவை உள்ளடங்கி யிருக்கின்றன: (1) தேவனுடைய வசனம்—அதைப் படியுங்கள், அதை மனப் பாடம் செய்யுங்கள், அதனைத் தியானியுங்கள்; (2) ஜெபம்—தேவனுடன் முறைப்படியான செய்தித் தொடர்பு கொண்டிருங்கள்; (3) ஊழியம்- இராஜ்யத்தின் பணியில் தனிப்பட்ட வகையில் பங்கேற்றிருத்தல்; மற்றும் (4) ஐக்கியம் - சக கிறிஸ்தவர்களுடன் வாழ்வைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஆம், நீங்களும் நானும், நாம் யாராய் இருக்கிறோம் என்பதை நமக்கு நாமே அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாக

*உள்ளது. நாம் உற்சாகம் இழக்கும் பொழுது, உண்மையில் நாம் யாராய் இருக்கிறோம் என்பதை நமக்கு நாமே உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நாம் 1:3-14 வசனப் பகுதியைப் பயன்படுத்த முடியும். நீங்கள் அதை இப்பொழுது செய்வீர்களா? நீங்கள் யாராயிருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கே நினைவூட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்குப் பின்வருமாறு கூறிக் கொள்ளுங்கள்: "நான் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளேன். நான் அவருக்கு முன்பாகப் பரிசுத்தமாகவும் குற்றமற்றவனாகவும் இருக்கின்றேன். நான் மன்னிக்கப்பட்டுள்ளேன். நான் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப் பட்டுள்ளேன். நான் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளேன். நான் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றதால், நித்திய சுதந்தரம் உத்தரவாதப் படுத்தப் பட்டுள்ளவனாக இருக்கின்றேன்!"*

## முடிவுரை

*ஹெட்டி கிரீன் என்பவள் அமெரிக்காவில் கெட்ட பெயர் எடுத்திருந்த மிகவும் கஞ்சத்தனமிக்க பெண் என்று அழைக்கப்பட்டாள். அவள் 1916ல் இறந்த பொழுது, 100 மில்லியன் டாலர் (சுமார் 450 கோடி ரூபாய்) மதிப்புள்ள சொத்துக்களை விட்டுச் சென்றிருந்தாள்; இருப்பினும் ஹெட்டி தனது ஆதாரவளங்களைப் பயன்படுத்தாமல் இருந்திருந்தாள். அவள் தண்ணீரைச் சூடாக்க எரிபொருளுக்கு ஆகும் செலவை மிச்சப்படுத்துவதற் காகவும் கூட, காலை உணவுக்குப் பழைய (ஓட்ஸ்) கஞ்சியையே வலியுறுத் திப் பெற்றுக் கொண்டாள். அவளுடைய சொந்த மகன் காலில் கடுமையான அடிப்பட்டு வேதனைப்பட்ட பொழுது, ஹெட்டி, ஒரு இலவச மருத்துவ சாலையைக் கண்டறியும் வரையில் (அவனுக்கு) சிகிச்சை அளிப்பதைத் தாமதித்தாள். கடைசியில் அந்தப் பையன் தனது காலை இழந்து போனான். ஹெட்டி மதியீனமான வாழ்க்கை வாழ்ந்தாள். அவளது உலோபித்தனமான வழிமுறைகள் அவள் தனது உடமைகளை நன்கு பயன்படுத்தாமல் இருக்கும்படி தடை செய்திருந்தன.[5]*

*கிறிஸ்துவுக்குள் தேவன் அருளியுள்ளவற்றைக் கண்டும் அதைக் கவிழ்த்துப் போடுதலோ அல்லது அதைப் பயன்படுத்தத் தவறுவதோ எவ்வளவு மதியீனமானதாக இருக்கும்! தேவன் உங்களுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும் அருள விரும்புகின்றார். அவருடைய அருளுதலி லிருந்து வெளிநடப்பு செய்யாதிருங்கள்.*

குறிப்புகள்

[1]Charles R. Swindoll, *Improving Your Serve: The Art of Unselfish Living* (Waco, Tex.: Word Books, 1981), 49-50. [2]*"தேர்ந்து கொள்ளுதல்" என்பதற்கு eklego என்பதே கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது "தேர்ந்து கொள்ளுதல், தெரிந்தெடுத்தல்" என்று அர்த்தப்படுகின்றது. இடைநிலை வினையானது தேவன் தமக்குத் தாமே செய்து கொண்ட சிலவற்றைச் சுட்டிக் காண்பிக்கின்றது.* [3]W. Phillip Keller, *Rabboni ... Which Is to Say Master* (Old Tappan, N.J.: Fleming H. Revell Co., 1977), 17-18. [4]C. S. Lewis, quoted in Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 17. [5]John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), vii.

# சுவிகரிக்கப்பட்டவர்கள்

# (1:6)

*டெட் மற்றும் டாண் ஸ்பென்சர் ஆகியோர் தங்கள் வாலிப வாழ்வு முழுவதையும் அந்நியர்களின் உறுத்து நோக்கும் பார்வைகளுடனேயே வாழ்ந்திருந்தார்கள். 47 வயதான டெட்டும், 36 வயதான டாணும் குள்ளப் பிறவிகளாய் உள்ளனர்; ஆனால் அவர்கள் அந்த ஊனம் பற்றி விசேஷித்த எண்ணப்போக்கைப் பராமரித்து வந்திருந்தனர். தங்களின் உடல்ரீதியான வரையறைகளின் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, வாழ்வை மாற்றும் முடிவு ஒன்றை - தங்களுடைய சொந்த உடல் ரீதியான பிரச்சனை களை விட அதிகம் பிரச்சனைகளைக் கொண்ட ஒரு பிள்ளையைத் தத்தெடுத்தல் என்ற முடிவை - மேற்கொண்டார்கள். கடைசியில், அவர்கள் தென் கொரியா மற்றும் தைவான் நாடுகளைச் சேர்ந்த ஊனமுற்ற அனாதைக் குழந்தைகள் நால்வரைத் தத்து எடுத்துக் கொண்டனர்.*

*டெட் ஒரு அமைதியான, ஆழ்ந்த யோசனையுள்ள மனிதராயிருக் கின்றார். (ஆனால்) டாண் உயிரோட்டமும் ஊர் சுற்றும் தன்மையும் கொண்டவராய் இருக்கின்றார். இவ்விருவருமே, பிள்ளைகள் - விசேஷமாக வேறெவரும் விருப்பம் கொண்டிராத பிள்ளைகள் - தங்களில் சிலர் நம்பிக்கை கொண்டால், தங்களைச் சிலர் அன்புகூர்ந்தால், தங்களுக்குச் சிலர், "நீ இதைச் செய்ய முடியும்!" என்று கூறினால், மலர்ந்து செழிப்பார்கள் என்று நம்புகின்றனர்.*

*உள்ளூர் சபைக்குழுமத்திலோ, பள்ளியின் ஒரு வகுப்பிலோ அல்லது அலுவலகத்திலோ, தத்தெடுத்தலினால் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர் என்று அறிய நேர்ந்தால் நாம் அநேகமாய்த் திகைப்படைவோம். உங்களில் சிலர் தத்து எடுத்தலின் மூலம் சகோதர சகோதரிகளைக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களில் சிலர் தத்து எடுக்கப்பட்ட பிள்ளைகளைக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களில் சிலர் தத்துப் பிள்ளைகளாயிருக்கின்றீர்கள்.*

*தத்து எடுக்கப்படுதல்/சுவிகரிக்கப்படுதல் என்ற ஒரே ஒரு வழியின் மூலம் மட்டுமே தேவனுடைய குடும்பத்திற்குள் வர இயலும். மனித இனத்தின் உறுப்பினராயிருத்தல் என்பது நீங்கள் தேவனுடைய குடும்பத் தைச் சேர்ந்தவராய் இருக்கிறீர்கள் என்று அர்த்தப்படவேண்டிய அவசியம் இல்லை. தத்தெடுத்தல்/சுவிகரித்தல் மூலமாக மட்டுமே தேவனுடைய குடும்பத்திற்குள் வந்து சேருதல் ஏற்படுகின்றது.*

*புதிய ஏற்பாடானது தனித்தனியான மூன்று வசனப் பகுதிகளில், தேவனுடைய குடும்பத்தில் சுவிகரித்துக் கொள்ளப்படுதலின் பாடக்*

கருத்தை எடுத்துரைக்கின்றது (ரோமர் 8:15, 23; கலா. 4:6; மற்றும் எபே. 1:6). இம்மூன்றுமே பவுலின் எழுத்துக்களிலேயே காணப்படுகின்றன. எபேசியர் 1:6, "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக் கிறார்" என்று கூறுகின்றது.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனைப் பிதாவாகக் கொண்டிருக்கின் றார். நாம் சுவிகரிக்கப்பட்டுள்ளோம். இப்பொழுது நாம் தேவனுடைய மகன்களாகவும் மகள்களாகவும் இருக்கின்றோம். இந்த உண்மையின் பிடிகளுக்குள் வந்து, இதை நமது வாழ்வில் செயல்படச் செய்ய அனு மதித்தல் என்பது வாழ்வின் மாபெரும் அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது என்றே நான் நினைக்கின்றேன்.

வலியுறுத்தம் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு அதை J. I. பேக்கர் இட்டார்:

> ஒரு நபர், கிறிஸ்தவத்தை எவ்வளவு நன்றாய்ப் புரிந்து கொள்கின்றார் என்பதை நீங்கள் முடிவு செய்ய/தீர்மானிக்க வேண்டும் என்றால், அவர் தேவனுடைய பிள்ளையாயிருப்பது என்ற சிந்தனையை எவ்வளவாய் ஏற்படுத்திக் கொள்கிறார் என்றும், தேவனை அவர் எவ்வளவுக்குத் தமது பிதாவாகக் கொண்டிருக்கிறார் என்பதையும் நீங்கள் கண்டறியுங்கள். இந்தச் சிந்தனையானது அவரது ஆராதனை, ஜெபங்கள் மற்றும் அவரது வாழ்வின் முழுமையான வெளிச் செயல்பாடுகள் ஆகியவற்றைத் தூண்டுவது இல்லையென்றால், அவர் கிறிஸ்தவத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே அர்த்தமாகின்றது.[1]

மனித குலத்திற்கு அளிக்கப்பட்டவைகள் எல்லாவற்றிலும் மாபெரும் ஆசீர்வாதத்தை தேவனுடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்படுதல் என்ற கருத்து விளக்கப்படுத்துகிறது.

## சுவிகரிக்கப்படுதல்: இதன் அர்த்தம்

பவுல், "... அன்பில் ... நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் (தேவனுக்குச்) சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே. 1:4, 6) என்று எழுதினார். கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்கு பவுல், "சுவிகரித்தல்" (Gk.: *huiothesia*) என்ற வார்த்தையை ஏன் பயன்படுத்தினார்? நாம் யாராய் இருக்கிறோம் என்பதையும் தேவன் நமக்கு என்ன செய்திருக்கின்றார் என்பதையும் புரிந்து கொள்ள, சுவிகரித்தல் என்பது நமக்கு எவ்வாறு உதவுகின்றது?

பவுல், தம் வாசகர்கள் அவர்களின் உலகத்திலிருந்து புரிந்து கொள்வதற் காகச் சிலவற்றைத் தரவழைத்தார். சுவிகரித்தலின் செயல்முறைகள் மனதை ஈர்க்கும் நிகழ்ச்சிகளாய் இருந்தன. அந்தச் சடங்கின் விரிவான விவரங்கள் அந்தச் செயலின் தீவிரத் தன்மையை குறைவாக மதிப்பிட்டன. சுவிகரித்தல் என்பது முடிகின்ற பொழுது அது சுவிகரிக்கப்பட்டவருக்கு ஒரு புதிய

*அடையாளத்தை உருவாக்குகின்றது. இதை வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு விவரித்தார்:*

> *சுவிகரித்தல் முடிவடைகின்ற பொழுது அது செயலில் நிறைவடைந்ததாக இருந்தது. சுவிகரிக்கப்பட்டிருந்தவர் தனது புதிய குடும்பத்தில் சட்டரீதியான மகனுக்குரிய எல்லா உரிமைகளையும் கொண்டிருந்தார், மற்றும் தமது பழைய குடும்பத்தில் தமக்கிருந்த எல்லா உரிமைகளையும் இழந்திருந்தார். சட்டத்தின் கண்களுக்கு அவர் ஒரு புதிய நபராயிருந்தார். அவருடைய முந்திய குடும்பத்துடன் தொடர்பான கடன்கள் கட்டுப்பாடுகள் யாவும் அவை ஒருக்காலும் இருந்திராதது போல் அழிக்கப்படும் அளவுக்கு அவர் புதியவரானார்.*[2]

*தேவன் நமக்காக இதைச் செய்தார் என்பதை நாம் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார். நாம் சுவிகரிக்குப்படுவதற்கு முன்பு ஆவிக்குரிய வகையில் அடிமைகளாயிருந்தோம். நாம் பரிதாபத்திற்குரிய வகையில் கடன் பட்டிருந்தோம் - பாவத்திற்கு விற்கப்பட்டு, மரணத்திற்கு வீழ்த்தப் பட்டு, உலகத்தில் நம்பிக்கையற்றவர்களாய், தேவனற்றவர்களாய் இருந்தோம். நம்மை விடுதலை செய்ய, நம்மை இரட்சிக்க, நம்மை சுவிகரித்துக் கொள்ளுவதற்குப் போதிய அளவு தேவன் நம்மீது அன்பு கூர்ந்தார்!*

*தேவன் நமக்காக இதைத் தம்முடைய குமாரன் மூலமாகச் செய்தார். இயேசுவைக் குறித்து யோவான் 1:12, "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று கூறுகின்றது. தேவனுடைய பிள்ளையாகும் அதிகாரம் எல்லா நபர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை. இயேசுவின் மீது முழு நம்பிக்கை வைப்பவர்கள் மட்டுமே தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக முடியும்.*

*கலாத்தியர் 4:4, 5 வசனங்கள், "நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற்கு பிறந்தவரும், நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனு ப்பினார்" என்று கூறுகிறது. நாம் மீட்கப்படும்படிக்கும், தேவனுடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்படும்படிக்கும் தேவன் கிறிஸ்துவை அனுப்பினார்.*

*சுவிகரித்தல் என்றால் என்ன? அது அர்த்தப்படுத்துவது என்ன? சுவிகரித் தல் என்றால் கடந்த காலத்திலிருந்து விடுதலை என்பதாக உள்ளது. சுவிகரித் தல் என்பது அவருடைய பிள்ளை என்று தேவனால் உரிமைகோரப் படுவதாக உள்ளது. சுவிகரித்தல் என்பது நம்மை மீட்டல் என்பதை விடவும் அதிகமானவற்றை நமக்காகத் தேவன் செய்கின்றார் என்பதாக உள்ளது.*

*ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை, அடிமைகள் வாழுமிடமொன்றைக் கடந்து செல்லுகையில் ஒரு இளம் பெண் விற்கப்பட்டுக் கொண்டிருப் பதைக் கண்டார். அவருடைய இருதயம் உருகியது. அவர் ஒரு விலையைக் கோரினார், கடைசியில் அவள் அவருக்குரியவரானாள். அவர் பணத்தைக்*

*கொடுத்த பிறகு, அவளிடத்தில், "இப்பொழுது நீ சுதந்திரமானவளாய் இருக்கிறாய்" என்று கூறினார்.*

*அவள், "இதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டாள்.*

*லிங்கன், "இது நீ சுதந்திரம் பெற்றவளாயிருக்கிறாய் என்று அர்த்தமா கின்றது" என்று பதில் அளித்தார்.*

*"அது நான் எவ்வாறு இருக்க விரும்புகிறேனோ, அவ்வாறு இருக்கலாம் என்று அர்த்தமாகின்றதா?"*

*"ஆம், நீ எவ்வாறு இருக்க விரும்புகின்றாயோ, அவ்வாறு இருக்க முடியும்."*

*"அது நான் எங்கு செல்ல விரும்புகிறேனோ, அங்கு செல்லலாம் என்று அர்த்தமாகின்றதா?"*

*"ஆம், நீ எங்கு செல்ல விரும்புகிறாயோ, அங்கெல்லாம் செல்ல முடியும்."*

*அப்பொழுது, அந்த இளம் பெண் தன் கண்களில் கண்ணீர் மல்க, "அப்படியானால் நான் உங்களுடனேயே செல்வேன்" என்று லிங்கனைப் பார்த்துக் கூறினாள்.*

*தேவன் அதையே உங்களுக்காகச் செய்தார். அவர் உங்களை விடுதலை யாக்கினார். அதற்கும் மேலாக, தேவன் உங்களைச் சுவிகரித்து, தமது சொந்தப் பிள்ளையாக்கினார்.*

## சுவிகரித்தல்: இதன் சிறப்புரிமைகள்

**சிறப்புரிமை ஒன்று : தந்தையின் அன்பு**

*"... அன்பில் ... நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்." சுவிகரித்தல் என்பது நமக்காக தேவன் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது/விளக்குகின்றது.*

*நமக்காகத் தேவன் கொண்டுள்ள அன்பைப் புரிந்துணரத் தொடங்கு வதற்குப் புதிய ஏற்பாடு நமக்கு உதவுகின்றது. இது நமக்கு அவருடைய ஆச்சரியமான அன்பை அளக்க இரண்டு அடிக்கோல்களைத் தருகின்றது. சிலுவை என்பது முதலாவதானதாக உள்ளது: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8). தேவன் எவ்வளவாய் உங்கள் மீது அன்புகூருகிறார் என்பதை நீங்கள் அறிய விரும்புகின்றீர்களா? கொல்கொதாவைக் கண்ணோக்குங்கள். உங்களுக்கான தேவனுடைய அன்பை நீங்கள் அளக்க விரும்புகின்றீர்களா? கல்வாரியின் மீது கவனத்தை ஒருமுனைப்படுத்துங்கள்.*

*மகனாகும் உரிமையின் வரம் என்பது தேவனுடைய அன்பை அளப்பதற்கான இரண்டாம் அடிக்கோலாக உள்ளது: "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; ..." (1 யோவா. 3:1). சுவிகரிக்கப்படுதலின் மூலம் நாம் அவருடைய அன்பை அனுபவிக்கின்*

றோம். நம்மை இரட்சிக்கவோ, நம்மை மன்னிக்கவோ அல்லது நம்மை சுவிகரிக்கவோ அவருக்கு காரணம் எதுவும் இல்லை. அவர் (நம்மீது கொண்ட) அன்பினாலேயே இம்மூன்று செயல்களையும் செய்தார்.

ஆஸ்திரேலியாவில் உரை நிகழ்த்தும் பயணத்திற்காக ஒரு மனிதர் அந்நாட்டிற்குச் சென்றிருந்தார். ஒரு நாள் காலையில் அவர் தாம் தங்கி யிருந்த விடுதியின் அறையை அந்த விடுதியின் வேலைக்காரி சுத்தம் செய்து கொண்டிருக்கையில், படிப்பதற்காக அவர் முகப்பறைக்குச் சென்றார். அவர் தமது குறிப்புகளை மறுகண்ணோட்டமிட்டுக் கொண்டிருக்கையில், வயலின் இசையைக் கேட்டார். அது அவரது கவன முனைப்பைச் சிதைத்தது, அவர் சிடுசிடுப்பானார். கடைசியில் அவர் தமது அறைக்குச் சென்று, அந்த சத்தம் பற்றி வேலைக்காரியிடத்தில் முறையிட்டார்.

அவள், ''அந்த வயலின் இசைப்பது யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியாது, யார் அவர்?"

"அவர் உலகப் புகழ் பெற்ற வயலின் இசைக் கலைஞரான யெகுதி மெனுஹின். அவர் இன்று இரவு நடத்தப் போகும் இசைக் கச்சேரிக்காகப் பயிற்சி செய்து கொண்டிருக்கின்றார்."

அம்மனிதர் பெரிதும் வியப்புற்றார். அவரால் அதை நம்ப இயல வில்லை. அவர் உடனடியாக ஒரு நாற்காலியை எடுத்துக் கொண்டு முகப்பறைக்குத் திரும்பச் சென்று அங்கே அமர்ந்து, அம்மாபெரும் கலைஞர் பயிற்சி செய்து கொண்டிருந்ததைக் கவனிக்கலானார். தாம் அங்கு கேட்டிருந்தது பற்றிப் பிற்பாடு அவர் பின்வருமாறு கூறினார்: "அதை இசைத்தது யார் என்பதை நான் உணர்ந்த உடன், அது ஒரு அற்புதமான இசை நிகழ்ச்சியாக—நான் கேட்டவற்றிலேயே மிகவும் அழகிய இசையாக -இருந்தது."

நீங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையாயிருந்தால், உங்கள் வாழ்வில் (அவரது) இசையைக் கவனியுங்கள். நீங்கள் அதைத் தவறவிட்டுக் கொண்டிருக்கலாம். அது எல்லா வேளைகளிலும் இசைக்கப்பட்டு, கேட்கப் படுவதற்காகக் காத்திருக்கின்றது. நாம் அதைக் கேட்டு இன்புறுவதற்காக அது காற்றில் கலந்து நிரம்பியுள்ளது. அது தேவனுடைய அன்பின் இசையாக உள்ளது. அந்த இசையை இசைப்பது யார் என்பதை நாம் உணர முடிந்தது என்றால், நாம் (நம்) வாழ்வை இதே விதமான வழியில் மீண்டும் ஒருக் காலும் நோக்க மாட்டோம்.

**சிறப்புரிமை இரண்டு: நிலைநிறுத்தும் நம்பிக்கை**

தேவனுடைய குடும்பத்தில் மிகச் சிறந்த விஷயமானது எப்பொழுதுமே இனி வர வேண்டியதாகவே உள்ளது. கிறிஸ்தவம் என்பது நம்பிக்கையின் மார்க்கமாக உள்ளது. தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நாம், நம்புதற்கரிய சுதந்தரத்திற்காக - தேவன் தாமே உத்தரவாதப்படுத்தியுள்ள சுதந்தரத்திற்காக—நம்பிக்கை கொண்டுள்ளோம் (1:14).

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் கிறிஸ்துவின் மகிமையில் பங்கேற்கும் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கின்றோம்

(ரோமர் 8:17). 1 யோவான் 3:2, "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப் போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறுகின்றது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், பரலோகம் என்று அழைக்கப்படும் ஓரிடத்தில் எல்லாவற்றிலும் மாபெரும் குடும்ப மறு ஒன்றிணைப்பின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். அங்கு நாம் கர்த்தருடனும் தேவனுடைய குடும்பத்துடனும் என்றென்றைக்கும் இருப்போம் (1 தெச. 4:17). நாம் அடிக்கடி பாடும் பின்வரும் பாடல் அடிகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்:

சில வேளைகளில் நாம் ஒன்றுகூடி சிரிக்கிறோம்
சில வேளைகளில் நாம் அழுகிறோம்;
சில வேளைகளில் இதய வலிகளையும் பெருமூச்சுக்களையும்
ஒன்றாய் நாம் பகிர்ந்து கொள்ளுகிறோம்;
சில வேளைகளில் நாம், பரலோகத்தில்
தேவனின் குடும்பத்திற்கு யாவரும் செல்கையில்
அது எவ்வாறு இருக்குமென்று
ஒன்றாய்க் கனவு காண்கின்றோம்.[3]

நமது நம்பிக்கை என்பது சுவிகரிக்கப்படுதலின் சிறப்புரிமைகளில் ஒன்றாக இருக்கும் காரணத்தினால் இந்தப் பாடலைப் பாடுவதற்கு நாம் நமது குரல்களை எழுப்புகின்றோம்.

## சுவிகரிக்கப்படுதல்: இதன் பொறுப்புகள்

சுவிகரிக்கப்படுதல் "என்பதன் சொற்பொருளில்தான் கிறிஸ்தவ வாழ்வு முழுமையும் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது"[4] என்று J. I. பேக்கர் அவர்கள் கூறினார். இயேசு தாம் யார் என்பதை - தேவனுடைய குமாரன் என்பதை - அறிந்திருந்தபடியால் அவர் தாம் வாழ்ந்த மாதிரியிலான அவ்வாழ்வை மேற்கொண்டிருந்தார். தேவன் நமது தந்தையாக உள்ளார், நாம் அவருடைய பிள்ளைகளாக உள்ளோம் என்ற அறிவானது நமது வாழ்வை நாம் வாழும் வழிமுறையை வடிவமைக்க வேண்டும். இதை இயேசு மலைப்பிரசங்கத்தில் வலியுறுத்தினார். அந்தப் பிரசங்கத்தில் இயேசு, தேவனைத் தந்தையென்று அறிபவர்கள் யார் என்பது பற்றிக் கூறியது என்ன என்பதைக் கவனியுங்கள்:

1. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் வாழ வேண்டும். தேவனைப் போன்றே செயல்படுவதால் நாம் இதைச் செய்கின்றோம். இயேசு, "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைத் துன்பப்படுத்துகிறவர்

களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் ...” என்று கூறினார் (மத். 5:43-45).

தேவனுடைய பிள்ளையாக வாழுதல் என்றால் தேவனைப் போலச் செய்தல் என்று அர்த்தப்படுகின்றது. மேலும் இது பிதாவுக்கு கனம் கொண்டு வருதல் என்றும் அர்த்தப்படுகின்றது, நாம் “... மனுஷர் உங்கள் நற்கிரியை களைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது” (மத். 5:16) என்று வாசிக்கின்றோம்.

நாம் தேவனைப் போலச் செய்வதினால், தேவனுக்குக் கனம் கொண்டு வருதலினால், மனிதரை அல்ல, ஆனால் தேவனைப் பிரியப்படுத்துவதையே நம்முடைய நிலைத்த குறிக்கோளாய்க் கொண்டிருப்பதினால் தேவனு டைய பிள்ளைகளாக வாழ்கின்றோம். மற்றும் “மனுஷர் காண வேண்டு மென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை” (மத். 6:1).

2. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் ஜெபிக்க வேண்டும். சுவிகரிக்கப்பட்ட பிள்ளைகள் என்ற வகையில் நாம் தேவனிடத்தில், “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே” (மத். 6:9) என்று ஜெபிக்கின் றோம். நாம் ஒரே விஷயங்களைக் கருத்தற்ற விதத்தில் மீண்டும் மீண்டு மாகப் பிதாவிடத்தில் கூறுவதைத் தவிர்க்க வேண்டும் (மத். 6:7, 8). நாம் தாராளமாகவும் தைரியமாகவும் ஜெபிக்க முடியும். “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்” (மத். 7:7).

3. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நம்பிக்கை கொள்ள வேண்டும். நாம் அவசியமற்ற/தேவையற்ற வருத்தம் அல்லது கவலை இன்றி வாழ முடியும். நாம் கொண்டுள்ள உண்மையான தேவைகளை நமது பிதா கவனித்துத் தேவையானவற்றை அளிப்பார் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ‘‘இவைகளையெல்லாம் அஞ்ஞானி கள் நாடித் தேடுகின்றார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவை கள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” (மத். 6:32, 33).

சுவிகரித்தல் தனது சிறப்புரிமைகளைக் கொண்டுள்ளது, மற்றும் அது தனது பொறுப்புக்களையும் கொண்டுள்ளது. நம்மில் பெரும்பாலோர் நமது பெற்றோர் சில வேளைகளில் நம்முடன் அமர்ந்து குடும்பப் பெயரைக் கனப்படுத்துமாறு நம்மை உற்சாகப்படுத்தியதை நினைவுகூர முடியும்.

தேவனுடைய குடும்பத்திற்கும் இதே விஷயம் அவசியமானதாக உள்ளது. நமது சிறப்புரிமைகளுடன் பொறுப்புக்களும் வருகின்றன. நாம் இவ்விரண்டில் ஒன்றில்லாமல் மற்றொன்றைக் கொண்டிருக்க இயலாது.

*தேவனுடைய குடும்பத்திற்குள் சுவிகரிக்கப்பட்டு இருத்தலின் சிறப்புரிமையானது தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாய் வாழும் பொறுப்பைக் கொண்டுள்ளதாகவும் இருக்கின்றது.*

## முடிவுரை

*"இன்னும் வருங்காலத்தில் தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆச்சரியப் படத்தக்கவைகளை, இப்போது நாம் கடந்து சென்று அனுபவிப்பவை களோடு ஒப்பிடும் போது இவை ஒன்றுமில்லாதவைகளுக்கும் குறைவான தாகவே உள்ளன என்று நான் எண்ணுகிறேன். தேவனுடைய புத்திரர் தங்களுக்குச் சொந்தமானவைகளோடு வெளிப்படும் அற்புதமான காட்சியைக் காண, சிருஷ்டிப்பு முழுவதும் ஆவலோடே காத்துக் கொண்டிருக்கின்றன" (ரோமர் 8:18, 19;* J.B. *பிலிப்ஸின் மொழிபெயர்ப்பு). இது, முழுப்படைப்பும் - பரலோக ஜீவிகள் உட்படப் படைப்பு முழுவதும் - மாபெரும் கூட்டமாக ஒன்றுகூடி, திரைகள் திறக்கப்படுவதற்காக மூச்சு முட்டக் காத்திருத்தல் போன்றதாக உள்ளது. காலத்தின் முடிவில் கடைசியாக அது நடக்கின்ற பொழுது, படைப்பு முழுமையும் திகைப்பில் பெருமூச்சு விடும். தேவன் தம்முடைய சுவிகாரப் பிள்ளைகளுக்குக் கொடுத்துள்ள மகிமைக்குப் பதில்செயலை அவர்கள் செய்கையில், அந்த சத்தமானது அண்டம் முழுவதிலும் கேட்கப்படும்.*

---

*குறிப்புகள்*

[1]J. I. Packer, *Knowing God* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1973), 182. [2]William Barclay, *The Letters to the Galatians and Ephesians,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 80. [3]Lanny Wolfe, "God's Family," *Songs of Faith and Praise* (West Monroe, La.: Howard Publishing Co., 1994), 744. © 1974 Lanny Wolfe Music/ASCAP. All rights controlled by Pathway Music, P.O. Box 2250, Cleveland, TN 37320. Used by Permission. [4]Packer, 190.

# மீட்கப்பட்டவர்கள்

# (1:7, 8)

*ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் கொண்டாட்டங்களுக்காக மக்கள் அவ்வப்போது ஒன்றுகூடுகின்றனர். எடுத்துக்காட்டாக மக்கள், பிறந்த நாட்களையும் ஆண்டு விழாக்களையும் கொண்டாடுகின்றனர். நாம் அலங்கரிக்கின்றோம். நாம் (வாழ்த்து) அட்டைகளையும் பரிசுகளையும் (விலைக்கு) வாங்குகின்றோம். அந்தக் கொண்டாட்டத்தையும் அதில் பங்கேற்ற யாவரையும் நினைவுபடுத்திக் கொள்வதில் நமக்கு உதவுவதற்காக நாம் (புகைப்) படங்கள் அல்லது வீடியோ சுருள் காட்சிகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றோம்.*

*நாடு தழுவிய வகையில் இந்தியாவில் - சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, ஆசிரியர் தினம், மற்றும் உழைப்பாளர் தினம் போன்ற - பல்வேறு விடுமுறை நாட்கள் கொண்டாடப்படுகின்றன. இந்தக் கொண்டாட்டங்கள், குடும்பம், நண்பர்கள், சுற்றுலாக்கள், வான வேடிக்கைகள் மற்றும் ஊர்வலங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. நாம் ஒரு நாடு என்ற வகையில் எந்நிலையில் இருந்துள்ளோம், நாம் எதற்காக நிலைநிற்கிறோம் மற்றும் வரலாற்றில் நாம் எவ்வாறு ஏற்புடையவைகளாக இருக்கின்றோம், என்பவற்றை இந்த விசேஷ நிகழ்ச்சிகளின் மூலம் நாம் நினைவுபடுத்திக் கொள்ளுகின்றோம்.*

*நாம் வேதாகமத்தினிடம் வருகின்ற பொழுது, தேவன் கிறிஸ்துவின் மூலம் நமக்குச் செய்துள்ளதுதான் நமது வாழ்வின் மிகவும் முக்கியமான கொண்டாட்டமாயிருக்க வேண்டியது என்று கண்டறிகின்றோம். தேவனுடைய மக்களின் பொதுக் கூடுகை ஒவ்வொன்றும், கிறிஸ்து யார் என்றும் மற்றும் அவர் செய்துள்ளது என்ன என்பவற்றின் மாபெரும் கொண்டாட்டமாகவே இருக்க வேண்டும்.*

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்க வசனங்கள், கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்கு அளித்துள்ள யாவற்றிற்காகவும் அவருக்குப் பவுல் புகழ்ச்சிகளினுடைய கொண்டாட்டத்துடன் எதிரொலிக்கின்றன. நாம், 1:3-14ல் கொண்டாட்டத்தின் சாரம் மிகுந்துள்ள ஒரு ஒற்றை வாக்கியத்தைக் காண்கின்றோம்.*

*நம்மை தேவன் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்துடனும் ஆசீர்வதித்திருப்பதைப் பவுல் "துதியின் வெற்றி முழக்கத்தில்" கொண்டாடினார் (1:3). கிறிஸ்துவுக்குள் நம்மை தேவன் தமது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக ஆக்கியிருப்பதற்காக அவர் (பவுல்) கொண்டாடினார் (1:4).*

*தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாகச் சுவிகரித்திருப்பதற்காகப் பவுல் கொண்டாடினார் (1:6). கிறிஸ்துவுக்குள் நமக்கு தாராளமாக அருளப் பட்டுள்ள கிருபையை அவர் (பவுல்) கொண்டாடினார் (1:5).*

*பிறகு நாம் பின்வரும் கிளர்ச்சியூட்டுகிற கூற்றினிடத்திற்கு வருகின் றோம்: "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டா யிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்" (1:7, 8).*

*கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டிருத்தலை நாம் கொண்டாடுகின்றோம். இந்தக் கொண்டாடுதல் எவ்வாறு வெளிப்படுகின்றது?*

## மீட்பின் அர்த்தத்தை நாம் கொண்டாடுகின்றோம்

*"... இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (1:7). கிறிஸ்துவுக்குள் உண்டா கின்ற மீட்பைப் பவுல் கொண்டாடினார், ஆனால் அவர் (பவுல்) "மீட்பு" என்பதன் மூலம் எதனை அர்த்தப்படுத்தினார்? பின்வரும் இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "நிலை" மற்றும் "விலை."*

*மீட்பு என்பது நாம் மீட்கப்படுவதற்கு முன்பு நாம் இருந்த நிலைபற்றிச் சிலவற்றை நமக்குக் கூறுகின்றது. ஒரு விளக்கவுரையாளர் பின்வரும் உற்றுநோக்குதலை ஏற்படுத்தினார்: "இன்னொருவருக்கு உரியதாயிருக் கின்ற ஒரு பொருளை அல்லது நபரை விடுவித்தல் என்பதே மீட்பின் அடிப்படைக் கருத்தாக உள்ளது."[1]*

*பழைய ஏற்பாட்டில், மீட்பு என்பது ஒரு அடிமையின் சுதந்திரத்தை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு/ஒரு அடிமைக்குச் சுதந்திரத்தை ஈட்டித் தருவதற்கு செலுத்தப்பட்ட விலையாக இருந்தது. தேவன் இஸ்ரவேலரை எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுவித்த பொழுதும், அது மீட்பாய் இருந்தது. மீட்பு என்பது இன்னொருவரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படுதல் அல்லது சுதந்திரம் அடைதல் என்று அர்த்தப்படுகின்றது. "பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு" இருத்தல் பற்றிப் பவுல் எழுதினார் (ரோமர் 7:14). மீட்பு என்பது, நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு இருந்த நிலைமையை நினைவுபடுத்துகின்றது. (அப்பொழுது) பாவம் என்பது நமது எஜமானாய் இருந்தது.*

*மீட்பின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு நாம் (முன்பிருந்த) பாவம் நிறைந்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கின்றது. அந்த நிலையை விட்டு நம்மை வெளியே கொண்டு வந்தது எது என்பதைப் பற்றியும் நாம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. மீட்பின் விலை என்னவாக இருந்தது? பவுல், "அவருடைய இரத்தத்தினாலே நமக்கு மீட்பு உண்டாயிற்று ..." என்று கூறினார். மீட்பு என்பது மலிவானதாக இருந்ததில்லை. இதைப் பெறுவதற்கு விலையானது*

*மிக உயர்ந்ததாயிருந்தது. "... அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க" (மாற். 10:45) வந்ததாக இயேசுதாமே கூறினார். பேதுரு, "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேது. 1:18, 19) என்று கூறினார்.*

*எபிரெயருக்கு எழுதிய நிருபம், "... தம்முடைய சொந்த இரத்தத் தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி. 9:12) என்று கூறுகின்றது. நமது மீட்பானது, கற்பனை செய்யக் கூடிய அளவில் மிக உயர்ந்த விலையினால் - தேவ குமாரனின் வன்முறையான மரணத்தினால்—நமக்கு உண்டாயிற்று.*

*உலகில் (எங்கோ உள்ள) சில பகுதியில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தைப் பற்றிய ஒளிபரப்பை நாம் காண்கின்றபோது நமது நெஞ்சத்தில் வேதனை ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. என்னத்தை எதிர்பார்ப்பது என்பதை அறியாமலேயே மக்கள் ஒவ்வொரு நாளும் துயில் நீங்கி எழுகின்றனர். நாளின் முடிவில் மீண்டும் ஒருவர் மற்றவரைக் காண்போமா என்பதை அறியாத நிலையிலேயே குடும்பத்தவர்கள் ஒவ்வொரு காலையிலும் பிரிந்து செல்லுகின்றனர். இது மிகவும் பயங்கரமான சூழ்நிலையாக உள்ளது. இது என்னைப் போன்ற மக்கள், நாம் கொண்டுள்ள சார்பு நிலையில் பாதுகாப்பு மற்றும் சுயாதீனம் ஆகியவற்றை மதிக்கும்படி செய்ய வேண்டும். பிறருடன் சேர்ந்து நான் மகிழ்வுடன் அனுபவிப்பது (மீட்பு) என்பது மிக உயர்ந்த விலையினால் உண்டாயிற்று. யுத்தத்தில் மரித்துப் போன 160,000க்கும் அதிகமான அமெரிக்க வீரர்களை புதைத்த அர்லிங்டன் தேசியக் கல்லறை போன்ற இடங்களில் இருக்கின்ற வெண் சிலுவைகளின் வரிசைகள் விடுதலையின் விலையை நினைவுபடுத்துபவைகளாக நிலைநிற்கின்றன.*

*நமக்காக இயேசு தம்முடைய ஜீவனைக் கையளித்தார். அவர் கல்வாரிக்குச் செல்லாது இருந்திருப்பாரேயானால், நம்மில் எவருக்கும் (நித்திய ஜீவனின்) நம்பிக்கை ஏற்பட்டிருக்காது. நமது மீட்புக்கு அவர் கிரயம் செலுத்தினார். அவர் நமது மீட்பராய் இருக்கின்றார்.*

*இந்த சத்தியத்தைக் கொண்டு நாம் என்ன செய்கின்றோம்? இதை நாம் நமது சிந்தைகளில் தேக்கி வைப்பதுடன் மட்டும் நின்று விடுகின்றோமா? இதைப் பற்றி நாம் பாடுவதுடன் மட்டும் விட்டு விடுகின்றோமா? இதை நாம் அவ்வப்போது மட்டும் நினைவுபடுத்திக் கொள்கின்றோமா? மீட்பின் சத்தியம் நம் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாறுதலை ஏற்படுத்த வேண்டும் என்று இயேசு நோக்கம் கொண்டுள்ளார். நாம் எவ்விதமானவர்களாய் - தேவனைக் கனப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரில் அன்புகூர்ந்து, அவரில் களிகூர்ந்து, அவரைத் துதிக்கின்றவர்களாய் - இருக்க வேண்டும் என்று தேவன் எப்பொழுதும் நம்மீது உணர்த்தும் அர்த்தத்தின்படியான மக்களாய் நாம் இருக்க முடியும்படி அவர் (இயேசு) நம்மை மீட்டார். இந்தத் திட்டத்திற்கு எதிராகச் சென்று, பாவத்தில் வாழ்வதை நான் தேர்ந்து கொள்ளும்பொழுது, சிலுவையில் அவரது மரணம் ஒருக்காலும்*

*ஏற்பட்டிராதது போன்று, அது எவ்வித அர்த்தமும் இல்லாதது போன்று, அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியற்றது போன்று, மற்றும் எனக்காக அவர் இரத்தம் சிந்தி மரித்தது ஒன்றும் பொருட்படுத்தத்தக்க விஷயம் அல்ல என்பது போன்று வாழ்வதை நான் தேர்ந்து கொள்கின்றேன்.*

*நரகத்திற்கு வெளியே பரலோகத்திற்குத் தயாரான நிலையில் நாம் இருக்க வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்திற்கிணங்க நாம் இருக்கும்படியாக இயேசு விலை செலுத்தினார் என்பதே மீட்பின் அர்த்தமாக உள்ளது.*

## *மீட்பின் விளைவை நாம் கொண்டாடுகின்றோம்*

*"... இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (1:7) பாவங்களுக்கு மன்னிப்பு என்பதே மீட்பின் விளைவாக உள்ளது.*

*"மன்னிப்பு"* (Gk.: *aphesis*) *என்ற பெயர்ச் சொல்லானது "அனுப்புதல், புறப்பட்டுச் செல்லும்படி வழியனுப்புதல்" என்று அர்த்தப்படுகின்ற வினைச் சொல்லில் இருந்து வருகிறதாக உள்ளது. தேவன் நமது பாவங்களைப் புறம்பே அனுப்பி விடுகிறார். அவை இனியும் நமக்கும் தேவனுக்கும் நடுவில் நிற்பதில்லை.*

*பழைய ஏற்பாட்டின்கீழ் வாழ்ந்தவர்களுக்குப் போக்காடு இருந்தது. பாவ நிவிர்த்தி செய்யும் நாளில், இஸ்ரவேல் ஜனங்களின் எல்லாப் பாவங்களையும் அவர்களிலிருந்து அந்த வெள்ளாட்டுக் கடாவுக்கு மாற்றும் அடையாளமாக, பிரதான ஆசாரியன் அந்த வெள்ளாட்டுக் கடாவின் தலையின்மேல் தன் கைகளை வைப்பான். பின்பு அந்த வெள்ளாட்டுக்கடா, பாளையத்திற்கு என்றுமே திரும்பி வராத விதமாக அது வனாந்திரத்திலே கொண்டு போய் விடப்படும். வெள்ளாட்டுக் கடா போய் விட்டது மற்றும் அப்படியே பாவங்களும் போய் விட்டன (லேவி. 16).*

*இயேசு கிறிஸ்து நம்முடைய போக்காடாக ஆனார். அவர் நமது குற்றங்களைத் தம்மேல் சுமந்து, தண்டனையை ஏற்றுக் கொண்டார்:*

> *... கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசா. 53:6).*
>
> *நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:21).*
>
> *... அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார் ... (1 பேது. 2:24).*

*ஒருமுறை ஒரு மக்கள் குழுவினர் அவர்களின் மத நம்பிக்கைகள் குறித்துக் கேட்கப்பட்டார்கள்.[2] பரலோகம் மற்றும் நரகம் பற்றி மாறுபட்ட*

சில கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. பதில் கூறியவர்களின் பொதுவான கண்ணோட்டங்களில் ஒன்று பின்வருமாறு இருந்தது: நீங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பது நீங்கள் எவ்வளவு நல்லவராய் இருக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்ததாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ஒரு நபர் இடர்ப்பாட்டிற்குப் புறம்பே இருந்தால், பொறுப்புக்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தால், மக்களை நன்கு நடத்தினால், அவரைப் பற்றிய மோசமானவைகளைக் காட்டிலும் அவரைப் பற்றிய நல்லவைகளை அதிகமாய்க் கூறமுடியும் என்று காணப்பட்டால் அந்த நபர் பரலோகத்திற்குச் செல்லுவார்.

அந்தக் கருத்து வேதாகமத்தில் காணப்பட முடியாது! நம்மில் எவரும் பரலோகம் செல்லப் போதிய அளவு நல்லவர்களாய் இருப்பதில்லை என்றே வேதாகமம் போதிக்கின்றது: "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10); "எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர் களாகி" (ரோமர் 3:23); "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23).

இந்த மூன்று வசனங்கள் மாத்திரமேகூட நற்பண்பு மக்களைப் பரலோகத்திற்கு இட்டுச் செல்லுகின்றது என்ற கருத்தைப் பொய்யாக்கு கின்றது. உங்கள் பள்ளியில் நீங்கள் மிகச் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக் கப்படுதலோ, குடிமைக் கழகத்தினரால் நீங்கள் ஒரு மாதிரிக் குடிமகனாக அங்கீகரிக்கப்படுதலோ அல்லது உங்கள் சபைக்குழுமத்தில் நீங்கள் அக்கறைக்கும் பரிவிரக்கத்துக்கும் பெயர் பெற்ற மனிதராக மதிக்கப் படுவதோ ஒரு பொருட்டே அல்ல. நீங்கள் உங்களையே அடிப்படையில் நல்லவராகக் காண்பதால் மட்டும் நீங்கள் பரலோகத்தில் பிரவேசித்து விட முடியாது. நற்பண்பு (மாத்திரம்) நம்மைப் பரலோகத்திற்கு இட்டுச் சென்று விடாது. நம்மில் எவரும் எந்தக் காலத்திலும் போதிய அளவு நல்லவராய் இருந்து விட முடியாது. நமது பாவங்கள் அந்த அளவு காணப்படுகின்றன.

முதல் முறையாக நான் பாவம் செய்தது, முதல் முறையாக நீங்கள் பாவம் செய்தது என்பது நாம் நல்லவர்களாய் இருப்பதினால் பரலோகம் செல்லுவதை இயலாத செயலாக்கியது. ஒரு பாவியைப் பாவமில்லாதவராக ஆக்க, நம்மில் யாராலுமே எதுவும் செய்ய முடியாது.

நாம் எவ்வளவுதான் நல்லவர்களாக மற்றவர்களுக்குக் காணப் பட்டாலும், நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டோம். நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும்படி நம்மால் செய்ய முடியாது. நம்மை மன்னிப்பதினால் தேவன் மட்டுமே இதைச் செய்து முடிக்கின்றார். நமது பாவங்களை (நம்மை விட்டுப்) புறம்பே அனுப்புவதால் இதை அவர் செய்கின்றார். இதனால் தான் நாம் மீட்பின் விளைவை - பாவமன்னிப்பை - கொண்டாடுகின்றோம்.

## மீட்பின் அளவை நாம் கொண்டாடுகின்றோம்

"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டா

யிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்" (1:7, 8). நமது மன்னிப்பின்/நாம் மன்னிக்கப்படுதலின் பரந்த தன்மையையும் முழுமைத் தன்மையையும் பவுல் உறுதிப்படுத்தினார். தேவன் நமது வாழ்வில் பெருகச் செய்த அவருடைய கிருபையின் பரிபூரணத்தினால் நாம் மன்னிக்கப்படுதலின் அளவானது/விரிவளவானது அளக்கப்படுகின்றது.

தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே மீட்டு மன்னிக்கின்றார். தேவன் ஒரு (சிறு) பங்கு அளவைக் கொண்டிருப்ப தில்லை. தேவன், நாம் ஒருக்காலும் சிறப்புடன் விஞ்சியிருக்குமளவுக்கு ஒரு நபரை அதிக அளவு "பெரிய" பாவங்கள் கொண்டவராக அனுமதிப்ப தில்லை. "... அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20). தேவனுடைய கிருபை எட்டுமளவுக்கும் அப்பால் எந்த ஒரு மனிதரும் ஒரு காலத்திலும் பாவம் செய்து விட முடியாது, அவர் கையாள முடியாத அளவுக்கு நமது பாவம் அவ்வளவு பயங்கரமானதாகவோ அவ்வளவு எண்ணிறந்ததாகவோ ஒருக்காலும் ஆகி விட முடியாது.

சத்தியம் பின்வருவதாக உள்ளது: நீங்கள் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும் நற்பண்பானது உங்களைப் பரலோகத்திற்கு இட்டுச் சென்று விடாது; இருப்பினும், நீங்கள் இயேசுவின் மீது உங்கள் நம்பிக்கையை வைத்தால் நம்புவதற்கரிய பாவம் நிறைந்த தன்மையானது உங்களைப் பரலோகம் செல்லாமல் தவிர்த்து விடாது.

முதலாம் நூற்றாண்டில், சிலுவையின் காலத்திற்கும் அதனைப் பின் தொடர்ந்து வந்த காலத்திற்கும் வாசிப்பவர்களை எடுத்துச் செல்லுகின்ற நாவல் ஒன்றை தோம் லெம்மன்ஸ் என்பவர் எழுதினார். நாசரேத்திலிருந்து வந்த கலகக்காரப் போதகர் ஒருவரைச் சிலுவையில் அறைவதற்காக ஒரு சிலுவையை வடிவமைக்கும்படி ஒரு இரவு வேளையில் திடீரென்று எழுப்பப்பட்டு கட்டளை பிறப்பிக்கப்பட்ட லீனஸ் என்ற பெயர் கொண்ட ஒரு தச்சர்தான் இந்த நாவலின் முதன்மைப் பாத்திரமாக இருக்கின்றார். அதை அவர் செய்தார். அதே நாளின் பிற்பகுதியில் லீனஸ், தாம் செய்திருந்த சிலுவையில் நசரேயனாகிய இயேசு இரத்தம் சிந்தி மரிப்பதை அங்கு நின்று கவனித்தார்.

அவருக்குள் குற்ற உணர்வு மேலோங்கியது. அவர் எருசலேமுக்கு விரைந்தோடி, சத்தியம் மற்றும் ஜீவனைத் தேடினார். மரித்த கலிலேயப் போதகரின் நினைவு பல ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இன்னும் அவரைத் துரத்திற்று. தர்சு நகரிலிருந்து வந்த சவுல் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதரை லீனஸ் சந்தித்தார். கற்பனையில் விளைந்த அவர்களின் சந்திப்பில் லீனஸும் சவுலும் பின்வருமாறு உரையாடினார்கள்:

> "நான் அவரது இரத்தத்தைக் குறித்து குற்றமுள்ளவனாக - நேரடியான குற்றமுள்ளவனாக - இருக்கின்றேன்! அவர் குற்றமறியாதவராக இருந்தார் என்று நான் அறிந்தேன், உணர்ந்தேன், இருப்பினும் நான் -" அவரால் வார்த்தை கூற முடியாதிருந்தது, அவரது

சிந்தையானது குற்றமற்ற ஒரு மனிதரின் இரத்தத்தினால் ஈர்க்கப்பட்டது ...

கடைசியில் அவர் வெட்கம் மற்றும் குழப்பத்தில் ஊறிய குரலில், "அவர் கொல்லப்பட்ட அந்தச் சிலுவையை நான் செய்தேனே" என்று முணுமுணுத்தார். "நான் அறிந்திருந்தேன், இருந்தாலும் நான் சம்மதித்தேனே -"

... சவுல் சாய்ந்து அவரது தோள்களைப் பற்றிக் கொண்டார். "தச்சரே இதில் நீங்கள் நிச்சயமாக என்னை விட அதிகம் குற்றவாளியாக எண்ண முடியாது ... ஆனால் நம்மில் எவரும் அவரது மரணத்தின் பங்கில் இருந்து தப்பிக்க முடியாது. லீனஸ், உனக்குப் புரியவில்லையா? அவர் இந்த முழு உலகத்தின் - வாழ்ந்திருந்த அல்லது இனி வாழப் போகின்ற ஒவ்வொருவருடைய - பாவங்களுக்காக ஒரே தரம் கொல்லப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார்."

லீனஸின் கண்களிலிருந்து சூடான கண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கிற்று. அவர் தமது தலையைக் குலுக்கினார், காண முடியாதவராய், (அதை) ஏற்றுக் கொள்ளத் தம்மை அனுமதிக்க இயலாதவராய் இருந்தார் -

சவுல், "என் நண்பனே, இதைப் பின்வருமாறு சிந்தித்துப் பார். உனது வேலையானது அவரது மரணத்திற்குப் பங்களித்திருந்தது என்றால், அது முழுப்படைப்பிற்கும் ஒரு புது வாழ்வை அளிப்பதற்கும் பங்களித்துள்ளதல்லவா? லீனஸ், நீ ஒரு சிலுவையை மட்டும் செய்யவில்லை, நீ ஒரு பலிபீடத்தையுமல்லவா கட்டியிருக்கின்றாய்."[3]

நமது பாவத்தைக் குறித்து, தேவகிருபையானது ஒன்றும் செய்ய இயலாத அளவுக்கு அவ்வளவு அதிகமாகவோ அல்லது அவ்வளவு பயங்கரமாகவோ நாம் பாவம் செய்து விட முடியாது என்று சிலுவை உறுதிப்படுத்துகின்றது. மனிதர்கள், தேவனுடைய பரிபூரணமான குமாரனை இழுத்துச் சென்று, ஆடையை உரித்து, அடித்து, சாதாரணக் குற்றவாளியைப் போல் மரிக்கும்படி அவரை ஒரு மரச் சிலுவையில் தொங்க விட்டார்கள். அவர்கள், இயேசுவைச் சிறுமைப் படுத்தவும், துன்புறுத்தவும், அழிக்கவும் தங்களால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்தார்கள். தேவனுடைய கிருபையானது அவர்களுடைய பாவங்களை விட இன்னும் அதிகமானதாக இருந்தது. அவர்கள் இயேசுவுக்குச் செய்த எல்லாவற்றையும் தேவன் எடுத்துக் கொண்டு, அவருடைய (இயேசுவின்) இரத்தத்தின் மூலம் பாவ மன்னிப்பைச் சாத்தியமாக்கினார்.

## முடிவுரை

நீங்கள் மீட்பின் கொண்டாட்டத்தில் இணைந்திருக்கின்றீர்களா? நற்பண்பு (மட்டும்) உங்களைப் பரலோகத்திற்கு இட்டுச் சென்று விடாது என்பதை நினைவில் வையுங்கள். இயேசுவுக்குள் இருத்தல் என்பது மட்டுமே பரலோகம் செல்லுகின்ற ஒரே வழியாக உள்ளது. நீங்கள் இயேசுவுக்குள் இருக்கின்றீர்களா? உங்கள் வாழ்வை அவருக்கு அர்ப்பணியுங்கள். இதை இன்னொரு நாள் செய்யலாம் என்று தள்ளிப் போடாதீர்கள்!

*மீட்பு என்பது இன்னும் ஒரு உண்மை நிலையாக உள்ளது. மன்னிப்பு என்பது இன்னமும் அளிக்கப்படுகின்றது. கிருபை இன்னமும் பெருக் கெடுக்கின்றது.*

---

*குறிப்புகள்*

[1]Francis Foulkes, *The Epistle of Paul to the Ephesians,* The Tyndale New Testament Commentaries, rev. ed., gen. ed. Leon Morris (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1989), 58. [2]"Hell's Sober Comeback," *U.S. News & World Report* (25 March 1991): 56. [3]Thom Lemmons, *Once Upon a Cross* (Sisters, Oreg.: Multnomah Books, 1993), 304.

# சுதந்திரம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது (1:11-14)

*நீங்கள் சிறு பிள்ளையாய் இருக்கையில் உங்களால் தூங்க இயலாத வகையில் மெய்சிலிர்க்கச் செய்த அல்லது உணர்வெழுச்சியூட்டக் கூடிய வகையில் ஏதேனும் நடந்திருந்தால் அது எவ்வாறு இருக்கும் என்பதைப் பெரும்பாலும் நீங்கள் நினைவுகூரலாம்.*

*பினேயாஸ் தூங்க இயலாதவனாக இருந்தான். அவன் சூரியனுக்கு முன்பாகவே எழுந்து விட்டான். அவன் தனது பையைக் கட்டி வைத்தவனாக, நாளைத் தொடங்கத் தயாராகப் படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தான். அது 1820ம் ஆண்டாயிருந்தது. பினேயாஸ் கடைசியாக ஒரு தீவை - தனது சொந்தத் தீவைக் காண வேண்டியவனாக இருந்தான்.*

*அந்தத் தீவைப் பினேயாஸ் தனது தாத்தாவிடமிருந்து ஒரு வெகுமதியாகப் பெற்றிருந்தான். புதிதாகப் பிறந்தவன் என்ற வகையில் பினேயாஸுக்கு, கனெக்டிக்கெட் பகுதியில் இருந்த ஐவி என்ற பெயர் கொண்ட தீவு ஒன்றின் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவன் தன் சிறுவயதிலேயே, தனது தீவைப் பற்றித் தனது பெற்றோர்களிடமிருந்து கேள்விப்பட்டிருந்தான். அவர்கள் பினேயாஸிடம் நகைச்சுவையாக, அவன் ஒரு பணக்கார நிலச் சொந்தக்காரன் ஆன பிறகு தங்களை மறந்து விட வேண்டாம் என்று கெஞ்சுவது உண்டு. பினேயாஸ் தனது தீவைப் பற்றிக் கனவு கண்டு கொண்டும், அதைக் காணும் நாளை எதிர்பார்த்துக் கொண்டும் வளர்ந்தான். அவன் தனது சொந்த உடமையைக் கொண்டிருப்பான், அங்கு ஒரு நேர்த்தியான வீட்டைக் கட்டுவான், ஒரு பண்ணையை நடத்துவான், மற்றும் கால் நடைகளை வளர்ப்பான்.*

*உங்களுக்கு ஒரு தீவு சொந்தமாயிருந்ததென்றால், நீங்கள் அதைக் காண விரும்ப மாட்டீர்களா? ஆம் நீங்கள் விரும்புவீர்கள் தானே, மற்றும் பினேயாஸ் தனது தீவைப் பார்ப்பதற்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி தனது பெற்றோர்களிடம் கெஞ்சினான். கடைசியாக அவனது தந்தை (அதற்கு) ஒப்புக் கொண்டார். 1820ன் கோடைக்காலத்தில் தந்தையும் மகனும், பினேயாஸுக்குச் சொந்தமான தீவைக் காண்பதற்கான அவர்களின் பயணத்தைத் தொடங்கினார்கள்.*

*பயணத்தைத் தொடங்கியதில் இருந்தே பினேயாஸ், "நாம் நெருங்கி விட்டோமா? அடுத்த குன்றின் உச்சியில் இருந்து அதை நாம் காண*

முடியுமா?" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய தந்தையும், விரைவில் அங்கு இருப்போம் என்று தொடர்ந்து பதில் கூறிக் கொண்டிருந்தார்.

கடைசியில், அவனது தந்தை மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியைச் சுட்டிக்காண்பித்து, "அது அந்த மரங்களுக்கு அப்பால் உள்ளது" என்று கூறினார். பினேயாஸ் வண்டியிலிருந்து தாவிக் குதித்து, மரங்களை நோக்கி ஓடினான். அவன் எவ்விதத் தயக்கமும் இன்றிக் காட்டினுள் நுழைந்து, தனது தீவைக் காண்பதற்காக மரங்களினூடாக ஓடினான். கடைசியில் அவன் தெளிவானதொரு நிலப்பகுதிக்கு வந்தான். கடைசியாக அவனால் தனது ஐவித் தீவைக் காண முடிந்தது.

பினேயாஸ் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. அவனது ஐவித்தீவானது பாம்புகள் நிறைந்திருந்த ஐந்து ஏக்கர் சதுப்பு நிலமேயன்றி வேறெதுவுமாய் இல்லாதிருந்தது. அவனது தீவு கனெக்டிக்கெட் மாகாணத் திலேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்த்தியான நிலம் என்று அவனுக்குப் பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வந்தது, ஆனால் அது மதிப்பற்றதாக இருந்தது. அது ஒரு நகைச்சுவையாக மட்டுமே - ஒரு கொடூரமான ஏமாற்று வேலை யாக மட்டுமே - இருந்தது. பினேயாஸ் பின் திரும்பி தனது தந்தையைப் பார்த்தான், அவர் பெரும் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார்.

பினேயாஸ் சிரிக்கவில்லை. அவன் தனது உணர்வை ஒருக்காலும் மறக்கவில்லை. இழப்பின் உணர்வு அவனிடம் எஞ்சியிருந்தது. அவன் தான் ஏமாற்றப்பட்டதால் உணர்ந்த வெறுமையிலிருந்து ஒருக்காலும் மீளவில்லை. உண்மையில் அவன் மக்களை ஏமாற்றும் தொழில் ஒன்றைச் செய்பவனாக வளர்ந்தான்.

நீங்கள் அநேகமாக இந்தப் பினேயாஸ் என்ற பையனை P.T. - நில உரிமையாளர் அல்ல ஆனால் மேம்பாட்டாளர் என்ற வகையில் - அறிந்திருப்பீர்கள். இவர், "ஒவ்வொரு நிமிடத்திலும் ஒரு ஏமாற்றுபவன் பிறக்கின்றான்" என்ற புகழ் மிக்க சொல் வழக்கை ஏற்படுத்தினார், அந்தக் கூற்று எவ்வளவு உண்மையானது என்று காண்பிக்கும் வகையில் அவர் தம் வாழ்வைச் செலவிட்டார். பினேயாஸ் என்பவனே, பர்னம் & பெய்லியின் புகழ் பெற்ற சர்க்கஸ்ஸின் P. T. பர்னம் ஆனான்.[1]

சுயாதினம்/சுதந்தரம் ஒன்றைக் கனவு கண்டு, தனக்கு சுதந்திரமே இல்லையென்று கண்டறிந்த இளம் மனிதனைக் குறித்து நீங்கள் (இரக்க) உணர்வு கொள்வதில்லையா? உங்களில் சிலர், அது அவனுக்கு எதைப் போன்றிருக்கும் என்று அறிவீர்கள், ஏனெனில் நீங்களும் இதே போன்றே இழப்பினை அனுபவித்திருக்கலாம். உங்களுக்கென்றே சொந்தமான ஒரு தீவு பற்றி உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்படாதிருக்கலாம், ஆனால் நீங்கள் வேறு சிலவற்றை எண்ணிக் கொண்டிருக்கலாம். நடக்காத ஒன்றைப் பற்றி நீங்கள் கனவு கண்டிருக்கலாம்.

ஒருவேளை நீங்கள் யாரேனும் ஒருவருடன் திருமண வாக்குறுதி யளித்து, பின்னர் அவர்/அவள் அவற்றை மீறி, உங்கள் இதயத்தில் மாறாத தழும்பை விட்டுச் சென்றிருக்கலாம். ஒருவேளை நீங்கள் ஒரு ஸ்தாபனத் திற்கு உங்கள் வாழ்வின் மிகச் சிறந்த ஆண்டுகளை அளித்திருக்கலாம்.

*அவர்கள் உங்களுக்கு அளித்திருந்த உறுதிப்பாட்டில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கலாம். நீங்கள் ஓய்வு (ஊதியத்தின்) மீது சார்ந்திருந்து, ஆனால் நீங்கள் உங்கள் வேலையை இழந்து போயிருக்கலாம் - அல்லது நீங்கள் உத்தியோகத்தினின்று ஓய்வு பெறக் கூடுமுன்பு நீங்கள் வேலை பார்த்த கம்பெனி திவாலாகியிருக்கலாம்.*

*உடைந்து போன வாக்குறுதிகளும், சிதைந்து போன கனவுகளும் கொண்டுள்ள உலகத்தில் நாம் வாழ்கின்றோம். இது, எப்பொழுதும் நான் நினைக்கின்றபடியாகவே எதிர்காலம் இராத ஒரு உலகமாக உள்ளது. இந்த உலகமானது நம்மை ஏமாற்றத்துக்குள்ளாக்கும் ''தீவுகளை'' நமக்கு வாக்களிக்கின்றது.*

*தேவனிடத்தில் (உள்ள) வாக்குத்தத்தங்கள் என்பது மாறுபட்டவை களாய் உள்ளன. தேவன் தாம் காத்துக் கொள்ளாத வாக்குத்தத்தமொன்றை ஒருக்காலும் ஏற்படுத்துகிறதில்லை. அவரது வாக்குத்தத்தங்கள் ஒருக்காலும் நடக்கத் தவறுவதில்லை. எபிரெயர் 10:23 தேவனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: ''வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்.'' நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது நம்பிக்கை கொள்ள முடியும். தேவன் உண்மையுள்ளவராய் இருப்பதுடன், அவர் தாம் வாக்களித்த எதையும் செய்ய/நிறைவேற்ற வல்லமை கொண்டுள்ளார் என்ற உண்மையையும் நாம் எண்ண முடியும் (ரோமர் 4:21).*

*தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருப்பதாக நாம் 1:3-14ல் வாசிக்கின்றோம். அது நமக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது, மற்றும் இந்த வாக்குத்தத்தத்தின் பெரும்பகுதி ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*அவர் நம்மைத் தமது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினமாக (1:4) ஆக்கி, நம்மைத் தமது பிள்ளைகளாகச் சுவிகரித்துள்ளார் (1:6). அவர் நம்மை இயேசுவின் இரத்தத்தின் மூலமாக மீட்டு (1:7) நமக்குப் பாவமன்னிப்பை அருளியிருக்கின்றார் (1:7). அவர் தமது கிருபையின் ஐசுவரியத்தை நம்மீது பொழிந்திருக்கின்றார் (1:7, 8). அவர் தமது தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்து (1:10) நம்மைப் பரிசுத்த ஆவியினால் முத்திரையிட்டுள்ளார் (1:13).*

*நாம் நமது சுதந்தரத்தைப் பெற வருகையில் கிறிஸ்துவுக்குள் நாம் ஒருக்காலும் ஏமாற்றப்பட மாட்டோம் என்று தேவன் உறுதியளித்துள்ளார். "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாய்" கொடுக்கப்பட்டுள்ளார் (1:14).*

*தேவன் தமக்கு என்றென்றும் மகிமை கொண்டு வருகிற நம்புதற்கரிய ஒரு சுதந்தரத்தைத் தமது மக்களுக்கு வாக்களிக்கின்றார்.*

## கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது நமது சுதந்தரத்தின் தளத்தை விவரிக்கின்றது

*கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் தனிச்சிறப்பு பற்றிப் பவுல் என்ன*

*கூறினார் என்பதைக் கவனியுங்கள். யூதக் கிறிஸ்தவர்கள் "அவருக்குள்" தெரிந்து கொள்ளப்பட்டிருந்தார்கள் (1:11, 12). அவர்களே "கிறிஸ்துவின்" மேல் முதலில் நம்பிக்கையாய் இருந்தார்கள் (1:11). புறஜாதி கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்த பொழுது (சபையில்) உள்ளடக்கப் பட்டார்கள் (1:13). அவர்களும் ''நமது சுதந்தரத்தின் அச்சாரமாய் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரையிடப்பட்டார்கள்" (1:13ஆ, 14ஆ).*

*1:11-14ல் பவுல் கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதை வலியுறுத்தினார். உண்மையில், ''கிறிஸ்துவுக்குள்'' என்ற சொற்றொடரானது 1:3-14ன் உடனடி சந்தர்ப்பப் பொருளில் ஏதோ ஒரு வடிவில் ஒன்பது முறை உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது எல்லா மாறுபாட்டையும் ஏற்படுத்து கின்றது. இது நமது சுதந்தரத்தின் தளமாக உள்ளது.*

*நாம் சற்றே நன்கு நிதானித்து ஒரு முக்கியமான கேள்வியை எழுப் பலாம்: ஒரு நபர் எவ்விதம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து சுதந்தரத்தின் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார்?*

*உங்கள் வேதாகமத்தில் 1:3-4ன் ஓரப் பகுதியில் நீங்கள் பின்வரும் வேத வசனத்தைக் குறித்துக் கொள்ள விரும்பலாம்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

*ஞானஸ்நானத்தில் நாம் கல்வாரிக்கு ஒரு பயணம் செல்லுகின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவுடன் சிலுவையின்மீது இணைந்து, அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றோம். சிலுவையின் மீது இயேசு "முடிந்தது" என்று கூறியது போன்றே, ஞானஸ் நானத்தில் நமது முந்திய வாழ்வு முடிக்கப்படுகின்றது. ஞானஸ்நானத்தில் நாம் அவருடன் கல்லறையில் இணைகின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் புதிய வாழ்வுக்காக அவருடன் உயிர்த்தெழுதலில் இணைகின்றோம்.*

*நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின் றோம். அதுதான் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதை நாம் பெறுகிற வழிமுறை யாகும். அதன் மூலமாகத்தான் நாம், சுதந்திரம் உள்ளிட்ட ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற வருகின்றோம்.*

*நீங்கள் இரண்டு சத்தியங்களை ஞாபகப்படுத்திக் கொள்வதை நான் விரும்புகின்றேன். முதலாவது, கிறிஸ்துவுக்குப் புறம்பே, ஆக்கினைத் தீர்ப்பு மட்டுமே நாம் பெறக்கூடிய ஒரே ஒரு நித்திய விஷயமாக உள்ளது. இயேசு திரும்பி வரும் பொழுது, அவர் ''தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு*

(வருவார்). அவர்கள் ... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெச. 1:7-10). இரண்டாவது, கிறிஸ்துவுக்குள், சுதந்திரம் மற்றும் நித்திய ஜீவன் உள்ளிட்ட ஆவிக்குரிய சகல ஆசீர்வாதமும் பெறப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது நமது சுதந்திரத்தின் தளத்தை விவரிக்கின்றது.

## ஆவியானவரைப் பெறுதல் என்பது நமது சுதந்திரத்தின் நிச்சயத்தன்மையை நிலைநாட்டுகின்றது

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே. 1:13, 14). இது பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறுவது என்ன?

முதலாவது, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்தவரின் வாழ்வில் முத்திரையாக இருக்கின்றார். (பத்திரப்) பதிவு முத்திரைகள் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். பதிவாளராகப் பணிபுரியும் ஒருவர், ஒரு பத்திரத்தில் கையெழுத்திடப்படுவதைக் கவனித்து, பின்பு அப்பத்திரத்தின் அதிகாரத்து வத்தைக் குறிப்பிடுவதற்காகத் தமது முத்திரையை அந்தப் பத்திரத்தில் இடுகின்றார். ஜான் மெக்ஆர்தர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> இவ்விடத்தில் பவுல் கூறுகின்ற முத்திரை என்பது ஒரு கடிதம், ஒப்பந்தம், அல்லது முக்கியமான மற்ற பத்திரங்கள்/ஆவணங்கள் மீது வைக்கப்படுகிற அலுவலக ரீதியான அடையாளத்தின் குறியைக் குறிப்பிடுகின்றது. முத்திரை என்பது வழக்கமாக ஒரு பத்திரத்தின் மீது சூடான/உருகிய மெழுகை வைத்து அதன் மீது முத்திரை மோதிரத்தை வைத்து அழுத்துவதாயிருந்தது.[2]

பழங்கால உலகத்தில் முத்திரை என்பது பின்வருபவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துக்களை அளிப்பதாயிருந்தது:

1. உரிமைத்துவம். முத்திரைகள் என்பவை விலங்குகள் அல்லது அடிமை கள் மீது அடையாளமாய்ச் செயல்பட்டன. அவைகள் உண்மையான உரிமையாளரைக் குறிப்பிடும் வகையில் புத்தகத்தின் மீதுள்ள முத்திரை போன்று இருந்தன. கிறிஸ்தவர் இப்பொழுது தேவனுடைய சொந்த உடைமையாய் இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் அவருக்குள்/அவளுக்குள் வாசம் பண்ண வருகின்றார்.

2. பாதுகாப்பு. ஒரு பொருளின் மீது இடப்பட்ட அலுவலக முத்திரை யானது, அந்த முத்திரையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நபர்களின் வல்லமை மற்றும் அதிகாரத்துவம் ஆகியவற்றினால் அந்தப் பொருள் பாதுகாக்கப்பட்டது என்று மக்களை எச்சரிக்கை செய்தது. இயேசுவின் கல்லறையைப் பிலாத்து முத்திரையிட்டார் (மத். 27:62-66). அவரது

*முத்திரையானது கல்லை அசைக்கக் கூடாதென்று மக்களை எச்சரிக்கை செய்தது. அந்த எச்சரிக்கையானது பிலாத்துவின் அலுவலக ரீதியான பதவி மற்றும் அதிகாரம் ஆகியவற்றினால் பலப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவருக் குள்ளாகப் பரிசுத்த ஆவியானவர், தேவனால் இந்த நபர் காக்கப் பட்டுள்ளார் என்று சாத்தானுக்கும் பொல்லாங்கின் எல்லா வல்லமை களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் வகையில் செயல்படுகின்றார்.*

*3. நம்பகத் தன்மை. ஒரு முத்திரையானது தான் எதன்மீது காணப் படுகிறதோ, அந்தப் பொருளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தியது. கிறிஸ்தவருக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர், அவர்/அவள் (கிறிஸ்தவர்) உண்மையிலேயே தேவனுடைய பிள்ளையாக, சுதந்தரத்திற்கு வாரிசாக இருக்கிறார் என்று உறுதிப்படுத்துகின்றது.*

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டுள்ளீர்கள். இது ஒரு சிறிய விஷயம் அல்ல. நாம் தேவனு டைய உடமையாய் இருக்கிறோம் என்றும், அதாவது நம்மைத் தேவன் தமது வல்லமையால் பாதுகாக்கின்றார், நாம் (அவரது) சுதந்தரத்திற்கு உண்மையான வாரிசுகளாய் இருக்கிறோம் என்றும் ஆவியானவர் உறுதிப் படுத்துகின்றார்.*

*பிறப்புச் சான்றிதழ்கள் முக்கியமான ஆவணங்களாய் உள்ளன அல்லவா? நாம் ஓட்டுநர் உரிமம் அல்லது திருமணச் சான்றிதழ் பெறுவதற்கோ, அல்லது, ஒரு வேலைக்கோ, கல்லூரியில் படிக்க இடத் திற்கோ விண்ணப்பிப்பதற்குப் பிறப்புச் சான்றிதழ்கள் நமக்குத் தேவைப் படுகின்றன. இந்த உலகம் முடிந்து, நாம் யாவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கின்ற பொழுது, தேவன் நம்மிடம் நமது பிறப்புச் சான்றிதழையோ அல்லது அடையாளப்படுத்தும் பிற ஆவணங் களையோ காண்பிக்கும்படி கேட்க மாட்டார். தேவன் (நம்மிடத்தில்) முத்திரை - பரிசுத்த ஆவியானவரின் முத்திரை - உள்ளதா என்று பார்ப்பார். ஆவியானவர் என்பவர் தேவனிடத்திலிருந்து வருகிற தனிச்சிறந்த முத்திரையாக இருக்கின்றார், தேவன் அவரை (ஆவியானவரை) கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்.*

*இரண்டாவது, பரிசுத்த ஆவியானவர் நமது சுதந்தரத்தை உத்தர வாதப்படுத்துகிற அச்சாரமாய் இருக்கின்றார். பரிசுத்த ஆவியானவரை ஒரு அச்சாரம் அல்லது உறுதிப் பொருள் (Gk.: arrabon) என்று பவுலின் எழுத்துக்கள் மூன்றுமுறை குறிப்பிடுகின்றன. 1:14ல் ஆவியானவர் நமது சுதந்தரத்தை உத்தரவாதப்படுத்தும் ''அச்சாரம்'' என்று விவரிக்கப் படுகின்றார். 2 கொரிந்தியர் 1:22 வசனம், "அவர் (தேவன்) நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" என்று குறிப்பிடுகின்றது, இது வர இருப்பது என்ன என்பதை உத்தரவாதப்படுத்தும் வகையில் உள்ளது, மற்றும் பவுல் 2 கொரிந்தியர் 5:5ல் "ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரை (தேவனே)" என்று மீண்டும் வலியுறுத்தினார்.*

*பவுல் (இவ்விடங்களில்) பயன்படுத்திய வார்த்தையானது அவரது நாட்களில் ஒரு முன் பணத்தை அல்லது முன் செலுத்துகையைக்*

*குறிப்பதற்கான பொதுவான வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது. அது, ஏதாவது ஒன்றை வாங்கும் விலையில் ஒரு பகுதியாக இருந்தது. அது, (மொத்த கட்டணத்தின்) எஞ்சிய பகுதியானது ஏற்ற வேளையில் கிடைக்கப் பெறும் என்பதை உறுதிப்படுத்திற்று.*

*பரிசுத்த ஆவியானவர், நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் என்பது உண்மையில் எதனை அர்த்தப்படுத்துகின்றது? தேவன், தம் பிள்ளைகளுக்கு முன் குறித்து வைத்துள்ள நம்புதற்கரிய சுதந்தரத்தை நாம் பெறுவோம் என்று நம்பிக்கையுடன் நாம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இது, "அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய" சுதந்திரமாக "பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேது. 1:4, 5).*

*இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ளவைகள் இனி வர இருப்பவைகளுக்கு முன் சுவையாக மட்டுமே உள்ளது என்று நாம் காணும் படிக்கும் தேவன் விரும்புகின்றார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று நீங்கள் அறிந்த பொழுது நீங்கள் கொண்டிருந்த அகமகிழ்வைப் பற்றி நினைத்துப் பாருங்கள். பிற கிறிஸ்தவர்களுடன் தேவனுக்கு நீங்கள் ஆராதனை செய்யும் வேளையின் போது நீங்கள் அனுபவிக்கும் ஆச்சரியத்தை நினைத்துப் பாருங்கள். இந்த வேளை வரைக்கும் உங்கள் வாழ்வில் தோன்றியுள்ள அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆவியின் கனி ஆகியவைகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளையானதிலிருந்து தேவன் உங்கள் வாழ்வில் செய்துள்ள எல்லாவற்றையும் மற்றும் மீண்டும் மீண்டுமாக அவற்றைப் பெருக்கியுள்ளதையும் நினைத்துப் பாருங்கள். அப்பொழுதும் கூட நீங்கள் தேவன் உங்களுக்கென்று வைத்துள்ளவற்றின் நிறைவைக் கற்பனை செய்வதில் குறைவு படுவீர்கள்.*

*பினேயாஸ் தனது நிலத்தைக் கண்டதும் ஒன்றுமற்றுப் போனது போலக் கிறிஸ்தவர்கள் ஆக மாட்டார்கள். வாழ்வானது ஒரு மோசமான நகைச்சுவையாகவோ அல்லது ஒரு பெரிய ஏமாற்றமாகவோ ஆகிவிடாது. நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள யாவும் ஒரு அச்சாரமாகவே உள்ளது. இது தேவன் நமக்கு வாக்களித்துள்ள நம்புதற்கரிய சுதந்தரத்தின் சிறு துணுக்காகவே உள்ளது.*

## தேவனைத் துதித்தல் என்பது நமது சுதந்தரத்தின் இலக்கை அடையாளப்படுத்துகின்றது

*"அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (1:14). 1:3-14ல் பவுலின் வார்த்தைகள் தேவனுக்குப் புகழ்ச்சியுடன்/துதியுடன் ஒலிக்கின்றன. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்" (வ. 3). வசனம் 6, தேவனுடைய மகிமையுள்ள கிருபைக்குப் புகழ்ச்சியை அளிக்கின்றது. வசனம் 11 "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியை" குறிப்பிடுகின்றது. வசனம் 14, மீட்பின் நோக்கத்தை இரட்சிப்பின்*

*நோக்கத்தை, கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களைத் தேவன் தமது சொந்த உடமையாக்கும் நோக்கத்தை, மற்றும் "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சி" என்பது அவர்களுக்குத் தரப்பட்டுள்ள முழுமையான சுதந்தரத்தின் நோக்கமாய் உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது.*

*தொடக்கத்தில் தேவன், "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26) என்று கூறினார். தேவன் தமது மகிமையை, தமது பண்பை மற்றும் தமது இயல்பை வாழ்வில் காண்பிக்கும் மக்களைப் படைக்க நோக்கங் கொண்டார். மக்கள் தம்மைத் துதிக்கின்ற, தமக்கு ஊழியம் செய்கின்ற மற்றும் தம்மைப் போல இருக்கப் பிரயாசப்படுகின்றவர்களாயிருக்கும்படிக்கு அவர் விரும்பினார்.*

*இருப்பினும், பாவம் என்பது உடன் வந்தது, மனிதனில் இருந்த தேவ சாயலை உருக்குலைத்தது. வேதாகமத்தின் முழு வரலாறும், தேவனுடைய முழுத் திட்டமும் நம்மை தேவன் ஆதியில் நமக்கு நோக்கங் கொண்டிருந்த விஷயத்திற்குப் பின் திருப்பிச் செலுத்தியுள்ளது. இதை அவர், நம்மை மீட்டதினால், நம்மை இரட்சித்ததினால், மற்றும் கிறிஸ்துவுக்குள் நம்மை மறுபடி சிருஷ்டித்ததினால் நிறைவேற்றுகின்றார்.*

*நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காக சிருஷ்டிக்கப் பட்டோமோ, அதுவே - தேவசாயல் என்பதுவே - நமது சுதந்தரமா யிருக்கின்றது. அது ஒரு நாளில் நடந்தேறும். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமா யிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப் படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:2). அது நடந்தேறும்பொழுது, நாம் துதித்து ஆரவாரமிடுவோம்! தேவனைத் துதித்தல் என்பது நமது சுதந்தரத்தின் இலக்கை அடையாளப் படுத்துகின்றது.*

## *முடிவுரை*

*எதிர்காலத்திற்கான நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள். ஒருவருமே நம்பத் தகுந்தவர்களல்ல, நம்பிக்கைக்குத் தகுதியானவர்களல்ல அல்லது நம்பிக்கைக்கு உரியவரல்ல என்பது போலத் தோன்றலாம்; ஆனால் தேவன் இருக்கிறார். அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை அவரே (தேவனே) உங்களுக்கு நினைவூட்டுவாராக. சர்வ வல்லமையுள்ள தேவன், கிறிஸ்துவுக்குள் ஒரு நம்புதற்கரிய, நித்திய சுதந்தரத்தை நமக்கு உத்தரவாதப்படுத்துகின்றார். நிறைவாக அதை நீங்கள் பெறும்பொழுது நீங்கள் நித்தியத்திற்கும் தேவனைத் துதிக்கவும் நன்றிகளைச் செலுத்தவும் விரும்புமளவுக்கு இது ஒரு அற்புதமிக்க சுதந்தரமாக உள்ளது!*

---

*குறிப்புகள்*

[1]Max Lucado, *He Still Moves Stones* (Dallas: Word Publishing, 1993), 84-85. [2]John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), 34.

# ஆவிக்குரிய வளர்ச்சியை உற்சாகப்படுத்துதல் (1:15, 16)

*1960களின் பொழுது, சைமன் மற்றும் கார்ஃபங்க்கெல் ஆகியோர் ஒரு தலைமுறைக்கு ஈர்ப்புடையதாயிருந்த வார்த்தைகளையும் (எண்ண) இசைவுகளையும் பதிவு செய்தார்கள். அவர்களின் பாடல்களில், "அமைதியின் சப்தம்," "கொந்தளிக்கும் தண்ணீரின் மீதான பாலம்" மற்றும் பிறவும் அடங்கியிருந்தன. (அவற்றில்) ஒரு பாடலானது தனித்துவத்திற்கான ஒரு வகையான கீதமானது. பவுல் சைமன் என்பவர் பின்வரும் கவிதைகளை எழுதினார்:*

> *நான் ஒரு பாறை, நான் ஒரு தீவு.*
> *பாறையொன்று வலியினை உணருவதில்லை,*
> *தீவு ஒன்று ஒருபொழுதும் கதறுவதில்லை.*

*அவரது வார்த்தைகள் காலங்களின் சுயாதீனமான ஆவியை உயர்த்தின. நாம், முரடான தனி நபர்களை நமது நாயகர்களாக ஆக்கச் சென்றோம். இது, கிளின்ட் ஈஸ்ட்வுட், சார்லஸ் பிரோன்ஸன், ஸ்டீவன் செகெல் மற்றும் சில்வெஸ்டர் ஸ்டோலன் ஆகியோர் நடித்த திரைப்படங்களில் தெளிவாயிற்று. வழக்கத்தில் உள்ளவற்றிலிருந்து மாறுபட்ட நிலையில் ஒரு மனிதர், செய்யப்பட வேண்டிய எல்லாவற்றையும் தனியே செய்தல் என்பது, பலரைத் கவர்ந்தது.*

*"என்னுடைய" என்ற தலைமுறை வந்து சேர்ந்துள்ளது. "நாங்கள்," "எங்கள்" மற்றும் "எங்களுடைய" என்பவையல்ல, ஆனால் "நான்," "எனது," "என்னுடையது" என்பவையே நமக்குப் பிரியமான வார்த்தைகளாய் உள்ளன.*

*இவை யாவற்றின் மத்தியிலும் சபை, தன்னைக் காண்கின்றது. சபைக்குழுமங்களில் ஒன்றுகூடும் மக்கள் "என்னுடைய" என்ற தலைமுறையின் உபதேசத்தினுடைய செல்வாக்குக்கு உட்படுகின்றனர், இது ஒரு பின்வரும் விவரிப்பினால் மெய்ப்பிக்கப்படுகின்றது:*

> *இன்றைய நாட்களில் சபையில் பிரவேசிக்கும் பெரும்பாலான மக்கள் குழு உணர்வுடன் சிந்திக்க வகையற்றவர்களாய் உள்ளனர் என்று கூறுவது நியாயமானதாகவே உள்ளது. சார்ந்திருத்தல் என்பது*

> பலவீனமானதாக உள்ளது; கணக்கு ஒப்புவித்தல் என்பது அடிமைத் தனமாக உள்ளது; கீழ்ப்படிதல் என்பது அந்தஸ்தை குறைத்துக் கொள்வதாக உள்ளது என்று நாம் கற்றுள்ளோம். குழுவை மேம்படுத்துவதற்காக தன்னை மறுத்தல் என்ற கருத்தே நவீன சிந்தைக்கு அந்நியமானதாக உள்ளது ...
>
> ... சபை உறுப்பினர்களில் பெரும்பாலோர், ஞாயிறு ஆராதனைக்கு செல்லுதலுக்கு உடுத்திக் கொள்ளுதல் என்பதில் தனித்துவப் பண்புடன் உள்ளனர். அவர்கள் இன்னமும் "எனது" என்ற வகையிலேயே சிந்திக்கின்றனர். அவர்கள் குழுவுக்கு எது நன்மை யானதாக உள்ளது என்றல்ல, ஆனால் தனிப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே முடிவு மேற்கொண்டு செயல்படுகின்றனர். பெரும்பாலான நவீன கிறிஸ்தவர் களின் சிந்தைகளில், பலருடைய தேவைகள் என்ற கருத்தானது பெரும்பாலும், சிலருடைய அல்லது ஒருவருடைய தேவைகள் என்ற கருத்துக்குப் பின் இருக்கையிலேயே உள்ளது.[1]

உலக வரலாற்றில் நாம், "எனது" என்ற தலைமுறையாய் இருப்பதில் முதலாம் தலைமுறையாய் இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருக்காக அக்கறை கொண்டவர்களாய் இருக்க வேண்டும் என்று பவுல் தொடர்ந்து நினைவூட்ட வேண்டியிருந்தது. அவருடைய நிருபங் களில், ஒருவர் மற்றவர் மீது அன்புகூருதல், ஒருவர் மற்றவர் மீது இரக்கம் காட்டுதல், ஒருவர் மற்றவரை உற்சாகமூட்டுதல் ஆகியவற்றிற்கு பல அழைப்புகள் அடங்கியுள்ளன. பவுல், பழங்கால உலகின் - பிலிப்பி, கொரிந்து, எபேசு, ரோமாபுரி மற்றும் தெசலோனிக்கே போன்ற - பெரிய நகரங்களில் ஊழியம் செய்திருந்தார். அவர் அடிப்படையாக, தீவுகளாய் தங்களுக்குள் நின்றிருந்த கலாச்சாரச் சூழலில் வாழ்ந்திருந்த நகர்ப்புறக் கிறிஸ்தவர்களைக் கையாண்டிருந்தார்.

நம்மைப் போலவே, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களும் ஒன்று கூடியிருத்தலின் மதிப்பு பற்றி அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவர்களுக்கு, ஐக்கியம், பரஸ்பர அக்கறை, சுயத்தின் தேவைக்கு மேலாக முழுக்குழுவின் தேவைகளை வைத்தல் ஆகியவை பற்றிப் போதிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. நம்மைப் போலவே, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் பலரும் கூட, சமுதாயத்தில் வாழ்வது எப்படி, சகோதரர் களுடன் உறவுகளைப் பகிர்ந்து கொள்வது எப்படி என்பதை அறியாதவர் களாய் இருந்தனர்.

நகர்ப்புற அமைவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதினார். அவர்கள் உலகின் பெருநகர்களில், மாபெரும் தலைநகர்களில் வாழ்ந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக வாழ்வது எப்படி என்பதைக் கற்பது அவசியமாய் இருந்தது.

எடுத்துக்காட்டாக, ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் சகோதரத்துவ அன்பில் ஒருவர் பிறருக்கு அர்ப்பணிப்புடன் இருப்பதைக் கற்றுக் கொள்வது அவசியமாயிருந்தது (ரோமர் 12:10). அவர்கள் தங்களின் சுயத்திற்கு மேலாக ஒருவர் மற்றவரைக் கனம் செய்ய வேண்டுமென்று பவுல்

*அவர்களுக்குக் கூறினார் (ரோமர் 12:10), மேலும் அவர்கள் ஒருவர் மற்றவருடன் இசைவாக வாழ வேண்டுமென்றும் (ரோமர் 12:16), ஒருவர் பிறரின் மீது நியாயம்தீர்ப்பதை நிறுத்த வேண்டுமென்றும் (ரோமர் 14:13), ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் (ரோமர் 15:7) அவர் கூறினார். அவர்களிடம் அவர், "... சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக் கடவோம்" (ரோமர் 14:19) என்று கூறினார்.*

*கொரிந்துவின் வர்த்தகப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் ஐக்கிய விருந்துகளுக்காகக் கூடிவந்தபொழுது அவர்கள் ஒருவர் மற்றவருக்காகக் காத்திருத்தலைக் கற்றுக் கொள்வது அவசியமாய் இருந்தது (1 கொரி. 11:33). அவர்கள் பட்சபாதத்தினால் பிரிந்தவர்களாயிராமல், ஒருவருக்கொருவர் சமமான கரிசனையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்குப் போதித்தார் (1 கொரி. 12:25).*

*தெசலோனிக்கே என்ற இன்னொரு பெரிய நகரில் இருந்த கிறிஸ்தவர் கள் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டுமென்று பவுல் உற்சாக மூட்டினார் (1 தெச. 4:9). அவர்கள் மற்ற ஒவ்வொருவரையும் தேற்றும்படிக்கு (1 தெச. 4:18), பக்திவிருத்து உண்டாக்கும்படிக்கும் (1 தெச. 5:11) பவுல் அவர்களுக்கு அறிவுறுத்தினார். அவர், "... உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்" (1 தெச. 5:15) என்று கூறினார்.*

*எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது பொறுமையாய் இருக்கும்படியும், ஒருவர் பிறர் மீது இரக்கமும் மன உருக்கமும் உள்ளவர் களாயிருந்து ஒருவரையொருவர் மன்னிக்கும்படியும் பவுல் கூறினார் (4:2, 32). அவர்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்கும்படி (5:21) அவர் வற்புறுத்தினார்.*

*தேவனுடைய மக்களின் புதிய சமுதாயம் என்ற வகையில் கிறிஸ்தவர் கள் வாழ்வதற்கு கற்றுக் கொள்ளும் இவ்விஷயம் பற்றிப் பவுல் கூறியது இன்றைய நாட்களிலும் சபையானது கேட்க வேண்டிய அவசியமான விஷயமாக உள்ளதென்பது மிகச் சரியானதேயாகும். சக கிறிஸ்தவர் களுடனான பவுலின் சுய கையாளுதல்களில் அவர் கொடுத்த உதாரண மானது நாம் பின்பற்ற வேண்டிய உதாரணமாக உள்ளது. இது நமது சிறு சொந்த உலகங்களுக்கு அப்பால் நாம் செல்ல உதவுவதுடன் பிறரின் வாழ்வில் நம்மைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்றது.*

*பவுலின் எடுத்துக்காட்டை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அது கி.பி. 60 ஆண்டாக இருந்தது. அவர் எபேசுவில் தாம் அறிந்திருந்த கிறிஸ்தவர்களிடமிருந்து பல மைல்கள் தள்ளி ரோமாபுரியில் வீட்டுக் காவலில் இருந்தார். ஒருமுறை அவர் எபேசுவில் - சபைக்கு போதித்து, ஊழியம் செய்து, மற்றும் அது பக்தி விருத்தி அடையும்படி - மூன்று ஆண்டுகள் செலவிட்டிருந்தார். இருப்பினும் அவர் நான்கு ஆண்டுகளாய் அந்நகரைக் காணாதவராயிருந்தார்.*

*சிறைச்சாலை, தாங்க இயலாத் துன்ப நிலை, தூரம், கடந்து சென்ற காலங்கள் - இவற்றில் எதுவும் பவுல் எபேசுவிலிருந்த தம் சகோதரர்கள் மீது*

கொண்டிருந்த அக்கறையைக் குறைத்து விடாதிருந்தது. சூழ்நிலைகள் அவரை, பிறரின் வாழ்வில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தவிர்த்து, தமது சொந்த பிரச்சனைகள் மீது தாம் கவனம் செலுத்தக் காரணமாவதற்கு அனுமதியாதிருந்தார்.

எபேசுவிலிருந்து வந்திருந்த ஒரு கிறிஸ்தவர் ஒருநாள் தன் வழியே வந்தார். அவர் பவுலை ரோமாபுரியில் கண்டார். பவுல் அவரைச் சந்தித்த பொழுது, அங்கிருந்த (எபேசுவிலிருந்த) சபையைக் குறித்து விசாரிக்கக் காலம் தாழ்த்த முடியாதிருந்தது. மக்கள் எப்படியிருந்தார்கள்? அவர்கள் மத்தியில் என்ன நடந்து கொண்டிருந்தது? அவர்கள் தேவனுடைய மக்களாக ஒன்றுகூடி வருகின்றார்களா?

பவுல் பெற்றுக் கொண்ட அறிக்கையானது அவரது நாளுக்கு ஒளி யூட்டியது. அவருடைய இதயம் உயரப் பறந்தது. நாம், "ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான் களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு, இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, ... வேண்டிக் கொள்ளுகிறேன்" (எபே. 1:15, 16 & 19) என்று வாசிக்கின்றோம்.

சித்தரிப்பை நீங்கள் காண்கின்றீர்களா? பவுல், தமது எபேசிய சகோதரர்களிடத்தில் பல மைல்கள் தூரத்தில் சிறையில் இருந்தார். அவர் நான்கு நீண்ட ஆண்டுகள் அளவாக அவர்களின் முகங்களைக் காணாதிருந்தார், இருப்பினும் பவுல் அவர்களுக்காக ஆழமான அக்கறை கொண்டிருந்தார். பவுல் தமது பாடத்தை (நாம்) கற்றுக் கொள்ள நமக்கு உதவுகின்றார்: <u>கிறிஸ்தவர்கள், ஒருவர் மற்றவரின் ஆவிக்குரிய நலத்தின்மீது ஆர்வம் காண்பிக்கும்பொழுது, அவர்கள் தேவனைப் பிரியப் படுத்துகின்றனர்.</u>

இயேசு, தம்முடைய மக்கள் (தனித்தனித்) தீவுகளாயிருப்பதை விரும்புகிறதில்லை. நாம் ஒருவர் பிறருக்கு ஊழியம் செய்யும் குழுவாக வேண்டும் என்பதே நமக்கான அவரது விருப்பமாய் உள்ளது. மற்றவர்கள் ஆவிக்குரிய வகையில் வளருவதைக் காண்பதற்கான ஒரு உற்சாகத்தை, ஒரு அக்கறையை, மற்றும் ஒரு விருப்பத்தை நாம் எவ்வாறு வளர்த்துக் கொள்ளுவது அவசியம் என்பதைப் பவுல் காண்பித்தார்.

## பிறரின் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பவுல் பாராட்டினார்

எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிப் பவுல் பெற்ற அறிக்கை யானது அவரை மெய்சிலிர்க்கச் செய்தது. அவர்கள், தேவனுடைய மக்கள் மத்தியில் இருப்பதற்கு அவசியமான நுண்மையான சமான நிலையின் வகையை திறன் கொண்டு பெற்றிருந்தனர். முதலாவது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவுக்குப் பற்றுறுதியைச் செயல்விளக்கப்படுத்தினர். பவுல், "... கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தைக் ... கேள்விப்பட்டு" (1:15) என்றெழுதினார். அவர்கள் இயேசுவின்மீது தங்கள்

*வாழ்வை வாழ்வதற்கான தங்கள் நம்பிக்கையை வைக்க வந்திருந்தனர், இயேசுவின் மீது தங்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வந்திருந்தனர். அவர்கள் அவரிடம், "இயேசு" என்ற பெயர் அர்த்தப்படுத்துகின்ற இரட்சகர் என்ற வகையில் மட்டுமின்றி, அவர் கர்த்தர் என்ற வகையில் அவரிடம் வந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்வை அவருக்கு ஒப்புவித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பிரியப்படுத்த நாடினார்கள். அவர்கள் அவரைக் கனப்படுத்தும் விஷயங்களின் அடிப்படையிலேயே தங்கள் அன்றாட முடிவுகளை மேற்கொண்டார்கள்.*

*சற்று காலத்திற்கு முன், எனது சொந்த (ஊரிலிருந்த) பிராந்திய சபையில், ஒரு முதிர் வயதுள்ள மனிதர் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தார். அவரது முடி வெண்மையாக இருந்தது, ஆனால் அவர் கர்த்தர் மீது ஒரு குழந்தையைப் போன்று நம்பிக்கையுடைய இருதயம் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட ஒருவருடன் தண்ணீரில் நின்று கொண்டு, ஞானஸ்நான வேளையில், பழைய வாழ்வு முடிந்து போயிற்று, புதிய வாழ்வு தொடங்கிற்று என்ற சிந்தனையைப் பகிர்ந்து கொள்வதைக் காட்டிலும் அமைதியான சூழ்நிலை வேறெதுவும் இல்லை.*

*இதிலும் அதிகம் உணர்வெழுச்சியுடையது என்னவென்று நீங்கள் அறிகின்றீர்களா? அது, இயேசு தேவனுடைய பிள்ளைகளை மாற்றுகின்ற செயலேயாகும். கர்த்தராகிய இயேசுவின் மீதான விசுவாசம் மற்றவர்களின் வாழ்வில் வளருவதை நாம் காண்கையில் நாம் அதைப் பாராட்டுவதை ஒரு போதும் நிறுத்தி விடக் கூடாது என்று பவுல் நமக்கு நினைவூட்டினார். நாம் நமது சிறு சொந்தமான உலகங்களில் வாழ்ந்து கொண்டிருந்தால், இதைத் தவறவிட்டு விடுவோம்.*

*எபேசியர்கள் இயேசுவின் மீது பற்றுறுதி கொண்டிருந்தது மட்டுமின்றி, அவர்கள் எல்லா சகோதரர்கள் மீதும் அன்பு கொண்டும் இருந்தனர். பவுல், "... பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையும் ..." (1:15) என்று தொடர்ந்தார். அன்பு என்பது, ஒரு தீவாக அல்லது ஒரு பாறையாகப் பிறர் பற்றிய அக்கறைகளில் இருந்து தனிமைப்பட்டுக் கிடப்பதற்கு எதிரானதாக உள்ளது. நாம், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவா. 3:16) என்று வாசிக்கின்றோம்.*

*அந்த வகையான அன்பை வெளிப்படுத்துவது எப்படி என்பதைக் கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளுகின்ற பொழுது, அது நம்மை அகமகிழ்வினால் நிரப்ப வேண்டும். இது, அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை மேற்கொள்ளுகின்றனர் என்று அர்த்தப்படுத்துகின்றது. அவர்கள் இயேசுவைப் போலாகின்றனர். அவரது ஒத்த தன்மை தன்னிலே காண்பிக்கின்றதாய் உள்ளது. அவர்களுக்குள் அவர் வாழ்கின்றார்.*

*இந்த அன்பு எல்லாப் பரிசுத்தவான்களுக்குமானதாக உள்ளது. இது பட்சபாதத்தை, மக்கள் நமக்குச் செய்பவற்றிற்காக அவர்களை அன்பு கூருவதை, அல்லது நாம் விரும்புகிறவைகளையே விரும்புகிற மக்களுடன் மட்டும் ஐக்கியம் கொள்ளுதல் என்பவற்றைக் கடந்து நிற்கின்றது. எல்லாப்*

பரிசுத்தவான்களுக்கும் அன்பைச் செயல்விளக்கப் படுத்துகின்ற சகோதரன் அல்லது சகோதரியை நாம் காணும் ஒவ்வொரு முறையும் நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

## பிறரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகப் பவுல் ஜெபித்தார்

எபேசியருடைய விசுவாசம் மற்றும் அன்பைப் பவுல் கேள்விப்பட்ட பிறகு, "[நான்] இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து ... வேண்டிக் கொள்ளுகிறேன்" (1:16, 19) என்று எழுதினார். (இவ்விடத்தில்) பவுல் இரண்டு முக்கியமான சத்தியங்களைப் புரிந்து கொண்டிருந்தார். முதலாவது, அவர் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறருக்காக ஜெபிக்கின்ற விஷயத் திற்கும் இடையில் உள்ள தொடர்பை அறிந்திருந்தார். இரண்டாவது, அவர் ஒருவர் பிறருக்காக ஜெபிப்பதில் நிலைத்திருத்தலின் அவசியத்தைப் புரிந்திருந்தார்.

இதே நிருபத்தின் பிற்பகுதியில், பவுல் இந்த சகோதரர்களுக்கு, கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுள்ள ஆவிக்குரிய யுத்தம் பற்றி நினைவூட்டினார். அவர்கள் ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் புத்தி கூறினார். ஒரு போர்வீரன், சரியான ஆயுதமின்றிப் போரில் ஈடுபட முடியாது. பவுல் இந்த நிருபத்தை ஜெபத்தின் மீதான வலியுறுத்தத்துடன் முடித்தார்: "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டு தலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (6:18).

பவுல், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஒருவர் பிறருக்காக ஜெபிப்பதற்கும் இடையில் உள்ள தொடர்பைப் புரிந்து கொண்டிருந்தார். அவர் தனிப் பட்ட வகையில் தமது சகோதரர்களுக்காக ஜெபிப்பதை ஒரு முன்னுரிமை யான விஷயமாய் ஏற்படுத்திக் கொண்டார். அவர், ஜெபத்திற்கும் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய நலனுக்கும் இடையில் உள்ள வலிவுமிக்க தொடர்பு இணைப்பை அறிந்திருந்தார்.

ஜெனி கெட்ஸ் அவர்கள் ஜெபம் பற்றிய இவ்விஷயத்தைச் சகோதரர்கள் மத்தியில் எடுத்துரைத்தார்:

> நாம் ஜெபத்திற்கு உரிய இடத்தைக் கொடுக்கத் தவறுமளவுக்குப் பிற விஷயங்களில் - அவை நல்ல விஷயங்களாகவும் இருக்கலாம் - நம்மைத் தீவிரமாய் ஈடுபடும்படி வைத்துக் கொள்ளுதல் என்பது சாத்தானுடைய யுக்தியின் ஒரு பாகமாக உள்ளது. விசேஷமாக, விஷயங்கள் நன்கு செல்லுகையில் இது ஒரு இயல்பான பண்பாய்/ நோக்கமாய் உள்ளது. ஆனால் தேவனுடைய முன்னுரிமைப் பட்டியலில் ஜெபம் உயர்வான நிலையில் வைக்கப்பட்டுள்ளதென்று வேத வசனம் காண்பிக்கின்றது. மற்றும் ஜெபம் புறக்கணிக்கப்

படுகின்ற அல்லது தவற விடப்படுகின்ற இடத்தில், சாத்தான் சபையைத் துன்புறுத்த, அதிலும் குறிப்பாக ஐக்கியத்தை அழிப்பதின் மூலம் சபையைத் துன்புறுத்த முயற்சி செய்வான்.[2]

இவை யாவற்றையும் நாம் வாழ்வின் மூன்று பாடங்களுடன் பிணைப்போம். (1) ஒருவர் பிறருக்காக ஜெபத்தில் சீர்த் தன்மையை மேம்படுத்திக் கொள்ளாத வரையில் நம்மில் எவரும் ஆவிக்குரிய வலுவான தன்மையை ஒருக்காலும் அடைய முடியாது. பிறருக்கான ஜெபம் என்பது ஆவிக்குரிய பக்குவத்தை மேம்படுத்தி சுட்டிக் காண்பிக்கின்றது. (2) நாம் சபை என்ற வகையில் ஒருவர் பிறருக்கான நமது ஜெபத்தில் சீர்த் தன்மையை மேம்படுத்திக் கொள்ளாத வரையில் சபைக் குடும்பமானது ஒருக்காலும் தனது வலுத் தன்மையை அடைய முடியாது. நாம் இதில் பணியாற்ற வேண்டும். சபைக்குடும்பங்கள் என்ற வகையில் நாம் ஜெபிக்கத் திட்டம் மேற்கொள்ள வேண்டும். நமது ஒன்றுகூடுதல்களில் ஒருவர் பிறருக்காக ஜெபிப்பதை நாம் வலியுறுத்தி மக்கள் ஒருவர் பிறருக்காக ஜெபிக்க வாய்ப்புகள் அளிக்க வேண்டும். (3) மக்கள் ஜெபங்களை ஒரு முன்னுரி மையாக ஏற்படுத்தாத வரையிலும் ஒருவர் பிறருக்காக ஜெபித்தல் என்பது சீர்த்தன்மையுடையதாக ஆகாது.

## முடிவுரை

இரண்டாம் உலகப் போரின்போது விக்டர் ஃபிராங்க்கிள் என்பவர் சித்தரவதை முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவரைப் பிடித்தவர் கள் அவருடைய எல்லாவற்றையும்—அவரது புத்தகங்கள், அவரது மதிப்பு மிக்க பொருட்கள், மற்றும் அவரது குடும்பம் ஆகியவற்றை - அவரிடமிருந்து எடுத்துப்போட்டார்கள். அவர் வாழ்வதற்குத் தம்மிடம், உயிர் வாழ்வதற்கான முரட்டுத்தனமான தீர்மானம் தவிர வேறொன்றும் இல்லாதவராக இருந்தார்.

முகாமில் இருந்த பலர் விட்டுக் கொடுத்து, இறந்து போனார்கள். மற்றவர்கள் ஃபிராங்க்கிளிடம் வந்து, மக்கள் தங்கள் துன்பங்களைச் சகித்துக் கொள்வதற்கு உற்சாகம் தரும் வார்த்தைகளைப் பேசும்படி அவரிடத்தில் கேட்டார்கள். கடைசியில் ஃபிராங்க்கிள் இதைச் செய்தார். மக்கள் நீடிய பொறுமையுடன் இருக்கும்படி அவர் கூறினார். அடுத்த நாள் அவர்கள் தங்கள் சூப்பைப் பெறும்பொழுது கோப்பையின் அடியில் அவர்கள் ஒரு பட்டாணியைக் காணலாம் என்று அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். அது ஒரு மிகவும் சிறியதான நம்பிக்கையாய் இருந்தது, ஆயினும் ஃபிராங்க்கிளினால் அதை மட்டுமே அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது.

என்ன நடந்தது என்று நீங்கள் அறிவீர்களா? அந்த உரைகளிலிருந்து ஃபிராங்க்கிள்தான் மிக அதிகமான உற்சாக மூட்டுதலைப் பெற்றார். அவர் பிறருக்கு கொடுத்ததையே தமக்குத் தாமே கொடுத்துக் கொண்டார்.

கிறிஸ்துவுக்குள் நாம் ஒருவர் பிறருக்குக் கொடுப்பதை நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளுகின்றோம். யாரேனும் ஒருவரை உற்சாக மூட்டுங்கள்,

நீங்கள் உற்சாக மூட்டப்படுவீர்கள். யாரேனும் ஒருவருக்கு உதவி செய்யுங்கள், அது உங்களுக்கு உதவி செய்யும். யாரேனும் ஒருவருடைய சுமையைத் தாங்குங்கள். உங்கள் சொந்த சுமை இலகுவாகுவதைக் காண்பீர்கள். இன்னொரு கிறிஸ்தவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபியுங்கள், நீங்கள் ஆவிக்குரிய வகையில் வளமூட்டப்பட்டிருப்பதை நீங்களே காண்பீர்கள்.

---

குறிப்புகள்

[1]James Hinkle and Tim Woodroof, *Among Friends: You Can Help Make Your Church a Warmer Place* (Colorado Springs, Colo.: NavPress, 1989), 82-83. [2]Gene A. Getz, *Praying for One Another* (Wheaton, Ill.: Victor Books, 1981), 15.

# பிரகாசமுள்ள கண்கள் (1:17-19)

ஒரு சில வாரங்களுக்கு முன்பாக நான், வௌவால்கள் பற்றிய நிகழ்ச்சியொன்றைத் தொலைக் காட்சியில் பார்த்தேன். மக்கள் காணும் முறையிலிருந்து மாறுபட்ட முறையில் வௌவால்கள் "காண்கின்றன." நாம் ஒரு அறையில் உட்கார்ந்து இருக்கும் பொழுது, சுவர்களையும், நாற்காலி களையும், மேசைகளையும், புத்தகங்களையும், மக்களையும் காண்கின் றோம். அதே அறையில் ஒரு வௌவால் பறந்தது என்றால், அது ஒளிக் கதிர்களைக் காண்பதினால் அல்ல, ஆனால் சப்தங்களின் எதிரொலியை கேட்பதினாலேயே ''பார்க்கும்.'' வௌவால்கள் அடிப்படையில் பார்க்கும் தன்மையற்றவைகளாய் உள்ளன. வௌவால்களும் மக்களும் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி உணர்ந்தறியும் வழியில் மாறுபடுகின்றன(ர்).

வாழ்வை உணர்ந்தறியும் விஷயத்தில் கிறிஸ்தவர் அல்லாதவர்களில் இருந்து கிறிஸ்தவர்கள் அடிப்படையில் மாறுபடுகின்றனர். இதைப் பவுல் 1:17-19ல் ஒப்புக் கொண்டார். அவர், புறதெய்வ வணக்கம் நிறைந்திருந்த நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதினார். இந்தக் கிறிஸ்தவர்கள் எக்ளேசியாவின் அங்கமாய் இருந்தனர். எக்ளேசியா என்பது, "சபை" என்பதற்கான புதிய ஏற்பாட்டு வார்த்தையாக உள்ளது. இது, "கூட்டம், ஒன்றுகூடுதல், சபை" என்று அர்த்தப்படுகின்றது. சபையை ஒரு உலகப்பிரகாரமான கட்டிடம் என்பதாகப் பவுல் ஒருக்காலும் நினைத்ததில்லை. சபை அல்லது எக்ளேசியா என்பது மக்களால் - இயேசு கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டு மாற்றப்பட்ட மக்களால் - ஆனதாகவே உள்ளது. எக்ளேசியாவின் உறுப்பினர்கள் வாழ்வைக் காணும் விதமானது அவிசுவாசிகள் வாழ்வைக் காணும் விதத்திலிருந்து முற்றிலும் மாறுபாடு கின்றது. பவுல் அளித்த ஜெபத்தில் இது விவரிக்கப்படுகின்றது:

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தை யும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டா யிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் ... விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்

*குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (1:17-19).*

*வாழ்வைக் காணும் விஷயத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாதவர் களிலிருந்து வித்தியாசப்படுகிறார்கள். நிஜமாகவே, உலகம் கற்பனை கூட பண்ணக் கூடாத வழியில் பிரகாசமாக்கப்பட்ட நம்முடைய கண்கள் வாழ்வை உணர்ந்தறிகின்றன. உலகம் பார்க்கக் கூடாததை எக்ளேசியா என்னதான் பார்க்கக்கூடும்?*

## நமது பிரகாசமாக்கப்பட்ட கண்கள் நம்மை, தேவனைக் காணவும் அறியவும் கூடியவர்களாக்குகின்றன

*கிறிஸ்தவர் தேவனை அறிகின்ற வகையில் கிறிஸ்தவரல்லாதவர் தேவனை அறிய முடியுமா? கிறிஸ்துவுக்குரியவர்களாய் இல்லாதவர்களின் குறைவான அறிவைப் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. அவர்கள் "புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய்" (4:18) இருக்கின்றனர். இப்பொழுது நீங்கள் உட்கார்ந்து, காண்கின்ற அறையை ஒரு வௌவால் எவ்விதம் காண முடியுமோ, அதே வகையில்தான், கிறிஸ்தவர்கள் கண்டு அறிந்துள்ள தேவனை கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கண்டு அறிய முடியுமே தவிர அதை விட அதிகமாக அவர்கள் அவரை(தேவனை)க் கண்டு அறிவதில்லை. எக்ளேசியாவுக்குப் புறம்பே வாழ்வு என்பது ஒரு விதமாக உணர்ந்தறியப் படுகிறது. எக்ளேசியாவின் உள்ளே வாழ்வு என்பது இன்னொரு விதமாக உணர்ந்தறியப்படுகின்றது.*

*கிறிஸ்தவர்களுக்கு மிகவும் விசேஷித்த ஒன்றை அருளும்படிக்குத் தேவனிடத்தில் பவுல் ஜெபித்தார்: "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி" (1:17ஆ). தேவன் கிறிஸ்துவுக்குள் செய்துள்ளவை பற்றி "கிறிஸ்தவர் கள் - மட்டும்" கொண்டிருக்கும் வகையிலான உட்கண்ணோட்டத்தையும் கிறிஸ்துவுக்குரியவர்கள் மீது கிறிஸ்து கொண்டுள்ள செயல்தாக்கத்தையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*Field of Dreams என்ற ஆங்கிலத் திரைப்படம் ரே கின்செல்லா என்ற பெயர் கொண்ட கதாபாத்திரத்தை மையங் கொண்டதாயிருந்தது, அவர் ஐயோவாவின் மக்காச்சோள வயலின் மத்தியில் பேஸ்பால் விளையாடும் களம் ஒன்றை ஏற்படுத்தினார். அவர் அதை ஏற்படுத்தி முடித்தபோது கடந்த காலத்தில் வாழ்ந்திருந்த பேஸ்பால் விளையாட்டு வீரர்கள் அவரது விளையாட்டுக் களத்திற்கு வந்து மீண்டும் ஒருமுறை விளையாடினார்கள். நீண்ட காலமாக, ரேயும், அவரது மனைவியும் மற்றும் அவரது மகளும் மட்டுமே விளையாட்டு வீரர்களைக் காண முடிந்தது. விளையாட்டு வீரர்கள் பிறருக்கு காணப்படாதவர்களாய் - அவர்கள் அதை நம்பாதபடி யினால் காணப்படாதவர்களாய் - இருந்தனர். கதையில், ரேயின் மைத்துனர்*

தாம் காண முடியாத மக்களை ரே கண்டதால், ரே தனது சித்தங் கலங்கியிருந்தார் என்பதாக நினைத்தார்.

இது போன்ற விஷயம்தான் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுகின்றது. தேவன் கிறிஸ்தவர்களைக் காணும்படி செய்தவைகள் எவைகளோ, அவைகளைக் காண முடியாத மக்களால் நாம் சூழப்பட்டுள்ளோம். கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ளவர்கள் அன்றாட வாழ்வை - வீடுகளை, கார்களை, பள்ளிகளை மற்றும் விடுமுறைக்குச் சென்றடையும் இடங்களை - காண்கின்றனர். அவர்கள் காணக்கூடிய உண்மை நிலையின் மொத்தமாக உள்ள இந்த விஷயங்களை உணர்ந்து அறிகின்றார்கள். அவர்கள் காணக்கூடிய, இயல்பு நிலைகொண்ட, பொருளாதாய உலகை மட்டுமே காண்கின்றனர்.

எபேசியர் 1ம் அதிகாரம் முழுவதிலும் பவுல், முற்றிலும் மாறுபட்ட உண்மை நிலை அல்லது பரிமாணம் பற்றிப் பேசினார். இது நமது உடல்ரீதியான கண்களுக்கு காணப்படாததாக நிலைத்துள்ளது, ஆனால் இது நமது இந்த இயல்பான உலகத்தைப் போலவே உண்மையுள்ளதாக உள்ளது. எக்ளேசியாவின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் பவுல் எழுதிய விஷயங்களை உணர்ந்தறிய வர முடியும்.

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவர், இயேசுவுக்குள் தேவன் நிறைவேற்றியுள்ளது என்ன என்பதையும், அதன் விளைவாக நமது வாழ்வானது என்றென்றைக்கும் எவ்வாறு மாற்றப் பட்டுள்ளது என்பதையும் உண்மை நிலை என்ற வகையில் காண்பதற்கு நமக்கு உதவுகின்றார். நாம், கிருபை, மன்னிப்பு, மீட்பு, ஆவிக்குரிய சுதந்தரம் மற்றும் நமது ஆவிகளில் தேவனுடைய ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுதல் ஆகியவற்றின் உண்மை நிலையைக் கண்டு பற்றிக் கொள்ள வருகின்றோம். எக்ளேசியாவுக்குப் புறம்பே, இவற்றில் எதுவும் உண்மை நிலையில் உள்ளதாகக் காணப்படுவதில்லை.

மற்றவர்கள் உணர்ந்தறிய இயலாதவற்றை உணரும் திறனை தேவன் எக்ளேசியாவுக்கு ஏன் கொடுக்கின்றார்? நாம் தேவனைத் தனிப்பட்ட வகையில் அறிய வரும்படிக்கு அவர் விரும்புகின்றார். பவுல், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தர வேண்டுமென்று" (1:17) கேட்டுக் கொண்டார்.

நீங்கள் தேவனை அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பு கின்றார். தேவனை அறிந்து கொள்வதற்குப் பவுல் பயன்படுத்திய வார்த்தை யானது, தேவனுடனான மேலோட்டமான ஒரு பழக்கத்திற்கு நேரெதிரான வகையில் முழுமையான, ஆழமான, தனிப்பட்ட அறிவு சார்புடையதாக உள்ளது. இவ்வகையான அறிவானது பங்கேற்றல் மற்றும் அனுபவம் ஆகிய வற்றின் வழியாகவே வருகின்றது. இது யாரேனும் ஒருவரைப் பற்றிய சில உண்மைகள் அல்லது விவரங்களை மட்டும் அறிதல் என்பதற்கு மாறாக, யாரேனும் ஒருவரைத் தனிப்பட்ட அடிப்படையில் அறிதலை வலியுறுத்துகின்றது.

தேவனைப் பற்றிய இந்தத் தனிப்பட்ட அறிவானது கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமே சாத்தியமானதாகின்றது. எனவேதான் ஒரு சபையானது உண்மையானதொரு எக்ளேசியாவாக இருத்தல் என்பது அவ்வளவு கடினமானதாக உள்ளது. ஒரு உள்ளூர் சபையானது தான் உள்ள சமுதாயத் தில் இன்னொரு நிறுவனமாக மட்டும் இருப்பதைத் தேவன் விரும்புவ தில்லை. எக்ளேசியா என்பது கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகிய வற்றின் இடம் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது அட்ட வணையிடப்பட்ட வேதாகம வகுப்புகள் மற்றும் ஆராதனைக்குக் கூடி வருதல்கள் என்பதை நடத்தும் இடம் என்பதைக் காட்டிலும் அதிகமான தாக எண்ணப்படுகின்றது. உண்மையான எக்ளேசியா என்பது கிறிஸ்தவர் கள் தேவனை அறிய வாய்ப்புக் கொண்டுள்ள சபையாக உள்ளது.

உள்ளூர் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பிற உறுப்பினர்கள் கர்த்தரை அறிய உதவி செய்வதில் அத்தியாவசியமானவர்களாய் உள்ளனர். கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய ஆவியானவர் தங்களுக்குள் வாழ்கின்ற மக்கள் என்ற வகையில் ஒருவருக்கொருவர் செயலாற்றுகின்ற பொழுது, தேவனைப் பற்றிய அறிவு நேரிடுகின்றது. இது, நாம் நம் கர்த்தரைப் பற்றிய அறிவை ஒருவர் மற்றவருடன் சம்பாஷிக்கும் போது நடைபெறுகின்றது. இது, நாம் அன்றாட (வாழ்க்கை) அமைவுகளில் "ஒருவர் பிறருக்கான"[1] புதிய ஏற்பாட்டின் கட்டளைகளை தனிப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்தும் பொழுதும், கர்த்தருடைய பிரசன்னத்தை அனுபவத்தில் உணரும் பொழுதும் நடைபெறுகின்றது.

இந்தப் பாடத்தில் நீங்கள் ஏதொன்றையும் நினைவில் வைக்காதிருப் பினும், தயவு செய்து இதைக் கற்றுக்கொள்ளுங்கள்: எக்ளேசியா (கிறிஸ்த வர்களின் சீர்த்தன்மையுடன் உட் செயல்புரியும் அமைப்பு) தேவனை அறிதல் என்பதை உண்மையிலேயே பெறுவதற்கு அழகு மிக்க அமைவு ஒன்றை அளிக்கின்றது.

ஒவ்வொரு சபையிலும் உள்ள சபை நடத்துனர்கள், பிற கிறிஸ்தவர் களுடன் கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட அமைவுகளில் உட்செயல்பாடு, ஐக்கியம் மற்றும் ஊழியம் ஆகியவற்றை மேற்கொள்வதை உற்சாக மூட்டுவதற்கு அதிக கவனம் கொடுக்கத் தங்களையே ஒப்புக் கொடுக்க வேண்டும். தொடக்க நாட்களில் எக்ளேசியா இதைச் செய்தது, இது இவ்வாறு செயலாற்ற வேண்டுமென்றுதான் தேவன் அர்த்தப்படுத்தினார்.

## நமது பிரகாசமாக்கப்பட்ட கண்கள் நம்மை காணப்படாத உண்மை நிலைகளை உணர்ந்து அறியக்கூடியவர்களாக்குகின்றன

காணப்படாத மூன்று உண்மை நிலைகளைப் பவுல் குறிப்பிட்டார்: நம்பிக்கை, சுதந்தரம் மற்றும் வல்லமை:

தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை

*இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் ... நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (1:18, 19ஆ).*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது நம்பிக்கையானது உடல்ரீதியான கண்களினால் காணப்பட முடியாது. நமது நம்பிக்கை மனக்கண்களால் மட்டுமே காணப்படக் கூடியதாகின்றது. கிறிஸ்தவர்கள் மட்டுமே இதை உணர்ந்து அறிகின்றார்கள். நாம் இயேசுவினிடத்தில் வருவதற்கு முன்னால் நாம் இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்ததில்லை. "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர் களென்று நினைத்துக் கொள்ளுங்கள்" (2:12).*

*கிறிஸ்தவர்கள் மட்டுமே, "பரலோகத்திலே உங்களுக்காக வைத்திருக் கிற நம்பிக்கை" (கொலோ. 1:4) என்பதைக் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர் கள் மட்டுமே, "இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, ... ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி" (1 பேது. 1:4) உள்ளனர். கிறிஸ்தவர்கள் என்ற வகையிலான நமது நம்பிக்கையானது வெறும் நல்லுணர்வுள்ள உணர்வெழுச்சியாக மட்டும் இருப்பதில்லை. நமது நம்பிக்கையானது, வாழ்வைப் பற்றிய நேர்மறையான எண்ணப்போக்கைக் காட்டிலும் அதிகமானதாகக் கணக்கிடப்படுகின்றது. இது தமது ஜீவன் நமது ஜீவனாயிருக்கும் என்றும் தமது நித்திய இல்லம் நமது இல்லமாய் இருக்கும் என்றும் வாக்களிக்கின்ற ஜீவனுள்ள கர்த்தரின் உண்மை நிலையின் மீது மையங் கொண்டுள்ளது. பிரகாசமாக்கப்பட்ட கண்கள் மட்டுமே இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையின்மீது கண்ணோக்க இயலும்.*

*மேலும், கிறிஸ்தவர்களின் பிரகாசமாக்கப்பட்ட கண்கள் மட்டுமே எக்ளேசியாவைத் தேவனுக்குச் சொந்தமான சுதந்தரம் என்பதாகக் காண முடியும். கிறிஸ்தவர்கள், "பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு (தேவனுக்கு) உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்ன தென்று" காணக் கூடியவர்களாயிருக்கும்படிக்குப் பவுல் ஜெபித்தார். தேவன் கொண்டுள்ள எல்லாவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த பூமியின் அழகு முழுவதையும் சிந்தித்துப் பாருங்கள். இதன் செல்வங்கள் யாவற்றையும் கணக்கிட்டுப் பாருங்கள். சூரியன், சந்திரன் மற்றும் விண்மீன் கள் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க சிறப்புயர்வை ஆழ்ந்து யோசியுங்கள். மிகப் பரந்த அண்டத்தில் உள்ள வானவெளி மண்டலங்களை ஆச்சரியத் துடன் கண்ணோக்க ஆகாயத்தை உற்றுப் பாருங்கள். படைப்பு யாவற்றை யும் தேவனுக்கு முன்பாக வைத்து, தேவனுடைய மாபெரும் பொக்கிஷம் எது என்று சுட்டிக்காண்பிக்கும்படி அவரிடத்திலேயே கேட்கப்பட்டால், அது எதுவாயிருக்கும்? தேவனுடைய மதிப்பு மிக்க உடமை எதுவாக உள்ளது?*

படைக்கப்பட்ட இந்த அண்டத்தின் பொக்கிஷங்கள் யாவற்றிலு மிருந்து தேவன் தமது மிகவும் விலைமதிப்புள்ள உடமையாக எக்ளேசியா வைத் தேர்ந்து கொள்வார் என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார்! சபையைத் தேவன் காண்கின்ற விதமாக உலகம் அதைக் காண்பதில்லை. கிறிஸ்தவர்கள் பலரும் கூட தேவன் சபையுடன் இணைக்கின்ற உயர்ந்த மதிப்புகளைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

பிரகாசமாக்கப்பட்ட கண்கள் சபையை மாறுபட்ட வகையில் கண்ணோக்குகின்றன. இது தேவனுடைய சுதந்தரமாக, தேவனுடைய பொக்கிஷமாக, தேவனுடைய விலையுயர்ந்த உடமையாக உள்ளது. நாம் சபைக்கு உரியவர்களாய் இருக்கும் பொழுது இதற்குரியவர்களாய் இருக்கின்றோம். நாம் எக்ளேசியாவின் அங்கமாக - தேவன் தம்முடையவர் கள் என்று அழைக்கக் கூடிய மக்களைப் பெறுவதற்காகத் தேவன் பல காலங்களாகக் கொண்டிருந்த அவரது திட்டத்தை விரித்துரைப்பவர்களாக இருக்கின்றோம்.

நமது வசனப் பகுதியில், காணப்பட முடியாத இன்னொரு உண்மை நிலை - வல்லமை - குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல் "விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்" பற்றி எழுதினார். சுவிசேஷத்தின் மூலமாக எக்ளேசியாவுக்குக் கிடைக்கப் பெறுகிற வல்லமையை நோக்கிக் கவனத்தை இழுப்பதற்கு அவர் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினார். "வல்லமை" என்பதற்கு நான்கு மாறுபட்ட வார்த்தைகள் வசனம் 19ல் உள்ளன.[2] அவர், கிறிஸ்துவுக்குள் நாம் சாத்தியப் பட்ட அளவுக்கு உயர்ந்த வல்லமையை எதிர்கொள்ளுகின்றோம் என்ற சத்தியத்தை வலியுறுத்து வதற்கு வல்லமைக்கான ஒரு வார்த்தையை வல்லமைக்கான இன்னொரு வார்த்தையின்மீது வைத்து அடுக்குகின்றார். இது வல்லமையின் மாபெரும் தன்மையில் கடந்து செல்ல இயலாத அளவு அதன் ஒன்றுகுவிதலைக் கணக்கிடுகின்றது.

கிறிஸ்தவர்கள் மட்டுமே இந்த வல்லமையைக் காண முடியும். உண்மையில், கிறிஸ்தவரல்லாதவர்கள் தேவனுடைய செய்கைகளில் சில வேளைகளில் பலவீனத்தைத் தவிர வேறொன்றையும் காண்பதில்லை. சிலுவையின் அடியில் இருந்தவர்களில் பெரும்பாலோர், தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை செயல்பட்டதைக் காணாதிருந்தனர் என்பதை நினைவில் வையுங்கள். அவர்கள், தாங்கள், வீழ்ச்சியையும் தோல்வியையும் - தாம் மேசியாவாய் இருந்ததாக நினைத்த, தவறாக வழிநடத்தப்பட்ட ஒரு மனிதனின் மரணத்தை - கண்ணோக்கியதாக நினைத்தார்கள்.

இதற்கு நேர்மாறாக, தேவனுக்குத் திறந்திருந்த கண்கள் சிலுவையை அதன் இரட்சிக்கும் வல்லமை யாவற்றிலும் கண்ணோக்குகிறது. இது தேவனுடைய விவரிக்க இயலாத, இன்னொரு உலகத்திற்குரிய வல்லமைக் குச் சாட்சியம் அளிக்கின்றது. இது விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவன் அளிக்கும்படிக்கு கல்லறையிலிருந்து வெடித்தெழுந்த வல்லமையாக உள்ளது.

# *முடிவுரை*

*எக்ளேசியாவுக்குள்ளாக கிறிஸ்தவர்கள் காண வருவதை, விசுவாசியாத உலகமானது காண முடியாது. தேவன் நமக்கு பிரகாசமாக்கப்பட்ட கண்களைக் கொடுக்கின்றார். நாம் இந்த உலகத்தை வித்தியாசமான வகையில் உணர்ந்தறிய முடியும், அவ்வாறே செய்ய வேண்டும். இருப்பினும், இதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்: உங்கள் சபையும் அதற்குள் இருக்கும் மக்களும் உங்கள் வாழ்வில் ஒரு வசதியளிக்கும் இருப்பறை போல் இருந்தால் நீங்கள் பிரகாசமாக்கப்பட்ட கண்களையோ, நம்பிக்கையையோ அல்லது வல்லமையையோ கொண்டிருக்க மாட்டீர்கள். நீங்கள் வாரம் ஒருமுறை ஒரு வாகனத்தை ஓட்டிக் கொண்டு சென்று, ஒரு கட்டிடத்தினுள் பிரவேசித்து, சற்று நேரம் அமர்ந்து பிற கிறிஸ்தவர்களுடன் தனிப்பட்ட தொடர்பு எதுவுமின்றி - விசேஷமாக ஆவிக்குரிய தொடர்புகள் எதுவுமின்றி—மீண்டும் அங்கிருந்து வாகனத்தை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து விட்டால் நீங்கள் வல்லமையைக் கருத்தில் உணர மாட்டீர்கள். நீங்கள் தேவனை அவரது மக்களுக்கு புறம்பே அறியவோ அல்லது காணவோ முடியாது.*

*உள்ளூர் சபை இதில் பணியாற்ற உதவி செய்யுங்கள். உங்களை நடத்துகின்றவர்களை ஆதரியுங்கள், மற்றும் அவர்கள் புதிய ஏற்பாட்டின் "ஒருவர் மற்றவருக்கான" கட்டளைகளை அதிகம் முழுமையாகவும் சீர்த்தன்மையுடனும் நடைமுறைப்படுத்தும் வழியைச் சபைக்கு சுட்டிக்காட்டுவதில் தீவிரமாயிருக்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அதன் பிறகு, மற்றும் அப்பொழுது மட்டுமே, சபை பிரகாசமாக்கப்பட்ட கண்களின் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்.*

---

குறிப்புகள்

*[1]இந்தக் கட்டளைகள், "ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (யோவா. 13:34); "சகோதர சிநேகத்தில் ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்" (ரோமர் 12:10); "கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்" (ரோமர் 15:7); "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து (கொள்ளுங்கள்)" (கலா. 6:2); "ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெச. 5:11); "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் ... ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" (1 பேது. 4:10) மற்றும் இது போன்ற பலவற்றை உள்ளடக்குகின்றன. [2]இவற்றில் முதலாவது, வல்லமை என்பதை இயல்பான திறன் என்ற வகையில் குறிக்கின்ற dunamis* ("power") *என்பதாக உள்ளது. இரண்டாவது, எல்லா எதிர்ப்பு களையும் வெற்றி கொள்ளுகின்ற வல்லமையாகிய energeia ("செயலாற்றுதல்") என்பதாக உள்ளது. மூன்றாவது, ஒரு இலக்கை நிறைவேற்றுவதற்கு அளவில் சிறந்த வகையில் திறனளிக்கும் வல்லமையாகிய kratos ("பலம்") என்பதாக உள்ளது, நான்காவது, இது பலம் அல்லது திறன் என்ற கொடையாக அளிக்கப்பட்டுள்ள ischus* ("might") *என்பதாக உள்ளது.*

# வல்லமையின் மகத்துவம் (1:19–23)

*இயந்திர வாகனத்தை உற்பத்தி செய்யும்போது அது சராசரியான வேலை செய்யும் குடும்பத்திற்குக் கிடைக்கக் கூடியதாயிருக்க வேண்டும் என்று ஹென்றி ஃபோர்டு கனவு கண்டார். அவர் அதை (கார் வாகனத்தை) பணக்கார மனிதனின் பொம்மை என்பதைப் பார்க்கிலும் அதிகமாய் இருக்க வேண்டும் என்பதாக விரும்பினார். இதை நிறைவேற்றுவதற்கு அவர், பெருந்திரள் உற்பத்தியின் வியூகத்தைப் பயன்படுத்தினார். அவர் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகவும், விற்கும் விலையை நியாயமான தாகக் காத்துக் கொள்வதற்காகவும் பகுதிகளை ஒன்று சேர்க்கும் வரிசைக் கட்டமைப்பைச் செயல்படுத்தினார். அவரது வியூகமானது கார் உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்தியது.*

*நாம் எல்லாருமே, பணியில் ஒரு பதவி உயர்வுக்காயினும், குறிப்பிட்ட ஒரு வகுப்பில் "முதல்" இடம் பெறுவதற்காயினும், அல்லது ஒரு வீட்டை வாங்குவதற்காயினும் இப்படிப் பல்வேறு இலக்குகளை அடைவதற்கு வியூகங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் மேம்படுத்துகின்ற வியூகங் களில் சில செயல்படுகின்றன, அவற்றில் சில தோல்வி(யும்) அடைகின்றன.*

*வேதாகமம் என்பது ஒரு காரிய நிர்வாகத்திற்கு அவசியமான புத்தகமாக உள்ளது. இது வாழ்வை எதிர்கொள்வதற்கு மக்கள் பயன் படுத்தக் கூடிய பல்வேறு திட்டங்களை முன் வைக்கின்றது. இது, நமக்கு செயல்படுகின்றது எது மற்றும் செயலுக்கு உதவாதது எது என்பவற்றைக் காண்பிக்கின்றது. குடும்பம், திருமணம், வேலை மற்றும் நட்புறவு ஆகிய வற்றைக் கையாளுவதில் பல்வேறு வகையான மக்கள் பரிசோதித்துள்ள வியூகங்களை வேதாகமம் முன் வைக்கின்றது. அடிப்படையில் இது, தேவனு டனான உறவைக் கட்டி யெழுப்புதல், தேவனுக்குக் கீழ்ப்படிதல், மற்றும் தேவனுக்கு ஊழியம் செய்தல் ஆகியவற்றில் செயல்படக் கூடிய வியூகங்களை முன் வைக்கின்றது. வேத வசனங்களில் சீர்த்தன்மை பொருந் தியதாக நிலைத்துள்ள அடிப்படை வியூகம் ஒன்று பின்வருமாறு: தேவனு டைய மக்கள் தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்ற தங்களுடைய வல்லமையை அல்ல, தேவனுடைய வல்லமையையே சார்ந்துள்ளனர்.*

*எரிகோ நகரைக் கைப்பற்றியது பற்றிய பதிவேட்டை ஆழ்ந்து சிந்தியுங்கள். மதில் சூழ்ந்த அந்நகரை மற்றெந்தப் படையும் தாக்குவது போலவே தாக்கி சுவர்களை வீழ்த்துவதற்குப் பதிலாக, ஏழு நாட்கள் நகரைச் சுற்றி அணிவகுத்துச் சென்று தேவனுடைய வல்லமையில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி யார் எப்பொழுதாவது*

*நினைத்திருப்பார்கள்? அதுவே தேவனுடைய போர்த் திட்டமாயிருந்தது.*

*பல்லாயிரக் கணக்கில் ஆயுதம் தரித்த போர் வீரர்களைக் கொண்ட எதிரியின் படையுடன் போரிடுவதற்கு எந்த இராணுவத் தளபதியாவது, தனது படையை 32000 போர் வீரர்கள் என்ற எண்ணிக்கையிலிருந்து 300 போர் வீரர்கள் என்ற அளவுக்குக் குறைப்பாரா? அந்த வியூகத்தைத் தேவன் கிதியோனுக்குத் தந்தார் - அது தேவனுடைய வல்லமையின் மீது நம்பிக்கை கொண்டு இயங்கிய வியூகமாயிருந்தது.*

*தேவன் தம்முடைய மக்கள் தமது பணியை நிறைவேற்றுவதற்குத் தங்களின் சொந்த பலத்தின் மீதல்ல, தம்முடைய வல்லமையையே நம்பியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். வேத வசனங்களை நாம் வாசிக்கையில் இந்த அடிப்படை வியூகத்திற்கான எடுத்துக்காட்டுகள் ஒன்றின் பின் ஒன்றாக மேல் வருகின்றன.*

*தேவன் மாறியிருக்கவில்லை. அவர் இன்னமும் தமது மக்கள் தம்முடைய வல்லமையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றே விரும்புகின்றார். அதுவே நமது வேத பாடப் பகுதியின் பாடச் சுருக்கமாக உள்ளது. இது ஒரு சபைக்கான இயக்கத்தின் அடிப்படை வியூகத்தை எடுத்துரைக்கின்றது. நாம் கர்த்தருடைய ஊழியத்தை நமது சுய வல்லமையினால் செயல்படுத்துவோமா, அல்லது நாம் தேவனுடைய வல்லமையினால் இயங்குவோமா?*

*பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (1:18-23).*

*வசனம் 18ல் தொடங்கி, பவுல், எபேசுவிலிருந்த எக்ளேசியா (சபை) காணப்படாத மூன்று உண்மை நிலைகளை உணர்ந்தறிய வருவதற்காக ஜெபித்தார், அவையாவன: (1) அவர்களுடையதாயிருந்த தனிச் சிறந்த நம்பிக்கை, (2) அவர்களுக்கு அருளப்பட்டிருந்த தேவனுடைய சுதந்தரம், மற்றும் (3) அவர்கள் இயங்க வேண்டியிருந்ததான தேவனுடைய வல்லமை.*

*சாத்தியமான மிக உயர்ந்த வல்லமையை நாம் கிறிஸ்துவுக்குள்*

எதிர்கொள்ளுவதை வலியுறுத்தப் பவுல், “வல்லமை” என்பதற்குப் பல வார்த்தைகளைப் பயன்படுத்தினார். தேவன், ஒவ்வொரு உள்ளூர் சபையும் ஒப்பிட முடியாத தமது மாபெரும் வல்லமையினால் இயங்க வேண்டு மென்று விரும்புகின்றார்.

உள்ளூர் சபைகள் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நாம் அறிவுறுத்தவும், ஒருங்கமைக்கவும், வாழ்வின் சூழ்நிலைகளைக் கையாளவும், நவீன முறைமைகளைப் பயன்படுத்த முடியும். மக்கள் மிகச் சிறந்த பெற்றோர்களாயிருப்பது எப்படி என்று கற்றுக் கொள்ளவும், அவர்களின் திருமணங்களை வளப்படுத்தவும், மிகச் சிறந்த சுயமதிப்பைப் பெறுவது எப்படி என்பதையும், வேதாகமத்தை எவ்வாறு படிப்பது என்பதையும், எப்படி போதிப்பது, உள்ளூர் சபைக் குழுமங்களுடன் நாம் இணைவு கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை எவ்வாறு செய்வது என்பது பற்றியும் நாம் அவர்களுக்கு உதவ முடியும். நாம் இவை யாவற்றை யும் செய்தும் கூட, தேவனுடைய மக்களுக்கு முற்றிலும் தேவையான மிக அடிப்படையான வியூகத்தை - தேவனுடைய வல்லமையினால் இயங்குதல் என்பதை - தவற விடுபவர்களாய் இருக்கக் கூடும். அவர் நமது வேத பாடப் பகுதியில் நாம் இந்தத் தேவையைக் காண நமக்கு உதவ முயற்சிக்கின்றார்.

## தேவன் தம்முடைய வல்லமையில் நமது நம்பிக்கையைக் கட்டியெழுப்புகிறார்

எபேசுவிலிருந்த எக்ளேசியாவானது தேவனுடைய வல்லமையை அறிந்து, அதில் பங்கேற்று, அதனால் இயங்க வேண்டுமென்று பவுல் ஜெபித்தார். தேவனுடைய அந்த வல்லமையிலிருந்து மேற்கொள்ளப்படுகிற எதுவும் நம்மை உற்சாகப்படுத்துகின்ற வகையில் உள்ளவைகளான தனிச் சிறப்பான மூன்று செயல்விளக்கங்களைப் பவுல் குறிப்பிட்டார்:

1. மரித்தோரில் இருந்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (1:19). சிலுவையானது தேவனுடைய அன்பின் மாபெரும் காட்சியை நமக்கு முன் வைக்கின்றது; கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது அவரது வல்லமையின் நிறைவான செயல் விளக்கத்தை நமக்கு அளிக்கின்றது. தெய்வீக வல்லமை யின் நிறைவான செயல்விளக்கத்தை நமக்கு அளிக்கின்றது. தெய்வீக வல்லமையின் இந்தக் காட்சியைப் பின்வரும் பாடல் வரிகள் நமக்கு நினைவூட்டுகின்றன:

அந்த நாளில் கல்லறையில் ஒரு வார்த்தையும் கேட்கப்படாதிருந்தது,
அணி நடைபயின்ற வீரர்களின் பாதங்கள் மட்டுமே அவர்கள்
 கல்லறையைக் காக்கையில் ஒலியெழுப்பின.
ஒரு நாள், இரு நாட்கள், மூன்று நாட்கள் கடந்தன,
அது இயேசு தம் கடைசி மூச்சை விட்டார் என்றாகியிருக்க முடியுமா?

அது அவரது தந்தை அவரைக் கை விட்டார் என்றிருக்க முடியுமா?

*அது அவர் தம் மகனிடம் பின்புறம் காட்டி, நமது பாவங்களை*
*வெறுத்தார் என்றாகுமா?*
*நரகம் யாவும், "அவரை மறந்து விடுங்கள், அவர் மரித்து விட்டார்"*
*என்று முணுமுணுப்பதாய்க் காணப்பட்டது*
*பின்பு தந்தையானவர் தம் மகனைக் கீழ் நோக்கிப் பார்த்து,*

*"என் அன்பே எழுந்திரும்! என் அன்பே எழுந்திரும்!*
*உம்மைக் கல்லறை இனியும் பிடித்துக் கொள்வதில்லை.*
*இனி மரணத்தின் கொடுக்கு இல்லை, இனித் துன்பம் இல்லை,*
*என் அன்பே, எழுந்திரும், எழுந்திரும்!"[1] என்று கூறினார்.*

இயேசு உயிர்த்தெழுந்தார். கல்லறைக்குள்ளாக ஊடுருவி, நித்திய ஜீவனுக்கென்று வெடித்து வெளியேறிய அந்த வல்லமையைக் கற்பனை செய்து பாருங்கள். தேவன் ஒருவர் மாத்திரமே அவ்வகையான வல்லமையைக் கொண்டுள்ளார். அந்த வல்லமையின்றியே நாம் சமாளிக்க முடியும் என்று நினைத்தால் நாம் எவ்வளவு மதியீனமுள்ளவர்களாயிருப்போம்!

2. *கிறிஸ்து உயர்த்தப்படுதல்.* தேவன், இயேசுவின் உயிர்த்தெழுதலில் மட்டுமல்ல, ஆனால் மீண்டும் இயேசுவின் உயர்த்தப்படுதலில் கூட அவரது வல்லமையை வெளிப்படுத்தினார். அவர், "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்" (1:20, 21).

"இயேசுவே கர்த்தராயிருக்கிறார்" என்று பாட நாம் இணையும் பொழுது, நாம் சத்தியத்தைப் பாடுகின்றோம். அவர் கர்த்தராயிருக்கிறார். அவர் எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தைக் கொண்டுள்ளார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுடன், கற்பனை செய்யக் கூடிய எந்த வல்லமையும்—தூதர், ஆவி அல்லது மனிதனுக்குரிய எந்த வல்லமையும் - ஒப்பிடப்பட முடியாது. அவரது வல்லமையானது அதில் நாம் நம்பிக்கை கொள்வதைத் தீவிரப்படுத்தும்படி நம்மை அழைக்கின்றது. அவருடைய மக்கள் அவரது வல்லமையில் நடந்து கொள்கின்ற பொழுது, அது அரியணையில் அமர்ந்துள்ளவரைக் கனப்படுத்துகிறது.

3. *சபையின் சார்பாக இயேசுவின் மிக உன்னத தன்மை.* வசனம் 22 மற்றும் 23, "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி ... சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று கூறுகின்றது. தேவனுடைய வல்லமையானது, இயேசுவை உலகப் பிரகாரமான வட்டாரம் மற்றும் ஆவிக்குரிய வட்டாரம் ஆகிய இரண்டிற்கும் இராஜரீகமான கர்த்தராக ஏற்படுத்தியுள்ளது. இயேசு, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (மத். 28:18).

அவர் எல்லாருக்கும் மேலான கர்த்தராக இருக்கின்றார். இயேசுவை தேவன் கர்த்தாதி கர்த்தாவாக மட்டுமின்றி, "சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையாகவும்" ஏற்படுத்தியுள்ளார். வேறு வார்த்தைகளில்

*கூறுவதென்றால், பிதாவாகிய தேவன் சபைக்குரிய எல்லா மகிமையையும் கர்த்தருக்கு அருளியுள்ளார்! சபையின் பயனுக்காகவே இயேசு அரசாளு கின்றார். சபையானது தேவன் அது இருக்கும்படி விரும்புகின்றபடியாக இருப்பதைக் காண்பதற்கே அவர் (இயேசு) அரியணையில் வீற்றிருக் கின்றார். இவ்விடத்தில், சபைகள் தேவனுடைய வல்லமையில் மாபெரும் நம்பிக்கை கொள்ளும் திசை நோக்கி இயங்குவதற்கான இன்னொரு காரணம் உள்ளது - ஏனென்றால் கர்த்தராகிய இயேசு - தாமே சபைக்கு அருளப்பட்டுள்ளார்.*

*இயேசுவின் உயிர்த்தெழுதல், உயர்த்தப்படுதல் மற்றும் அவரது மிக உயர்வான தன்மை ஆகியவற்றின் மூலம் தேவன் தமது வல்லமையில் நமது நம்பிக்கையைக் கட்டி எழுப்புகின்றார்.*

## தேவன் தமது வல்லமையில் நாம் பங்கேற்கும்படி அழைக்கின்றார்

*வேதாகமத்திலிருந்து வெளிவருகிற அடிப்படை வியூகங்களில் ஒன்று பின்வருமாறு: தேவன் தம்முடைய மக்கள் தங்கள் சுய வல்லமையில் அல்ல ஆனால் தம்முடைய வல்லமையின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும் என்று விரும்புகின்றார். இதை உள்ளூர் சபைகளுக்கு நடைமுறைப் படுத்துகையில், தேவன் தம்முடைய வல்லமையினால் நாம் இயங்க வேண்டுமென்று விரும்புகின்றார், மற்றும் அவரது வல்லமையில் நமது பங்கேற்புக்கு அவர் நம்மை அழைக்கின்றார்.*

*உள்ளூர் சபையானது, அவருடைய வல்லமையை வெளிப்படுத்தக் கூடிய, அவரது பிரசன்னத்தை வெளிப்படுத்தக் கூடிய, கர்த்தராகிய இயேசுவை வெளிப்படுத்தக் கூடிய ஒரு வெளிப்பாடாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒரு சபையானது, அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை எதிர்கொள்ளவும் அனுபவிக்கவும் கூடிய நிலையை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.*

*சபையைப் பற்றிப் பவுல் 1:23ல் கூறியதைக் கவனியுங்கள்: கிறிஸ்து, “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு ... எல்லாவற்றிற்கும் மேலான தலையாக” உள்ளார். சபையைப் பற்றிய இரண்டு சத்தியங்களை இவ்வசனங்கள் உள்ளடக்குகின்றன.*

*1. நாம் “அவருடைய சரீரமாய்” இருக்கிறோம். இயேசுவுக்கும் உள்ளூர் சபைக்கும் இடையில் வலிவானதொரு உறவு நிலவுகிறது. மனித உடலைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அது - கைகள், காதுகள், பாதங்கள், நுரையீரல்கள், புயங்கள், இரத்தக் குழாய்கள், இன்னும் பிற போன்ற பல பாகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாகமும் முக்கியமானதாக உள்ளது. ஒவ்வொரு பாகமும் செயல்படுகின்றபொழுது, உடலானது நலமாக உள்ளது. தலை, இதயம், புயங்கள் மற்றும் உள்ளான உறுப்புக்கள் யாவும் செயல்படுகையில், உயிர் வாழ்வு பராமரிக்கப்படுகின்றது.*

*அதுவே சபைக்கான இயேசுவின் திட்டமாக உள்ளது. இந்த சத்தியத்*

*தைத் தவற விடாதீர்கள்: ஒரு சபையானது ஒரு நிறுவனம் என்பதற்குப் பதிலாக ஒரு சரீரம் என்ற வகையில் பணியாற்றுகையில் அது தேவனுடைய வல்லமையினால் இயங்குகிறது. ஒரு சரீரம் என்ற வகையில் சபை என்பதற்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் சபை என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டபடியாகக் கண்ணோக்குங்கள்.*

*ஒரு நிறுவனம் என்ற வகையில் உள்ள சபை என்பதற்கும் கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில் உள்ள சபை என்பதற்கும் இடையில் மாபெரும் வேறுபாடு நிலவுகின்றது. உள்ளூர் சபைகளில் நாம் சரீரங்கள் என்பதைக் காட்டிலும் நிறுவனங்கள் என்ற வகையில் செயல்படுகின்ற உண்மையில் இருந்துதான் இன்றைய நாட்களில் உள்ளூர் சபைகளைப் பாதிக்கின்ற பல தோல்விகளும் பிரச்சனைகளும் விளைகின்றன.*

*2. நாம், "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாக இருக்கின்றோம்." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு தம்முடைய சபையை நிரப்புகின்றார். கிறிஸ்துவின் சரீரம் செயலாற்றுகையில், அது இயேசு கிறிஸ்துவின் முழுமையான வெளிப் பாடாக உள்ளது. முதலாம் நூற்றாண்டில் நடைபெற்றதுபோன்றே அது நடக்கின்ற பொழுது, உலகம் அதைக் கவனிக்கின்றது. திடீரென்று சபை வெளி நிற்கின்றது. மக்கள் இந்த உலகத்தில் காணாத ஒன்றை - ஜீவனுள்ள கர்த்தர் மக்களின் மூலம் வல்லமை நிறைந்த வகையில் வெளிப்படுத்தப் படுவதை - சபையில் காண்கின்றார்கள்.*

*வேதாகமத்திற்கான மிகச் சிறந்த விளக்கவுரை வேதாகமமே என்று கூறப்படுகின்றது. சபை என்ற வகையில் நமது வியூகம் - தேவனுடைய வல்லமையினால் இயங்க வேண்டிய வியூகம் - எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு 4:7-16 வசனங்கள் எவ்வாறு ஒளியூட்டுகின்றன என்பதைக் கவனியுங்கள்:*

> *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக் குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத் தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவரு மாயிருக்கிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய*

சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பல வித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களா யிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள், எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.

இந்த சத்தியங்களை உள்ளூர் சபைகளுக்கு நாம் மூன்று நேரடியான வழிமுறைகளில் நடைமுறைப்படுத்துவோம்: (1) ஒரு உள்ளூர் சபையானது தேவனைப் பிரியப்படுத்தவும், அவரைக் கனப்படுத்தவும், அவரது வல்லமையினால் இயங்க வேண்டும். தேவன் எப்பொழுதுமே, தம்முடைய மக்கள் தங்கள் சுய பலத்தினால் அல்ல ஆனால் தம்முடைய வல்லமை யினாலே இயங்கும்படி வலியுறுத்தியிருக்கின்றார். (2) ஒரு சபையானது, அவரது வல்லமையினால் இயங்குவதற்கு, ஒரு சரீரம் என்ற வகையில் செயல்பட வேண்டும். இது கிறிஸ்தவர்கள் "ஒருவர் மற்றறொருவருக்கு" என்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் ஒன்றுகூடுதல்களுக்கு அழைக்கின்றது. (3) ஒரு சபையானது சரீரம் என்ற வகையில் செயல்படு வதற்கு, சரீர (சபையின்) வாழ்வுக்குத் தனது மிக உயர்ந்த முதன்மையைக் கொடுக்க வேண்டும். எக்ளேசியா என்பது, தேவனுடைய புதிய சமுதாய அமைப்பாக - வாழ்வுக்கான முற்றிலும் ஒரு புதிய வழியாக உள்ளது. இது இயேசுவின் மூலம் தேவனுடைய வல்லமையினால் இயங்குகின்ற ஒரு சரீர வாழ்வாக உள்ளது.

## முடிவுரை

டெக்ஸாஸின் இட்டாஸ்காவில், இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வருவதற்குச் சற்று முன்னர், பள்ளியில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் உயிர் நீத்தனர். போருக்குப் பிறகு அந்த நகரத்தார், அப்பள்ளியை மீண்டும் கட்டியெழுப்பி, "உலகின் மிகச் சிறந்த (நீர்) தெளிப்பு முறை" என்று தாங்கள் அழைத்த ஒன்றை அதில் நிர்மானித்தனர். இந்த முன்னெச்சரிக்கையினால் அந்த நகரம் முழுவதும் மறு உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் இவ்வசதி பற்றிய பயணங்களை நடத்தி, மக்களுக்கு, (நீர்) தெளிப்பான்களின் முன்னேறிய தொழில் நுட்பத்தைக் காண்பித்தார்கள். நகரம் வளருகையில், பள்ளிக்கு ஒரு புதிய கட்டிடத்தைச் சேர்ப்பது அவசியமாயிற்று. அதை அவர்கள் செய்த பொழுது, அதிர்ச்சியூட்டும் ஒன்றை கண்டறிந்தார்கள். பள்ளி திறக்கப் பட்டு, தெளிப்பான்கள் அமைக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து சென்றிருந்தன. கட்டுமானப் பணியாளர்கள் கூடுதல் கட்டிடத்தைக் கட்டிய பொழுது, தண்ணீர் தெளிப்பான்கள் அமைப்பானது அவ்வளவு

*நாட்களாக ஒருக்காலும் இணைக்கப்படாதிருந்ததைக் கண்டுபிடித்தார்கள்.*

*அப்படிப்பட்ட ஒன்று ஒரு சபைக்கும் நடக்கக் கூடும். உள்ளூர் சபைகளுக்குத் தேவன் நம்புதற்கரிய வல்லமையை அளித்திருக்க, அவற்றில் சில இணைக்கப்படாமல் உள்ளன. அவர்கள் தாங்கள் கொண்டுள்ள வற்றைப் பராமரிக்கவும், களத்தை இழக்காமல் இருக்கவும் தங்களால் முடிந்த அளவு சிறப்பாகப் பணி செய்கின்றனர், ஆனால் அவர்கள் சரீரங் களாகப் பணியாற்றுவதில்லை. அவர்கள் தேவனுடைய வழியில் ஒன்றுகூடி ஊழியம் செய்வதில்லை அல்லது தேவனுடைய வல்லமையினால் இயங்குவதில்லை.*

*அது போன்றதொரு சபையில் நீங்கள் இருந்தால், உங்களால் என்ன செய்யக் கூடும்? ஜெபியுங்கள், மற்றும் சபையை சரீரம் போன்று அதிகமாய் செயல்பட வழிநடத்தும்படி தேவனிடம் இன்னும் அதிகமாய் ஜெபியுங்கள். சபையை நடத்துபவர்களிடம் செல்லுங்கள், சபையானது இன்னும் அதிகமாய் சரீரம் போன்று ஆவதை நீங்கள் காண விரும்புவதை அவர்கள் அறியட்டும். நீங்கள் அதன் அங்கமாய் இருக்கத் தயாராய் இருப்பதை அவர்கள் அறியட்டும். பிறகு, தொடர்ந்து ஜெபியுங்கள், மற்றும் தேவன் என்ன செய்கிறார் என்பதைக் கவனியுங்கள்.*

---

*குறிப்பு*

[1]Eddie Carswell, “Arise, My Love,” *Glory: Hallal Music*, The Singer’s Worship Series (West Monroe, La.: Howard Publishing Co., 1992), 15. Used with permission. © 1987 Mike Clark Music and Lowry Music Co., Inc.

# மரித்தவர்கள் அல்லது ஜீவனுள்ளவர்கள் (2:1-7)

*ஈவெல் நியெவெல் என்ற பயங்கரக் காட்சிச் சண்டையிடும் மனிதர் 1974ல், தாம் இடாஹோவில் உள்ள ஸ்நேக் ரிவர் கென்யான் (பாம்புபோல் வளைந்து மலைகளினூடே செல்லும் ஆறு) என்ற ஆற்றை ராக்கெட் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவாறே குதித்து வெற்றிகரமாக அதைக் கடக்க முடியும் என்று ஆயிரக்கணக்கான மக்கள் நம்பும்படி செய்தார். ஏறக்குறைய 20,000 மக்கள் அந்த நிகழ்ச்சியை நேரில் காண்பதற்காகப் பணம் செலுத்தினார்கள். மற்றும் 1,000,000த்திற்கும் அதிகமானவர்கள் இதை நெருங்கிணைப்பு ஒளிபரப்பின் மூலம் நாடு முழுவதிலும் இருந்த அரங்குகளில் காண்பதற்கு டிக்கெட்டுகள் வாங்கினார்கள்.*

*நியெவெல் அந்த மலைக் கணவாய் ஆற்றைக் கடக்கத் தவறி விட்டார். அவருடைய “வான-சைக்கிள்” வண்டியில் இருந்த பாராசூட் உபகரண மானது அவரது குதிப்பு தொடங்கிய உடனே காலத்திற்கு முன்னதாகவே விரிந்து கொண்டது. பயங்கரக் காட்சிச் சண்டையிடுபவரும் அவர் தம் சைக்கிளும் கீழேயிருந்த தரையின் மீதுதான் மிதந்தன(ர்).*

*இருப்பினும் கூட, நம்மில் எவரும் நமது கார்களை மிக உயர்ந்த வேகத்தில் ஒரு குன்றின் மீது செலுத்தி மலைக் கணவாய் ஆற்றினூடே பறந்து செல்ல முயற்சி செய்தால், நாம் கடக்கும் தூரத்தைக் காட்டிலும் நியெவெல் அம்மலைக் கணவாய் ஆற்றினூடே அதிக தூரம் பயணம் செய்தார். சில கார்கள் எனது காரைக் காட்டிலும் சற்று அதிக தூரம் கடந்து செல்லலாம், ஆனால் எந்த ஒரு காரும் வெற்றிகரமாய் குதித்து விட முடியாது. அவை யாவும் மோதி நொறுங்கி விடும்.*

*வாழ்க்கையை வாழுதல் என்ற விஷயம் வரும் பொழுது, மக்கள் மாறுபடுகின்றனர். நாம் நபருக்கு நபர் என்ற ஒப்பிடுதலைச் செய்தால், ஒரு நபர் மிகவும் அடிக்கடி நற்செயல்களைச் செய்து அடுத்த நபரைக் காட்டிலும் அதிக அளவு மாறுபட்டிருக்கலாம். இருப்பினும் பரிசுத்தமான ஒரே தேவனு டன் ஒப்பிடுகையில் எல்லா மக்களுமே நற்செயல்களில் குறைவு படுகின்றார்கள். பாவம் நிறைந்த மனிதனைப் பரிசுத்த தேவனிடத்திலிருந்து பிரிக்கின்ற மலைக் கணவாய் ஆற்றினூடே கடந்து செல்வதற்கு எந்த நபராலும் உதவி செய்ய இயலாது.*

*உயிர் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் சுயநலமற்ற, அக்கறையுள்ள, கொடுக்கின்ற மனிதருக்கும் கூட தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை யானது, அடால்ஃப் ஹிட்லர் அல்லது மதக்குழுத் தலைவரான சார்லஸ் மேன்ஸன் ஆகியோருக்குத் தேவைப்பட்டது போன்றே அவசியமாகின்றது. ஒப்பீட்டில் வேண்டுமானால் அவர்களின் வாழ்வானது சம அளவில் பாவமில்லாததாக இருக்கலாம், ஆனால், அவர்கள் சம அளவிலேயே தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள் மற்றும் சம அளவிலேயே பாவத்தில் மரித்தவர்களாய் இருக்கின்றார்கள்.*

*எந்த ஒரு பாவியும் ஆவிக்குரிய வகையில் மற்ற எந்தப் பாவியைக் காட்டிலும் மேன்மையான நிலையில் இருப்பதில்லை. தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையில்லாமல் நம்மில் எவரொருவரும், ஒரு குடிகாரர், போதை மருந்து விற்பவர் அல்லது ஆபாசப் படம் தயாரிப்பவர் ஆகியோரை விட அதிகம் தேவனிடத்தில் நெருங்குபவராய் இருக்க முடியாது. நீங்கள் உங்கள் பாவங்களில் மரித்துள்ள பொழுது, நீங்கள் உங்கள் பாவங்களில் மரித்தவர்களாகவே இருக்கின்றீர்கள்.*

*தேவனுடைய வல்லமையானது கிறிஸ்துவுக்குச் செய்தது எதுவோ, அதையே உங்களுக்கும் செய்யக் கூடியதாக உள்ளது என்பதே நற்செய்தியாக இருக்கின்றது. தேவனுடைய வல்லமை மரித்தோரை எழுப்புகின்றது. இந்த சத்தியத்தை எபேசியர் 2:1-7 உறுதிப்படுத்துகிறது: பாவிகளை மரணத்திலிருந்து கிறிஸ்துவின் மூலம் வாழ்வுக்குக் கொண்டு வருவதன் மூலமாகத் தேவன் தமது மாபெரும் வல்லமையைச் செயல்விளக்கப்படுத்துகின்றார்.*

## தேவனுடைய வல்லமையினின்று தனித்து இருந்த பாவிகளின் நிலையை தேவன் விவரிக்கின்றார்

*எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு கூறினார்:*

> *அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர் கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவை களைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (2:1-3).*

*கிறிஸ்துவுக்கு முன்பாக ஒரு நபரின் நிலை பற்றிய அழகற்ற சித்திரம் ஒன்றைப் பவுல் தீட்டினார். இந்த வசனங்கள், தேவனுடைய வல்லமை மட்டுமே வென்றொழிக்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலையைச்*

*சித்தரிக்கின்றன. நாம் குறைந்தது ஐந்து உறுதிப்பாடுகளைக் காண்கிறோம்:*

*1. நாம் மரித்தவர்களாய் இருந்தோம் (வ. 1). அந்தக் கூற்று நமது சூழ்நிலையைத் தொகுத்துரைக்கிறது. நாம் மரித்துக் கொண்டிருப்பவர் களாகவோ, படுகாயம் அடைந்தவர்களாகவோ அல்லது மிகவும் நோய் வாய்ப்பட்டவர்களாகவோ மட்டும் இருந்ததில்லை. தேவனைப் பொருத்த மட்டில் நாம் மரித்தவர்களாய் இருந்தோம். நமது ஆவிகள் தங்களில் ஜீவனைக் கொண்டிருந்ததில்லை. இழந்துபோகப்பட்ட மனிதர் தாம் எவ்வளவு உண்மையாக மரித்த நிலையில் உள்ளார் என்பதை உணர்ந் தறியாமல் இருக்கின்றார் என்பது பரிதாபத்திற்குரியதாக உள்ளது. எனது நண்பர் பாப் அவர்கள் தமது முப்பது வயது வரையிலும் கிறிஸ்தவராக வில்லை. ஒருமுறை என்னிடத்தில் அவர், ''அந்தக் காலத்தில் நான் எதையேனும் இழந்து விட்டிருந்ததாக நினைக்கவில்லை. என் வாழ்வு வெறுமையானதென்பது காணப்படாதிருந்தது'' என்று கூறினார். நம்மில் பலர் பாப்புடன் (நம்மை) அடையாளப்படுத்த முடியும். நம்மில் சிலர் பல நாட்களாக, பல மாதங்களாக, பல ஆண்டுகளாக, நாம் வாழ்ந்திருந்த தாகவும், நாம் விரும்பியபடியே செய்ததாகவும், வாழ்வின் "மிக வேகமான சாலையில்'' பயணித்ததாகவும் நினைத்திருப்போம். அந்த வேளையின் போது, நமது இருப்பின் மத்தியில் நாம் எவ்வளவு முழுமையாக மரித்திருந்தோம் என்பது பற்றி நாம் கருத்து எதுவும் கொண்டிருந்ததில்லை.*

*2. நாம் உலகத்தின் வழிகளைப் பின்பற்றினோம் (வ. 2) கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் "உலகம்" என்ற வார்த்தை 186 முறை வருகின்றது, உண்மையில் ஒவ்வொரு முறையும் அது பொல்லாங்கையே குறிப்பதாக உள்ளது. "உலகம்" என்பது தேவனுடைய சித்தத்திலிருந்து முழுமையாய் வெளியே அடியெடுத்து வைத்த படைப்பின் பாகமாக உள்ளது. தேவனைப் பற்றித் தீவிரமாய்ச் சிந்திக்க மறுத்தல் என்பது உலகக் கண்ணோட்டமாக உள்ளது. உலகப் பிரகாரமான கண்ணோட்டம் இன்றைய நாட்களில் விஞ்சியிருக் கின்றது. இது உடனடியான திருப்தியை உயர்த்துகின்றது. இந்த வரையறை யில் அடங்கியுள்ள மக்களுக்கு, பாலுறவு, உணவு, பானம், விடுமுறைகள், உடைகள், பணம் மற்றும் மகிழ்ச்சியை அனுபவித்தல் என்பவைகளே வாழ்வில் மிகவும் முக்கியமான விஷயங்களாக இருக்கின்றன. மிகச் சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களின் பொருளடக்கங்களில், உலகப் பிரகாரமான கண்ணோட்டமானது அதிகம் மேலோங்கியுள்ளது. இது நவீன வரை கலை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் மக்கள் மந்தை மந்தையாகச் சென்று காணும் திரைப்படங்கள் ஆகியவற்றில் தன்னையே காண்பிக்கின்றது. உலகப் பிரகாரமான கண்ணோட்டமானது ஒழுக்கத்தைச் சார்பு நிலைக்குரியதாக்குகின்றது. சரி மற்றும் தவறு என்பவை தனிப்பட்ட முன்னுரிமைக்கு வழிகொடுக்கின்றன.*

*3. பொல்லாத சக்திகள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன. வசனம் 2, நாம் உலகத்தின் வழிகளை மட்டுமின்றி, ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத் தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கு'' உரிய வழிகளையும் பின்பற்றியிருந்தோம் என்று கூறுகின்றது. சாத்தான், "இவ்வுலகத்தின் அதிபதியாக" (யோவா. 12:31),*

*"பிசாசுகளின் தலைவனாக" (மத். 9:34), மற்றும் "அவிசுவாசிகளின் மனதைப் பார்வை யற்றுப் போகும்படி செய்கின்ற இப்பிரபஞ்சத்தின் தேவனாக" (2 கொரி. 4:4) இருக்கின்றான். சாத்தான் தேவனுக்கெதிரான கலகத்தை நபர்த்துவப் படுத்துகின்றான். கிறிஸ்துவுக்கு முன்னதாக நாம், அறிந்தோ அறியாமலோ சாத்தானின் பொல்லாத செல்வாக்கிற்குக் கீழ்ப்படிந்தவர்களாய் இருந்தோம். நாம் பிசாசுடன் மரணத்திற்குரிய அதே அலை வரிசைகளைப் பகிர்ந்து கொண்டோம். அவன் நமது மனங்களில் ஒரு நேரான, நிலைப்புத் தன்மையற்ற, ஒரு நேரடித் தொடர்பு கொண்டிருந்தான்.*

*4. நாம் மாம்சத்தைத் திருப்திப்படுத்த வாழ்ந்தோம்* (வ. 3). *Sarx என்ற கிரேக்க வார்த்தையே மாம்சம் என்று மொழிபெயர்க்கப்படுகின்றது. இது மனிதத்துவமானது அதன் பாவம் நிறைந்த தன்மையில் இருப்பதைக் குறிக்கின்றது. இது நாம் தேவனுக்கெதிராக, எவ்வித வருத்தமும் இன்றி நாம் தேர்ந்து கொள்வதைச் செய்யும்படி வளர்த்துக் கொண்ட நிலைப்பாடாக உள்ளது.*

*5. நாம் கோபாக்கினைக்கு உட்பட்டிருந்தோம்* (வ. 3). *நாம் "சுபாவத் தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளா யிருந்தோம்" என்று பவுல் கூறினார். தேவனுடைய பரிசுத்த தன்மையானது பாவத்திற்கெதிராக பரிசுத்த கோபத்தை வேண்டி நிற்கின்றது. பாவம் எப்பொழுது இருப்பினும், எங்கு இருப்பினும் அது யாரிடத்தில் தன்னைக் காண்பித்த போதிலும் தேவன் அதை அருவருக்கின்றார். "கோபம்"* (Gk.: *orge*) *என்பதற்கான கிரேக்க வார்த்தையானது "பொல்லாங்கின் ஒவ்வொரு உருவம் மற்றும் வடிவத்திற்கு எதிராக பரிசுத்த தேவனின் தொடர்ந்த மற்றும் பலத்த பதில்செயல்" என்று அர்த்தப்படுகின்றது.*

*கிறிஸ்து இல்லாமல் வாழ்வு என்பது பற்றிய அளவீட்டு விவரிப்பைப் பவுல் கொடுத்தார். நாம் மரித்தவர்களாய் இருந்தோம். நாம் உலகத்தின் வழிகளைப் பின்பற்றிக் கொண்டிருந்தோம். பொல்லாத சக்திகள் நம்மைக் கட்டுப்படுத்தின. நாம் மாம்ச இச்சையை நிறைவேற்றும் செயல்களினால் பட்சிக்கப்பட்டிருந்தோம். நாம் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டிருந்தோம்.*

*யாரேனும் ஒருவர், ''ஒரு நிமிடம் பொறுங்கள், கண்ணியமான வாழ்வை வாழ்பவர்களைப் பற்றிய விஷயம் என்ன? அவர்கள் குற்றவாளி களாய் இருப்பதில்லை. அவர்கள் அருமையான அயலகத்தவர்களாய் உள்ளனர். அவர்கள் வாழ்வில் பொதுவாக குழப்பம் எதையும் விளைவிப்ப தில்லை. இந்த விவரிப்பானது அவர்களுக்குப் பொருந்துவது எவ்விதம் சாத்தியமாகக் கூடும்?'' என்று கூறலாம். இதை ஜான் மெக்ஆர்தர் தெளிவுபடுத்திய வகையை நான் விரும்புகின்றேன்:*

> *தேவனைத் தவிர எல்லா மனிதர்களும் பாவம் நிறைந்தவர்களாய் உள்ளனர் என்பது ஒவ்வொரு நபரும் சம அளவில் மோசமானவர் களாகவும் துன்மார்க்கர்களாகவும் உள்ளனர் என்பதாக அர்த்தப்படுவ தில்லை. ஒரு யுத்த களத்தில் உள்ள இருபது பிணங்கள் அழிவின்*

பல்வேறு படிநிலைகளில் இருக்கலாம், ஆனால் அவை யாவும் ஒரே சீரான வகையில் இறந்தவைகளாக உள்ளன. மரணம் என்பது தன்னை மாறுபட்ட பல வடிவங்களிலும் அளவுகளிலும் வெளிப்படுத்து கின்றது, ஆனால் மரணம் தன்னில் எந்த அளவுகோலையும் கொண்டிருப்பது இல்லை. பாவம் என்பது தன்னை மாறுபட்ட பல வடிவங்களிலும் அளவுகளிலும் வெளிப்படுத்துகின்றது, ஆனால் பாவம் தன்னில் எந்த அளவுகோலையும் கொண்டிருப்பதில்லை. எல்லா மனிதர்களும் தங்களால் எவ்வளவு இயலுமோ, அவ்வளவு பொல்லாங்குள்ளவர்களாக இருப்பதில்லை, ஆனால் எல்லாரும் தேவனுடைய பரிபூரணமான தராதரத்திற்கு அளவிடப்படுவதில் குறைவுபடுகின்றனர்.[1]

இப்பொழுது நாம் இந்த சத்தியத்தை இரண்டு நடைமுறைக் கருத்துகளினால் ஆழ்ந்து சிந்திப்போம்:

முதலாவது, இரட்சிப்புக்கான தேவை பற்றிய விழிப்புணர்வு, இழந்து போகப்பட்டிருப்பதின் அர்த்தம் என்ன என்பது பற்றிய உங்கள் புரிதலுடன் நேரடியாக உறவுபட்டுள்ளது. தேவனுடைய வல்லமையின்றி உங்களுக்கு நம்பிக்கையில்லை, மற்றும் தேவனுடைய வல்லமையானது தன்னை கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் மாத்திரமே காண்பிக்கின்றது. நீங்கள் கிறிஸ்துவைக் கொண்டிராதிருந்தால் உங்கள் வாழ்வு பற்றிய தேவனுடைய சுய விவரிப்பு 2:1-3ல் காணப்படுகிறது. நீங்கள் உயிருடன் வாழ்வதாக நீங்களே நினைத்துக் கொண்டிருக்கலாம், ஆனால் தேவனுக்கு நீங்கள் மரித்தவர்களாகவே இருக்கின்றீர்கள். உங்களில் சிலர் இளைஞர்களாய் இருக்கின்றீர்கள், நீங்கள் உங்கள் வாழ்வின் முதிர்வயது வரையிலும் தேவன் உங்களுக்குத் தேவையில்லை என்று நினைக்கின்றீர்கள். உங்களில் சிலர் தேவனுக்கு மிக அரிதாகவே இரண்டாவது சிந்தனையை அளிக்குமளவு ஒரு வேலையில் நீங்கள் மிகவும் மும்முரமாய் ஈடுபடுகின்றீர்கள். உங்களில் சிலர் தேவன் இல்லாமல் வாழும் பழக்கத்தை இப்பொழுது தான் வளர்த்துக் கொண்டுள்ளீர்கள் என்னுமளவுக்கு நீண்ட நாட்கள் வாழ்ந்திருக்கின்றீர்கள். வேதாகமத்தைக் காணுங்கள். இந்த வசனப்பகுதியைக் கண்ணோக்குங்கள். இது ஒரு கண்ணாடியாக உள்ளது. இது நீங்கள் தேவனின்றி இருந்தால் எப்படியிருப்பீர்கள் என்று காண்பிக்கிறது, இதன் மூலம் உங்களுக்கு அவர் எவ்வளவாய்த் தேவைப்படுகிறார் என்பதைக் காண்பீர்கள்.

இரண்டாவது, தேவனுக்குத் துதியின் வலிவுத் தன்மையானது, நாம் அவரின்றி இருந்த பொழுது எப்படியிருந்தோம் என்ற நமது புரிந்து கொள்ளுதலுடன் நேரடியாக உறவுபட்டுள்ளது. ஆராதனை என்பது உங்களுக்கு அலுப்பூட்டுவதாக இருந்தால், தேவன் உங்களுக்குச் செய்துள்ள வற்றை நீங்கள் புரிந்து கொண்டிருக்கவில்லை என்றே பொருளாகின்றது. துதியின் பாடல் பாடப்படும் நேரம் முழுவதிலும் நாம் ஒருக்காலும் கொட்டாவி விடலாகாது, அல்லது நாம் கர்த்தரை தொழுது கொள்ள மற்றும் வணங்க கிடைக்கும் வாய்ப்புக்களைத் தவற விடலாகாது. நாம் கர்த்தருக்காக உணர்வெழுச்சியடைந்தவர்களாய், மகிழ்வடைந்தவர் களாய், உற்சாகம் அடைந்தவர்களாய் இருக்க வேண்டியுள்ளது. ஒரு

*காலத்தில் நாம் எப்படியிருந்தோம் என்பதையும் நமது வாழ்வில் தேவன் ஏற்படுத்தியுள்ள மாறுபாடு என்ன என்பதையும் நாம் புரிந்து கொண்டிருந் தால், "அல்லேலூயா, தேவனையே ஏகமாய்த் துதியுங்கள்" என்ற பாடலை நாம் உண்மையற்ற வகையில் பாட இயலாது. "நான் மீட்கப்பட்டேன்" என்ற பாடலை நாம் சிறிதேனும் உற்சாகமோ அல்லது மகிழ்வோ இல்லாமல் எப்படிப் பாட முடியும்? தேவனின்றி இருந்த பொழுது நமது நிலை எப்படியிருந்தது என்பதை நாம் எவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்ளுகின்றோமோ, அவ்வளவு அதிகமாக நாம், நமது வாழ்வில் அவர் ஏற்படுத்தியுள்ள மாறுதல்களுக்காக அவரைத் துதிப்போம்.*

*தேவனுடைய வல்லமையற்ற நிலையில் பாவிகளின் நிலைபற்றி நாம் 2:1-3ல் அவருடைய சொந்த விவரிப்பில் இருந்து கற்கின்றோம்.*

## தேவனுடைய வல்லமையின் விளைவாகப் பாவிகளில் உண்டாகும் மாற்றத்தைத் தேவன் வெளிப்படுத்துகின்றார்

*பவுல், பாவிகளின் நிலைமையைக் காண்பித்த பிறகு, அந்த நிலையை மாற்றுவதற்குத் தேவன் செய்துள்ளது என்ன என்பதை விளக்கப் படுத்தினார்:*

> *தேவனோ, இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களா யிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபை யினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற் காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் (2:4-7).*

*சுவிசேஷமானது "தேவனோ" என்ற வார்த்தையைச் சார்ந்துள்ளது. இது, நமது அவலமான நிலையை, நமது தோல்விகள், மற்றும் பாவங்கள், நமது முரட்டுத்தனம், மற்றும் இழந்துபோன நிலை ஆகியவற்றை நமக்கு நினைவூட்டுகிறது. மேலும் இது திகைக்கச் செய்யும் தனிச்சிறப்புக் கொண்ட நேரெதிர்த்தன்மை ஒன்றையும் அறிமுகப்படுத்துகின்றது. ஆவிக்குரிய வகையிலான தோல்வியின் இறப்பு நிலைப் பின்னணிக்கு எதிராக "இரக்கத்தில் ஐசுவரியமும்," "நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பும்" கொண்ட தேவன் அங்கு தோன்றுகின்றார்.*

*பின்வரும் வினைச் சொற்கள் மற்றும் அவை விவரிக்கின்ற செயல்கள் மூலமாகத் தேவன் என்ன செய்துள்ளார் என்பதைக் கவனியுங்கள்:*

*1. அவர் "நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்." கிறிஸ்தவர் இனியும் தேவனிடமிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதில்லை. இனியும் அவர் (கிறிஸ்தவர்) மரித்தவராய் இருப்பதில்லை. இயேசுவே*

*வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் (யோவா. 14:6). அவருக்குள் ஜீவன் உள்ளது (யோவா. 1:4). இயேசுவில் நம்பிக்கை வைக்கிற எவரும் அழிந்து போகாமல் நித்திய ஜீவனை உடையவராய் இருக்கின்றார் (யோவா. 3:16).*

*2. அவர், "நம்மை அவரோடே [கிறிஸ்துவோடே] கூட எழுப்பினார்." ஒவ்வொரு நபருக்கும் இந்த எழுப்புதல் எப்பொழுது நடைபெறுகின்றது? பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:3-5).*

*நீங்கள் இழந்துபோகப்பட்டிருக்கின்றீர்கள் என்று நீங்கள் புரிந்து கொள்ளும்பொழுது, உங்கள் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்று நீங்கள் கேள்விப்படுகின்றீர்கள், அவருடைய வசனங்கள் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களின்மீது உங்கள் நம்பிக்கையை வைக்கின்றீர்கள், மற்றும் நீங்கள் உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகின்றீர்கள், பின்பு நீங்கள் கிறிஸ்துவுடன் எழுப்பப்படுகின்றீர்கள். இனியும் நீங்கள் உங்கள் பாவங்களில் மரித்தவர்களாய் இருப்பதில்லை. நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்களாய் இருக்கின்றீர்கள்.*

*3. அவர் "நம்மை ... அவரோடேகூட உட்காரவும் செய்தார்." நாம் உன்னதங்களில் கிறிஸ்துவுடன் இருக்கின்றோம். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் ஒரு புதிய குடியிருப்பில் பிரவேசித்திருக்கின்றோம். தேவனுக்குப் புறம்பே அடியெடுத்து வைத்திருக்கும் இவ்வுலகமானது இனியும் நமது இல்லமாய் இருப்பதில்லை. நாம் ஒரு புதிய சுற்றுச் சூழலில் வாழ்கின்றோம். தேவன் நமக்காகப் படைத்துள்ள சுற்றுச் சூழலில் நாம் வாழ்கின்றோம். இதைச் சாத்தியமாக்குவதற்காகவே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் நமது புதிய குடியிருப்பை அல்லது சுற்றுச் சூழலை "இராஜ்யம்" என்பதாக அடிக்கடி உரைத்தார்:*

> *"என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல ..." (யோவா. 18:36).*

> *"... உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக். 12:32).*

> *"ஆகையால், என் பிதா எனக்கு ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜனம் பண்ணி, ..." (லூக். 22:29, 30).*

*"... ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் ..." (யோவா. 3:3).*

கிறிஸ்தவர்கள், உன்னதங்களிலே கிறிஸ்துவுடன்கூட அமர்த்தப் பட்டுள்ளனர்.

தேவன் என்ன செய்துள்ளார் என்பதைப் பவுல் தேர்ந்தெடுத்த வினைச் சொற்கள் வெளிப்படுத்துகின்றன. தேவன் "நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்," கிறிஸ்துவுடனே "கூட எழுப்பினார்" மற்றும் கிறிஸ்து வுடனே "கூட உட்காரச் செய்தார்." தேவன் நமக்கு இவை யாவற்றையும் ஏன் செய்தார் என்று தொடர்ந்து நமக்குப் பவுல் கூறச் சென்றார். நாம் தேவனிடத்திலிருந்து என்றென்றைக்குமாகத் துண்டிக்கப்பட வேண்டிய நிலைக்குத் தகுதியானவர்களாய் இருக்கும்பொழுது, தேவன் ஏன் நம்மை உயிர்ப்பித்தார்?

இதற்கான பதிலானது, நமது இரட்சிப்புக்கும் அப்பால், நமது சுயாதீனத்திற்கும் அப்பால், நாம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கும் அப்பால், தேவனுடனான நமது ஐக்கியத்திற்கும் அப்பால் இவை எல்லாவற்றிற்கும் அப்பால் செல்லுகின்றது. பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக" (2:6) என்று கூறினார்.

இந்த வசனம் உறுதிப்படுத்துகின்ற விஷயத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். தேவன் நம்மை மரணத்திலிருந்து, கிறிஸ்துவுக் குள்ளான ஜீவனுக்குக் கொண்டு வந்தார், அதன் மூலம் நமக்குள் அவர் படைப்பு முழுவதற்கும் தமது கிருபையின் பரந்துபட்ட தன்மையைக் காண்பிக்க முடிவதற்காக அவர் இதைச் செய்தார். இது எருசலேமில் முதல் கிறிஸ்தவர்களுடன் தொடங்கி, பின்பு அந்தியோகியா, எபேசு, கொரிந்து மற்றும் ரோமாபுரி முதலிய இடங்களில் இருந்தவர்களுடன் தொடர்ந்தது. இது இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு அப்பாலும் இருந்த கிறிஸ்தவர் களை, கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டவர்கள் யாவரையும் வந்து அடைந்தது. நூற்றாண்டுகள் கடந்து சென்றதினூடே, தேவன் படைப்பு அனைத்திற்கும் தமது அன்பு மற்றும் கிருபை ஆகியவற்றின் தொடர்ந்த காட்சியை அளித்தார். நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவராய் இருந்தால், தேவனுடைய கிருபையின் மகத்துவத்திற்கு மாபெரும் சாட்சியத்தின் அங்கமாய் இருக்கின்றீர்கள்.

நித்திய காலங்கள் வருகின்ற பொழுது, கிறிஸ்துவுக்குள் நம்மை உயிர்ப்பிப்பதற்குத் தேவன் செய்துள்ளவை பற்றி நாம் அப்பொழுதும் அவரை மகிமைப்படுத்தி வியந்து கொண்டிருப்போம். சொல்லப் போனால், தேவனை என்றென்றைக்கும் எப்பொழுதும் துதிப்பதில் தூதர் சேனைகளும் இணைந்து கொள்ளும்.

## *முடிவுரை*

*நாம் மூன்று கேள்விகளுடன் முடிப்போம். அவற்றிற்கு நீங்களே உங்களுக்குப் பதில் அளித்துக் கொள்ள முடியும். உங்கள் பதிலின் காரணமாக நீங்கள் உங்கள் வாழ்வில் சிலவற்றை மாற்ற வேண்டியிருந்தால், உடனடியாக அதைச் செய்யுங்கள்.*

*ஆவிக்குரிய வகையில் நீங்கள் மரித்திருக்கிறீர்களா அல்லது உயிருடன் இருக்கிறீர்களா? உங்களை மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கொண்டு வந்த தேவனுக்கு உண்மையிலேயே நன்றி நிறைந்தவர்களாக உங்கள் வாழ்வை நடத்துகின்றீர்களா? உங்கள் வாழ்வை உற்றுநோக்கும் மற்றவர்கள் அதில் தேவன் செய்துள்ள தெளிவான மாற்றங்களைக் காண முடியுமா?*

*இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் எவ்வாறு பதில் அளித்தீர்கள்? நீங்கள் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் யாவை? உங்கள் வாழ்வில் தேவன் மாற்றத்தை ஏற்படுத்த வல்லமை கொண்டுள்ளார். அதை அவர் செய்ய அனுமதியுங்கள்.*

---

குறிப்பு

[1]John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), 54.

# கிருபையினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் (2:8-10)

*கட்டணங்களைச் செலுத்துவதற்காகக் காசோலைகளை எழுத அமருதல் என்பது எனக்கு பிரியமற்ற செயல்களில் ஒன்று ஆகும். வழக்கமாக, நான் கட்டணச் சீட்டுகள் யாவும் ஒரு அங்குல உயர கனம் வரும் வரையில் அவற்றை சேர்த்து வைத்து விடுவதுண்டு. பின்பு அதைச் செய்ய வேண்டிய வேளையாயிற்று என்பதை நான் அறிந்து கொள்வேன்.*

*ஆயுள் காப்பீட்டுக்கு நான் ஒவ்வொரு மாதத்திலும் பதினைந்தாம் தேதி பணம் செலுத்த வேண்டிய நாளாகும். சில வேளைகளில் நான் சரியாக பதினைந்தாம் தேதியன்று காசோலையை அனுப்பத் தவறி விடுவதுண்டு. சில வேளைகளில் அவர்களிடமிருந்து அறிவிப்பு ஒன்றை நான் பெறும் வரையில் கூட அந்தக் கட்டணத்தைச் செலுத்த நான் மறந்து விடுவது உண்டு. இருப்பினும், இந்த நிறுவனமானது தொடர்ந்து எனக்கு ஆயுள் காப்பீடு அளிக்கின்றது. அவர்கள் "முப்பது நாட்கள் சலுகை காலம்" என்று அழைக்கப்படும் காலத்தைத் தருகின்றனர். கட்டணம் செலுத்த வேண்டிய நாளில் நான் செலுத்தாமல் இருப்பினும் அதிலிருந்து முப்பது நாட்களுக்கு அவர்கள் எனக்குக் காப்பீடு அளிக்கின்றனர்.*

*அந்தச் சலுகை காலத்திற்கு நான் தகுதியுடையவனா? இல்லை, அவர்களுக்கு கட்டணத்தை நான் அனுப்பவில்லை. அவர்களே அதை எனக்கு நீட்டித்துள்ளார்கள். உண்மையில் நான் பெறத் தகுதியற்ற ஒன்றை அவர்கள் எனக்குத் தருகின்றார்கள்.*

*"கிருபை" என்பது வேதாகமத்தில் உள்ள திறவுகோல் சொற்றொடர்களில் ஒன்று ஆகும். இதற்கான எபிரெய மூல வார்த்தையானது கீழ் நோக்கி வளைதல் அல்லது குனிதல் என்ற கருத்தை உள்ளடக்குகின்றது. நிறைவாக, இது "உயர் நிலை துறந்து அளிக்கும் தயவு" அல்லது எதிர்பாராத வகையில் ஒருவருக்குத் தயவு காண்பித்தல் என்பதன் சிந்தனையை உள்ளடக்குவதற்கு வருகின்றது. ஒரு அரசன் தன் உள்ளத்தின் பெருந்தன்மையினால் மட்டுமே, ஒரு வேலைக்காரனுக்கு இரக்கச் செயல் செய்வதற்காகத் தன் வழியை விட்டுப் புறம்பே செல்லுகின்ற செயல் பற்றி நினைத்துப்பாருங்கள்.*

*மனிதரை நோக்கிய தேவ கிருபை என்பதை வேதாகமம் குறிப்பிடும் பொழுதெல்லாம், அது அந்தச் செயலை பெற்றுக் கொள்ள (மனிதனின்) தகுதியற்ற இயல்பையே வலியுறுத்துகின்றது. தேவன் நம்மீது இரக்கம்*

*காண்பித்தல் என்பது, அவரது பகுதியில் உள்ள அன்பு மற்றும் அக்கறையினாலே தானே தவிர, அதை அவர் நமக்களிக்க நாம் ஏதோ ஒரு வகையில் தகுதி பெற்றுள்ளதினால் அல்ல. கிருபை என்பது தேவன் அதை அளிப்பதென்று சுயாதீனமாய்த் தேர்ந்து கொள்ளுகின்றாரே தவிர அது அவர் நமக்குக் கொடுக்கக் கடமைப்பட்டதாக இருப்பதில்லை.*

*இயேசு "கிருபை" என்ற வார்த்தையைக் குறிப்பாகப் பயன்படுத்தினார் என்பதற்கான ஆதாரம் ஒன்றும் நாம் பெற்றிருப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? இருப்பினும் அவரது செயல்கள், அவர் கிருபையின் அர்த்தத்தை முழுமையாக அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன. கிருபையானது இயேசுவிடமிருந்து தாராளமாய் பொங்கி வழிந்தோடிற்று. அது, கானாவூர்த் திருமணத்தில், சமாரியாவின் கிணற்றண்டையில், மற்றும் கூரையின் வழியே இறக்கப்பட்ட மனிதனை இயேசு குணமாக்கிய வீட்டில் பெருக்கெடுத்து ஓடிற்று, இயேசு, ஆயக்கார ரான சகேயு, அவரது ஆடையைத் தொட வந்த பெண் மற்றும் விபசாரத்தில் பிடிபட்ட பெண் ஆகியோருக்கு கிருபையைக் காண்பித்தார்.*

*சிலுவையில் கிருபை விசேஷமாய்ப் பெருகிற்று. வேத வசனங்களை நாம் வாசிக்கையில், கொல்கொதாவில் நாம், "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று கதறிய (லூக். 23:42) நம்பிக்கை இழந்த நிலையில் மரித்துக்கொண்டிருந்த ஒரு குற்றவாளியைச் சந்திக்கின்றோம். இந்தத் திருடன் இயேசுவைப் பற்றிய முக்கியமான விஷயம் தவிர, அவரைப் பற்றிச் சிறிதளவே அறிந்திருந்தான். அவன் தனது நம்பிக்கையற்ற சொந்த சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருந் தான். இயேசு தாம் உரிமைகோரியபடியானவராகவே இருந்தார் என்றால் அவர் ஒரு மாறுபாட்டை ஏற்படுத்த முடியும் என்று அவன் உணர்ந் தறிந்தான். அது, அத்திருடன், இரக்கத்திற்காக மன்றாடியது ஏன் என்பதை விளக்கப்படுத்துகின்றது. அவன், இயேசு ஒருவர் மட்டுமே அளிக்கக் கூடிய கிருபையை நாடினான்.*

*அந்தத் திருடனுக்கும் இயேசுவுக்கும் இடையில் உரையாடல் நடந்த அந்தக் கணத்தை எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு படம் பிடித்துக் காட்ட முயற்சி செய்தார்:*

> *உதவியை உத்தரவாதப்படுத்த இம்மனிதன் என்ன செய்துள்ளான் என்பதை எனக்குக் கூறுங்கள்? இவன் தனது வாழ்வையே வீணாக்கியுள்ளான். மன்னிப்பை வேண்டுவதற்கு இவன் யார்? இவன் இயேசுவை வெளிப்படையாகப் பழித்துரைத்தவன். இந்த ஜெபத்தை ஜெபிக்க அவன் கொண்டுள்ள உரிமை யாது?*
>
> *இதை உண்மையிலேயே அறிந்து கொள்ள நீங்கள் விரும்புகின்றீர் களா? உங்களுக்காக நீங்கள் ஜெபிப்பதற்கும் இதே உரிமையைத்தான் கொண்டுள்ளீர்கள்.*
>
> *நீங்களும் நானுமே அந்தச் சிலுவையில் இருக்கிறோம் என்பதைப் பாருங்கள். நிர்வாணமாக, கைவிடப்பட்ட நிலையில், நம்பிக்கையற்ற வகையில், துன்பத்தில் அகப்பட்டு அந்நியப்பட்ட நிலையில். அது நாமே. "நான் செய்துள்ளது எதுவாயிருப்பினும், நீர் காண்பது*

என்னவாக இருப்பினும், நாம் யாவரும் இல்லம் போகும்பொழுது நீர் என்னை நினைவுகூரக்கூடிய வழி ஏதாவது உள்ளதா?" என்று கேட்பது நாமே.

நாம் மேன்மை பாராட்டுவதில்லை ...

இது நமது தகுதிக்கு அதிகமானதாக உள்ளது. ஆனால் நாம் நம்பிக்கையற்ற நிலையில் உள்ளோம். எனவே நாம் கெஞ்சுகிறோம்.[1]

பவுல் 2:8-10ல் எழுதியவற்றின் இருதயம் போன்ற மையப் பகுதியாக விளங்குவது கிருபையினாலே இரட்சிப்பு என்பதேயாகும்:

> கிருபைனயினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக் குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

இவ்வசனப் பகுதியானது கிருபையினாலே இரட்சிப்பு என்பதை உறுதிப் படுத்துகின்றது. இது பின்வருமாறு நமக்குக் கூறுகின்றது: நமது இரட்சிப்பைச் சாத்தியமாக்கும் கிருபைக்கு மகிமையை பெறத் தேவன் மட்டுமே தகுதியானவராக உள்ளார். அதுவே 2:8-10ன் அடிப்படைச் சத்தியமாக உள்ளது.

## நமது இரட்சிப்பு தேவனுடைய கிருபையின் மாபெரும் தன்மையை உயர்த்துகின்றது

வசனம் 8ஐ வாசியுங்கள், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்," மற்றும் மூன்று திறவுகோல் வார்த்தைகளைக் கவனியுங்கள். இவற்றில் முதலாவது, "கிருபை" (Gk.: *charis*) என்ற பெயர்ச் சொல்லாக உள்ளது. கிருபை என்பது அதைப் பெறத்தகுதியற்றவர்களுக்கு தேவன் நன்மை செய்தல் என்பதாக உள்ளது. நம்மில் உள்ள எதுவும் இரட்சிப்புக்கு நம்மைத் தகுதியாக்குவதில்லை. நாம் யாராய் இருக்கிறோம் என்பதும் நாம் என்ன செய்கின்றோம் என்பதும் தேவனை அவருடன் நமக்கு நித்திய வாழ்வளிக்கக் கடன்படும் நிலையில் ஒருக்காலும் வைக்க முடியாது. எந்த நற்செயலும், எந்த மதச் சடங்கும், எந்தப் பலியும், எந்த பணக் காணிக்கையும், கர்த்தருடைய நாமத்திலே செய்யப்படுகின்ற எந்த அளவு ஊழியமும்கூட தேவன் நம்மை இரட்சிக்கும்படியான நிலைப்பாட்டிற்கு வரும்படி செய்ய முடியாது.

நாம் கற்பிதம் செய்யக் கூடிய நம்புதற்கரிய சிந்தனை பின்வருமாறு: நாம் தேவனுக்கெதிராகப் பாவம் செய்திருப்பினும், தேவன் நம்மீது அன்பு கூர்ந்து, கிருபையினால் நம்மை இரட்சிக்க நாடி, பரலோகத்தில் அவருடன்

நமக்கு நித்திய ஜீவனை அளிக்க விரும்புகின்றார். தேவனுடைய இந்த திகைக்கச் செய்யும் கிருபைக்கு மேலானது எதுவும் இல்லை!

வசனம் 8ல் உள்ள இரண்டாவது திறவுகோல் வார்த்தை "இரட்சிக்கப் பட்டீர்கள்" (Gk.: *sozo*) என்பதாகும். இது செயப்பாட்டு வினைச் சொல்லாக உள்ளது. நமக்குச் செய்யப்பட்டுள்ளது என்ன என்பதை இது வலியுறுத்து கின்றது. நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளுவதில்லை. தேவன் நம்மை இரட்சிக்கின்றார். நம் சார்பாகத் தேவன் செயல்புரிகின்றார். நமது இரட்சிப்பானது நம் வாழ்வில் தேவனுடைய செயல்பாடுகளுக்குச் சாட்சியளிக்கிறது.

''இரட்சிக்கப்பட்டீர்கள்'' என்பதற்கான மூல வார்த்தையானது "மீட்கப்பட்டிருத்தல், விடுவிக்கப்பட்டிருத்தல்" என்ற கருத்தைத் தெரிவிப்ப தாக உள்ளது. தேவனுடைய கிருபை நம்மை மீட்டது. இதில் உள்ளடங் கியது என்ன என்பதை நாம் 2ம் அதிகாரத்தின் சந்தர்ப்பப் பொருளில் காண முடியும். தேவனுடைய கிருபை நமது வாழ்வில் பெருக்கெடுப்பதற்கு முன்னர், நாம் மரித்தவர்களாக - தேவனிடத்தில் இருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டவர்களாக (2:1), பிசாசின் கட்டுப்பாட்டின் கீழ் (2:2) இருந்தோம், தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளும் பாவிகள் என்ற வகையில் அழிவுக்கு உட்பட்டவர்களாயிருந்தோம் (2:3).

தேவனுடைய கிருபை நம்மை விடுவித்தது. அவரது கிருபையானது நம்மை மரணத்திலிருந்து வாழ்வுக்குக் கொண்டு வந்தது. அவரது கிருபையானது நம்மைப் பிசாசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தது. அவரது கிருபையானது நம்மை, ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்ட பாவிகள் என்ற வகையில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளுதலில் இருந்து மீட்டது. கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம்.

வசனம் 8ல் உள்ள மூன்றாவது திறவுகோல் வார்த்தை "விசுவாசம்" (Gk.: *pistis*) என்பதாகும். கிருபையினாலே நமக்கு வருகிற இரட்சிப்பானது நமது விசுவாசம் என்ற வாய்க்காலின் மூலமாக வருகின்றது. இரட்சிப்பு என்ற தேவனுடைய கிருபையுள்ள அளிப்பைப் பெறுவதற்கு நாம் விசுவாசம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். தேவன் தம் வசனங்கள் மற்றும் வாக்குத் தத்தங்கள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவர்களாய் நாம் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார், ஆனால் நமது செயல்படும் விசுவாசமானது எவ்வழியிலும் நமது இரட்சிப்பை ஈட்டுகிறது என்பதாகக் காணப்படக் கூடாது.

நான் கல்லூரியில் படித்த பாடங்கள் பலவற்றுக்கு, பேராசிரியர் ஒருவருடன் நான் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டேன். இரண்டாம் நிலை மதிப்பெண் பெற நான் இதை, இதை மற்றும் இதைச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. முதல் நிலை மதிப்பெண் பெற நான் இதை, இதை மற்றும் இதைச் செய்ய வேண்டும் என்று எனக்கு கூறப்பட்டது. செமஸ்டர் பருவ முடிவில், நான் முதல் மதிப்பெண் பெற ஒப்பந்தம் செய்திருந்து, முதல் மதிப்பெண் பெறத் தேவையான யாவற்றையும் செய்திருந்தால் ''நான் முதல் மதிப்பெண் பெறத் தகுதியானவனாக இருக்கிறேன்" என்றாகும். எனக்கு முதல் மதிப்பெண்

*தந்ததின் மூலம் பேராசியர் எனக்கு தயவு எதுவும் செய்து விடுவதில்லை. எனக்கு முதல் மதிப்பெண் தருவதில் அவர் கிருபை எதையும் காண்பிக்க வில்லை. நான் வேலையைச் செய்திருந்தால், அந்த மதிப்பெண்ணைத் தர அவர் கடமைப்பட்டுள்ளார், அதுவே ஒப்பந்தமாயிருந்தது.*

*இரட்சிப்பின் விஷயத்தில் சூழ்நிலை மாறுபாடுள்ளதாக இருக்கின்றது. தயவு செய்து இவ்விடத்தில் நீங்கள், "இரட்சிப்பின் படிகள்" என்று நாம் சில வேளைகளில் அழைக்கின்ற விஷயங்களை - கேள்விப்படுதல், விசுவாசித்தல், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், ஞானஸ்நானம் பெறுதல் என்பவற்றை - தேவனுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்துடன் குழப்பிக் கொள்ளாதீர்கள். "இந்த விஷயங்களை நான் செய்தால், இரட்சிப்புக்கு நான் தகுதியானவன்" என்று நினைக்காதீர்கள். பாவிகள் என்ற வகையில் நாம் தேவனிடத்திலிருந்து என்றென்றைக்குமாக துண்டிக்கப்படத் தகுதியானவர் களாகவே இருக்கின்றோம். கிருபையினால் மட்டுமே அவர் நமக்கு இரட்சிப்பை அளிக்கின்றார்.*

*நாம் தேவனுடைய வசனத்தை நாடும் பொழுது, நம்மை அதற்கு ஒப்புவிக்கும் பொழுது, தேவன் நிலைநிற்கும் விஷயங்களுக்கு எதிரான செயல்களில் இருந்து நாம் மனந்திரும்பி புறம்பே திரும்புகின்ற பொழுது நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையைக் காண்பிக்கின்றோம். இயேசுவே நமக்குத் தேவையான இரட்சகர் என்று நாம் அறிக்கையிடும் பொழுது, நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையைக் காண்பிக்கின்றோம். இந்தச் செயல்களில் எதுவும், எனக்கோ அல்லது உங்களுக்கோ அல்லது வேறெவருக்கோ இரட்சிப்பை ஈட்டித் தர முடியாது. பாவிகள் இரட்சிப்பை ஈட்ட முடியாது. அது தேவனுடைய கிருபையினால் மட்டுமே வருகின்றது. நமது இரட்சிப்பானது தேவனுடைய கிருபையின் மாபெரும் தன்மையை உயர்த்துகின்றது.*

## நமது இரட்சிப்பு தேவனுடைய கிருபையின் வரத்தை வெளிப்படுத்துகிறது

*மீண்டும் 2:8, 9ஐ வாசியுங்கள்: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியை களினால் உண்டானதல்ல." பவுல், விசுவாசத்தின் மூலமாக கிருபையினாலே இரட்சிப்புக்கான தம் உறுதிப்படுத்துதலைத் தகுதிப்படுத்தும் இரு கூற்றுகளினால் தொடர்ந்தார். இவ்விரண்டுமே கிருபை என்பது ஒரு வரமாக உள்ளது எவ்வாறு என்பதை முக்கியத்துவப்படுத்துகின்றன. அவர், "நாம் நாமாகவே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. தேவனே அதை நமக்கு அருளினார். இரட்சிப்பு என்பது நமது பகுதியில் நன்கு செய்யப்பட்ட பணியாக இருப்பதில்லை. இது முற்றிலும் தேவனுடைய ஈவாகவே உள்ளது."*

*அடுத்ததாகப் பவுல், நமது இரட்சிப்பு என்பது நமது கிரியைகளின்*

அடிப்படையிலானதல்ல என்பதை மீண்டும் உறுதிப் படுத்தினார். இது நமது பகுதியில் தனிச் சிறந்த சிலவற்றைச் சாதித்ததற்காக நாம் பெறுகின்ற வெகுமதியாக இருப்பதில்லை. தேவனுடைய அங்கீகாரத்தை ஈட்டுவதற் கென்று வடிவமைக்கப்பட்ட செயல்களினால் எவரொருவரும் எக்காலத் திலும் இரட்சிக்கப்பட முடியாது. பவுல், “சுயமாய்ச் சாதித்துக் கொண்ட இரட்சிப்புக்கான ஒவ்வொரு சாத்தியக் கூற்றையும்” விலக்கிப் போட்டார்.[2]

கிரியைகளினால் இரட்சிப்பு என்பதன் வீண் தன்மையைக் காண்பிக் கின்ற பழைய மத்திய கிழக்கு (நாடுகளில் வழங்கப்பட்ட) கதையொன்றை கென்ட் ஹியூகெஸ் பின்வருமாறு கூறினார்.

> ... ஒரு மனிதன் தன் கழுதையின் மீதேறி சவாரி செய்து கொண்டிருந்த பொழுது, சாலையில் ஒரு சிறிய தெளிவற்ற பொருள் கிடந்ததைக் கண்டான். கழுதையிலிருந்து இறங்கிய அவன் அப்பொருளை இன்னும் நெருக்கமாய்ச் சென்று கண்ட பொழுது, அது ஒல்லியான கால்களை வானத்தை நோக்கி நீட்டிக் கொண்டு முதுகு தரையில் படும்படி படுத்துக் கொண்டிருந்த சிட்டுக் குருவி என்று அவன் கண்டறிந்தான். முதலில் அவன், அந்தச் சிட்டுக் குருவி செத்துப் போனதென்று நினைத்தான், ஆனால் நெருங்கி ஆராய்ந்த பொழுது அது உயிருடன் இருந்ததென்பது மெய்ப்பிக்கப்பட்டது. அந்தச் சிட்டுக் குருவி உடல்நலத்துடன் உள்ளதா என்று அதனிடம் அம்மனிதன் கேட்டான். அந்தச் சிட்டுக் குருவி, “ஆம்” என்று பதில் அளித்தது. அதற்கு அம்மனிதன், “அப்படியானால், நீ உன் முதுகு தரையில் படும்படி படுத்துக் கொண்டு, கால்களை ஆகாயத்தை நோக்கி நீட்டிக் கொண்டு என்ன செய்கின்றாய்?” என்று கேட்டான். அதற்கு அந்தச் சிட்டுக் குருவி, தான் வானம் இடிந்து விழப் போவதாக வதந்தியொன்றைக் கேள்விப்பட்டதாகவும், அதனால் வானத்தைத் தாங்குவதற்காகத் தனது கால்களை மேல் நோக்கி நீட்டிக் கொண்டிருப்பதாகவும் கூறிற்று . அதற்கு அம்மனிதன், “உன்னுடைய ஒல்லியான இந்தக் கால்களைக் கொண்டு அதை (வானத்தை) தாங்கிப் பிடித்து விடலாம் என்று உறுதியாகவே நீ நினைக்கிறாயா?” என்று கேட்டான். அந்தச் சிட்டுக் குருவி பெருமிதமான பார்வையுடன், “ஒருவர் தன்னால் இயன்ற அளவு சிறப்புறச் செய்ய முடியுமே” என்று பதில் அளித்தது. அந்தச் சிறு பறவையின் சுய-(மதி) மோசமும் வீணான வேலைகளும் தெளிவானவைகளாய் இருந்தன.
>
> இதே போலத்தான், ஒரு மனிதனின் நிலையும், பறவையின் கால்கள் வானத்தை நோக்கி நீட்டியிருத்தல் அல்லது ஒரு பிணத்திற்கு ஒப்பனை செய்தல் என்பவற்றைக் காட்டிலும் அவனது செயல்கள் அதிகம் செயல் விளைவுள்ளவைகளாய் இருப்பதில்லை. எவரொரு வரும் எந்தக் காலத்திலும் கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை.[3]

நண்பரே, மேற்கூறப்பட்ட விஷயமானது, இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் மேட்டிமை கொண்டவராய், இன்னொரு நபரைக் கர்வத்துடன் நோக்கி, “அவனைக் காட்டிலும் நான் மிகவும் நீதிமானாய் இருக்கின்றேன், அவளைக் காட்டிலும் நான் சிறந்த நபராய் இருக்கிறேன். நான் மிகச் சிறந்த பெற்றோராய் இருக்கிறேன். நான் மிகச் சிறந்த ஒழுக்க நெறிகளைக்

கொண்டிருக்கிறேன். கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் நான் சீர்த்தன்மை உடையவனாய் இருக்கிறேன். நான் மிகச் சிறந்த கிறிஸ்தவனாயிருக்கிறேன்" என்று நினைப்பது அவருக்கு பொருத்தமற்றதாக இருப்பது ஏன் என்பதை விளக்கப்படுத்துகிறது.

அவ்வகையிலான ஆவிக்குரிய முரட்டு சுபாவமானது நமது இதயங் களிலும் சிந்தைகளிலும் சறுக்கிச் செல்லக் கூடும், ஆனால் இது தேவனுடைய கிருபையைப் பற்றி முழுமையும் தவறாகப் புரிந்து கொள்ளுதலைச் செயல் விளக்கப்படுத்துகின்றது. கிறிஸ்துவின் சிலுவையினருகில் நாம் யாவரும் சமமான தளத்திலேயே நிற்கின்றோம். நமது நீதியோ, நாம் எவ்வளவு நல்லவர்களாய் இருக்கிறோம் என்பதோ, பெற்றோர் அல்லது பிள்ளைகள் என்ற வகையில் நாம் எவ்வளவு அற்புதமானவர்களாய் இருக்கிறோம் என்பதோ, நமது ஒழுக்க நெறிகளோ நமது நம்பிக்கையாக இருப்பதில்லை. தேவனுடைய கிருபையுள்ள கொடையாகிய இயேசு கிறிஸ்துவே நம்முடைய ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார். இதன் விளைவாக, நம்மில் எவரும் நம்மை மேன்மைப் படுத்திக் கொள்ளவோ அல்லது பிறரைக் காட்டிலும் ஆவிக்குரிய வகையில் அதிகமானவர்கள் என்று நம்மை நிலைப் படுத்திக் கொள்ளவோ நம்மில் காரணம் எதுவும் இல்லை. பலவீனமாய்க் காணப்படுபவர்களிடமிருந்து விலகிச் செல்லும் உரிமை நம்மில் எவருக்கும் இல்லை. பிறருடைய பலவீனங்களில் அவர்களுக்கு நாம் உதவுவதும், நமது சுய பலவீனங்களுக்கு உதவியை நாடுவதும் அவசியமானதாக உள்ளது.

தேவனுடைய கிருபையின் கொடையில் அகம் மகிழவும், அவருடைய கிருபையைப் பற்றிப் பிறர் அறியவருமளவும் அவர்கள் மீது அன்புகூரவும், சக கிறிஸ்தவர்களை அன்புகூரவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சகோதரர்கள் முழுமையற்றவர்களாய் இருக்கையிலும் அவர்களை நாம் அன்புகூர வேண்டும், ஏனென்றால் நாம் யாவரும் கிருபையின் அதே கொடையைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## நமது இரட்சிப்பு தேவனுடைய கிருபையின் ஆக்கத்தன்மையைப் பெருக்கப்படுத்துகின்றது

பவுல் தொடர்ந்து, "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (2:10) என்று எழுதினார். நாம் யாராய் இருக்கிறோம் என்பதைக் கவனியுங்கள்: "தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம்." "செய்கை" என்பதற்கான *poiema* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் நாம் "poem" (கவிதை) என்ற ஆங்கில வார்த்தையைப் பெற்றுள்ளோம். இது, "ஒரு கலைப் பணி, ஒரு தலை சிறந்த படைப்பு" என்று அர்த்தப்படுகின்றது. கிறிஸ்துவுக்குள் நீங்கள் தேவனு டைய கிருபையைப் பெற்று, அவருடைய கலைப் படைப்பாகின்றீர்கள்.

மைக்கேல் ஆஞ்சலோவின் வரைபடங்களும் சிற்பங்களும் அவருடைய படைப்பாக்கத் திறமைக்குச் சான்று பகருகின்றன. ஷேக்ஸ்பியரின்

நாடகங்கள் ஒரு விற்பன்னரின் பணியைப் பற்றி நம்மை கவனிக்கத் தூண்டுகின்றன, மொசார்ட்டின் இசையானது ஒப்பிடப்பட முடியாத இசையமைப்பாளரின் ஏவுதல் பெற்ற திறமையை அறிவிக்கிறது.

பவுல், "சுற்றிலும் கண்ணோக்குங்கள் சகோதரர்களே, உங்கள் உள்ளூர் சபையில் உள்ள மக்களைக் கண்ணோக்குங்கள். அவர்களின் வாழ்வில் தேவன் ஏற்படுத்தியுள்ள மாறுபாட்டைக் கண்ணோக்குங்கள். ஒவ்வொரு வாழ்வுயிருமே தேவனுடைய படைப்பின் மேதைத் தன்மைக்குச் சான்று பகருகின்றது. அவர், சிதிலமான, உடைந்து போன, உருக்குலைந்த, தவறாய் வழிநடத்தப்பட்ட வாழ்வுகளை எடுத்து அவற்றை கலை வேலைப்பாடு களாக்குகின்றார்" என்கிறார்.

நாம் தேவனுடைய செய்கையாய் இருக்கின்றோம். கிறிஸ்தவ இளைஞர்கள் தேவனுடைய கவிதைகளாய் இருக்கின்றார்கள், அவர்கள் அவரது கிருபையை, இரக்கத்தை மற்றும் அன்பை அறிவிக்கின்றார்கள். சபையில் உள்ள பெண்கள் தேவனுடைய வரைபடங்களாய் உள்ளனர், அவர்கள் வாழ்வின் முக்கிய சாராம்சத்தை அன்றாட வாழ்வு என்ற திரையில் பிடித்து வைக்க வடிவமைக்கப்பட்டுள்ளார்கள். கிறிஸ்துவைப் பின்பற்று கின்ற ஆண்கள் இயேசுவின் சாயலைத் தங்களில் பிரதிபலிக்கும்படி தேவனால் செதுக்கப்பட்ட சிற்பங்களாய் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் ஆராதனையில் ஒன்றுகூடிப் பகிர்ந்து கொள்கின்ற பொழுது, அவர்கள் நம்மை இரட்சித்த தேவனுடைய மகிமையின் மாண்புமிக்க வீச்சு ஒன்றை தெரிவிக்கின்றார்கள்.

நாம் தேவனுடைய செய்கையாய் இருக்கின்றோம். எதற்காக? இவ்வசனத்தின் முற்பகுதியைக் கவனியுங்கள்: "ஏனெனில், நற்கிரியை களைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு ..." நம்மில் ஒவ்வொருவரும் ஊழியம் செய்வதற்காகவே இரட்சிக்கப் பட்டுள்ளோம். நற்செயல்களைச் செய்ய நீங்கள் ஒருக்காலும் மிகவும் இளையவராக இருப்பதில்லை, மற்றும் நற்செயல்களைச் செய்வதினின்று ஓய்வு பெறும் வயது என்று ஒன்றும் இருப்பதில்லை. இயேசு, "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத். 5:16) என்று கூறினார்.

நற்செயல்கள் என்பவை சபை உடைமைகளுடன் மட்டும் வரையறைப் படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்தப்படவில்லை. நற்செயல்கள் என்பவை அன்றாட வாழ்வில் - இல்லத்தில் ஒரு சகோதரன் அல்லது சகோதரி என்ற வகையில் குரலின் தொனியில், உங்களைப் பணியில் அமர்த்தியவருக்கு நீங்கள் செய்யும் வேலையின் தரத்தில், பல சரக்குக் கடையில் பட்டியலைச் சரி பார்க்கும் சிறு பெண்ணிடத்தில், நீங்கள் காண்பிக்கும் பொறுமையில், தமது சுமைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒருவரிடம் நீங்கள் அளிக்கும் உற்சாக மூட்டுதலில்—காணப்பட வேண்டியதாக உள்ளது.

நற்செயல்கள் என்பவை வாழ்வுடனும் நாம் அதை வாழும் முறையுடனும் தொடர்புடையவைகளாக உள்ளன.

# முடிவுரை

பிரென்னன் மேன்னிங் அவர்கள் *ராகாமஃபின் சுவிசேஷம்* என்ற தமது புத்தகத்தில், மருத்துவர் ஒருவரால் கூறப்பட்ட பின்வரும் கதையைப் பகிர்ந்து கொண்டார்:

> அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு வாதத்தினால் வாய் கோணிக் கொண்ட, கோமாளித் தோற்றமான முகம் கொண்ட ஒரு இளம் பெண் படுத்திருந்த படுக்கையருகில் நான் நின்றிருந்தேன். அதாவது அவளது வாயினருகே இருந்த ஒரு சதைப் பகுதியில் முக நரம்பின் ஒரு சிறு துணுக்கு, துண்டிக்கப்பட்டிருந்தது. இனி அவள் இது போன்று தான் இருப்பாள். அவளது சதையின் வளைவை அறுவைச் சிகிச்சை நிபுணர் பயபக்தியாகப் பின் தொடர்ந்தார்; அதை நான் உங்களுக்கு உறுதியாய்க் கூற முடியும். இருந்த போதிலும், அவளது கன்னத்தில் இருந்த கட்டியை அகற்றுவதற்கு அந்தச் சிறு நரம்பை நான் வெட்ட வேண்டியதாயிற்று.
>
> அவளது இளம் கணவர் அந்த அறையில் இருக்கின்றார். அவர், படுக்கைக்கு எதிர்ப்புறம் நிற்கின்றார், மற்றும் அவ்விருவரும் மணப் பொழுதின் விளக்கு வெளிச்சத்தில் என்னிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு, அந்தரங்கமாய் வாசம் செய்வதாகக் காணப்பட்டது. அவர்கள் யார்? அவரும் நான் ஏற்படுத்திய அந்த திருகு வாய் கொண்ட பெண்ணும் ஒருவர் மற்றவரை அவ்வளவு பெருந்தன்மையாக, அவ்வளவு பேராவலுடன் தொட்டுக் கொள்ளுகின்றனரே, அவர்கள் யார்? என்னையே நான் கேட்டுக் கொண்டேன். இளம் பெண் பேசுகின்றாள்.
>
> "எனது வாய் எப்பொழுதுமே இப்படித்தான் இருக்குமா?" அவள் கேட்கின்றாள்.
>
> "ஆம், அப்படியேதான் இருக்கும். நரம்பு வெட்டப்பட்டுள்ளதால் அது அப்படித் தான் உள்ளது" என்று நான் கூறுகின்றேன்.
>
> அவள் சிந்தனையில் ஆழ்ந்து அமைதியாய் இருக்கின்றாள். ஆனால் அந்த இளம் மனிதரோ புன்முறுவல் பூக்கின்றார்.
>
> அவர், "இதை நான் விரும்புகின்றேன். இது மிக நன்றாகவே உள்ளது" என்று கூறுகிறார்.
>
> அவர் யார் என்பதை உடனே நான் அறிகின்றேன். நான் புரிந்து கொண்டு என் பார்வையைத் தாழ்த்துகின்றேன். தேவனுடன் எதிர் கொள்ளுதலின் போது ஒருவர் தைரியமிக்கவராக இருப்பதில்லை. (நான் இருப்பதைக்) கருதாமல் அவர் அவளது திருகிய வாயில் முத்தமிட வளைகிறார், அவர் அவளது வாய்க்கு இசைவாய் இருப்பதற்காகத் தமது வாயை/உதடுகளை எவ்வாறு திருகிக் கொண்டார் என்பதைக் காணக் கூடிய அளவுக்கு நெருக்கமாய் இருக்கிறேன், அவர்களின் முத்தம் அப்பொழுதும் நன்றாய் உள்ளதென்று அவளுக்கு அவர் காண்பிக்க அவ்வாறு செய்தார்.[4]

சிலுவையை நினைவில் வையுங்கள். கொல்கொதாவை நினைவில் வையுங்கள். தேவன் அங்கிருந்தார்—தேவன் ஒரு மனிதராக இருந்தார் - என்பதை நினைவில் வையுங்கள். தேவன் உருச் சிதைக்கப்பட்டு,

முறுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, இரத்தம் சிந்தினார். இயேசுவில் தேவன் நமது உதடுகளுக்கேற்ப தமது உதடுகளை முறுக்கித் திருப்பினார், நமது அலங்கோலமான நற்செயல்களுக்கு மாறாக தம்முடைய கிருபையின் அடிப்படையிலேயே நம்மிடம் செயல்பட்டார்.

தேவனுடைய கிருபையின் உண்மை நிலைக்கு ஒரு கணம் உங்கள் இதயத்தைத் திறந்து காட்டுங்கள். உங்கள் விசுவாசமானது, உங்கள் வாழ்வில் தேவ கிருபை பெருக்கெடுப்பதற்கு வாய்க்காலை அளித்திருக் கிறதா? இரட்சிப்பை ஈட்டுவதற்காக இன்றி இயேசுவே உங்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார் என்பதை விளக்கப்படுத்துவதற்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா?

தேவனுடைய கிருபையைப் பற்றிய சிந்தனையானது மேட்டிமையின் குற்றத்தை உங்களுக்கு உணர்த்துகின்றதா? ஒருவேளை நீங்கள் உங்களை ஒரு மேடையின் மீது உயர்த்திக் கொண்டிருக்கலாம். நற்பண்பிலும் நீதியிலும் பிறருக்கு ஒரு படி மேலாய் இருப்பதாக உங்களையே நீங்கள் காணலாம். தேவனுடைய கிருபையின் நினைவூட்டுதல் உங்களை, தேவன் மிகவும் அவசியமாய்த் தேவைப்படுபவர்களான எல்லா மக்களாகவும் நாம் இருப்பதை மீண்டும் காணச் செய்கின்றதா? நாம் தேவனுடைய கிருபையைப் பற்றி நினைக்கையில், நீங்கள் அவ்வளவு சிக்கலானவராகவும் அவ்வளவு மேட்டிமையானவராகவும் இராதபடிக்கு உதவும்படி நீங்கள் தேவனிடம் கேட்டுக் கொள்வீர்களா?

நற்செயல்களின் மதிப்பு மற்றும் நோக்கத்தை நீங்கள் மறுபடியும் காண்பதற்குத் தேவனுடைய கிருபை உங்களுக்கு உற்சாக மூட்டுகின்றதா? நற்செயல்கள் நமக்கு எதையும் ஈட்டித் தருவதில்லை. அவைகள் நமக்கு, தேவனுடைய கிருபை யாவற்றிற்காகவும் “கர்த்தரே, உமக்கு நன்றி” என்று கூறுவதற்கான அழகு மிக்க வழியை மட்டுமே அளிக்கின்றன.

---

குறிப்புகள்

[1]Max Lucado, *He Still Moves Stones* (Dallas: Word Publishing, 1993), 196. [2]A. Skevington Wood, *Ephesians,* The Expositor’s Bible Commentary with The New International Version of the Holy Bible. gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1978), 36. [3]Kent Hughes, *Ephesians: The Mystery of the Body of Christ* (Wheaton, Ill.: Crossway Books, 1990), 84. [4]Brennan Manning, *The Ragamuffin Gospel: Embracing the Unconditional Love of God* (Sisters, Oreg.: Multnomah Books, 1990), 105-6.

# மூன்றாம் இனம்
# (2:11-18)

*ஆஸ்திரேலியாவில் பள்ளிப் பேருந்து ஒன்றை ஓட்டிய ஜான் ரீட் என்பவர் பற்றி கென்ட் ஹியூகெஸ் அவர்கள் ஒரு கதையைக் கூறியுள்ளார். அந்தப் பேருந்தில் வெள்ளையர்களும் ஆதி இனத்தவரும் ஆகிய இரு சாராரும் பயணம் செய்தார்கள். பையன்கள் தொடர்ந்து கலகம் செய்து சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியில் ஜான் தன்னால் முடிந்த அளவுக்கு அப்பையன்களிடையில் ஏற்பட்ட வாய்ச் சண்டையை கேட்டு முடித்தார். அவர் சாலையோரத்தில் பேருந்தை நிறுத்தி விட்டு வெள்ளை இனப் பையன்களிடத்தில் "உங்கள் நிறம் என்ன?" என்று கேட்டார்.*

*"வெள்ளை"*

*ஜான், "இல்லை, நீங்கள் பச்சை நிறம் கொண்டுள்ளீர்கள். இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் எல்லாப் பையன்களும் பச்சை நிறமாய் இருக்கின்றீர்கள்: இப்பொழுது உங்கள் நிறம் என்ன?" என்று கேட்டார்.*

*வெள்ளை இனப் பையன்கள், "பச்சை" என்று பதில் அளித்தார்கள்.*

*பின்பு, ஜான் ஆதி இனத்துப் பையன்களிடம், "உங்கள் நிறம் என்ன?" என்று கேட்டார்.*

*அவர்கள், "கறுப்பு" என்றார்கள்.*

*"இல்லை, நீங்கள் பச்சை நிறம் கொண்டுள்ளீர்கள். இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் எல்லாப் பையன்களும் பச்சை நிறமாய் இருக்கின்றீர்கள். இப்பொழுது உங்கள் நிறம் என்ன?"*

*ஆதி இனப் பையன்கள், "பச்சை" என்று பதில் அளித்தார்கள்.*

*அது வாய்ச் சண்டையையும் வாக்குவாதத்தையும் சற்று நேரம் முடிவுக்குக் கொண்டு வந்தது போலக் காணப்பட்டது. சாலையில் பல மைல்கள் பயணம் செய்த பிறகு, ஒரு பையன் மற்றவர்களிடம் "சரி, பேருந்தின் இந்தப் பக்கம் இளம் பச்சை நிறப் பையன்களும், அந்தப் பக்கத்தில் கரும்பச்சை நிறப் பையன்களும் இருக்கின்றோம்" என்று மற்றவர்களிடம் கூறினான். பின்பு வாக்குவாதம் மீண்டும் தொடங்கியது.*

*அவருடைய தீர்வானது முடிவைக் கொண்டு வரவில்லை என்றாலும், என்ன தேவைப்பட்டது என்பதை பேருந்து ஓட்டுனர் அறிந்திருந்தார். பேருந்தில் இருந்த சூழ்நிலையானது ஒரு புதிய இனத்தை, நிற வேறுபாடுகள் ஏற்படுத்தாத ஒரு புதிய இனத்தை - கறுப்பினத்தவர் மற்றும் வெள்ளை இனத்தவர் என்று அல்ல ஆனால் பச்சையாகவே இருக்கின்றோம் என்ற கருத்தை - அழைப்பதாயிருந்தது.[1] மக்கள் இணக்கத்துடன் வாழ்வதற்கு வித்தியாசங்கள் எதுவும் ஏற்படுத்தப்படாது இருக்க வேண்டும்.*

பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபமானது ஒரு புதிய இனம் படைக்கப் படுதல் பற்றிப் பேசுகின்றது. இது, இயேசு இப்புதிய இனத்தைப் படைப் பதற்காகவே இவ்வுலகிற்கு வந்தார் என்று அறிவிக்கின்றது.

பவுல் எபேசியருக்கு நிருபத்தை எழுதிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அலெக்சந்திரியாவின் கிளெமென்ட் என்பவர் தமது எழுத்துக்கள் ஒன்றில் இப்புதிய இனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்: "நாம் கிறிஸ்தவர்கள் என்ற மூன்றாம் இனமாக தேவனை ஒரு புதிய வழியில் ஆராதிக்கின்றோம்."[2]

கிறிஸ்தவர்கள் மூன்றாம் இனமாக இருக்கின்றனர். நாம் தேவனுடைய புதிய சமூதாயமாக, தேவனுடைய புதிய சமூகமாக இருக்கின்றோம்:

> ஆனபடியினால், முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர் களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத் திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணி யாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை களுக்கு அந்நியரும், நம்பிக்கை இல்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள், இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக் கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் (2:11-18).

இந்த வசனப் பகுதியிலிருந்து நாம் அடிப்படை உறுதிப்பாட்டின் கூற்று ஒன்றைப் பிடித்துக் கொள்ள முடியுமென்றால், அது பின்வருமாறுதான் இருக்கும்: கிறிஸ்தவர்கள், தாங்கள் மக்களின் ஒரு புதிய இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று இயேசு நோக்கம் கொண்டார்.

## நமது கடந்த காலத்தை நினைத்துப் பார்ப்பதினால் நாம் புதிய இனம் பற்றிய நமது பாராட்டுதலில் வளருகின்றோம்

நம்மில் எவரும் புதிய இனம் பற்றிய இந்தப் பேச்சினால் உணர் வெழுச்சி அடைய வேண்டியது ஏன்? இதற்கான பதிலானது வசனம்

*11 மற்றும் 12ல் காணப்படுகின்றது. பழைய வாழ்வைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கையில், புதிய இனம் பற்றிய நமது பாராட்டுதல் வளருகின்றது. புறம்பாயிருத்தல் என்ற ஒரு வார்த்தை அந்த வாழ்வை விவரிக்கின்றது. பழைய வாழ்வானது தேவனிடத்திலிருந்தும் பிற மக்களிடத்தில் இருந்தும் புறம்பாயிருத்தலைக் கொண்டிருந்தது.*

*இந்த உலகம் எல்லாருக்கும் ஒரே இடமாகவோ மற்றும் ஒரே இடத்தில் எல்லாரும் வாழும் இடமாகவோ இருப்பதில்லை அல்லவா? இவ்வுலகில் உள்ள மக்கள் ஒத்திருப்பது இல்லை. நாடுகளுக்கிடையில் சண்டைகள் நிலவுகின்றன. நமது பெருநகர்களில், கும்பல்கள் தங்கள் எல்லைப் பகுதிகளைக் குறித்துக் கொண்டு அவற்றைக் கடந்து வருபவர்களைக் கொலை செய்கின்றன. நமது இல்லங்களில் வீட்டுப் போராட்டங்கள் ஏராளமாக உள்ளன. மேல் நோக்கிச் செல்லும் விவாகரத்தின் விகிதமானது இதற்கு ஆதாரத்தைத் தருகின்றது. சபையிலும்கூட, கோடுகள் வரையப் பட்டு, மக்களில் சிலர் மற்றவர்களிடம் இருந்து பிரிக்கப்படுகின்றனர். புறம்பேயிருத்தல் என்பது நமது உலகின் பண்பாக உள்ளது.*

*இந்தப் பிரச்சனையைப் பவுல் எடுத்துரைத்தார். ஒருவர் மற்றவருடன் ஒத்துப் போவதில் மக்கள் தவறுகின்றனர் என்பது பற்றிய விஷயத்தைக் குறித்து கிறிஸ்தவமானது பாசாங்கு செய்வதில்லை. உண்மையில், பவுல் கிறிஸ்தவம் இவ்விஷயத்தைத் தலையான விஷயமாய்க் கருதி நேருக்கு நேர் சந்திப்பதாகக் கண்டார். பவுலின் நாட்களில் இருந்த உலகில் மக்களின் இரு குழுக்கள் ஒன்று மற்றதிலிருந்து முற்றிலுமாகப் புறம்பே விலகியிருந்தன: யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள். யூதர்கள் புறஜாதியாரை "விருத்தசேதன மற்றவர்கள்" என்று பட்டப் பெயரிட்டனர். ஒரு முழு இனத்தையும் ஏளனம் செய்து நகையாடுவதற்கு அவர்கள் அந்தப் பட்டப் பெயரை அர்த்தப்படுத்தினார்கள். புறஜாதியார் இவ்வளவு பேரைத் தேவன் ஏன் படைத்தார் என்று கேட்ட பொழுது, புகழ் பெற்ற ரபீ ஒருவர், "கெஹன்னாவின் (நரகத்தின்) நெருப்புக்குப் போதிய அளவுக்கு எரிபொருள் இருப்பதற்காகவே" என்று பதில் அளித்தார் என்பதாகக் கூறப்படுவதுண்டு.[3]*

*பிரசவிக்கும் ஒரு புறஜாதிப் பெண்ணுக்கு உதவி செய்து, இவ்விதமாக இன்னொரு புறஜாதிக் குழந்தையை இவ்வுலகிற்குக் கொண்டுவர உதவுதல் கூட யூதர்களுக்கு பிரமாணத்திற்கு விரோதமான விஷயமாயிருக்கும் என்ற அளவுக்கு இவ்விரு குழுக்களிடையிலும் வெறுப்புணர்வு மிகவும் வன்மை யானதாயிருந்தது. யூதன் ஒருவன் புறஜாதிப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்து கொண்டால், அந்த இழப்பானது யூதக் குடும்பத்திற்கு மரணம் போன்றதாக இருக்கும், அந்த யூதக் குடும்பம் அவனுக்கு மரணச் சடங்குகளைச் செய்யும். (புறஜாதிகளின் நாட்டிலிருந்து வரும்) ஒரு யூதன் பலஸ்தீனத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, புறஜாதியாரின் மண்ணானது பரிசுத்த நாட்டைத் தீட்டுப் படுத்தி விடாதபடிக்குத் தனது கால்களில் உள்ள தூசியைத் தட்டி விடுவதுண்டு. புறஜாதியார்மீது யூதர் கொண்டிருந்த வெறுப்பு அப்படிப்பட்டதாக இருந்தது. புறஜாதியாருக்கும் பரஸ்பரம் இதே உணர்வு இருந்தது; அவர்கள் யூதர்களை இழிவாகக் கருதினார்கள்.*

*புறஜாதியாராயிருந்து, தங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே தாங்கள் யூதர்களால் இழிவாகக் கருதப்பட்டதை அறிந்திருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதினார், ஒரு காலத்தில் இவர்களும் ஒவ்வொரு யூதனையும் வெறுத்திருந்தார்கள். புறஜாதிக் கிறிஸ்தவர்கள், யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு சாராரையும் உள்ளடக்கியிருந்த ஒரு புதிய இனத்தின் அங்கமாக இருந்தார்கள் என்று புறஜாதிக் கிறிஸ்தவர்கள் அறியும்படிக்குப் பவுல் இந்நிருபத்தை அனுப்பினார். இந்தப் புதிய இனத்திற்குள்ளாக, இனவெறுப்பு, விருப்பமின்மை, மற்றும் தவறாக நடத்துதல் யாவையும் முடிவுக்கு வர வேண்டியதாயிற்று.*

*எபேசியர் 2:11, 12 வசனங்கள், மனித இனங்களுக்கும் தேவனுக்கும் இடையிலான பிரிவினை முடிவுக்கு வருதலைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. தேவனிடத்திலிருந்து புறஜாதிகள் புறம்பேயிருத்தலின் ஐந்து மடங்கு விவரிப்பை வசனம் 12 தருகின்றது:*

*1. ''கிறிஸ்துவைச் சேராதவர்கள்.'' வரலாறு முழுவதும் தனது அர்த்தத்தையும் நோக்கத்தையும் இயேசு கிறிஸ்துவுக்குள் கண்டது என்பதைப் புறஜாதியார் அறியாதிருந்தனர்.*

*2. "இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்." ஆபிரகாமின் சந்ததியாருக்குப் பிறப்பினால் உரித்தாகியிருந்த இயல்பான குடியுரிமைகளைப் புறஜாதியார் பெறாதிருந்தனர்.*

*3. "வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்." அவர்கள் வெளியிலிருந்து உள்நோக்கி பார்ப்பவர்களாய் இருந்தனர்.*

*4. "நம்பிக்கையில்லாதவர்கள்." அவர்கள் கிறிஸ்துவைக் கொண்டிராதபடியால் நம்பிக்கையில்லாதவர்களாயிருந்தனர்.*

*5. ''தேவனற்றவர்கள்.'' அவர்கள் தேவனை அறியாதிருந்தனர். அவருடன் அவர்கள் உண்மையான உறவு கொண்டிருந்ததில்லை.*

*கிளென் ஒவென் அவர்கள் ரஷ்யாவுக்குப் பயணம் சென்றிருந்த போது, நெஞ்சைத் தொட்ட அனுபவம் ஒன்றைப் பெற்றார். கீவ் நகரில் தாம் சந்தித்த ஒரு பெண்மணியைப் பற்றி அவர் கூறினார். அப்பெண்மணி தனது கரங்களில் ஒரு வேதாகமத்தை ஏந்திக் கொண்டு, "உலகத்தின் நம்பிக்கையை நான் எனது கைகளில் ஏந்தியிருக்கின்றேன்'' என்று கிளென்னிடம் கூறினார்கள். அப்பெண்மணியின் கூற்றுக்கு அவர் தம் பதில்செயலைப் பகிர்ந்து கொண்டார்:*

> *... எனது தொண்டையில் ஒரு இறுக்கத்தோடு நான் அப்பெண் மணியைக் கண்ணோக்கினேன் ... அவளின் குரலில் ஒரு கவலை, அவளின் கண்களில் ஒரு கவலை, அவளின் இருதயத்தில் ஒரு கவலை இருந்தது. ஆனால் இந்த இனிய பெண்ணுக்குள் நம்பிக்கையின் ஆவி இருந்தது. தேவனுக்குத் தம்மைத் திறப்பவர்களின் இதயத்தில் எப்பொழுதும் எரிகின்ற சுடர் ஒன்று நொறுக்கப்பட்டிருந்த அவளது இதயத்தினுள் எரிந்து பிரகாசித்தது. அவள் வேதாகமத்தை மென்மையாகத் தடவிக் கொடுத்தபோது தனது நம்பிக்கையின் காரணத்தைப் பற்றியிருந்ததை அவள் அறிந்தாள் ...*
>
> *அவளது கதையைக் கேட்டு அவளது வேதனையைப் பகிர்ந்து*

> கொள்கையில் எங்களது கண்ணீர் அவளது கண்ணீருடன் இணைந்தது. செர்நோபில் நியூக்ளியர் விபத்தில் இருந்து வந்திருந்த கதிர் வீச்சின் விஷத்தினால் அவளது ஒரே மகன் பதினெட்டு மாதங்களுக்கு முன்னதாக இறந்து போயிருந்தான். அவளது கணவர் போதிய மருத்துவ சிகிச்சை இல்லாமல் மூன்று மாதங்களுக்கு முன்புதான் இறந்து போயிருந்தார். இப்பொழுது அவள் ஆறுதலையும் நம்பிக்கையையும் எதிர்பார்த்து வந்திருந்தாள்.
>
> ... மென்மையும் அமைதியும் கொண்ட இந்த உக்ரேனியப் பெண்மணி, தனது நம்பிக்கையானது தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் இருந்ததை அறிந்தார். அவளது அரசு அவளுக்கு (கடமையைச் செய்யத்) தவறியிருந்தது. ஒரு குறிப்பிட்ட கருத்தில் வாழ்வு அவளைத் தவற விட்டிருந்தது. அவள் மிகவும் நேசித்திருந்தவர்கள் உயிர் நீத்து விட்டிருந்தார்கள். தனிமையில் இருந்த அவள் தான் சார்ந்திருப்பதற்கு மனித ஆதாரவளம் எதுவும் அற்றவளாய் இருந்தாள். நம்பிக்கை கொண்டிருக்க அவளுக்கு இயேசுவைத் தவிர, காரணம் எதுவும் இல்லாது இருந்தது. நம்மில் எவருக்கும் அவர் தாம் ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார்.[4]

*இயேசு வருவதற்கு முன்பு நாம் யாவரும் நம்பிக்கையில்லாதவர்களாய் இருந்தோம், ஆனால் இயேசு நம் வாழ்வை முற்றிலும் திருப்பி விட்டார். இந்த நம்பிக்கையை அவர் தம்மை நோக்கித் திரும்புகிற எந்த நபருக்கும் அளிக்கின்றார். “என்ன பிரயோஜனம்?” என்று நீங்கள் திகைப்படையும் பொழுது - வாழ்வுக்கு இடமே இல்லை என்று நீங்கள் நினைக்கும் பொழுது - இயேசு உடன் வந்து ஒவ்வொன்றையும் மாற்றுகின்றார்.*

*பவுல் இதனை எவ்வாறு உறுதிப்படுத்தினார் என்பதை வசனம் 13ல் கவனியுங்கள்: “முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.” இவ்வசனப் பகுதி என்ன கூறுகிறது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள், ஏனெனில் “கிறிஸ்து இயேசுவுக்குள்” இருத்தல் என்பதுதான் எல்லா மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. கிறிஸ்து இயேசுவுக்குள் என்பது ஒரு புதிய (மக்கள்) இனத்தைப் பற்றி விவரிக்கின்றது. இது “கிறிஸ்துவின் இரத்தத்தினால்” உள்ளே கொண்டு வரப்பட்ட மக்கள் சமூகமாக உள்ளது.*

*இயேசு ஏற்படுத்தியுள்ள மாறுதல் இல்லாத நிலையில் நம் வாழ்வு எதைப் போல் இருந்திருக்கும் என்று நாம் நினைத்துப் பார்க்கும் பொழுது, நமக்கு நம்பிக்கையை அளிப்பதற்காக இயேசு செலுத்திய பலிக்காக நாம் யாவரும் தேவனுக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிக்க வேண்டும். நமது கடந்த காலத்தை நினைத்துப் பார்ப்பதன் மூலமாக நாம் புது இனம் பற்றிய பாராட்டுதலில் வளருகின்றோம்.*

## புது இனத்தில் நமது பங்கேற்புக்கு நாம் கர்த்தரிடத்தில் கடன்பட்டுள்ளோம்

*புது இனத்தில் நமது பங்கேற்புக்கு நாம் இயேசுவினிடத்தில்*

*முற்றிலுமாக, முழுமையாக மற்றும் பூரணமாகக் கடன்பட்டுள்ளோம். அவர் ஒருவர் மட்டுமே புதிய இனத்தைச் சாத்தியமுள்ளதாகச் செய்தவராய் இருக்கின்றார். இயேசு இதை எவ்வாறு செய்தார்? வசனங்கள் 15 மற்றும் 16ல் உள்ள வினைச் சொற்களை ஆராய்ந்து பாருங்கள்.*

*தொடக்கமாக, இயேசு, "சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத் தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து" மூன்றாவது இனத்தைச் சாத்தியமாக்கினார் இயேசு யூத மதத்தை நீக்கிப்போட்டார்.*

*கிறிஸ்தவம்தான் தேவனிடத்தில் சேருவதற்கான ஒரே வழியாக உள்ளது என்பதை இயேசு தெளிவாக்கினார். அவர், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" (யோவா. 14:6) என்று உரைத்தார். பேதுரு, "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) என்று கூறினார்.*

*மதத்தின் அடிப்படையில் பிறரிடமிருந்து பிரிந்து, புறம்பேயிருக்கும் நிலையைப் பூரணப்படுத்துவதற்காக இயேசு மரிக்கவில்லை. மதப் பிரிவினைக்கு ஒரு முடிவைக் கொண்டு வருவதற்காகவே அவர் மரித்தார்.*

*இயேசு இன்னும் என்ன செய்தார் என்பதைக் கவனியுங்கள். 15ம் வசனத்தின் பிற்பகுதியானது, "இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி" என்று கூறுகிறது. அவர் சிலவற்றை ஒழித்தது மட்டுமின்றி, சிலவற்றைச் சிருஷ்டிக்கவும் செய்தார். இயேசு எதைப் படைக்க நோக்கம் கொண்டார்? அவர் தமக்குள் ஒரு புதிய மனிதனைப் படைப்பதற்காக வந்தார். "புதிய" என்ற வார்த்தை முக்கியமானதாக உள்ளது. இரு கிரேக்க வார்த்தைகள் "புதிய" என்று மொழிபெயர்க்கப்படுகின்றன. Neos என்றால் காலத்தில் "புதிது" என்று அர்த்தப்படுகின்றது. ஏதேனும் ஒன்று சமீப காலத்தில் நிலவ வந்தால் அது புதியதாக உள்ளது. Kainos என்ற இன்னொரு கிரேக்க வார்த்தையானது தரத்தில் "புதியது" என்று அர்த்தப்படுகின்றது. ஏதேனும் ஒன்று முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுமளவு மாற்றப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டு நிலவுகின்றதென்றால் அது இந்தக் கருத்தில் புதியதாக உள்ளது.[5]*

*இந்த இரண்டாவது வார்த்தையைத்தான் பவுல் வசனம் 15ல் பயன்படுத்தினார். இயேசு ஒரு "புதிய மனிதனை" - முன்பு அறியப்பட்டி ராத மனித இருப்பின் பண்பை - ஒரு புதிய இனத்தை படைக்க வந்தார் என்று கிறிஸ்தவர்கள் உணர்ந்தறிய வேண்டும் என அவர் விரும்பினார்.*

*இயேசுவுடன் இணைவு கொண்டுள்ள மூன்றாவது செயல் வார்த்தை அல்லது வினைச் சொல் ஒன்று வசனம் 16 நமக்குக் கொடுக்கின்றது. இது, "ஒரே புதிய மனிதனை" படைத்ததன் மூலம் இயேசு தம் சிந்தையில் கொண்டிருந்த இலக்கு என்ன என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றது. "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று பவுல் கூறினார்.*

*இயேசு இதனைச் சிலுவையில் நிறைவேற்றினார். அவர் மூன்றாவது*

இனத்தை - ஒரே சரீரமாகிய புதிய மனுக்குலத்தை - தேவனுடன் ஒப்புரவாக்கினார். அவர் தேவனையும் மனிதனையும் திரும்பவும் ஒன்றுகூட்டினார். மேலும் இயேசு மனிதர்களைத் திரும்பவும் மனிதர்களுடன் ஒன்றுகூட்டினார்.

ஒரே ஒரு அறைகொண்ட வசிப்பிடம் ஒன்றைப் பகிர்ந்து கொண்ட திருமணமாகாத இரண்டு சகோதரிகளைப் பற்றிய கதையொன்றை இராபர்ட் லூயிஸ் ஸ்டீவென்ஸ் அவர்கள் கூறினார். கடைசியில், இறுக்கமடைந்த அந்த வாழ்விடமானது அவர்கள் ஒருவர்மீது மற்றொருவர் எரிச்சல் கொள்ளக் காரணமாயிற்று. ஒரு நாள் அவர்கள், மதத்தைப் பற்றிச் சூடாக விவாதம் செய்தனர். அவர்களின் வெறுப்புணர்வு அதிகமாய் வளர்ந்தது, அவர்கள் அந்த வாக்குவாதத்திற்குப் பிறகு ஒருவர் மற்றவருடன் ஒருக்காலும் பேசிக் கொள்ளவும் கூடாத அளவுக்கு ஒருவர் மற்றவர்மீது வெறுப்பு நிறைந்த விமர்சனங்களைக் கூறினார்கள்.

நாட்கள் மாதங்களாக வளர்ந்தன. அவர்கள் ஒருவருக்கொருவர் பேசாமலேயே அமைதியில் தொடர்ந்து வாழ்ந்தார்கள். இருவரில் எவரும் இன்னொரு வாழ்விடத்தைப் பெறக் கூடிய அளவு போதிய பணம் கொண்டிருக்கவில்லை, எனவே அவ்விருவரும் ஒரே அறையில் ஒருவருக்கொருவர் ஒருக்காலும் பேசிக் கொள்ளாமலேயே தங்கியிருந்தார்கள். அவர்கள் தங்கள் எல்லைகளைப் பிரித்துக் கொள்வதற்குத் தரையில் சுண்ணாம்புக் கோட்டை வரைந்தார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் ஒருவர் மற்றவரை வெறுத்து ஒருவர் மற்றவரிடம் ஒருக்காலும் ஒரு வார்த்தைகூட பேசாது இருந்தார்கள். இரவு நேரத்தில் அவ்விருவரும் ஒருவர் எதிரியாகி விட்ட மற்றவரின் சுவாசத்தைக் கவனிக்கும் அளவுக்கு (அமைதியுடன்) உறங்கச் சென்றார்கள். அவர்கள் தங்களின் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் பரிதபிக்கப்படத் தக்க நிலையிலேயே வாழ்ந்து வந்தார்கள்.

இது போன்ற விஷயம் இலக்கியத்தில் மட்டும்தான் நடைபெறுகிறது என்பதில்லை; உண்மை வாழ்விலும் இது போன்றது நடைபெறுகின்றது. இதை நான் சபைகளில் கூட கண்டுள்ளேன். நாம் ஒருவேளை தரையில் உண்மையில் கோடுகளை வரையாது இருக்கலாம், ஆனாலும் கோடுகள் இன்னும் அங்குள்ளன. கிறிஸ்துவின் நாமத்தை அணிந்து கொள்கின்ற மக்கள் ஒருவருக்கொருவர் சிறிதளவே ஈடுபாடுள்ளவர்களாக அல்லது ஈடுபாடே இல்லாதவர்களாக உள்ளனர். பிறரைக் காட்டிலும் ஆவிக்குரிய வகையில் மேலாயிருப்பதான உணர்வு மேலோங்கி யிருக்கின்றது.

கிறிஸ்துவின் சரீரத்தில் வெறுப்புணர்வு அல்லது பிரிவு அல்லது பிரிவினை நிலவுகின்ற பொழுது, இது இயேசு எதற்காக மரித்தாரோ அதன் ஒவ்வொரு விஷயத்திற்கும் எதிராகச் செல்லுகிறதாய் உள்ளது என்று தேவனுடைய வசனத்தின் அதிகாரத்தினுடைய அடிப்படையில் நான் உங்களுக்குக் கூற முடியும். இயேசு ஒப்புரவாக்குவதற்காக - ஒரே, புதிய, ஒன்றிக்கப்பட்ட மனுக்குலத்தை உருவாக்குவதற்காக - வந்தார்.

## முடிவுரை

மனுக்குலமானது இயேசுவுக்குப் புறம்பே குழப்பத்தில் உள்ளது. மாலைச் செய்தி, காலைச் செய்தித்தாள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் போன்றவை, நமது உலகமானது பிரிவினை, புறம்பே இருத்தல், மற்றும் வெறுப்புணர்வு ஆகியவற்றில் தனித்துவமாய்ச் செயல்படுகிறது என்று நாம் காண்பதற்குப் போதுமானவைகளாய் இருக்க வேண்டும். இயேசு இல்லாத நிலையில் இது, "ஒவ்வொரு மனிதனும் தனக்காகவே வாழ்கின்ற" உலகமாக உள்ளது.

இதற்கு நேர் மாறாக, சபையானது சமாதானத்திற்கான இடமாக இருப்பது அவசியம். கிறிஸ்து, தமது சபையானது உடைந்து போன உறவுகளைச் சீர்படுத்த ஒப்புக் கொடுக்கப்பட்ட இடமாக, ஏற்றுக் கொள்ளுதலின் இடமாக, ஒப்புரவாக்குதலின் இடமாக, புதிய இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருக்கும்படி அழைக்கின்றார்.

இதை நிறைவேற்றுவதற்கு, நாம் சில விஷயங்கள் பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தப் புதிய இனமானது இயேசுவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் பாராட்டத் தொடங்காத வரையில், நாம் கிறிஸ்தவத்தை ஒருக்காலும் புரிந்து கொள்ள மாட்டோம். கிறிஸ்தவம் வாழப்படுகின்ற இடமே கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது.

உள்ளூர் சபைக்குள்ளாக தடைகள் நிலவ அனுமதிக்கின்ற பிரச்சனை ஒன்றை நாம் காண இயலாவிட்டால், நாம் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்வதில்லை. உள்ளூர் சபை என்பது நாம் யாவரும் (நமக்குள் உள்ள பிரிவினைச்) சுண்ணாம்புக் கோடுகளை அழித்து ஊழியம் செய்யும் இடமாக இருக்க வேண்டியுள்ளது. கர்த்தருடைய உள்ளூர் சபையானது மக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், மக்களை அரவணைக்க வேண்டும், மற்றும் அது மக்கள்மீது அன்புகூர வேண்டும். சபைக்குள் உள்ள எவரொருவரும் சபைக்குப் புறம்பே ஒருக்காலும் கண்டறியப்பட முடியாததை - ஒவ்வொருவருக்கும் ஒரு இடம் உள்ள ஒவ்வொருவரும் உரியவராகின்ற நிலை உண்டு என்று நம்புகின்ற ஒரு மக்களினத்தை - அனுபவிக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]Kent Hughes, *Ephesians: The Mystery of the Body of Christ* (Wheaton, Ill.: Crossway Books, 1990), 92-93. [2]Clement of Alexandria, quoted in Hughes, 93. [3]Bob Hendren, *Chosen for Riches: A Life-Related Exposition of Ephesians* (Austin, Tex.: Journey Books, 1978), 49. [4]Glenn Owen, "Undying Spirit of Hope," *Upreach Magazine* (January-March 1994), 3. [5]*Kainos* என்பது, "காலம், அண்மை என்பதில் 'புதியதை' அல்ல ஆனால் வடிவம் மற்றும் தரம் என்பதில் 'புதியது' என்ற வழக்கமற்ற அல்லது பயன்பாட்டில் இராத 'புதியதை' குறிப்பிடுகிறது, இது பழையது என்ற நேரெதிராக்கப்பட்டுள்ளதிலிருந்து இயல்பில் மாறுபாடு கொண்டுள்ளது." *Neos* என்பது "காலத்தை பொறுத்தமட்டில்

*‘புதியதை’ குறிப்பிடுகிறது, இது அண்மைக் காலத்தியதாக உள்ளது; இது இளைய என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் அவ்வாறே மொழிபெயர்க்கப் பட்டும் உள்ளது, அதிலும் சிறப்பாக ‘மிக இளைய’ என்ற ஒப்பீட்டு அணிச் சொல்லில் இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது; neos என்பது என்ன என்பதைப் பொறுத்த மட்டில், இது தரம் மற்றும் பண்பில் பழையதின் மறு உற்பத்தியாக இருக்கலாம். Neos மற்றும் kainos ஆகியவை சில வேளைகளில் ஒரே விஷயத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றன, ஆனால் அங்கு ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டபடி ஒரு வேறு பாடுள்ளது. இவ்விதமாக, எபேசியர் 2:15ல் ‘புதிய (kainos) மனிதன்’ என்பது பண்பில் மாறுபடுகின்ற ‘புதிய மனிதன்’ என்று அர்த்தம் தருகிறது; … ஆனால் கொலே. 3:10ல் ‘புதிய (neos) மனிதன்’ என்பது சமீபத்தில் தொடங்கியதும் இன்னும் வளருகின்றதுமான விசுவாசியின் ‘புதிய’ அனுபவத்தின் உண்மையை வலியுறுத்து கின்றது.”* W. E. Vine, Merrill F. Unger, and William White, “new,” *Vine’s Expository Dictionary of Biblical Words* (Nashville, Tenn.: Thomas Nelson Publishers, 1985), 430-31.

---

## *கடந்த, நிகழ், எதிர்காலங்கள்*

*ஒரு கடந்த கால நோக்கம்:*

> *நாம் ‘‘உலகத் தோற்றத்துக்கு முன்பே’’ தேர்ந்து கொள்ளப் பட்டிருந்தோம்” (எபே. 1:4) …*

*ஒரு நிகழ் கால விருப்பம்:*

> *“… அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக” (எபே. 3:10).*

*ஒரு எதிர்காலக் காட்சிப்படுத்துதல்:*

> *“கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக” (எபே. 2:7).*

Author Unknown

# ஒரு பரிசுத்த ஆலயம் (2:19-22)

*சிங்க அரசன் என்ற திரைப்படமானது பல இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த ஒரு திரைப்படம் ஆகும். இது (வரை) வட்டாரத்தின் அரசனாயிருக்க நியமிக்கப்பட்ட சிம்பா என்ற இளம் சிங்கத்தின் கதையைக் கூறுகின்றது. ஒரு இடத்தில் சிம்பா தன்னை தனது கூறில் இருந்து வெளியே காண்கின்றது. இளம் வயதும், பக்குவமற்ற தன்மையும் கொண்ட அந்தச் சிங்கம் ஒரு புதிய இடத்தில் வாழ்வதற்காகத் தனது இல்லத்தையும், பழக்கமான வட்டாரங்களையும் விட்டு வெளியேறு கின்றது. அந்த இடத்தில் அது தான் அரசனாயிருக்கப் பிறந்ததுபோல் நடந்து கொள்ளவில்லை. அது தனது தராதரம் மற்றும் தனது கண்ணியம் ஆகியவற்றிலிருந்து மிகவும் தாழ்ந்த நிலையில் வாழ்கின்றது.*

*கிறிஸ்தவர்கள் சிம்பாவைப் போன்று இருக்கக் கூடும். நாம் கிறிஸ்தவப் பண்புக் கூறு அல்லது சுற்றுச் சூழலில் இருந்து வெளியேறி, மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கொண்டு வரப்பட்ட மக்களைப் போன்று நடந்து கொள்வதை நிறுத்தி விடக் கூடும். நாம் தேவனுடைய மக்களின் புதிய இனம் என்ற நமது உண்மை அடையாளத்தை மறந்து போய்விடக்கூடும்.*

*சிங்க அரசனான சிம்பா, தான் எப்படியிருக்கும்படி நியமிக்கப்பட்டது என்பதை மீண்டும் ஒருமுறை சற்றே காணும் வரையிலும் தனது உணர்வுக்கு வரவோ அல்லது மாறவோ இல்லை. இதே விஷயம் நமக்கும் உண்மையான தாக உள்ளது. தேவன் நம் வாழ்வில் என்ன செய்துள்ளார் என்பதையும் நமது அடைவிடம் எப்படி இருக்கும்படி அவர் நோக்கம் கொண்டுள்ளார் என்பதையும் பற்றிக்கொள்வதற்கு நாம் திரும்பவும் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகின்றது.*

*எபேசியர் 2ன் பிற்பகுதியில், அதைப் பவுல் எபேசியக் கிறிஸ்தவர் களுக்குச் செய்ய முயற்சித்தார். அவர்களுக்கு அவர் கிறிஸ்தவர்களின் வாழ்வில் தேவனுடைய கிருபையின் செயல்தாக்கம் மற்றும் தேவன் தம் மக்களிடம் விரும்பும் விஷயங்கள் ஆகியவை பற்றிய சிறு குறிப்பைக் கொடுத்தார்.*

*2:11-18ல் பவுல், நம் வாழ்வில் தேவனுடைய கிருபையின் செயல் தாக்கம் பற்றிய இந்த சத்தியத்தை ஆலோசனையாகத் தெரிவித்தார்: தேவனு டைய கிருபையானது நம்மை மனுக்குலத்தில் புதிய இனமாக ஏற்படுத்தியுள்ளது. நம்மை நாம் ஒரு காலத்தில் இருந்த நிலையிலிருந்து ஒரு சிறிது மட்டுமே மாறுபட்டவர்களாய் இருப்பதாக அல்ல ஆனால் "கிறிஸ்துவின் இரத்தத்தினால்" முற்றிலும் புதிய சமுதாய மக்களாய் இருக்கக்*

கொண்டு வரப்பட்டுள்ளவர்களாகக் காணும்படி தேவன் விரும்புகின்றார் (2:13).

பவுல் 2:19-22ல் சித்தரிப்பை மாற்றினார்: தேவனுடைய கிருபையானது நம்மை ஒரு பரிசுத்த ஆலயமாக்கியுள்ளது. உங்கள் வாழ்வானது இதை எப்பொழுதுமே காண்பிக்காமல் இருக்கலாம். எனது வாழ்வும் நிச்சயமாக எப்பொழுதும் அவ்வாறு செய்வதில்லை. சிம்பாவைப் போல் நாம் சில வேளைகளில் நமது நிலைகளை இழந்துபோய், தேவனுடைய பரிசுத்தத் துடன் கலவாத விஷயங்களில் குதித்தாடி விடுகிறோம். சிம்பா தான் சிங்க அரசனாய் இருக்கப் பிறந்தவாறு வாழத் தொடங்கு முன்னர் தான் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்தப்பட்டதைக் காண வேண்டி யிருந்தது. நாம் தேவனை கனப்படுத்துகின்ற வாழ்வை வாழ நமக்கு உதவி செய்ய பவுலின் வார்த்தைகள் அர்த்தப்படுத்தப்படுகின்றன:

> ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாரு மாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள் (2:19-22).

இவ்வசனப் பகுதியின் மையமான சத்தியம் பின்வருமாறு: தேவன் தாமே வாசம் செய்கின்ற பரிசுத்த ஆலயமாகக் கிறிஸ்தவர்கள் இருக்கும்படி தேவன் நியமித்துள்ளார்.

ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்களைப்பற்றி இதைப் புரிந்து கொள்வது அவசியமாகும். தேவன் தமக்காகக் கட்டி எழுப்புகின்ற மாபெரும் ஆலயத்தில் நீங்கள் ஒரு பாகமாக இருக்கின்றீர்கள். இந்த வசனப் பகுதியை நாம் கண்ணோக்குகையில், நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் அர்த்தப்படுத்துகின்றதை நாம் மிகச் சரியாகப் பற்றிக் கொள்ளுகின்றோம்.

## அஸ்திபாரம்

அஸ்திபாரத்தில் தொடங்கி, இந்தப் பரிசுத்த ஆலயத்தின் மூன்று சாயல்களைப் பவுல் குறிப்பிட்டார். நானும் நீங்களும் அங்கம் வகிக்கும் இந்தப் பரிசுத்த ஆலயத்திற்கு “அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்” என்பவர்கள் அஸ்திபாரமாய் இருக்கின்றார்கள். அவர்கள் - பவுல், யோவான், பேதுரு முதலியவர்கள் - யாராய் இருந்தனர் என்பது பற்றிப் பவுல் தம் சிந்தையில் அதிகம் கருத்துக் கொண்டிருந்ததில்லை, ஆனால் இந்தப் பரிசுத்த ஆலயத்திற்கு அஸ்திபாரத்தை நிலைநாட்ட அவர்கள் செய்தது என்ன என்பதைப் பற்றி அதிகம் கருத்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் தேவனுடைய சத்தியத்தை மனிதர்களுக்கு அதிகாரத்துவத்துடன் வெளிப்படுத்தினார்கள்.

முதலாம் நூற்றாண்டில், தேவன் "அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும்" நமது விசுவாசத்திற்கான அடிப்படை சத்தியங்களை வெளிப்படுத்தினார். இந்த சத்தியங்கள் நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நமது வாழ்வுக்கான நிச்சயமான ஒரே அஸ்திபாரம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற சத்தியங்களில் அஸ்திபாரமாகவே உள்ளது (2 தீமோ. 3:16, 17).

வேறு எந்த வசனங்களும் நம்மை நித்திய ஜீவனுக்கு வழிநடத்திச் செல்லாது. வேறு எந்த வசனமும் நம்மை இரட்சிக்க முடியாது. வேறு எந்த வசனமும் தேவனுடைய வழியை நமக்குக் காண்பிப்பதற்காக நிலவுவதில்லை. வேறு எந்த வசனங்களும் நம்மை தேவனுடைய பரிசுத்த ஆலயத்தின் பாகமாக மாற்றும் வல்லமை கொண்டவைகளாய் இருப்பதில்லை.

The Firm மற்றும் The Client போன்ற மிகச் சிறப்பாய் விற்பனையாகிற புதினங்களை (நாவல்) ஜான் கிரிஷ்ஹாம் என்பவர் எழுதுகின்றார். அவரது புத்தகங்கள் மக்கள் கூட்டங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன, ஆனால் அவைகள் யாரேனும் ஒருவருக்காவது நித்திய ஜீவனை தரக் கூடிய வசனங்களைக் கொண்டிருப்பதில்லை. நமது உணர்வுகளை வெளிப்படுத்தும் மிகப் புகழ்வாய்ந்த பாடல்கள் நித்திய ஜீவனுக்கான வழியைக் காண்பிப்பதில்லை. உங்கள் உள்ளூர் செய்தித் தாளின் முன் பக்கத்திலோ அல்லது குமுதம் அல்லது ராணி போன்ற பத்திரிகைகளின் அட்டை செய்திகளிலோ நீங்கள் தேவனிடத்தில் சேரும் வழியைக் காணமாட்டீர்கள். புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ''அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள்'' ஆகியோரின் வசனங்கள் மூலம் மட்டுமே நீங்கள் என்றென்றும் வாழ்வது எப்படி என்பதைக் கண்டறிய முடியும். அவர்களின் வசனங்களே தேவனுடைய ஆலயம் கட்டி எழுப்பப்படுவதற்கு அடிப்படையாய் இருக்கிற அஸ்திபாரமாக உள்ளன.

## மூலைக்கல்

தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் இரண்டாவது சாயலைப் பவுல் விவரித்தார்: மூலைக்கல். இது, "கிறிஸ்து இயேசு தாமே மூலைக்கல்லாக" (2:20ஆ) உள்ள ஆலயமாக இருக்கின்றது. வர இருந்த மேசியாவைப் பற்றிய தேவனுடைய வார்த்தையை ஏசாயாவின் புத்தகத்தில் வேதாகமம் பதிவு செய்துள்ளது: "... இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும் ..." (ஏசா. 28:16).

மூலைக்கல் என்பது கட்டிட அமைப்பில் ஒரு முக்கியமான கல்லாக உள்ளது. இது முழுக் கட்டிடமும் ஒன்று சேர்ந்திருக்கும்படி தாங்கி நிற்கின்றது. கட்டுமானப் பணியாளர்கள் அரசனைக் கனப்படுத்துவதற்காக இக்கல்லின் மீது அரசனின் பெயரை செதுக்குமளவுக்கு மூலைக்கல் தனிச்

சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இந்தச் சிறப்பான கல்லானது அஸ்திபாரத்தின் உறுதித்தன்மையையும் முழுக் கட்டிடத்தின் இயல்பையும் தீர்மானித்தது.

இயேசுவே தம்முடைய மக்களுக்கு நிலைப்படுத்தும் சக்தியாக, மூலைக்கல்லாக விளங்குகின்றார். நாம் அவருடன் தொடர்பு கொண்டு, அவரது வாழ்வுடன் நமது வாழ்வை இணைவுறுத்துகின்ற பொழுது, நாம் ஒன்றுகூடி பிணைக்கப்பட்டு, இன்னும் அதிகம் அதிகமாக தேவன் விரும்புகின்ற பரிசுத்த ஆலயம் ஆகின்றோம். துரதிஷ்டவசமாக நாம் இயேசுவைப் போலிருப்பதில் அடிக்கடி தவறிவிடுகிறோம், இதன் விளைவாக நாம் பரிசுத்த ஆலயம்போல் காணப்படுவதினின்று தவறி விடுகின்றோம்.

எடுத்துக்காட்டாக, இயேசு "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத். 19:6; மாற். 10:9) என்று கூறியுள்ள பொழுதும்கூட, கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் ஏதாவது காரணத்திற்காக விவாகரத்துச் செய்தல் என்பது மிகவும் மிகவும் அதிகமாகிக் கொண்டுள்ளது. இந்த விஷயத்தில் நாம் மூலைக்கல்லுடன் ஒன்றிணையத் தவறுகின்றோம்.

ஒரு கிறிஸ்தவ இளைஞர் இன்னொரு கிறிஸ்தவரல்லாதவருடன் மதுக் கடைக்குச் சென்று ஒரு மதுப்புட்டியைத் திறந்து பானம் பண்ணுதல் என்ற செயலை, அவரது பண்பாடற்ற கற்பனையானது அச்செயலை இயேசு செய்வார் என்று சித்தரிக்க இயலாத நிலையிலும் அவ்வாறு செய்யலாம். இயேசு நேர்மையின் மதிப்பீடுகளைப் போதித்திருந்த போதிலும், ஞாயிற்றுக் கிழமையன்று சபையில் இயேசுவைப் புகழ்ந்து பாடும் வர்த்தகர் ஒருவர் திங்கட்கிழமையன்று பணிக்குச் சென்று ஒரு வியாபாரத்தை முடிப்பதற்காகச் சத்தியத்தை வளைக்கலாம்.

நமது வாழ்வு இயேசுவின் வாழ்வுடன் ஒருமுனைப்பட்டிருக்க வேண்டும். நமது செயல்கள், சிந்தனைகள், வார்த்தைகள் அல்லது எண்ணப் போக்குகள் ஆகியவற்றில் நாம் எவ்விடத்தில் இயேசுவுடன் ஒருமுனைப் படாமல் இருக்கிறோம் என்பதைக் காண்பதற்கு நாம் யாவரும் இயேசுவை இன்னும் அதிகமாய் நெருங்கிக் கண்ணோக்க வேண்டும்.

நாம் இயேசுவை உள்ளூர் சபைகளின் மூலைக்கல்லாகவும் காண வேண்டும். நமது சபைக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தங்கள் வாழ்வை அன்றாடம் இயேசுவுடன் ஒருமுனைப் படுத்தினால் சபைக்குடும்பங்கள் பலமுள்ளவைகளாக முடியும். நாம் இயேசுவை மகிமைப்படுத்தி தேவனை ஆராதிப்பதன் மூலம் இயேசுவை நமது அக்கறையின் மையமாக மேற்கொள்வது அவசியம். நாம் மற்றவர்களைச் சுவிசேஷத்தின் மூலமாக அவருடன் தொடர்பு கொள்ளும்படி கொண்டு வரவேண்டும். இவ்வழி முறையில், சபையானது தான் எப்பொழுதும் இருந்துள்ளதைவிடப் பலம் வாய்ந்ததாக முடியும்.

## கட்டுமானக் கற்கள்

பரிசுத்த ஆலயத்தின் மூன்றாவது சாயலாக உள்ளது கட்டுமானக் கற்கள் ஆகும். அவைகள் யாவை? பவுல் இவற்றை அடையாளம் கண்டார்:

“அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்” (2:22).

எபேசியருக்கு(இந்த நிருபத்தை)ப் பவுல் எழுதிய பொழுது, யூதர்களின் ஆலயம் இன்னமும் எருசலேமில் நிலை நின்றிருந்தது. புறஜாதியார் அந்த ஆலயத்தினுள் வராமல் தவிர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அதை நெருங்கி வர முடிந்திருந்தது, ஆனால் அவர்கள் அதனுள் பிரவேசிக்க முடியாதிருந்தது. இது இன்றைய நாட்களில் ரஷ்மோர் மலையைக் காணச் செல்வது போன்றதாகும். சுற்றுலாப் பயணிகள் சற்று தூரத்தில் உள்ள நடைமேடையின் மீது நின்று மலையில் செதுக்கப்பட்டுள்ள சித்திரங் களைப் பார்வையிடுகின்றார்கள். புறஜாதியார், ஆலயத்திற்கு நெருக்கமாக மட்டுமே செல்ல முடிந்திருந்தது. குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிச் செல்லுதல் புறஜாதியாருக்குத் தடை செய்யப்பட்டிருந்தது என்பதை (ஆலயத்தின்) எல்லா இடங்களிலும் இருந்த அறிவிப்புப் பலகைகள் அறிவித்தன.

புதிய ஏற்பாட்டின் கீழ் இந்தச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. எந்த ஒரு குறிப்பிட்ட கட்டிடமும் தேவனுடைய ஆலயமாகச் செயல் படுவதில்லை. எந்த ஒரு நகரும், அந்நகர்தான் தேவனுடைய ஆலயம் அமைவு பெற வேண்டிய ஒரே நகரம் என்று உரிமைகோர முடியாது. எவரொருவரும் ஒரு வரைபடத்திலோ அல்லது உலக உருண்டையிலோ ஓரிடத்தைச் சுட்டிக்காண்பித்து, “நீங்கள் தேவனுடைய ஆலயத்தைக் காண வேண்டுமென்றால் இங்குதான் நீங்கள் செல்ல வேண்டும்” என்று கூற முடியாது.

அவ்வகையான தேவாலயம் இப்பொழுது/இனியும் நிலவுவதில்லை. தேவன் கிறிஸ்துவுக்குள் மனுக்குலத்தின் ஒரு புதிய இனத்தைப் படைத்தது போன்றே, அவர் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஆலயத்தையும் கட்டியெழுப்பி யிருக்கின்றார். கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒவ்வொரு நபரும் இம்மாபெரும் ஆலயத்தின் கட்டுமானக் கற்களில் ஒன்றாக ஆகின்றார்.

சில நாட்களுக்கு முன்பு வாஷிங்டன் D.C.யில் நடந்த ஒரு கொண்டாட்டம் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை நான் கண்டேன். அது அமெரிக்காவுக்கு ஒரு இசைப் பாராட்டு நிகழ்ச்சியாக இருந்தது. அந்த ஒளிப்பரப்பானது, அந்நகரில் அமைந்திருந்த வெள்ளை மாளிகை, வாஷிங்டன் நினைவுச் சின்னம், ஜெஃபர்ஸன் நினைவிடம், மற்றும் லிங்கன் நினைவிடம் உட்படக் கம்பீரமான கட்டிடங்கள் சிலவற்றைக் காண்பித்தது.

அந்தக் கட்டிடங்கள் ஒன்றாகத் தூக்கியெறிந்து விடப்படவில்லை. அவைகள் மதிப்பையும் மரியாதையையும் ஊட்டக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கட்டிடக் கலையின் வகையொன்றைப் பிரதிநிதித்து வப்படுத்தின. லிங்கன் நினைவிடத்தினுள்ளே நான் சில விளையாட்டுகள் விளையாடலாம் என்று கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாது. இவ்வகையான கட்டிடங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் விஷயங்களினி மித்தமாக இவைகளில் சில செயல்கள் செய்யலாகாது.

உள்ளூர் சபைக்குழுமங்கள் ஆராதிக்க ஒன்றுகூடிவரும் கட்டிடமானது

*தேவனுடைய ஆலயமல்ல. இருந்தாலும், சபையார் ஆராதிக்கக் கூடுகின்ற பொழுது, தேவனுடைய ஆலயம் அங்குள்ளது. தேவனுடைய மக்கள் அங்குள்ள காரணத்தினால் அது (ஆலயம்) அங்குள்ளது. தேவனுடைய மக்களே தேவனுடைய ஆலயத்தை ஏற்படுத்துகின்றனர் (அல்லது) தேவனுடைய மக்களே தேவனுடைய ஆலயமாக உள்ளனர்.*

*தேவன் தமது ஆலயத்தை ஒன்றுகூட்டி வெறுமனே எறிந்து விட்டிருப்பதில்லை. நீங்கள் அவரது ஆலயத்தின் அங்கமாய் இருப்பதற்கு உங்களை அதில் பொருத்தி, வடிவமைத்து, தயார் படுத்துவதற்காக அவர் தம்முடைய குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்தார்.*

*தேவனுடைய ஆலயத்தைக் காண்பதற்கு மக்கள் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். இன்றைய நாட்களில் தேவனைக் கனப் படுத்துகின்ற ஆலயத்தைக் காண மக்கள் எங்கு செல்லுகின்றார்கள்? அவர்கள் காணக் கூடிய ஒரே ஆலயமாய் இருப்பது கிறிஸ்தவர்கள் மட்டுமே. கிறிஸ்துவுக்கு உரியவர்களில் அவர்கள் (மக்கள்) காண்கின்றவைகளே தேவனுக்கான மகிமைக்கென்று அவர்கள் கொண்டுள்ள சிறு துணுக்காக உள்ளது!*

*அவர்கள் காண்கின்றது என்ன? சபை என்ற வகையில் நாம் தேவனைப் பற்றி அவர்களுக்குக் கூறுவது என்ன? அவர்கள் நம்மில் அவருடைய அன்பை, அவருடைய இரக்கத்தை, அவருடைய பராமரிப்பை/ அக்கறையை, அவருடைய பரிசுத்தத்தை மற்றும் அவருடைய பொறுமையைக் காண்கின்றார்களா? அவர்கள் நம் மூலமாக உண்மையிலேயே தேவன் பொருட்படுத்துகின்ற விஷயங்களைக் காண்கின்றார்களா?*

*மக்கள் தேவனுடைய ஆலயத்தை எதிர்கொள்ளும் பொழுது அவர்கள் எதைக் காண்கின்றனர்? கிறிஸ்தவர்கள் (தேவனுடைய ஆலயத்தின்) கட்டுமானக் கற்களாய் இருக்கின்றார்கள். தேவன் இவ்வுலகில் கொண்டுள்ள ஒரே ஆலயத்தில் நீங்களும் நானும் அங்கம் வகிக்கின்றோம். இந்த ஆலயம் எவ்வகைப்பட்டதாக உள்ளது?*

## முடிவுரை

*சிங்க அரசனான  சிம்பா தனது வாழ்வில், தனது அடைவிடத்தைத் தானே மறந்து போன ஒரு காலகட்டத்தினூடே சென்றது. அது ஒரு அரசனாயிருக்கப் பிறந்தது என்று அதற்கு நினைவூட்ட வேண்டியதாயிருந்தது.*

*பவுல் 2:19-22ல், "தேவனுடைய ஆலயமாயிருப்பதே உங்கள் அடைவிடமாக உள்ளது. தேவன் கற்களாலும், சிமென்ட்கலவையாலும் மற்றும் மரத்தினாலும் ஆன ஆலயம் ஒன்றை விரும்புவதில்லை. ஒரு வரைபடத்தில் நீங்கள் காட்டக் கூடிய ஒரு கோயிலில் வசித்தல் என்பது அவருடைய விருப்பமல்ல. அவர் தம்முடைய மக்களின் இருதயங்களில் வசிக்க விரும்புகின்றார். அவர் மாற்றப்பட்டுள்ள வாழ்வுகளில் தம்முடைய மகிமையைக் காட்சிப்படுத்த விரும்புகின்றார். அவர் தாம் உண்மையில் யார் என்பதை மக்கள் காணும்படி விரும்புகின்றார்" என்று கூறுகின்றார்.*

*தேவன் தம்முடைய மக்களில் வாசம் பண்ணுவதை நம்மில் மக்கள்*

*காண முடியுமா? மக்கள் தேவனை மகிமைப்படுத்தும்படி விருப்பமுள்ளவர்களாவதற்குரிய போதிய நற்பண்புகளை உங்கள் பகுதியில் கூடிவருகிற உள்ளூர் சபையில் காண்கின்றார்களா?*

*இந்த வாரத்தில் உங்கள் வாழ்வை மாறுபட்ட ஒரு ஒளியில் கண்ணோக்குங்கள். நீங்கள் வெறுமனே பிழைப்புக்காக உழைப்பவராகவோ, ஒரு குடும்ப நிர்வாகியாகவோ, பள்ளி செல்லுபவராகவோ, கடைக்குச் செல்பவராகவோ, விளையாடுபவராகவோ அல்லது முதலீடு செய்பவராகவோ இருப்பதில்லை. நீங்கள் தேவனுடன் இணைந்து மக்களை இயேசுவுடன் தொடர்பு கொள்ளக் கொண்டு வந்து சேர்க்கும் ஊழியம் செய்கின்றீர்கள். இந்த வாரத்தில் நீங்கள் சந்திக்கும் மக்கள் ஒவ்வொருவரும் தேவன் தமது பரிசுத்த ஆலயத்தில் பொருத்துவதற்கு விரும்பும் நபராக இருக்கின்றார். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவர் (தேவன்) தம் இருதயத்தில் ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கின்றார்.*

*நீங்கள் யாராயிருக்கின்றீர்கள் என்பதை மறந்து விட வேண்டாம். மக்கள் எப்பொழுதாவது தேவனுடைய பரிசுத்த ஆலயத்தின் மகிமையை காண வேண்டுமென்றால் அது உங்களிலும் என்னிலுமாகத்தான் இருக்கும்.*

# சபைக்கு ஒப்புக்கொடுத்தல் (3:1-13)

*பல ஆண்டுகளுக்கு முன்பு நான் டெக்ஸாஸில் உள்ள மார்பிள் ஃபால்ஸ் என்ற இடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், நான் அறிந்தவர்களிலேயே அதிகம் ஒப்புக்கொடுத்தல் தன்மையுடைய கோல்ஃப் விளையாட்டாளர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அன்றாடம் அவர் கோல்ஃபின் பதினெட்டுத் துளைகளில் விளையாடும் பழக்கம் கொண்டிருந்தார். அவர் ஒவ்வொரு நாளிலும் பல மணி நேரங்களைப் பயிற்சிக்குச் செலவிட்டார். அவர் தமது விளையாட்டின் குறிப்பிட்ட சில அம்சங்களைக் குறி வைத்து தமது பயிற்சியைக் கவனமாய்த் திட்டமிட்டார். ஒரு நாள் அவர் தமது நிற்கும் தோரணை குறித்துச் செயலாற்றுவார். இன்னொரு நாள் அவர் சுமார் இருநூறு பயிற்சி அடிகளை மேற்கொள்வார். அவர் கோல்ஃப் விளையாட்டுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தவாயிருந்தார்.*

*நான் மார்பிள் ஃபால்ஸில் சந்தித்த இந்த மனிதர் பயணம் செய்கின்ற விளையாட்டு வித்தகரமான டாம் கைட் என்றவர் என்பதைப் பல மக்கள் அறிவார்கள். அவர் இருபதாண்டுகளுக்கும் மேலாக தொழில் ரீதியாக கோல்ஃப் விளையாட்டுப் போட்டிகளில் விளையாடியிருக்கின்றார். இவர் எல்லா வேளைகளிலும் முன்னோடியான ரொக்கப் பரிசு வெற்றியாளரா யிருந்து, தனது உழைப்புகளைக் காண்பிக்க ரூபாய் 36 கோடிகளுக்கு மேல் வெற்றிப் பரிசாகப் பெற்றுள்ளார். அவரது வெற்றிகளில் பெரும்பங்கு விளையாட்டுக்கு அவர் தம் ஒப்புக்கொடுத்த தன்மையையே சார்ந்துள்ளது.*

*மக்கள் தாங்கள் உண்மையிலேயே மதிப்பளிக்கின்ற விஷயங்களுக்குத் தங்களையே ஒப்புக்கொடுக்கின்றனர். அது குடும்பமாகவோ, பணி யாகவோ, பொழுது போக்குகளாகவோ அல்லது கைத் தொழில்களாகவோ இருக்கக் கூடும். சிலர், காரணங்கள், குடிமை நிறுவனங்கள், அல்லது அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கு ஒப்புக்கொடுத்தலைக் காண்பிக்கின்ற னர். எதுவாயிருப்பினும், நமது ஒப்புக்கொடுத்தலானது அது நமக்கு எவ்வளவாக அர்த்தப்படுகிறது என்பதைப் பிரதிபலிக்கின்றது.*

*இந்தக் கொள்கையானது கிறிஸ்தவர்களுக்கு மற்றும் உள்ளூர் சபைகளுடன் அவர்களின் உறவுமுறைகளுக்கும் கூட உண்மையானதாக உள்ளது. சபைக்கு நமது ஒப்புக்கொடுத்தலானது சபையின் மதிப்பீடுகள் பற்றிய நமது சுய ஆலோசனையை பிரதிபலிக்கின்றது.*

*உள்ளூர் சபையானது உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த*

தாக உள்ளதா? நாமகரணக் கூட்டங்களின் மத்தியில் எண்ணற்ற பாடங்களை நடத்தியுள்ள ஜார்ஜ் பர்னா அவர்கள் சமீபத்தில், "உள்ளூர் சபையின் அங்கமாயிருத்தல் என்பது மக்களுக்கு தேவனுடன் நெருங்கிய உறவு கொண்டிருத்தல் பற்றிய எதிர்பார்ப்பைக் காட்டிலும் குறைந்த அளவே ஈர்ப்புடையதாக உள்ளது" என்று அறிக்கை தந்துள்ளார்.[1] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மக்கள் இன்றைய நாட்களில் தங்கள் வாழ்வில் தேவன் இருக்கும்படி நோக்கம் கொள்கின்றனர், ஆனால் அவர்கள் தங்கள் உள்ளூர் சபைகளில் துடிப்புடன் இருக்க விருப்பம் கொண்டிருப்பதில்லை. பர்னா அவர்களின் ஆய்வானது, வயது வந்தோர்களில் ஏறக்குறைய பாதிப் பேர் ஒரு உள்ளூர் சபையின் உள்ளார்ந்த அங்கமாய் இருக்க விருப்பம் கொண்டிருப்பதில்லை என்று வெளிப்படுத்திற்று.

இந்தப் புள்ளியியல் விவரமானது இதற்கு முன் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கொள்கையைப் பிரதிபலிக்கிறது. சபைக்கு ஒப்புவிக்கப்படும் நேரம், சக்தி மற்றும் பணம் ஆகியவை சபையின் மதிப்பு பற்றிய நமது சுய மதிப்பீட்டை பிரதிபலிக்கின்றன.

இது, நமது வேத வசனப் பகுதி ஏன் இவ்வளவு இந்நாளுக்குரியதாக உள்ளதென்பதை விளக்கப்படுத்துகின்றது. அதிகாரம் 3ல் பவுல் சபையை நாம் எவ்விதம் கண்ணோக்குகிறோம் என்பதை நமக்கு முக்கியத்துவப் படுத்தக் கூடிய வகையில் சபையைக் குறித்ததான ஒரு வெளிப்படுத்துதலை வழங்கினார். அவரது வார்த்தைகள் கர்த்தருடைய சபைக்கான நமது ஒப்புக் கொடுத்தலைப் பற்றி நம்மைச் சிந்திக்க வைக்க வேண்டும்.

## சபையின் இயல்பைப் பற்றிப் புரிந்து கொள்ளுவதினால் நாம் சபைக்கான நமது ஒப்புக்கொடுத்தலைப் பெருக்கிக் கொள்ளுகிறோம்

பவுல் 3:1ல், ஒரு ஜெபத்தைத் தொடங்கினார், ஆனால் பின்பு அவர் பக்க வழியாய்க் கடந்து சென்றார். வசனம் 14 வரையிலும் அந்த ஜெபம் மீண்டும் தொடங்கப்படாது உள்ளது. இருப்பினும் வசனங்கள் 1 மற்றும் 14 ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வார்த்தைகள், சபை என்றால் என்ன என்பதை நாம் இன்னும் தெளிவாய்க் காண நமக்கு உதவுகின்றன. முதலாவது பவுல் சபையின் இயல்பைப் பற்றி எபேசியர்களுக்கு மீண்டும் நினைவூட்டினார்:

> இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன். உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வ கிருபைக்குரிய நியமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே; அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள்

அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களிலே மனு புத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை (3:1-6).

சபையை ஒரு "இரகசியம்" என்ற வகையில் பவுல் விவரித்தார். ஒரு இரகசியம் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கும் பொழுது, அநேகமாக நாம் மர்மக் கதை எழுத்தாளரான இராஜேஷ் குமார் பற்றியோ அல்லது சி.ஐ.டி. ஆபிஸர், சுராக் போன்ற தொலைக்காட்சித் தொடர்களையோ நினைப்போம். இரகசியம் என்ற வார்த்தையை நாம் இரகசியமான, அறியப்படாத அல்லது தீர்த்து வைக்கப்படாத விஷயங்களுடன் இணைவு படுத்துகின்றோம்.

பவுல் பயன்படுத்திய மொழிநடையில், "இரகசியம்" (Gk.: *musterion*) என்ற வார்த்தை வேறொன்றை அர்த்தப்படுத்தியது. இது மனிதர்கள் தங்கள் சுயத்தில் கண்டறிய முடியாத, ஆனால் தேவன் வெளிப்படுத்தினால் மட்டுமே அவர்களால் அறியக்கூடிய சத்தியத்தை குறிப்பிட்டது. இப்படிப்பட்ட சத்தியங்களைத் தேவன் வெளிப்படுத்தாமல் இருந்தால் அவற்றை எவரொருவரும் எந்தக் காலத்திலும் அறிந்திருக்க முடியாது.

சமீபத்தில், உலகம் முழுவதிலும் உள்ள வானவியல் அறிஞர்கள், வியாழன் கிரகத்தின் மேற்பரப்பின்மீது ஒரு வால் வீண்மீனின் பெரிய துண்டுகள் மோதியதை சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளின் மூலம் உற்று நோக்கியுள்ளனர். முந்திய தலைமுறையினர் தவற விட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியை மனித குலம் காண்பதற்கு அறிவியல் முன்னேற்றங்களின் காரணமாக, தொலை தூர கிரகங்கள் பற்றி முன்பு அறியப்படாதிருந்த உண்மைகளை அடைய அறிவியல் அறிஞர்களுக்கு இன்று வழி கிடைத்துள்ளது.

இருப்பினும் பவுல், நாம் நமது சுயமாக எப்பொழுதும் கண்டறிய முடியாத, நமது திறனுக்கு அப்பாற்பட்ட அறிவைத் தமது சிந்தையில் கொண்டிருப்பார். நாம் மனித இனத்தின் வரலாற்றில் - அரிஸ்டாட்டில், பிளேட்டோ, டாவின்ஸி, ஐன்ஸ்டிந் மற்றும் பிறர் போன்றவர்களின் - மாபெரும் சிந்தைகளை ஒன்றுகூட்டிக் கொண்டு வந்தாலும் கூட, அவைகள் கிறிஸ்துவின் இரகசியத்தைக் கண்டறியவோ அல்லது விரிவாக்கவோ இயலாதிருக்கும். வெளிப்படுத்துதலினால் அறியப்படுத்துதல் என்பதைத் தேவன் தேர்ந்துகொள்ளும்போது மட்டுமே இந்த இரகசியம் அறியப்படுத்தப்பட முடியும்.

இந்த இரகசியம் என்ன? எல்லா விஷயங்களிலும் இது சபையைப் பற்றியதாக உள்ளது, மற்றும் சபையின் இயல்பு "முன் ஒருபொழுதும் கற்பனை செய்யப்படாததாக" உள்ளது. பவுல் மூன்று விவரங்களைக்

குறிப்பிட்டார்:

1. சபையில், "இஸ்ரவேலருடன் புறஜாதியார் உடன் சுதந்தரராய் இருக்கின்றனர்." ஒரு குழு அல்லது ஒரு வகை சார்ந்த மக்களுக்கென்று தேவன் தம்முடைய சபையை ஒதுக்கி வைப்பதில்லை. எல்லாரும் அதில் பங்கேற்கும்படி அவர் அழைப்பு விடுக்கின்றார்.

2. சபையில், மக்கள் "ஒரே சரீரத்திற்குள்ளானவர்களாய்" (அ) "சரீரத்தின் சக உறுப்புக்களாய்" இருக்கின்றனர். சபையில் நாம் கிறிஸ்துவுடன் இணைந்துள்ளோம் மற்றும் இங்கு மக்களைப் பிரிக்கின்ற மதில்கள் யாவும் இடித்துக் கீழே தள்ளப்படுகின்றன.

3. சபையில், மக்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு உடன் பங்காளிகளாகின்றனர்." முற்றிலும் மாறான சில காரியங்கள் சபையில் நடக்கின்றன. தேவனுடைய வாக்குத்தத்தத்தை எல்லா மக்களும் சமமாய்ப் பங்கிட்டுக் கொள்கின்றனர். சபையில் மேல், நடு அல்லது கீழ் வகுப்பென்று எதுவும் நிலவுவதில்லை. கிறிஸ்துவுக்குள் இருக்கிற எவரொருவரும் எந்த ஒரு வாக்குத்தத்தத்தையும் தவற விடுவதில்லை. இங்கு முதல் தர அல்லது இரண்டாம் தரக் குடிமகன் என்று யாரும் இருப்பதில்லை.

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு இனத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு நகரிலும் வகுப்பு வாதப் பிரிவினை உள்ள நிலை என்பது இருக்கையில் நாம் இதை அறிந்துள்ள நிலையில் இவ்வுலகில் இருந்து எவ்வளவாய்ப் பிரிந்து நிற்கின்றோம்! இவ்வுலகில், சலுகை பெற்றவர்களும் சலுகை பெறாதவர்களும், விரும்பத் தக்கவர்களும் விரும்பத் தகாதவர்களும், புகழ் பெற்றவர்களும், புகழ் அற்றவர்களும், விரும்பப்படுகிறவர்களும், விரும்பப்படாதவர்களும் உள்ளனர். இதுவே நமது இவ்வுலகமாய் உள்ளது.

"சபைக்குள் அவ்வாறு இருப்பதில்லை" என்று பவுல் கூறினார். தேவன் புதியதொரு மனுக்குலத்தைப் படைத்துள்ளார். எல்லாரும் சலுகை பெற்றுள்ளனர். எல்லாரும் சார்ந்துள்ளனர். எல்லாரும் ஒரு இடம் பெற்றுள்ளனர். எல்லாரும் தேவனுக்கு விசேஷித்தவர்களாகவும் விலைமதிப்புள்ளவர்களாகவும் இருக்கிறோம்.

இது போன்ற ஒரு விஷயத்தைத் தேவன் மட்டுமே நிறைவேற்ற முடிந்திருந்தது. தேவன் ஒருவர் மட்டுமே எல்லா வகையான மக்களையும் ஒரே சரீரத்திற்குள் ஒன்றுகூட்டிக் கொண்டு வர முடிந்தது. அன்புகூரவும் ஒருவர் பிறருக்கு ஊழியம் செய்யவும் (தடை செய்கின்ற) சுயநலம், பகைமை மற்றும் தப்பெண்ணம் ஆகியவற்றினால் சூழப்பட்டு வளர்ந்துள்ள மக்களுக்கு தேவனால் மட்டுமே போதிக்க முடிந்தது. அதுதான் இரகசியமாக உள்ளது. அதுவே சபையாக உள்ளது.

கர்த்தருடைய சபையின் எழில்மிக்க தனிச்சிறந்த இயல்பைப் புரிந்துகொள்ளுவதினால் நாம் அதற்கு (சபைக்கு) நமது ஒப்புக்கொடுத்தலில் வளருகின்றோம்.

# சபையின் செயல்பாட்டை உற்றுநோக்குவதினால் நாம் சபைக்கான நமது ஒப்புக்கொடுத்தலைப் பெருக்கிக் கொள்ளுகிறோம்

*சபையின் இரகசியம் பற்றிப் பவுல், 3:7-10ல் கூறியதைக் கவனியுங்கள்:*

> *தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக் காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக் குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ...*

*சபையின் செயல்பாடு என்னவாக உள்ளது? அது சுவிசேஷத்தை அறிவிப்பதில் தேவனுடனான நமது பங்கேற்பு என்பதேயாகும் என்று பவுல் கூறினார். செய்தி அறிவிப்புத் தொடர்பின் சுழற்சி என்னவாகிறது என்பதைக் காண்பதற்கு அவருடைய வசனங்கள் நமக்கு உதவுகின்றன.*

*சபை தொடக்கம் பெற்ற வேளையில் தேவன் விசேஷித்த செய்தியாளர்களுக்கு சுவிசேஷத்தின் நேரடியான வெளிப்படுத்துதலைக் கொடுத்தார். இந்த நோக்கத்திற்காகப் பவுலும் பிற அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டனர். பவுல் தம்மை, "தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்த சுவிசேஷத்துக்கு ஊழியக்காரானா னேன்" (3:7) என்பதாகக் கண்டார். பவுலின் செய்தியானது அவரிடத்தில் தொடங்கவில்லை. அது தேவனிடத்திலிருந்து அவருக்கு வந்தது. சபை வளர்ச்சியின் ஆரம்ப நிலைகளின்போது தேவனிடத்திலிருந்து வெளிப் படுத்துதல்களைப் பெற்றுக் கொண்ட விசேஷ செய்தியாளர்களில் ஒருவராகப் பவுல் இருக்கும்படி தேவன் அவரைத் தேர்ந்து கொண்டார்.*

*தேவனிடத்திலிருந்து விசேஷித்த வெளிப்படுத்துதல்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பிறருக்குச் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். பவுல் பிறருக்குச் சுவிசேஷத்தை வாய்மொழியாகவே அறிவித்தார். அவரைத் தேவன், "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் ... அறிவிக்கிறதற்காக"(வ. 8)ப் பயன்படுத்தினார். மனித இனத்திற்குச் செய்தியை எடுத்துரைக்கத் தேவன் மனிதர்களையே பயன்படுத்தினார். அதுவே தேவனுடைய திட்டமாக நிலைத்து நிற்கின்றது.*

*தேவன் சுவிசேஷத்தை வான தூதர்களுக்குச் செயல்விளக்கப் படுத்துகின்றார். "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்*

*களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" (வ. 10). சபையானது மனுக் குலத்தின் முற்றிலும் புதிய இனமாக உள்ளது. இதைப் போன்றதொன்று இதற்கு முன் ஒருக்காலும் நிலவியதில்லை. இந்தப் புதிய இனத்தின் - வாழ்வின் ஒவ்வொரு வகையான நடையிலிருந்தும் கிறிஸ்துவுக்குள் ஒன்றுகூட்டிக் கொண்டு வரப்பட்ட மக்களின் - மூலமாகத் தேவன் வான தூதர்களின் சேனைக்கு ஒரு தெய்வீக நாடகத்தை அளிக்கின்றார்.*

*சபையின் வலிமை மற்றும் வனப்பு ஆகியவற்றை நாம் உணர்ந்தறியத் தவறுமளவுக்கு அது நமக்கு அதிகம் பழக்கமானதாக உள்ளது. நாம் தெய்வீக நாடகத்தையும் தேவனுடைய இயக்கத்தையும் தவற விட்டு விடுகின்றோம். ஞாயிற்றுக் கிழமையன்று வேதாகம வகுப்பிற்கு இன்னொரு பிள்ளையை அழைத்துக் கொண்டு வரும் ஒவ்வொரு வேளையிலும் தூதர்கள் உணர்வெழுச்சியடைகின்றார்கள். உங்கள் குடும்பமானது தேவனை ஆராதிப்பதற்குப் பிறருடன் சேர்ந்து கொள்ளும் பொழுது தூதர்கள் அகம் மகிழ்கின்றனர். இது எல்லாவற்றையும் நாம் சாதாரணமான விஷயமாகக் கண்ணோக்குகின்றோம். நமக்கு இது சபை வாழ்வின் இன்னொரு பாகமாகவே உள்ளது. இருப்பினும், தேவனை மகிமைப்படுத்துகின்ற வகையில் சபை செய்கின்ற எதுவும் சாதாரணமாகவோ, எளியதாகவோ அல்லது அசதியானதாகவோ இருப்பதில்லை. உண்மையில், இது தேவன் தமது சபையின் மூலமாக மக்களுடன் செயல்படுகின்றவைகள் என்ன என்பதைத் தூதர்கள் போதிய அளவு கவனிக்க முடியாதபடிக்கு மிகவும் வசீகரம் உடையதாகும்.*

*தேவன் நம்மை ஒரு அங்கமாக்கியுள்ள தெய்வீக நாடகத்தின் ஒரு சிறு துணுக்கை நாம் புரிந்துகொள்ள முடிந்ததென்றால், கொஞ்சமாய்க் கொடுப்பது அல்லது ஆராதனைக்கு வரத் தவறுவது பற்றி நாம் ஏறக்குறைய அதிகமாய்ப் போராட மாட்டோம். தேவன் தமது சபையுடன் செய்கின்ற வைகளை நாம் காண முடிந்ததென்றால், நாம் உள்ளூர் சபையைக் கட்டி எழுப்புவதற்கு நம் நேரத்தையும் சக்தியையும் மனமுவந்து கொடுப்போம்.*

## சபையின் மையத்துவத்தைப் பற்றிக்கொள்வதினால் நாம் சபைக்கான நமது ஒப்புக்கொடுத்தலைப் பெருக்கிக் கொள்ளுகின்றோம்

*வசனங்கள் 9 மற்றும் 10ல் பவுல் என்ன கூறினார் என்று மீண்டும் கவனியுங்கள்: "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத் தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாக இப்பொழுது தெரியவரும் பொருட்டாக."*

*தேவனுடைய தனிப்பட்ட உறவு கொண்டிருத்தலுக்கு மக்கள்*

இன்றைய நாட்களில் கனத்ததொரு வலியுறுத்தம் தருகின்றனர். பலர் தேவனுடன் உறவுமுறைகளை நாடுகின்றனர், ஆனால் அவர்கள் சபையுடன் அதிகம் செயலாற்ற விரும்புவதில்லை. சபை என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்பதற்குப் பவுலின் (மேற்கண்ட) வசனங்கள் ஒரு நினைவூட்டுதலாக உள்ளன. சபை என்பது அவருடைய திட்டத்தின் இருதய மையமாக உள்ளது. சபை என்பது உணவு மேசையின் மீதுள்ள ஊறுகாயைப் போன்றதல்ல; அது முதன்மை உணவைப் போன்று செயல்படுகின்றது.

ஜான் ஸ்டாட் அவர்கள் சபையின் மையத்துவத்தைப் பற்றிக் கலந்துரை யாடினார்.[2] முதலாவது அவர், சபையானது வரலாற்றின் மையமாக உள்ளதென்று கூறினார். History (வரலாறு) என்பது உண்மையில் "His story" - தேவனுடைய வரலாறு என்பதாகவே உள்ளது. மீட்கப்பட்ட, ஒப்புர வாக்கப்பட்ட தம் மக்களுடன் இயேசுவே தேவனுடைய திட்டத்தின் மையமாக விளங்குகின்றார் என்று வேதாகமம் போதிக்கின்றது. இந்த மக்களுக்காக மற்றும் இந்த மக்களுக்காக மட்டுமே தேவன் பின்வரும் அறிவித்தலை ஏற்படுத்தியுள்ளார்: "முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக் கிறீர்கள்" (1 பேது. 2:10).

இரண்டாவது, சபையானது சுவிசேஷத்தின் மையமாக உள்ளது. முழுமையான சுவிசேஷத்தில் கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் மற்றும் சபையின் இரகசியம் ஆகிய இரண்டும் உள்ளடங்குகின்றன என்பதை எபேசியருக்குப் பவுலின் வார்த்தைகள், நமக்கு நினைவூட்டுகின்றன. இயேசு சபைக்காக "தம்மைத் தாமே ஒப்புக்கொடுக்குமளவுக்கு" (5:27) அதன் மீது அன்பு கூர்ந்தார். இந்த சபையைப் பற்றி நாம் புரிந்துகொள்ளத் தொடங்குவதற்கு முன்பாகவே, இது இயேசுவுக்கு அர்த்தம்மிக்கதாக உள்ளது. இது நமக்கு அர்த்தம்மிக்கதாக இருக்கும்படிக்கு அவர் விரும்புகின்றார்.

மூன்றாவது, சபை என்பது கிறிஸ்தவ வாழ்வின் மையமாக உள்ளது. நமது வேத வசனப்பகுதியானது, பவுல் தம் சுய தியாக ஊழியத்தைக் குறிப்பிடுதலுடன் முடிகின்றது: "ஆகையால், உங்கள்நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்து போகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே" (3:13). கிறிஸ்துவினிமித்தமானவற்றை முன்னேற்றவும், சபைக்கு மகிமையைக் கொண்டு வரவும் பவுல் எந்த விலை செலுத்தவும் மனதாயிருந்தார்.

சபை என்பது பூரணத்துவமானதல்ல. எங்களது உள்ளூர் சபையோ அல்லது உங்களது உள்ளூர் சபையோ பூரணத்துவமானதல்ல. இருப்பினும், அது/அவ்விஷயமானது, தேவனுடைய சிந்தையில் சபை பற்றி இருக்கின்ற விலையேறப்பெற்ற மதிப்பை எவ்விதத்திலும் குறைத்து விடுவதில்லை. இதை நாம் புரிந்துணர வேண்டும் என்று தேவன் விரும்பு கின்றார். அவர் பவுலின் வசனங்கள் மூலமாக, "எனது சபையை குறைத்து மதிப்பிடாதீர்கள். அது எனது மகிமையுள்ள சபையாக உள்ளது என்ற வகையில் அதைக் கண்ணோக்குங்கள். நீங்கள் உண்மையான ஒப்பு

*வித்தலைக் காண்பிக்க வேண்டும் என்று நான் விரும்பக் கூடிய மக்கள் மற்றும் காரணத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது" என்று கூறுவார்.*

## *முடிவுரை*

*திரைப்படங்கள், விளையாட்டுக்கள் அல்லது உல்லாசப்பயணங்கள் போன்றவை எதுவும் இராத நாள் வரும். வேலைகளோ, வீடுகளோ அல்லது வாகனங்களோ இராது. எல்லாம் ஒழிந்து போய்விடும். இந்து உலகமும் இதில் உள்ள யாவும் அழிந்துபோய் விடும்.*

*நீங்களும் நானுமென்றால், தேவனுக்கு முன்பாக நின்று கொண்டிருப் போம், நாம் சபைக்கு எவ்வளவாய் ஒப்புக்கொடுத்தலுடன் இருந்தோம் என்று அவர் நினைவுகூருவார். நாம் சபையைக் கட்டியெழுப்ப எவ்வளவாய் ஒப்புக்கொடுத்தலுடன் இருந்தோம் என்பதை அவர் நினைவுகூருவார். சபையை நாம் புறக்கணித்தால், ஒப்புக்கொடுத்தலில் நமது குறைப்பாட்டை தேவனுக்கு நாம் எவ்விதமாக விளக்கப்படுத்து வோம்? "எனது சபை ஏன் உனக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை" என்று தேவன் கேட்டால், அவருக்கு நாம் என்ன பதில் கூறுவோம்?*

*அந்தக் கேள்வியை தேவன் என்னிடம் கேட்பதை நான் விரும்ப வில்லை. நம்மில் எவரும் இதை விரும்புவதில்லை. மாற்றப்பட வேண்டிய அவசியமுள்ளவற்றை மாற்றுவதற்கு நாம் முடிவு செய்வோம். முதல் விஷயங்களுக்கு நாம் முதலிடம் கொடுப்போம். நாம் கர்த்தருடைய சபைக்கு ஒப்புக்கொடுத்தலுடன் இருப்போம்.*

---

*குறிப்புகள்*

[1]George Barna, *The Barna Report: What Americans Believe: An Annual Survey of Values and Religious Views in the United State* (Ventura, Calif.: Regal Books, 1991), 167.
[2]John R.W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 126-30.

# அன்புகூருவதற்குப் பலம் (3:14-21)

*உங்கள் ஜெபத்தில் நீங்கள் பெரிய விஷயங்களைக் கேட்கின்றீர்களா?* E. M. *பவுன்ட்ஸ் அவர்கள் ஜெபம் பற்றிப் பின்வரும் சிந்தனைகளை அளித்துள்ளார்: "பூமியிலும், வானத்திலும், காலத்திற்கும் அல்லது நித்தியத் திற்கும் நமக்காகத் தேவனுடைய குமாரன் பாதுகாத்து வைத்திராதது எதுவுமே இல்லை ... தேவன் நம்மை 'கிருபாசனத்தண்டை தைரியமாய்ச் சேரும்படி' நமக்குக் கட்டளையிடுகின்றார். பெரிதாகக் கேட்பதினால் தேவன் மகிமைப்படுத்தப்படுகின்றார், கிறிஸ்து கனப்படுத்துப் படுகின்றார்."*[1] *உங்கள் உள்ளூர் சபையானது "பெரிதாய்க் கேட்பதினால்" தேவனை மகிமைப்படுத்தி கிறிஸ்துவைக் கனப்படுத்துகின்றதா?*

*பெரிய அளவில் ஜெபித்தல் என்றால் என்ன என்பதைப் பவுல் அறிந்திருந்தார். 3:14-21ல் அவர், எபேசுவில் இருந்த கிறிஸ்துவின் சரீரமாகிய உள்ளூர் சபைக்காக ஜெபித்தார். உள்ளூர் சபைக்காக இதைக் காட்டிலும் வேறு எந்த சிறப்பான ஜெபத்தை ஜெபிக்க முடியும்? இது "பெரிதாய்க் கேட்பதினால்" தேவனை மகிமைப்படுத்தி, கிறிஸ்துவைக் கனப்படுத்திற்று.*

> *இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (3:14-21).*

*இந்த ஜெபத்தை ஆராய்கையில், நாம் முக்கியமான மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.*

# பிறர்மீது அன்புகூரத் தேவன் (நமக்கு) பலம் அளிக்கின்றார்

*கிறிஸ்துவின் சரீரம் பவுலின் சிந்தையில் இருந்தது. அவர் கிறிஸ்துவின் சரீரமானது தேவன் விரும்புகிறபடியெல்லாம் ஆவதைக் காண வேண்டும் என்று விரும்பினார். அவர், பலம் வாய்ந்த, ஒன்றிணைந்த, அன்புகூருகின்ற ஒரு உள்ளூர் சபையைக் குறித்துக் கனவு கண்டார்.*

*இது நடப்பதற்கு என்ன தேவைப்படும்? இதற்கு தேவனுடைய வல்லமை தேவைப்படும், அதுவே பவுலின் ஜெபமாயிருந்தது. வசனம் 16, ''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமா யிருக்கவும் ... அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்'' (3:16-19) என்று கூறுகிறது.*

*உள்ளூர் சபைக்கான மாபெரும் தேவை என்ன? ஒரு சபைக்கு வேறு எந்த விஷயத்தைக் காட்டிலும் அதிகமாய்த் தேவைப்படுவது என்ன? சிலர், "எங்களுக்குத் தேவைப்படுவது ஒரு புதிய கட்டிடம் தான்" என்று கூறலாம். இன்னும் சிலர், "எங்கள் ஊழியங்களில் ஈடுபாடு கொள்ள அதிகம் மக்கள் எங்களுக்குத் தேவை" என்று கூறலாம். இன்னும் சிலர், "முறுமுறுத்தலும், முறையிடுதலும் குறைதல் என்பதே எங்கள் தேவை" என்று கூறலாம்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தேவனுடைய வல்லமையில், வலிவில், பெலத்தில் ஒன்றுகலத்தல் என்பதே மிகுந்த அவசியம் என்பதாகக் கிறிஸ்தவர்கள் காண வேண்டும் என்று பவுல் விரும்பினார். நம் வாழ்வில் இவ்வல்லமையானது ஜெபத்துடன் தொடக்கம் பெறுகின்றது. எந்த ஒரு உள்ளூர் சபையும் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு அதற்கு ஜெபத்தின் மூலம் வருகின்ற தெய்வீக வல்லமை தேவைப்படுகின்றது. பவுல் இதை அறிந்தார், எனவே அவர் தம்மை உண்மையிலேயே முழந்தாள்படியிடக் கொண்டு வந்த வலிவுடன் அதற்காக ஜெபித்தார்.*

*வல்லமையானது ஜெபத்துடன் தொடக்கம் பெறுகின்றது, ஆனால் இந்த வல்லமை எங்கே இயங்குகின்றது? தேவனுடைய வல்லமை இயங்குகிற இடம் "உள்ளான மனிதனுக்குள்" என்று வசனம் 16 கூறுகின்றது. "உள்ளான மனிதன்" கிறிஸ்தவரின் சிந்தனைகள், செயல்கள், நோக்கங்கள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றான். இந்தக் கட்டுப்பாட்டு அறையை சரியாக இயக்க தேவனுடைய தெய்வீக சக்தி அவசியமாகின்றது.*

*நான் மடிமீது வைத்து இயக்கும் (லேப்டாப்) கணணி ஒன்றை வைத்துள்ளேன். அது சற்று நேரத்திற்காகிலும் ஒரு மின்கலத்தினால் இயங்கும். இருப்பினும் சற்று நேரத்தில் அதில் உள்ள பச்சை விளக்கு அணைந்து, ஒரு பீப் ஒலி எழும்பத் தொடங்குகின்றது. அதன், சக்தியானது அதில் ஏறக்குறையத் தீர்ந்து போய் விட்டது என்று அர்த்தப்படுத்துகின்றது. நான் கணணியைத் தொடர்ந்து பயன்படுத்த விரும்பினால் வேறு எங்கிருந்தாவது அதற்கு மின் சக்தி அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை.*

*நீங்கள் ஆவிக்குரிய மின்கலம் ஒன்றைக் கொண்டு இயங்குவதில்லை, ஆனால் உங்களிடத்தில் உள்ளான சக்தி இவ்வளவாக மட்டுமே உள்ளது. இதை நீங்கள் வாசிக்கையில் நல்நிலை கொண்டிருக்கலாம்; உங்கள் வாழ்வில் பச்சை விளக்கு பிரகாசமாய் ஒளி வீசலாம். உள்ளான வல்லமை யின் ஏராளமான அளிப்பு ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், நீங்கள் ஆவிக்குரிய சக்தி ஏறக்குறையத் தீர்ந்துபோன நிலையில் கீழான இடத்தில் இருக்கலாம். உங்களை நீங்களே பராமரித்துக் கொள்வதற்கும்கூட நீங்கள் குறைவாகவே/அரிதாகவே சக்தியுள்ளவர் களாய்க் காணப்படலாம், இது மற்றவர்களின் தேவைகள் அல்லது அக்கறை கள் குறித்த எந்தச் சிந்தனையையும் உங்களுக்கு மிகக் குறைவாகவே அளிப்பதாயிருக்கும்.*

*ரேண்டி பெக்ட்டன் என்பவர் புற்றுநோய்க்கெதிரான தமது தனிப்பட்ட போராட்டத்தின் இருண்ட நாட்கள் சிலவற்றின் போது, குறைவான சக்தி குறைவு—உடல் சக்தியில் குறைவு மட்டுமின்றி மனம் மற்றும் ஆவிக்குரிய சக்தியில் குறைவு—பட்டுக் காணப்பட்டார். அவர் தேவனில் சக்தியின் ஆதார மூலம் ஒன்றைக் கண்டார். இதை அவர், "எனவே எனக்கு உதவும் தேவனே" என்ற தலைப்புக் கொண்ட கவிதையில் விளக்கப் படுத்தினார்:*

*நீர் இன்றித் தாங்க*
*இயலாத அளவுக்கு என்*
*வேதனை இப்பொழுது பெருகியுள்ளது.*
*நீர் இன்றி என்னால்*
*வெற்றி கொள்ள இயலாத*
*இளைப்பும் பயமும் அதிகரித்துள்ளது*
*எனது கண்பார்வையானது*
*விளக்கொன்றின் துடிப்புப் போன்றுள்ளது*
*நீரின்றி அதுவும் இருளானது.*
*நான் அறிக்கை செய்கிறேன்:*
*நீர் இன்றி மரணத்திற்கு*
*நான் அஞ்சுகின்றேன்*
*நீர் இன்றி என்னிடத்தில்*
*விசுவாசத்தின் நிறை ஆதாரமில்லை*
*எனவே எனக்கு உதவும், தேவனே,*
*உம்மோடு நான் ஒரு வேளையில்*
*ஒரு அடியெடுத்துவைக்க*
*நீர் ஒருவரே எனது நம்பிக்கை![2]*

*"உள்ளான மனிதன்" என்பதுதான் தேவனுடைய பலம் நமக்குத் தேவைப் படுகின்ற இடமாக உள்ளது.*

*பவுலின் ஜெபத்தில் உள்ள மற்ற சில விஷயங்களைக் கவனியுங்கள். தேவன் தம்முடைய பலத்தை நமக்குக் கொடுப்பதற்கான காரணம், வசனம் 17ல் காணப்படுகிறது: "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் ..." இரண்டு கிரேக்க வார்த்தைகள் "வாசமாயிருத்தல்"*

என்ற வினைச் சொல்லாக மொழிபெயர்க்கப்பட முடியும். அவற்றில் ஒன்று, ஓரிடத்தில் தற்காலிக அடிப்படையில் தங்கியிருத்தல் என்று அர்த்தப் படுகிறது. இன்னொரு கிரேக்க வார்த்தையானது "(நிரந்தரமாய்) தங்குதல்" என்று அர்த்தப்படுகின்றது. இது ஒரு தங்கும் விடுதி அறைக்கும் வீட்டிற்கும் உள்ள வேறுபாடாக இருக்கிறது. நாம் ஓரிடத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கலாம்; ஆனால் நாம் உண்மையில் வாழும் இடம் வேறொன்றாக இருக்கும். இவ்வசனப் பகுதியில் பவுல் இரண்டாவது வார்த்தையையே (Gk.: *katoikeo*) பயன்படுத்தினார். நிரந்தரமாய்த் தங்குமிடம் என்பதையே அவர் சிந்தையில் கொண்டிருந்தார்.

நமது இதயங்களை இயேசு தமது இல்லமாக்குமளவுக்குத் தேவன் கர்த்தருடைய சபையின் உள்ளூர் சபைகளின் மீது தமது வல்லமையைப் பொழிய வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். இயேசு நமது இதயங்களில் ஒரு விருந்தினராக இருக்க விரும்புவதில்லை. அவர் நமது வாழ்வின் விருந்தினர் பதிவேடுகளில் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பதை விரும்பு வதில்லை. அவர் நம்மில் நிலையாகத் தங்குமிடம் கொண்டிருப்பதையே தம் சிந்தையில் கொண்டுள்ளார்.

நம் வாழ்வில் இயேசு தங்கியுள்ளார் என்பதை நாம் எவ்வாறு அறிகின்றோம்? அவர் நமக்குள் வாசம் பண்ணி உள்ளூர் சபையில் குடியமர்ந்துள்ளதைச் சுட்டிக்காண்பிக்கின்ற சோதனை எது? உள்ளூர் சபை ஒன்றில் தேவனுடைய வல்லமை உண்மையில் பிரசன்னமாகியிருக்கின்ற பொழுது, அங்குள்ள கிறிஸ்தவர்களின் மத்தியில் ஆழமான அன்பு நிலவும் என்று பவுல் கூறினார். நாம் "அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாய்" இருப்போம். சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இந்த கொள்கை மீண்டும் எடுத்துரைக்கப்படத் தக்கதாக உள்ளது. சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது.

சகோதரர் வில்லார்டு டேட் அவர்கள் உள்ளூர் சபையில் அன்பின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு வலியுறுத்தினார்:

> டல்லாஸிற்கு வடபகுதியில் உள்ள ஒரு சிறு நகருக்கு ஒரு கருத்தரங்கு நடத்தச் சென்ற வேளையை நான் நினைத்துப் பார்க்கின்றேன் ... அங்கு சபை எந்த இடத்தில் இருந்தது என்பதை நான் அறியவில்லை. எனவே நான் ஒரு 7-11 கடையில் நின்றேன், அது அக்கட்டிடத்திலிருந்து கல்லெறி தூரத்தினுள் இருந்தது. அங்கு வாகனத்திற்கு பெட்ரோல் நிரப்பிக் கொண்டிருந்த ஒரு இளைஞனிடம், சபைக் கட்டிடம் எங்குள்ளது என்று கேட்டேன்.
>
> "இல்லை, எனக்குத் தெரியாது" என்று அவர் பதில் அளித்தார்.
>
> பின்பு நான் கடையின் உட்புறம் சென்று கடையின் உரிமையாளரிடம் விசாரித்தேன். அவருக்கும் சபையைப் பற்றித் தெரியவில்லை. நாங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் அதைத் தேட வேண்டியதாயிற்று!
>
> இந்த நபர்கள் சபையினிடத்தில் வெறுப்புணர்வு எதுவும் கொண்டிருக்கவில்லை. அது (சபை) அங்கு இருந்தது என்பதை

*அவர்கள் அறியவில்லை, அவ்வளவுதான்! ...*

> *துரதிர்ஷ்டவசமாக, எனக்கு இம்மாதிரி அனுபவம் ஒன்றுக்கு மேல் ஏற்பட்டுள்ளது. ஆனால் நான் கேள்விப்பட்டிருக்க விரும்பிய விஷயம் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? என்னிடத்தில் அந்த நபர்கள் பின்வருமாறு கூறியிருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்பு கின்றேன்: "அந்தக் குன்றின் மீது ஒரு குழுவினர் ஒன்றுகூடுகின்றனர். அவர்கள் யார் என்றோ அல்லது அவர்கள் தங்களை எப்படி அழைத்துக் கொள்கின்றனர் என்றோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் பார்த்திருக்கக் கூடியவர்களிலேயே அவர்கள் மிகுந்த அன்புள்ளம் கொண்டவர்களாய் உள்ளனர். அவர்கள் ஒருவர் பிறரின் மீது அக்கறை கொண்டுள்ளனர், பிறரின் தேவைகளைக் கூடக் கவனிக்க முன் வருகின்றனர். நீங்கள் அவர்களை ஆராய்ந்து, அவர்கள் யார் என்று காண வேண்டும்"[3]*

*சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது. உள்ளூர் சபையில் கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறரின் மீது அன்பு கூருவதற்கான பலத்தைத் தேவன் அளிக்கின்றார்.*

## இயேசுவின் அன்பைப் புரிந்துணர்ந்து கொள்ளத் தேவன் (நமக்கு) பலம் அளிக்கின்றார்

*கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடைய அன்பின் மாபெரும் பரிமாணத்தை (அளவுகளை)ப் புரிந்துணர வேண்டும் என்று பவுல் விரும்பினார்:*

> *... நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் ... (3:17ஆ-19அ).*

*மாபெரும் கடலின் கரையோரத்தில் நீங்கள் எப்பொழுதாவது நின்றிருக்கின்றீர்களா? மலைக் கணவாய்களினூடே ஓடும் மாபெரும் ஆற்றின் அருகே நீங்கள் இருந்துள்ளீர்களா? பசிபிக் மகா சமுத்திரத்தின் அளவீடுகளைக் கணக்கிட ஒரு பிளாஸ்டிக் அளவுகோல் - பள்ளிப் பிள்ளைகள் பயன்படுத்துவது போன்றது - பயன்படுத்தப்பட்டால் அதைக் கணக்கிட எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். கணவாய் ஆற்றின் ஒவ்வொரு அங்குலத்தையும் அதைக் கொண்டு அளக்க ஆகும் காலம் எவ்வளவாக இருக்கும்? அது எவ்வளவு காலத்தை எடுத்துக் கொள்ளுமோ, அந்த அளவானது, உங்கள்மீது இயேசு கொண்டுள்ள அன்பை அளப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் மற்றும் முயற்சியின் நல்ல தொடக்கத்தை விவரிக்கக் கூடப் போதுமானதாக இருக்காது.*

*குழந்தைகளுக்கான பாடல் ஒன்று, "இயேசு என்னை அன்பு*

செய்கின்றார்! இதனை நான் அறிந்திருக்கின்றேன்” என்று கூறுகின்றது. இயேசுவின் அன்பை நாம் பற்றிக் கொள்வதற்குத் தேவன் நமக்கு பலம் அளிக்காத வரையிலும இயேசு நம் மீது எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகின்றார் என்பதை உண்மையாக நாம் அறிய முடியாது.

கிறிஸ்துவினுடைய அன்பின் அகலத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிட மிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவருடைய அன்பானது மனித இனம் முழுவதையும் - உலகில் உள்ள ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், பையனையும், சிறுமியையும் மற்றும் அனைவரையும் - அரவணைக்கின்றது. உங்களையும் என்னையும் பெயரைக் கொண்டுகூட அவர் அறிகின்றார். அவர் எப்பொழுதும் இதைக் கொண்டுள்ளார். அவர் உங்கள் முகத்தை அறிகின்றார். உங்கள் சிரிப்பின் ஒலியை இயேசு புரிந்து கொள்ளுவார். உங்கள் குரலை உடனடியாக அவர் புரிந்து கொள்ளுவார். பிறரிடமிருந்து உங்களை மறைந்திருக்கும்படி செய்கின்ற அந்தப் புண் படுத்துதல்களை அவர் அறிகின்றார். அவரை வசீகரிக்க வேண்டுமே என்று நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர் உங்களை விரும்புகிறாரா இல்லையா என்று கவலைப்பட்டு நீங்கள் கண்ணுறக்கம் இழக்கத் தேவையில்லை. இயேசு உங்கள் மீது அன்புகூருகின்றார்.

கிறிஸ்துவினுடைய அன்பின் நீளத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிட மிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவருடைய அன்பு நித்தியத்திலிருந்து நித்தியம் வரையிலும் சென்று அடைகின்றது. நீங்கள் பிறக்கு முன்பாகவே அவர் உங்கள் மீது அன்புகூர்ந்தார். அவர் இப்பொழுது உங்கள் மீது வேறு எவரைக் காட்டிலும் அதிகம் அன்புகூருகின்றார், மற்றும் அவர் உங்களை என்றென்றைக்கும் அன்புகூர்ந்து கொண்டிருப்பார். அவர் மீது உங்களுக்கு அன்பில்லை என்பது போல் செயல்படுவதை நீங்கள் தேர்ந்து கொள்ளும் பொழுதும்கூட அப்பொழுதும் அவர் உங்கள்மீது அன்புகூருகின்றார். இயேசு உங்கள் மீது அன்புகூருவதை ஏதொன்றினாலும் நிறுத்த முடியாது.

ஒருநாளும் முற்றுப் பெறாத, உங்களிடமிருந்து பதிலுக்கு ஏதோன்றையும் எதிர்பார்க்காத அன்பைப் புரிந்து கொள்ளுதல் என்பது நம் உலகத்திற்குக் கடினமானதாக உள்ளது. நாம் நிபந்தனைக்குட்பட்ட அன்பு என்பதை மட்டுமே அறிந்தவர்களாய் இருக்கின்றோம். நாம் “இதுவரை” அன்பு என்பது பற்றி எல்லாவற்றையும் அறிந்துள்ளோம்: நாம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வரை மட்டுமே அவர்கள் பொதுவாக நம்மீது அன்பு காட்டுவார்கள். இருப்பினும் இயேசு, நம்மீது நிபந்தனையற்ற வகையில் “ஒரு நாளும் நின்று போகாத வகையில்” அன்புகூருகின்றார்.

கிறிஸ்துவினுடைய அன்பின் உயரத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிட மிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவர் விண்ணகத்தில் தேவனுடன் இருக்கிறார், நாமும் அங்கிருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்புகின்றார். நாம் குறைவானவற்றில் குடி அமர்ந்து விடுவதை அவர் விரும்பிவிடாத அளவுக்கு அவரது அன்பு அவ்வளவு உயரத்தை எட்டுகின்றது. சாத்தானோ இதை (குறைவானவைகளை மட்டுமே நாம் கொண்டிருக்க வேண்டும் என்பதை) விரும்புகின்றான். நாம் உடைகள்,

வாகனங்கள், வேலைகள், விளையாட்டுகள், சுயம் ஆகியவற்றில் அதிகம் ஈடுபாடு கொண்டு, இயேசு நமக்குத் தருவதைத் தவற விட வேண்டும் என்றே அவன் நாடுகின்றான். இயேசுவோ நமக்கு பரலோகம், நித்திய ஜீவன், முழுமையான சந்தோஷம், சமாதானம், மற்றும் நமக்காகவே ஏற்படுத்தப்பட்ட இல்லம் ஆகியவற்றையும், நமது பரலோக பிதாவுடன் என்றைன்றும் இருக்கும் சிலாக்கியத்தையும் நமக்குத் தர விரும்புகின்றார்.

கிறிஸ்துவினுடைய அன்பின் ஆழத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிட மிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அது (அந்த அன்பு), இயேசு இப்பூமிக்கு வந்து முன்னணை ஒன்றில் பிறப்பதற்காகப் பரலோகத்திற்கு பிரியாவிடை கூறிய அளவுக்கு அவ்வளவு ஆழமானதாக உள்ளது, இயேசு மனம் விரும்பி சிலுவையில் மரிக்குமளவுக்கு அவ்வளவு ஆழமானது, அந்தச் சிலுவையில் இயேசு நம் அனைவரின் பாவங்களையும் சுமக்குமளவுக்கு அவ்வளவு ஆழமானது, இயேசு உங்கள் இரட்சகராக, கர்த்தராக மற்றும் நண்பராக இருப்பதற்காகக் கல்லறையை விட்டு - உயிருள்ளவராக - வந்த அளவுக்கு அவ்வளவு ஆழமானது.

இதோ இங்கு எனது கோட்பாடு உள்ளது: கிறிஸ்து நம்மீது கொண்ட அன்பின் உண்மைத்தன்மை குறித்து கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் எண்ணத்தில் மூழ்கி, பெரு வியப்படைகின்ற பொழுது, நம் வாழ்வு மாற்றம் அடையும். நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும் மக்களைத் தொடர்ந்து தவறாக நடத்திக் கொண்டிருக்க முடியாது. நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும் அதைப் புட்டிக்குள் அடைத்து வைத்துக் கொண்டிருக்க முடியாது. அது மற்றவர்களுக்குப் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாக உள்ளது. நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும், யாரேனும் ஒருவரிடத்தில் இரக்கமற்றோ அல்லது யாரேனும் ஒருவரைக் கிழித்துப் போடுபவர்களாகவோ இருக்க முடியாது, ஏனென்றால், அந்த நபரை இயேசு எவ்வளவாக அன்புகூருகின்றார் என்பதை நாம் அறிகின்றோம்.

தேவனை ஆராதிக்கவும் அவரைத் துதிக்கவும் விரும்பாமல் நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர முடியாது. நம்மால் இயன்ற ஒவ்வொரு வழிமுறையிலும் நாம் தேவனுக்கு ஊழியம் செய்யவும் அவரைக் கனப்படுத்தவும் விரும்பாமல் நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர முடியாது.

கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர்ந்து கொள்வதற்கான பலம் நமக்குள்ளாகவே இருந்து நமக்கு வருவதில்லை என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். அதைப் பெறுவதற்கு நாம் முழங்கால் படியிட்டு ஜெபிக்க வேண்டும். அதைப் புரிந்து கொள்வதற்கான பலத்தைத் தேவன் மட்டுமே நமக்கு அளிக்கின்றார். உங்கள் உள்ளூர் சபையில் தேவனுடைய வல்லமை பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்று ஜெபியுங்கள். கிறிஸ்துவுக் குள்ளான உங்கள் சகோதரர்களும் சகோதரிகளும் தேவன் விரும்புகின்ற வகையில் ஒருவர் மற்றவர் மீது அன்பு கூரவேண்டும் என்று ஜெபியுங்கள். இயேசுவின் ஆச்சரியம் நிறைந்த அன்பை நீங்கள் முன் எப்போதும் புரிந்திராதபடி புரிந்து கொள்ள வல்லமை கொண்டிருக்க வேண்டும் என்று

*உங்களுக்காகவும் உங்கள் சபைக்காகவும் ஜெபியுங்கள். சபையில் உள்ள ஒரு நபருக்காக ஜெபிப்பதற்குக் குறிப்பாக ஒரு கணம் எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய அல்லது அவளுடைய வாழ்வில் தேவனுடைய வல்லமைக்காக ஜெபியுங்கள். பிற்பாடு அதைப் பற்றி அந்த நபர் அறியச் செய்யுங்கள். அவரிடம் அல்லது அவளிடம் உங்கள் ஜெபத்தைப் பற்றிக் கூறுங்கள்.*

## தேவனுடைய பரிபூரணத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பதற்கு தேவன் நமக்கு பலம் அளிக்கின்றார்

ஒரு உள்ளூர் சபையானது "அறிவுக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள" வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். ஏன்? இதற்கான காரணத்தை வசனம் 19 தருகின்றது: அது (சபை) "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட வேண்டும்."

தனது குடும்பத்திலிருந்து தானாகவே பிரிந்து போயிருத்தலைத் தனக்கு விதித்துக் கொண்ட ஒரு மனிதன் பற்றிய கதையொன்றை J. வில்பர் சேப்மன் அவர்கள் கூறுவதுண்டு. அந்த மனிதன் தேர்ந்து கொண்ட வாழ்வு அவனைச் சிதைத்தது. அவன் கிழிந்து போன உடைகளுடன் எங்கும் சுற்றித் திரிந்து, உயிர் வாழ்வதற்காகப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இம்மனிதன் ஒரு புகைவண்டி நிலையத்தின் அருகில் பிச்சை கேட்டுக் கை நீட்டிக் கொண்டிருந்தான். பயணி ஒருவர் புகை வண்டியை விட்டு இறங்கி வந்த பொழுது அவரின் பின்புறமாய் சென்ற இம்மனிதன் அவரது தோளில் தட்டினான்.

"ஐயா, எனக்கு நீங்கள் பத்து பைசா கொடுக்க முடியுமா? பத்து பைசா மட்டும்."

பயணி திரும்பிப் பார்த்தார், அந்தப் பிச்சைக்காரன் தனது கையை நீட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பிச்சைக்காரன் அப்பயணியின் முகத்தை உற்றுப் பார்த்தான் ... அதை அவன் கண்ட பொழுது, அவனது முகம் அதிர்ச்சியால் வெளிறிப் போயிற்று. அந்தப் பயணி அவனது தந்தையாக இருந்தார். அவன் அவரை ஆண்டுகள் பலவாகப் பார்த்திருந்ததில்லை.

"அப்பா, என்னை யாரென்று தெரிகின்றதா?" அவன் கேட்டான்.

தந்தை தனது மகனைத் தன் கரங்களினால் கட்டிப் பிடித்துக் கொண்டார். அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிற்று. "மகனே, கடைசியில் உன்னைக் கண்டு பிடித்து விட்டேன். இவ்வளவு ஆண்டு களுக்குப் பிறகு உன்னைக் கண்டு பிடித்து விட்டேன். உனக்குப் பத்து பைசாவா வேண்டும்? என்னுடையது எல்லாம் உன்னுடையதல்லவா?"[4]

நம்மில் எத்தனை பேர் இந்தப் பிச்சைக்காரனைப் போல் இருக்கின்றோம்? நமது பரலோக பிதா விண்ணக ஐசுவரியங்களை நம்மீது பொழிய விருப்பம் கொண்டுள்ள பொழுது பத்து பைசாக்களுக்காகப் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளிக் கிழமை இரவில் ஒரு திரைப்படத்திற்குச் செல்லும் பொழுது, கடையொன்றிற்குச் செல்லும்

பொழுது, பள்ளிக்குப் புது உடைகள் வாங்கும் பொழுது, அல்லது வேலையில் கடைசியாக நமக்குப் பதவி உயர்வு கிட்டும் பொழுது, நாம் வாழ்வைக் கண்டு விட்டதாக நினைக்கின்றோம். ஒரு உணவுச் சாலையில் அல்லது ஒரு விருந்தில் நண்பர்களுடன் ஓரிரவை நாம் செலவிட்டு விட்டால், அதை வாழ்வின் நற்பேறாகக் கருதுகின்றோம். ஒரு சில ஆண்டுகளுக்கு மாத்திரம் நாம் விரும்புவதைச் செய்வதற்காக ஓய்வு பெறக்கூடும்படி நாம் நாற்பது ஆண்டுகள் பணி செய்கின்றோம். நமது பிதாவானவர், "தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நம்மை நிரப்ப" விரும்புகின்ற பொழுது, நாம், பத்து பைசாக்களுடன் திருப்திப்பட்டுக் கொள்ளுகின்றோம்.

"தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிரப்பப்படுதல்" என்பதன் அர்த்தம் என்ன? இது இயேசுவைப் போல் இருத்தல் - அவரது சிந்தையைக் கொண்டிருத்தல், அவரது சிந்தனைகளைக் கொண்டிருத்தல்; அவர் செயல்படுவது போன்று செயல்படுதல்; அவரது இரக்கத்தைக் கொண்டிருத்தல், அவரது அன்பை, தேவ சித்தத்திற்கு அவரது ஒப்புக் கொடுத்தலைக் கொண்டிருத்தல் - என்று அர்த்தப்படுகின்றது. இது, பிதாவின் மீது அவரது நம்பிக்கை போன்ற நம்பிக்கை கொண்டிருத்தல், ஜீவனுக்கான அவரது பேரார்வம், அவரது மகிழ்ச்சி மற்றும் அவரது நற்பண்பு ஆகியவற்றைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது. இது பிதாவைத் துதிக்கவும் கனப்படுத்தவும் இயேசுவின் சொந்தத் திறனைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது, அதுவே வாழ்வாக உள்ளது!

## முடிவுரை

ஒவ்வொரு உள்ளூர் சபையும் தேவனுடைய வல்லமையை அனுபவிப்பதைக் காண வேண்டும் என்று தேவன் பலத்த விருப்பம் கொண்டுள்ளார். கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அன்புகூருவதற்குப் பலப்படுத்தவும் இயேசு நமக்காகக் கொண்டுள்ள அன்பைப் புரிந்துணர்வதற்கும் இயேசுவைப் போன்று வல்லமை கொண்டிருப்பதற்கும் அவர்களை பலப்படுத்த உள்ளூர் சபைகள் வல்லமை கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

மக்களுடன் அன்புகூர நீங்கள் போராடிக் கொண்டிருந்தால், அல்லது இயேசு உங்கள்மீது எவ்வளவு அன்புகூருகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள நீங்கள் சிரமப்பட்டால், ஜெபம்தான் நீங்கள் தொடங்கும் இடமாக உள்ளது. இயேசுவைப் போலாவதற்கு நீங்கள் முயற்சி செய்கையில் நீங்கள் இடறி விழுபவர்களாக உங்களையே கண்டால், இது ஜெபிப்பதற்கான வேளையாக உள்ளது.

அவ்வகையான ஜெபத்திற்குத் தேவன் தம் பதிலினால் உங்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்துவார்.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும்
அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே,

*நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக! ஆமென் (3:20, 21).*

---

குறிப்புகள்

[1]E.M. Bounds, quoted in Jack Taylor, *Prayer: Life's Limitless Reach* (Nashville, Tenn.: Broadman Press, 1977), 15. [2]Randy Becton, *Coming to Grips With God* (Abilene, Tex.: Randy Becton, 1977), 111. [3]Willard Tate, *Learning to Love* (Nashville, Tenn.: Gospel Advocate Co., 1988), 77. [4]Adapted from Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 78-79.

# தேவனுடைய மக்களாக வாழ்தல் (4:1)

*தராதரங்களின் அமைவொன்றின்படி வாழ்வதற்கு ஒப்பந்தத்தில் நீங்கள் எப்பொழுதாவது கையெழுத்திட்டதுண்டா? நீங்களோ அல்லது உங்கள் பெற்றோரோ பள்ளியின் விதிகளைப் பின்பற்றி நடப்பதாக வாக்குறுதி அளிக்கும் வகையில் ஒரு காகிதத் துண்டில் கையெழுத்திட்டிருக்கலாம். நீங்கள் வேலை செய்யுமிடத்தில் அந்த நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அடங்கி நடப்பதாக இணங்கி, ஒரு காகிதத்தில் கையெழுத்திட்டிருக்கலாம். ஏறக்குறைய எந்த ஒரு நிறுவனத்திலும் நீங்கள் இணையும் பொழுது, நீங்கள் அதன் தராதங்களைப் பின்பற்றி அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றீர்கள்.*

*நான் கிறிஸ்தவரான பொழுது, ஒரே ஒரு அட்டையில் கையெழுத்திட்டதை நான் நினைவுகூருகின்றேன். அந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நான் பாடல் புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு கலையரங்கத்தின்/கூட்டம் நடக்கும் அறையின் முற்பகுதியை நோக்கி நடந்தேன்; நான் பதட்டமாய் இருந்தேன்; எனது உள்ளங் கைகளில் வியர்த்துக் கொண்டிருந்தது, மற்றும் எனது முட்டிகள் (நடுக்கத்தினால் ஒன்றுடன் ஒன்று) இடித்துக் கொண்டிருந்தன. எனது பெயரையும் முகவரியையும் எழுதுவதற்கான அட்டையொன்றைப் பிரசங்கியார் என்னிடத்தில் கையளித்தார். அந்த அட்டை (பின்வரும்) மூன்று விருப்பத் தேர்வுகளில் ஒன்றைத் தேர்வு செய்யும்படி என்னைக் கேட்டுக் கொண்டது: "நான் ஞானஸ்நானம் பெற விரும்புகின்றேன்," "நான் பாவங்களை அறிக்கையிட விரும்புகின்றேன்" அல்லது "நான் உறுப்பினராக விரும்புகின்றேன்." நான், "நான் ஞானஸ்நானம் பெற விரும்புகின்றேன்" என்பதைத் தேர்ந்து கொண்டேன். நான் தண்ணீரை விட்டு வெளியே வந்த பொழுது எவரொவரும், நான் சபையின் தராதரத்தின்படி வாழ்வேன் என்று கூறும் ஏதொன்றிலும் கையொப்பம் இடும்படிக்கு என்னிடத்தில் கேட்கவில்லை. அதனாலேயே நாம், சபையில் தராதரம் எதுவும் நிலவுவதில்லை என்று கூற முடியாது, தராதரங்கள் சபையில் உள்ளன. நாம் குறிப்பிட்ட தராதரங்களுக்கு உட்பட வேண்டும் என்று தேவன் கேட்கின்றார். நாம் அவருடைய பிள்ளைகள்போல் செயல்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார்.*

*பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் பிற்பகுதியில் அவர்,*

சபைக்கான அடிப்படைத் தராதரங்கள் சிலவற்றை அமைத்து வைத்தார். அவர், கிறிஸ்தவருக்காக நோக்கப்படுத்தப்பட்ட வாழ்வை விவரித்தார்.

பவுல் தம் நிருபங்களில் முன்னுரைக்கப்படக் கூடிய வடிவமைப் பொன்றைப் பின்பற்றினார்—அது ஒரு உபதேசப் பகுதி, பின்பு ஒரு நடைமுறைப் பகுதி என்பவைகளாய் இருந்தது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதல் மூன்று அதிகாரங்கள் ஆழ்ந்த உபதேசங்களைக் கொண்டுள்ளன. அதிகாரம் 4லிருந்து 6 வரையிலும் பவுல் உபதேசப் பகுதியிலிருந்து, கிறிஸ்துவுக்குள் வாழும் நடைமுறைப் பகுதிக்கு மாறினார்.

எபேசியர் 4:1 வசனமானது உபதேசம் மற்றும் நடைமுறைப் பகுதி களுக்கு ஒரு பாலம் போன்று செயல்படுகிறது: "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து." இவ்வசனத்தைப் புதிய நூற்றாண்டு மொழிபெயர்ப்பில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள விதத்தை நான் விரும்புகின்றேன்: "நான் கர்த்தருக்குரிய வனாயிருப்பதால் சிறைப்பட்டுள்ளேன். தேவன் தமது மக்களாய் இருக்கும் படி உங்களைத் தேர்ந்து கொண்டார், தேவனுடைய மக்கள் வாழ வேண்டிய வழியில் நீங்கள் வாழ வேண்டுமென்று இப்பொழுது நான் உங்களுக்குக் கூறுகின்றேன்." இதில் உள்ளவற்றை அதிகாரம் 4ல் இருந்து 6 வரையிலும் பவுல் விவரித்தார். தேவனுடைய மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான வழியை அவர் வெளிப்படுத்தினார்.

## நடை

பவுல், கிறிஸ்தவ வாழ்வு பற்றி பலத்த உறுதிப்பாடு கொண்டிருந்தார். வசனம் 1ஐ NIV வேதாகமம், பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளது: "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குத் தகுதியானவர்களான வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று [நான்] உங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்." "வேண்டிக் கொள்ளுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையான *parakaleo* என்பதைப் பவுல் பயன்படுத்தினார், இது அவரது ஆழமான மற்றும் நிலையான அக்கறையை வெளிப்படுத்துகின்றது.

நான் உயர் நிலைப் பள்ளியில் இருந்த பொழுது, பெரும்பாலான வேளைகளில் எனக்கு எல்லாம் தெரிந்ததுபோல நான் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். என் வாழ்வின் இந்தக் கால கட்டத்தின் போது, எனது தந்தையும் நானும் பல வேளைகளில் கருத்து வேறுபடுவதுண்டு. ஒருமுறை அவர் வியாபாரப் பயணத்தின் நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தார், அங்கிருந்து அவர் எனக்கு வாழ்க்கையைக் கூடைப்பந்தாட்டத்துடன் ஒப்பிட்டுக் கடிதம் எழுதியிருந்தார். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கடிதத்தை (மீண்டும்) நான் கண்டறிந்தேன். அந்த (கடிதம் எழுதப் பட்டிருந்த) தாளானது பழையதாகி, நைந்து, மெல்லியதாகி விட்டிருந்தது. அதன் மையானது மங்கிப் போயிருந்தது, ஆனால் அதன் வார்த்தை களினு டைய அவசரத்தன்மை சற்றும் குறையாதிருந்தது. அதன் ஒவ்வொரு வாக்கியத்திலும் வலிவுத்தன்மை நிறைவாய்க் காணப்பட்டது. அவரது

*கடிதத்தில் அவர் தம் இருதயத்தை ஊற்றியிருந்தார் என்பதற்கு அது இன்னமும் ஆதாரமாய் இருந்தது.*

*பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் தமது இருதயத்தை ஊற்றி யிருந்தார். சபையானது தான் பெற்றுக் கொண்ட அழைப்புக்குப் பாத்திர மாய் வாழும்படி அவர் வேண்டிக் கொண்டார். எபேசியருக்கு இந்த நிருபம் எழுதப்பட்டு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன, ஆனாலும் இதன் அவசரத்தன்மை எதுவும் ஒழிந்து போகாமல் உள்ளது. பாத்திரவான்களாக வாழும்படியான இந்த அழைப்பானது எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இருந்தது போலவே இன்றைக்கும் புதிதாக, பலம் வாய்ந்ததாக, தேவையானதாக உள்ளது.*

*நீங்கள் இன்னொரு திறவுகோல் வார்த்தையைக் கவனிக்க விரும்பலாம்: "பாத்திரவான்கள்" (Gk.: axios). "பாத்திரவான்கள்" என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது? டெக்ஸாஸின் மிட்லான்ட் என்ற இடத்திலிருந்த சபையில் நான் அங்கத்தினராய் இருந்த பொழுது, நாங்கள் எப்பொழுதா வது, சுற்றுலாப் பூங்காக்களுக்கும், ஐஸ்கிரீம் விருந்துகளுக்கும் செல்வது உண்டு. அங்கு பெரியவர்கள் வாலிபால் (கைப்பந்து) விளையாடுவோம், சிறுவர்கள் அசைந்தாடும் ஊசற் கட்டையில் விளையாடுவதுண்டு. இந்த ஊசற் கட்டையில் விளையாடுவதற்கு அதிக திறமை தேவையில்லை, ஆனால் சமானமாய் அமர்தல் தெரிந்திருக்க வேண்டும். ஒருவர் மட்டும் அதில் விளையாட முடியாது. ஊசற் கட்டை/ஊசற் பலகையானது மேலும் கீழும் செல்லுவதற்கு இரு நபர்கள் தேவை. ஊசற்பலகையின் இரு முனையிலும் ஆட்கள் அமர்ந்திருக்கும் பொழுது மட்டுமே அது வேலை செய்கின்றது.*

*"பாத்திரவான்களாய்" என்ற பவுலின் வார்த்தையானது அந்தக் கருத்தையே தெரிவிக்கின்றது. இது "சமப்படுத்துகின்ற" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. பவுல், உபதேசம் மற்றும் நடைமுறை ஆகிய வற்றுக்கிடையே ஒரு சமான நிலையை வலியுறுத்தினார். அவர், கிறிஸ்து நமக்கு என்ன செய்துள்ளார், நாம் கிறிஸ்துவுக்குள் யாராய் இருக்கின்றோம், கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ளது என்ன என்பவற்றைச் சற்று விவரித் தார். உபதேசத்தை அறிந்திருந்தால் போதும் என்று பவுல் மறைமுகமாய்க் குறிப்பிடவில்லை. நாம் இருக்கும் நிலைக்குத் தக்காற் போன்று நடந்து கொள்ளக் கூடும்படி நாம் யார் என்பதை அறிய வேண்டும் என்றே அவர் விரும்பினார்.*

*அதிகாரம் 4 முதல் 6 வரையுள்ள பகுதியானது நாம் இருக்கும் நிலைக்குத் தக்காற் போன்று செயல்படுவது எப்படி என்று நமக்கு காண்பிக்கின்றன. பவுலின் வார்த்தைகள் தேவனுடைய பிள்ளைகளைச் சித்தரிப்பதுடன், அவர்கள் உண்மை உலகில் தேவனுடைய பிள்ளைகளாய் வாழ என்ன செய்கின்றனர் என்பதையும் எடுத்துரைக்கின்றன. இந்த மூன்று அதிகாரங்களுக்கான ஒரு எளிய வரைக்குறிப்பு பின்வருமாறு:*

*1. இசைவு (4:1-16) - கிறிஸ்துவின் சரீரத்தினுடைய ஒருமைப்பாட்டிற்கு மிக உயர்ந்த முன்னுரிமை கொடுங்கள்.*

*2. பரிசுத்தம் (4:17-6:9) - அன்றாட வாழ்வில் தேவபக்தியை*

*மும்முரமாய் நாடுங்கள்.*

*3. பகை உணர்வு (6:10-23) - வழியின் ஒவ்வொரு அடிவைப்பிலும் சாத்தானுடைய எதிர்ப்பு இருக்கும் என்பதை எதிர்பாருங்கள்.*

*"ஊசற் பலகையின்" ஒரு முனையில் சபையைப் பற்றிய அறிவு உள்ளது. இது, கிருபையின் கருத்தைப் பற்றிக் கொள்ளுதல், மீட்பின் தேவையை உணர்ந்தறிதல், இரகசியத்தின் மீது வியப்படைதல், மற்றும் இரட்சகரின் அன்பை அளக்கத் தேவையான வல்லமையை ஆழ்ந்து சிந்தித்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.*

*"ஊசற் பலகையின்" மறுமுனை பற்றிய விஷயம் என்ன? தேவனுடைய சபையாக வாழ்தல் பற்றிய விஷயம் என்ன? பிறரைப் பற்றிய வீண் பேச்சு இன்னும் ஏன் நிலவுகின்றது? நியாயத்தீர்க்கும் ஆவிகள் பற்றிய விஷயம் என்ன? கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இடித்து வீழ்த்தக்கூடிய நோக்கங் கொண்ட வார்த்தைகளை நாம் எவ்வாறு கையாள வேண்டும்? கிறிஸ்துவின் அன்பு குறித்த பிரசங்கம் ஒன்றை நாம் ருசித்துக் கேட்டறிந்தும் கூட, கணவன் மீதோ அல்லது மனைவி மீதோ அன்பற்று நடக்க முடிவது எப்படி? "கர்த்தாவே உமது நாமத்தை உன்னதத்திற்கு உயர்த்துகின்றேன்" என்பது போன்ற கீதங்களைப் பாடிவிட்டு, நாம் நமக்குக் கர்த்தர் கொடுத்துள்ள பெற்றோர்களை மரியாதையின்றி நடத்தக் கூடுவது எப்படி?*

*நீங்கள் பவுலின் நிலைப்பாட்டைக் காண்கின்றீர்களா? தேவனுடைய மக்கள் அறிய வேண்டியவற்றை அறிந்திருப்பதற்கு மட்டுமல்ல, ஆனால் தேவனுடைய மக்கள் வாழ்கின்ற வகையில் வாழ்வதற்காகவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.*

## *அழைப்பு*

*மீண்டும் 4:1ஐ வாசித்துப் பாருங்கள்: "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து." பவுல், வலிவுத் தன்மையைத் தெரிவிப்பதற்காக "வேண்டுதல்" அல்லது "புத்தி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் என்று நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். "பாத்திரவான்களாக" என்ற வார்த்தையானது, நாம் யார் மற்றும் கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ளது என்ன என்ற உபதேசத்திற்கும் நமது வாழ்வை நாம் வாழும் வகையில் நமது அழைப்பு ஏற்படுத்துகின்ற நடைமுறை மாற்றத்திற்கும் இடையில் சமானத்தன்மை தேவை என்பதை எடுத்துரைக்கின்றது.*

*நாம் இன்னும் ஒரு வார்த்தையை ஆய்வு செய்வோம்: "அழைப்பு" (Gk.: klesis). பவுல், "... நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான் களாய் நடந்து" என்று எழுதினார். "அழைப்பு" என்பது இன்னொரு நபரை அருகில் வரும்படி கூறும் கருத்துடன் பேசுதல் என்ற அர்த்தம் கொண்ட வேர் வினை/மூல வினைச் சொல்லில் இருந்து வருகின்றது. எனது குழந்தைப் பருவத்தின் போது, எனது தாயார், இரவு உணவைத் தயாரித்து முடித்த பின்னர், எங்களை அழைப்பார். குடும்பம் முழுவதும் ஒன்றுகூடி உணவு*

*உண்ண வேண்டும் என்று அவர் விரும்பினார். அது, இவ்வினைச் சொல்லின் அடிப்படைக் கருத்தைப் பற்றிப்பிடிக்கின்றது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் தேவனிடத்திலிருந்து அழைப்பைப் பெற்றுள்ளோம். அவர் தம் வசனத்தின் மூலமாகவும் தம் குமாரனின் மூலமாகவும் நம்மிடம் பேசியுள்ளார், ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் அவரிடத்தில் ஒன்று கூட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.*

*புதிய ஏற்பாட்டில் "அழைப்பு" என்பதற்கான வினைவடிவமானது ஒரு நபருக்கு ஒரு குறிப்பிட்ட பெயரை ஒப்படைக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. மரியாள் ஒரு மகனைப் பெறுவாள் என்றும் அவர் இயேசு என்றழைக்கப்படுவார் என்றும் யோசேப்புக்குக் கூறப்பட்டது (மத். 1:21). இயேசுவுக்கு நாம் கீழ்ப்படிதலுடன் பதில் அளிக்கின்ற பொழுது, தேவன் நமக்குப் புதுப் பெயர்கள் அல்லது பட்டங்கள் அளிக்கின்றார். அவர் நம்மை, ''பரிசுத்தவான்கள்,'' ''மகன்கள் மற்றும் மகள்கள்,'' ''பிள்ளைகள்,'' ''மீட்கப்பட்டவர்கள்,'' ''கிறிஸ்துவுடன் சுதந்தரர்கள்,'' ''அவருடைய செய்கை," மற்றும் "அவருடைய வீட்டார்" என்று அழைக்கின்றார்.*

*யாரேனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொறுப்புக்கு நியமிக்கப்படும் பொழுது இதே வினைச் சொல்லானது தோன்றுகின்றது. பவுல், தாம் அப்போஸ்தலராயிருக்கும்படி "அழைக்கப்பட்டதாக" கூறினார் (ரோமர் 1:1). ஒரு பணிப் பொறுப்புக்கென்று தேவன் பவுலைத் தேர்ந்தெடுத்தார். நமக்கான அழைப்பு நமது பொறுப்புக்களையும் உள்ளடக்குகின்றது: நாம் ஊழியம் செய்வதற்கென்றே இரட்சிக்கப்பட்டுள்ளோம். இவ்வுலகிற்கு இயேசுவைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற பணிப்பொறுப்பிற்காகத் தேவன் நம்மைத் தனியே பிரித்து வைத்துள்ளார்.*

*"அழைத்தல்" என்ற வினைச் சொல்லானது மூன்றாவது வகையில், ஒரு விருந்திற்கு அழைப்பதை எடுத்துரைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. மத்தேயு 22ல் இயேசு, திருமண விருந்து பற்றிய ஒரு உவமையைக் கூறினார். ஒரு அரசன் பெரிய விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தான். அவன் அவ்விருந்தில் கலந்து கொள்ளும்படி மக்களை அழைப்பதற்காகத் தனது வேலைக்காரர்களை அனுப்பினான். கிறிஸ்துவுக்குள் நாம் தேவனுடைய இராஜ்யத்தின் விருந்தில் கலந்து கொள்வதற்கான தனிப்பட்ட அழைப் பிதழைப் பெற்றுள்ளோம். வெளி. 19:9 வசனமானது, "ஆட்டுக்குட்டி யானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான் கள்" என்று கூறுகின்றது.*

*கடைசியாக, புதிய ஏற்பாட்டில் "அழைப்பு" என்பது நீதிமன்றத்தின் அழைப்பாணைப் பற்றிய வகையிலும் காணப்படுகின்றது. பேதுருவும், யோவானும் ஆலோசனை சங்கத்தின் முன்னதாக வரும்படி அழைக்கப் பட்டனர் (அப். 4:18). பவுல் பேலிக்ஸின் முன்னதாக வரும்படி அழைக்கப் பட்டார் (அப். 24:2). அழைத்தல் என்பது கணக்கு ஒப்புவிப்பதற்கென்று ஒரு நீதிபதியின் முன்னால் வரும்படியான ஒரு அழைப்பாணையைக் குறிப்பிட முடியும். இது நமக்கான அழைப்பின் ஒரு பாகமாக இருப்ப தில்லையா? நாம் எல்லா நியாயாதிபதிகளுக்கும் நியாயாதிபதியானவருக்கு முன்பு வரும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம்.*

"அழைக்க" என்பது எல்லா உட்பொருள்களும் இணைக்கப்பட்ட நிலையில், இவ்வார்த்தையானது, மற்றவர்களை நெருக்கமாய் கொண்டு வருவதற்காக அவர்களிடம் பேசுதல் என்று அர்த்தப்படுகிறது. தேவன் நம்மை மகன்களென்றும் மகள்களென்றும் அழைப்பதன் மூலம் இதனைச் செய்கின்றார். ஊழியத்திற்கென்று அவர் நம்மை அழைக்கையில் நம்மை அவர் நெருக்கமாய்க் கொண்டு வருகிறார். அவர் நமக்கு, ஆட்டுக் குட்டியானவரின் திருமண விருந்திற்கான அழைப்பிதழைக் கொடுப்பதன் மூலம் நம்மை நெருக்கமாய்க் கொண்டு வருகின்றார். நம் வாழ்வு யாவும் முடிகிறபோது நியாயாதிபதி முன்பாகக் காணப்பட வேண்டுமென்று அழைப்பாணை விடுத்தலின் மூலம் அவர் நம்மை இன்னும் அதிகம் நெருக்கமாகக் கொண்டு வருகின்றார்.

செயல்விளைவில், எபேசியருக்கு எழுதிய நிருபமானது, நமக்கு "கிறிஸ்தவர்களே, அழைப்பிற்கேற்றவாறு வாழுங்கள். தேவன் அழைத்துள்ள மக்களைப் போல வாழுங்கள். நீங்கள் யார் என்பதை மறந்து விடாதீர்கள். அழைப்புக்கு ஏற்றாற் போன்று வாழுங்கள்" என்று கூறுகிறது.

அதைச் செய்வதைக் காட்டிலும் கூறுதல் என்பது எளிதாக உள்ளது. இன்றைய நாட்களில் சிலர் கூறுவது போல, "நீங்கள் பேச்சைப் பேச முடியும், ஆனால் நீங்கள் நடையை நடக்கின்றீர்களா?"

## முடிவுரை

பள்ளியின் கௌரவம் என்பது இளம் உயர்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடத்தில் அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றது. பள்ளி அலுவலர்கள் பள்ளிப் பாரம்பரியங்களின் மீதான பற்றுறுதியை பள்ளியின் மதிப்பீடுகளை மீண்டும் நினைத்துப் பார்க்கின்றதையும் வலியுறுத்து கின்றனர். நான் பள்ளிக்குச் சென்ற காலத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. பெரும்பாலான பெரியவர்கள் தங்கள் பள்ளிகளின் அழைப்புக்கு ஏற்ற வகையில் வாழ்வதற்கான பொறுப்பை இன்னமும் கூட நினைவில் கொண்டு வர முடியும்.

இந்த வேத வசனமானது—அவரைப் போல் இருத்தல் என்ற-இன்னொரு அழைப்புக்கேற்ற வகையில் வாழும்படிக்கு நமக்கு அறைகூவல் விடுக்கின்றது. நாம் தேவனுடைய மகன்களாகவும் மகள்களாகவும் இருக்கின்றோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்வது என்பதன் அர்த்தம் என்ன என்பதை நமக்குக் காண்பிப்பதற்காக இயேசு தேவ குமாரனாக இப்பூமிக்கு வந்தார். நாம் அழைக்கப்பட்டவர்களாயிருத்தல் என்பது எவ்வாறு என்பதை அவர் நமக்குக் காண்பித்துள்ளார். நீங்கள் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு உண்டான அழைப்புக்கேற்ற வகையில் வாழ்கின்றீர்களா?

நீங்கள் பின்வரும் வழிமுறைகளில் "அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடந்து கொள்ள" முடியும்: (1) உங்கள் ஆவிக்குரிய நிலையைப் பரிசோதித் தறியுங்கள்: உங்கள் அழைப்புக்குப் பொருந்தாத வகையில் உங்கள் வாழ்வில் உள்ள அம்சங்களைக் காண்பிக்கும்படிக்குத்/வெளிப்படுத்தும்படிக்குத்

தேவனிடம் கேளுங்கள். (2) தேவைப்படுகின்ற ஒரு மாற்றத்தைத் தேர்ந்து கொண்டு, இவ்வாரத்தில் அதைக் குறித்துச் செயல்படத் தொடங்குங்கள். நாம் குறிப்பிட்ட செயல்களில் திட்டவட்டமாய் ஈடுபடும் பொழுது மாற்றம் நடைபெறுகிறது. இந்த வாரத்திற்கென்று ஒரு இலக்கைத் திட்டவட்டப்படுத்துங்கள். அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று நீங்கள் ஆராதனைக் கூட்டத்திற்குத் திரும்பச் செல்லும் பொழுது, “அழைப்புக்குப் பாத்திரவானாக” வாழ்வை வாழ்வதில் உங்களுக்கு இன்னொரு அடி எடுத்து வைக்க உதவியதற்காக தேவனுக்கு நீங்கள் மகிமை செலுத்த முடியும்.

# ஒருமைப்பட்டிருத்தல்
# (4:2-6)

*ஒரு நாள் இரவில் தனது இரு பிள்ளைகளுடன் இரவு உணவுவை உண்ணச் சென்ற தாயைப் பற்றிய கதையொன்று கூறப்படுகின்றது. அவர்கள் உணவைப் பாதியளவு உண்டு முடித்த வேளையில் அந்த உணவுச் சாலையில் மக்கள் நிரம்பி வழியத்தொடங்கினர். அது ஒரு குடும்பம் மீண்டும் ஒன்றுகூடுதல் போன்று காணப்பட்டது. உள்ளே நுழைந்த ஒவ்வொரு நபரும் அங்கிருந்த குழுவினரால் வாழ்த்தி அணைக்கப் பட்டனர். புன்னகைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன; காற்றில் சிரிப்புகள் நிரம்பின. மக்கள் ஒருவருக்கொருவர், "நான் உன்னை நேசிக்கிறேன்" என்றும் "யாருடனேனும் பேச வேண்டியது அவசியமாய்த் தோன்றினால், உடனே என்னைக் கூப்பிடு" என்றும் கூறிக் கொண்டனர்.*

*உணவுச் சாலையை விட்டுப் புறப்படும் முன்னர், அந்தப் பெண் அங்கிருந்த பணிப் பெண் ஒருத்தியிடம் அந்தக் குழுவில் இருந்த மக்களைப் பற்றி விசாரித்தாள். அந்தப் பணிப் பெண், "இவர்கள் ஒவ்வொரு சனிக் கிழமையிலும் தங்கள் மது அருந்தும் பழக்கத்தை நிறுத்த முயற்சிக்கும் கூட்டம் முடிந்த பின்னர் இங்கு வருகின்றனர்" என்று கூறினாள். அந்தப் பெண்மணியின் பதிமூன்று வயது மகன், "ஒன்றாய் இணைந்திருக்க வேண்டுமென்றால், ஒருவர் மதுபானம் அருந்துபவராய் இருக்க வேண்டுமா?" என்று கேட்டான். அந்தப் பெண்மணி தான் அன்பையும் ஆதரவையும் காணக்கூடியதான நெருக்கமாய்ப் பிணைக்கப்பட்ட ஒரு குழுவில் அங்கம் வகிக்க ஏங்கினாள்.*

*தனிமையில் உள்ள மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்கான உதவியை எங்கு கண்டறிய முடியும்? அவர்கள் சார்ந்திருக்கும் உணர்வை எங்கு கண்டறிய முடியும்? எந்தக் குழுவாவது ஒவ்வொருவருக்கும் ஆதரவளிக்க முடியுமா? அப்படிப்பட்ட குழு ஒன்று நிலவுகின்றது. நீண்ட காலத்திற்கு முன்பே தேவன் அதை நிலவச் செய்துள்ளார். அதைப் புதிய ஏற்பாட்டு சபை என்றும் கிறிஸ்துவின் சரீரம் என்றும் மற்றும் தேவனுடைய குடும்பம் என்றும் குறிப்பிடுகிறது.*

*தனிமையில், கைவிடப்பட்டு, போராடிக் கொண்டிருப்பவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களில் கிறிஸ்துவின் சரீரமானது அன்புகூர வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அவர் சபையை, வாழ்வின் எல்லா நடை களிலும் இருந்து வந்து, ஒருவர் பிறருக்கு ஒப்புக் கொடுத்தலுடன், ஒருவர் பிறருக்கு ஊழியம் செய்து, ஒருவர் பிறர்மீது இரக்கம் காட்டி, மன்னித்து, உற்சாகம் ஊட்டி, ஒருமைப்பட்டு நிற்கிற மக்களின் கலவையாக இருக்கும்*

*படி வடிவமைத்துள்ளார்.*

*பின்வரும் அடிப்படை சத்தியத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில் நாம் எவ்வளவு அதிகமாய் ஒன்றுபட்டிருக்கின்றோமோ, அவ்வளவு சுலபமாக மக்கள் நம் மூலமாக தேவன் அவர்களுக்கு உண்மையில் அளிக்கின்றவை என்ன என்பதைக் காண்பார்கள்.*

*இவ்வகையான ஒருமைப்பாட்டைக் குறித்தே பவுல் எபேசியர்களுக்கு எழுதினார்:*

> *ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே, நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (4:1-6).*

*4:3ல் பவுல், கிறிஸ்தவர்கள், ''சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாய்'' இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். ''ஜாக்கிரதையாய் இருத்தல்'' என்பதற்கான கிரேக்க வினைச் சொல்லான spoudazo, என்பது ஏதொன்றையும் பின்னாகப் பற்றிக் கொண்டிராத நிலை என்றும் அர்த்தம் தருகின்றது. இந்த வினைச் சொல்லின் காலமானது நாம் இதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும் என்று சுட்டிக் காண்பிக்கின்றது.*

*இதுவே, கிறிஸ்து தம்முடைய சபைக்குக் கொண்டிருந்த முன்னுரிமையாக இருந்தது. இயேசு தம் கைகளில் ஆணிகளில் துளைக்கப்பட்டுச் சிலுவையில் உயர்த்தப்படுவதற்குச் சற்று முன்னதாக, அவர் பின்வருமாறு ஜெபித்தார்,*

> *நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.*
>
> *அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர் களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை*

*யும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா. 17:20-23).*

*மக்கள் அன்பினால் ஒருவரையொருவர் தாங்குவதையும் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்வதற்குத் தங்களால் இயன்றவற்றை கொடுப்பதையும் காண இயேசு நம்பிக்கையாய் இருக்கிறார். அவர் தம் ஜெபம் பதில் அளிக்கப்படுவதைக் காண்பதற்கு ஆவலாய் இருக்கிறார்.*

*இந்த ஒருமைப்பாடு எவ்வாறு சாதிக்கப்படுகிறது?*

## தேவன் ஒருமைப்பாட்டை அளிக்கின்றார்

ஒருமைப்பாடு தேவனிடமிருந்தே தொடங்குகின்றது. பவுல் பின்வரும் ஏழு "ஒரு" சொற்பதங்களை எழுதினார்: "ஒரே சரீரம் ... ஒரே ஆவி ... ஒரே நம்பிக்கை ... ஒரே கர்த்தர் ... ஒரே விசுவாசம் ... ஒரே ஞானஸ் நானம் ... ஒரே தேவன்." இந்த ஏழு சொற்றொடர்களின் வலியுறுத்தமாக உள்ளவர் தேவனே, குறிப்பாக தேவனுடைய ஒருமைத் தன்மையே வலியுறுத்தம் பெறுகிறது என்பதைக் கவனியுங்கள். ஒருமைத் தன்மையின் கருத்தானது தேவனிடத்திலிருந்து பிரிக்க முடியாததாக உள்ளது. பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் ஆகியோர் ஒன்றாக உள்ளனர். திரித்துவத் தில் எந்த விதமான போட்டி/எதிர்ப்பும் நிலவுவதில்லை. தேவத்துவத்தில் நாம் பரிபூரணமான ஒருமைப்பாட்டைக் காண்கின்றோம்.

தேவத்துவத்தின் இந்த இன்னொரு உலகத்துவ ஒருமைப்பாட்டிலிருந்து இந்த உலகத்திற்கு அந்த ஒருமைப்பாட்டின் பிரதிபலிப்பு வருகிறது. இது கிறிஸ்துவின் சரீரத்தில் காணப்படுகின்றது. ஒரே சரீரம் என்பது தேவனுடைய கண்களிலும் சிந்தையிலும் ஒருமைப்படுத்தப்பட்டுள்ளது. சரீரத்தை ஒன்றுகூட்டக்கூடிய ஒரே ஒரு ஆவி உள்ளது என்ற காரணத்தினால் ஒரே ஒரு சரீரமே உள்ளது.

இந்த ஒருமைப்பாடு நம் உலகத்திற்கு ஒரே நம்பிக்கை, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் மற்றும் - எல்லாவற்றிற்கும் மேலாக - ஒரே கர்த்தருடன் வருகின்றது. நாம் ஒரே கர்த்தரில் விசுவாசம் கொள்கின்றோம். நாம் ஒரே கர்த்தருக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம். நாம் அந்த ஒரே கர்த்தரின் மறுவருகையில் நமது நம்பிக்கையை வைத்துள்ளோம்.

ஒன்றுபட்டிருத்தல் என்பது ஒரு குடும்பத்தில் - தேவனுடைய குடும்பத்தில் - நமது உலகிற்கு வருகின்றது. நமக்கு ஒரே ஒரு "தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக் குள்ளும் இருக்கிறவர்" என்பதால் ஒரே ஒரு குடும்பமே நிலவுகின்றது.

கிறிஸ்தவர்கள் " ... சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாய்" இருக்க வேண்டும் என்று பவுல் கூறிய பொழுது, நாம் ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தவில்லை. அதை தேவன் மட்டும் உருவாக்க முடியும். நாம் கிறிஸ்துவுக்குள் வந்தபொழுது, ஒருமைப்பட்டவர்களானோம். நாம் அதே பிதாவையும், அதே கர்த்தரையும் மற்றும் அதே ஆவியானவரையும்

நமக்குள்ளாக வாசம்பண்ணப் பெற்றுள்ளோம். அதைத் தேவனே செய்துள்ளார்.

தேவன்மீது கவனம் செலுத்தும்படி வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. அது, கிறிஸ்தவர்கள் பிதாவாக, குமாரனாக, பரிசுத்த ஆவியாக உள்ள தேவன்மீது கண்ணோக்கம் கொள்ள அழைக்கின்றது. அவரை நாம், பரிபூரணமான ஒருமைப்பாட்டின் தேவனாக, பரிசுத்தமான இணக்கத்தின் தேவனாக, தெய்வீக ஒருமையின் தேவனாக, நித்திய ஐக்கியத்தின் தேவனாகக் கண்ணோக்க வேண்டும். ஒருமைப்பாடு, இசைவு மற்றும் அன்பின் உண்மையான அர்த்தத்தை நாம் தேவனுக்குள் கண்டு பிடிக்கின்றோம். தேவனுக்குள் இந்தப் பண்புகளை எதிர் கொண்டுள்ள நாம் இவற்றைக் கிறிஸ்துவின் சரீரத்தின் மூலம் நமது உலகிற்குக் காண்பிக்க முயற்சி/பிரயாசம் மேற்கொள்கின்றோம்.

## ஒருமைப்பாட்டை மேம்படுத்துகிற எண்ணப்போக்குகள்

நாம் ஒருமைப்பாட்டை உருவாக்க முடியாது, ஆனால் ஒருமைப் பாட்டை மேம்படுத்துகின்ற வகையில் நாம் நடந்து கொள்ள முடியும். கிறிஸ்தவர்கள், "மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் ... " (4:2) நடந்து கொள்ள வேண்டுமென்று பவுல் புத்தி கூறினார். மூன்று இன்றியமையாத எண்ணப்போக்குகளைப் பவுல் அப்போஸ்தலர் இங்கு குறிப்பிட்டார்:

முதலாவது அவர், கிறிஸ்தவர்கள் மிகுந்த "தாழ்மை"[1] உள்ளவர்களா யிருக்க வேண்டும் என்று கூறினார். தாழ்மை என்பது எங்கிருந்து வருகின்றது? தாழ்மை என்பது நீங்களே உங்கள் வாழ்வில் கொண்டிருக்கும் படி தீர்மானிக்கின்ற விஷயமாக உள்ளதா?

தாழ்மை என்பது தேவனை எதிர்கொள்வதிலிருந்து வருகின்றது. வேதாகமத்தில் தாழ்மைக்கு உதாரணங்களாய் இருந்துள்ள மக்கள் எல்லாரும் பொதுவான பண்பு ஒன்றை - தேவனை எதிர்கொண்டிருத்தல் என்பதை - கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவனுடைய மாபெரும் தன்மை, வல்லமை மற்றும் மகத்துவம் ஆகியவற்றினால் திகைப்புக்குட் படுத்தப்பட்டிருந்தார்கள். இது மோரியா மலையின் மீது ஆபிரகாமுக்கு நடைபெற்றது (ஆதி. 22:1-18), மற்றும் எரியும் புதரினருகில் மோசேக்கு நடைபெற்றது (யாத். 3:1 - 4:17). சிருஷ்டிகருடைய வான மண்டலக் கை வேலைப்பாட்டினால் தாவீது திகைப்பும் பயபக்தியும் அடைந்தார் (சங். 19). தீர்க்கதரிசியான ஏசாயா தேவாலயத்தில் கர்த்தரை முகம் முகமாய்த் தரிசித்த பொழுது தனது குறையை உணர்ந்தார் (ஏசா. 6:1-5); மற்றும் பத்முவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த அப்போஸ்தலரான யோவான், மனுஷ குமாரனுடைய கால்களில் வீழ்ந்தார் (வெளி. 1:12-17). தேவனுடைய மாபெரும் தன்மையை எதிர்கொள்ளுதல் என்பது மக்களை முழங்காலிடச் செய்கின்றது.

தேவனுடைய மாபெரும் தன்மையை நாம் உணர்ந்தறியும் வரையிலும் பெருமை நம்மில் மேலோங்கியிருக்கும். நகல் எடுக்கும் இயந்திரத்தில் ஒரு உருவப்படமானது அதற்குப் பொருத்தமான அளவில் சுருங்குவது போலவே பெருமையானது தேவனைப் பற்றிய நமது கருத்தைச் சுருங்கச் செய்கின்றது. மேலும் பெருமையானது மற்ற மக்களில் நாம் காணும் மதிப்பீட்டைக் குறையச் செய்யக் காரணமாகின்றது. தேவனுடைய மாபெரும் தன்மையை முகமுகமாய் எதிர்கொள்ள வருதல் என்பது நமது மதிப்பீடுகளைத் தக்க வகையில் நிலைப்படுத்துகின்றது. தேவனை அவர் உண்மையில் உள்ளவாறே காணுதல் என்பது நாம் நம்மையும் பிறரையும் கண்ணோக்கும் வழிமுறையை மாற்றுகிறது.

இசைவை மேம்படுத்துகின்ற இரண்டாவது எண்ணப்போக்குப்பற்றிப் பவுல் எடுத்துரைத்தார்: "சாந்தம்"[2] சாந்தம் என்றால் என்ன? அது என்னவாக இருப்பதில்லை என்று உங்களுக்கு நான் காண்பிக்க இயலும். ஒரு நாள் நான் எனது காரை போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்கின் அருகில் நிறுத்தினேன். இன்னொரு திசையில் பயணித்த கார் ஒன்றுக்கு இடது புறம் திரும்பும்படி சைகை அளிக்கப்பட்டிருந்தது. அதன் ஓட்டுநர் எனக்கு முன்னாகத் திரும்பிக் கொண்டிருந்தார் - குறைந்தபட்சம் அது அவரது நோக்கமாய் இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, அந்தத் திருப்புதலின் பாதியில் அந்தக் காரானது நடுக்கம் கொண்டது போலச் செயல்பட்டது. அது புகையைக் கக்கவும் பின்னோக்கி நகரவும் தொடங்கிற்று. போராடிக் கொண்டிருந்த அந்தக் காருக்குப் பின்னால் பச்சை நிற லாரி ஒன்று நின்றிருந்தது, அதில் இருந்த எரிச்சலுற்ற ஓட்டுநருக்குப் பல இடங்கள் சென்று பல வேலைகள் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. ஓட முடியாத அந்தக் காரை நோக்கித் தனது ஒலிப்பானை உரத்து முழக்கிய அவர் பண்பற்ற வார்த்தைகளால் அந்த ஓட்டுநரைத் திட்டினார்.

நான், "நாம் நமது விருப்பத்தின்படி செய்யாத மக்களை இவ்விதமாகத் தானே நடத்துகின்றோம். மக்கள் பிரச்சனைகளைக் கொண்டுள்ள பொழுது தவறு செய்கிறபோது அல்லது நம் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இருக்கத் தவறுகிறபொழுது நாம் அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்கின்றோம்" என்று நினைத்துக் கொண்டேன்.

நாம் சாந்தத்துடனும், கோபம் அல்லது விரோதங்களைப் பற்றிக் கொண்டிராமலும் செயல்படும்படி இயேசு நம்மை அழைக்கின்றார். நாம் சாந்தமுள்ளவர்களாய் இருக்கக் கூடும்படிக்கு இயேசு நமக்குத் தம்முடைய ஆவியைத் தருகின்றார்.

சபையில் இசைவை மேம்படுத்துகிற மூன்றாவது எண்ணப்போக்காக உள்ளது "பொறுமை" (Gk.: *makrothumia*) அல்லது "நீடிய பொறுமை" என்பதாகும். இதற்கான மூல கிரேக்க வார்த்தையானது, "நீடிய பொறுமையுடைய" என்று அர்த்தப்படுகின்றது. நாம் "முன் கோபம் கொள்ளுகின்ற" என்பதன் மூலம் எதனை அர்த்தப்படுத்துகின்றோமோ, அதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இக்குணம் உள்ளது என்ற கருத்தை இது அறிவிக்கின்றது. முன்கோபங்கள் என்பவை சபைக்கு உரியவை அல்ல.

உணவுப் பொட்டலம் ஒன்றை நீங்கள் எப்பொழுதாவது ஆய்வு

செய்தது உண்டா? அப்பொட்டலத்தின் வெளிப்பக்கத்தில் நல்ல ஊட்டத்திற்கான குறைந்தபட்சத் தேவைகளின் பட்டியல் ஒன்றை நாம் அடிக்கடி காண்கின்றோம். அது நாம் ஆரோக்கியமாய் வாழ்வதற்குத் தேவையான உயிர்ச் சத்துக்களின் பெயர்கள் மற்றும் அளவுகளைப் பட்டியலிடுகின்றது. நமது வேத வசனப் பகுதியில், பவுல் கர்த்தருடைய சபையில் ஒருமைப்பாட்டிற்கு அவசியமான குறைந்தபட்சத் தேவைகளை அட்டவணைப் படுத்துகின்றார்: தாழ்மை, சாந்தம் மற்றும் பொறுமை.

## ஒருமைப்பாட்டை பாதுகாக்கின்ற செயல்பாடு

ஒருமைப்பாட்டைப் பராமரிப்பதற்குத் தேவையான எண்ணப் போக்குகளுடன் கூடுதலாக ஒரு அவசியமான செயல்பாட்டையும் பவுல் கொடுத்தார். அதை அவர், "அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி" என்று அழைத்தார் (4:2). அது மக்களைச் சகித்துக் கொள்வதை உள்ளடக்குகின்றது, ஆனால் ஒன்றும் செய்யாமலிருப்பது என்று அல்ல. இது வெறுமனே நமது பற்களைக் காட்டுவதோ, நமது கைகளைப் பிணைப்பதோ மற்றும் இயேசு மீண்டும் வரும் வரையில் ஒருவர் பிறரைச் சகித்துக் கொண்டிருப்பதோ அல்ல; இது ஒருவர் பிறரிடமிருந்து மிகச் சிறந்தவற்றைத் துடிப்புடன் நாடுவதாக உள்ளது.

"அன்பு" என்ற வார்த்தையை நாம் கண்டுகொள்ளாமல் விடக்கூடாது. நாம் அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும். அன்பைப் பற்றிய பவுலின் (பின்வரும்) விவரிப்பை நினைவில் கொள்ளுங்கள்:

> அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது (1 கொரி. 13:4, 5).

மயில் மற்றும் கொக்கு பற்றிய பின்வரும் கதையை ஈசாப் கூறினார்:

> ஒரு நாள் மயில் ஒன்றும் கொக்கு ஒன்றும் சந்தித்தன, மயில் தனது அழகிய தோகையை விரித்துத் தன்னைச் சுற்றிப் பரப்பி, கொக்கை அது ஒரு அற்பப் பிறவி என்பது போன்றும் அது தனது பெருமை மிக்க கவனத்திற்குத் தகுதியற்றது என்பது போன்றும் விரோதப் பார்வை பார்த்தது.
>
> இந்தத் துடுக்கான, வன்மம் மிகுந்த நடக்கையை கொக்கு விரும்பவில்லை, எனவே அது மயிலுக்குக் கேட்கும்படியாக உரத்த குரலில், "மயிலின் இறகுகளினால் மயில்கள் நேர்த்தியான பறவைகளாயிருக்கலாம், ஆனால் அவற்றைக் கொண்டு அவை மேகங்களில் உயரப் பறக்க முடியாதென்பது பரிதாபத்திற்குரியதாகும்" என்று கூறியது. பின்பு மயில் இதற்கு முன் கொண்டிருந்த தற்பிரியத்தில் பாதி கூடக் கொண்டிராத நிலையில் அதை விட்டுவிட்டு, கொக்கு தனது பெரிய, பலத்த சிறகுகளை விரித்துப் பறந்து சென்றது.[3]

உள்ளூர் சபைகள் நிலவுகின்ற வரையிலும் அவற்றில் உள்ள மக்கள் பக்குவம், குடும்பப் பின்னணி, திருமண நிலை, வயது, அக்கறைகள் மற்றும் ஆளுமைத் தன்மை ஆகியவற்றில் மாறுபடுவார்கள். தேவனே மயிலையும் கொக்கையும் படைத்தார், அவற்றை அவர் மாறுபட்டவைகளாகப் படைத்தார். தேவன் நம்மையும் படைத்தார். நாம் மாறுபட்டவர் களாயிருக்கும்படியாகவே அவர் நம் யாவரையும் படைத்தார், ஆனால் உங்களை இரட்சித்த அதே கர்த்தர்தாம் என்னையும் இரட்சித்தார். உங்களில் வாசம் பண்ணுகின்ற அதே பரிசுத்த ஆவியானவர்தாம் உங்களுக்கு அடுத்து அமர்ந்துள்ள கிறிஸ்தவரிலும் வாசம் பண்ணுகின்றார். உங்களைத் தமது பிள்ளையாக அழைக்கின்ற அதே பிதாதாம் உள்ளூர் சபையில் உள்ள மற்ற ஒவ்வொரு உறுப்பினரையும் தமது பிள்ளையாகக் காண்கின்றார்.

ஆம், நீங்கள் சுற்றுமுற்றும் நோக்கி, எப்பொழுதுமே தேவனுடைய பிள்ளைகளாக நடந்து கொள்ளாத மக்களைக் காண முடியும். நான் விழும் பொழுது, நீங்கள் அன்பினால் என்னைத் தாங்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். நீங்கள் தடுமாறும் பொழுது, உங்களை நான் தாங்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நமக்கு மத்தியில் நாம் ஒரு பிரிவினையைக் கொண்டிருந்தால் நீங்களோ அல்லது நானோ கிறிஸ்துவுக்குள் வளர முடியாது.

## முடிவுரை

கிறிஸ்துவின் சரீரம் என்பது இவ்வுலகம் காண்பதற்கென்று தேவனால் படைக்கப்பட்ட விசுவாச சமுதாயமாக உள்ளது. சபையில் மக்கள் நட்புறவு, நம்பிக்கை, ஆதரவு, உற்சாகமூட்டுதல் ஆகியவற்றைக் கண்டறிய முடியும். தேவன் தம்முடைய இயல்பில் இருந்தே நமக்கு நமது ஒருமைப்பாடு வருகின்றது. இந்தக் காரணத்தினால் நாம், "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்."

உள்ளூர் சபையில் ஒருமைப்பாட்டைப் பராமரிக்க நீங்கள் என்ன செய்யக் கூடும்?

சபை ஒருமைப்பாட்டை உங்கள் வாழ்வின் உயர்வான முன்னுரிமை யாக்குங்கள். ஒருமைப்பாடு என்பது தேவனுடைய இயல்பில் வேரூன்றப் பட்டதாக உள்ளது. அதை உயர்வாக மதிப்பிடுங்கள். சபையில் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பி பலப்படுத்தும்படி தேவனிடத்தில் ஜெபியுங்கள். ஒருமைப்பாட்டிற்கான உங்களின் தனிப்பட்ட ஜெபத்தைத் தேவன் கேட்பார்.

எண்ணப்போக்கில் சரிப்படுத்துதல்களை ஏற்படுத்துங்கள். பிரிவினைக் கருத்தானது, சுயநலம் மற்றும் மேன்மை பாராட்டுதல் ஆகியவற்றிலிருந்து வந்ததை அறிய முடியும். தேவனுடைய மாபெரும் தன்மையில் இவ்விரண்டும் மறைந்து ஒழிகின்றன. மக்களுடனான நமது இடர்ப்பாடு என்பது, உண்மையில் மக்களுடனானதாக இருப்பதில்லை. அது நம்மில் ஒவ்வொருவரும் தேவனைப் பற்றிய போதிய அளவு அறிவில்லாமல்

*இருப்பதினாலேயே உண்டாகின்றது, நாம் தேவனைப்பற்றி கீதங்கள் பாடுவதும், தேவனை மேன்மைப்படுத்தச் சங்கீதங்கள் வாசிப்பதும், அவருடைய பிரசன்னத்தில் அமர்ந்து அவர் மீது சிந்தையைச் செலுத்துவதும் அவசியமாகின்றது. அப்பொழுது மக்களை நோக்கிய நமது எண்ணப் போக்கில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு நாம் மிகவும் வியப்படைவோம்.*

*நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். சபையை ஒருமைப்படுத்தத் திட்டவட்டமாக உதவுவது எது என்பதை அடையாளம் கண்டு, அதைச் செய்யத் தொடங்குங்கள். இது புறங்கூறுதலை மறுத்தல், யாரேனும் ஒருவருடன் ஒப்புரவாகுதல், ஒரு உறவைச் சரிப்படுத்த முதல் அடிவைப்பை மேற்கொள்ளுதல், யாரேனும் ஒருவருக்கு வாரந்தோறும் உற்சாக மூட்டும் கடிதம் அனுப்புதல், இன்னொரு நபருக்குள் இருக்கும் நற்பண்பைச் சுட்டிக்காட்டத் தீர்மானித்தல், உங்கள் உரையாடல்களில் அதிகம் நேர்மறைத் தன்மையுடன் இருத்தல், சமாதானம் பண்ணுகின்றவராகி, இரு நபர்களை ஒன்றுகூட்டுதல் அல்லது சபையில் பிறருடன் நெருங்கிய பிணைப்பு இல்லாத யாரேனும் ஒருவரை "சுவிகரிக்க" விசேஷ முயற்சியை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கக் கூடும்.*

*அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். பிறரைத் தாங்குவதில் நீங்கள் தடுமாறும் பொழுது, அந்தப் போராட்டத்தை நீங்கள் வெற்றி கொள்ள உதவும்படி தேவனிடம் கேளுங்கள். அந்த மக்களுக்காக ஜெபித்து, அவர்களுக்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்.*

*நாம் ''சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய்'' இருந்தால், யோவான் 17ல் இயேசு செய்த ஜெபத்திற்கு - அவரது மக்கள் ஒரே ஆவியில் ... ஒரே கர்த்தருக்குள் இருக்கும்படி அவர் செய்த ஜெபத்திற்கு - பதிலைக் காண்பார்.*

---

*குறிப்புகள்*

*[1]Tapeinophrosune என்பது "தாழ்மை" என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது இயேசுவின் எடுத்துக்காட்டு தரும் வெளிச்சம் மற்றும் தேவனுடைய வேண்டுகோள் ஆகியவற்றின் அடிப்படையில் காணும் பொழுது, தகுதியின்மையின் உண்மையான கருத்துணர்விலிருந்து வருகின்ற சிந்தையின் தாழ்மையுள்ள தன்மையைக் குறிப்பிடுகின்றது. [2]Prautes என்பது "சாந்தம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது. கிரேக்கர்கள் இந்த வார்த்தையை விசேஷித்த மென்மையான குணத்தைக் காண்பிக்கும் நபர்கள் அல்லது பொருட்களைக் குறிப்பிட - எரி புண்ணின் வேதனையை விடுவிக்கும் எண்ணெய் போன்ற தன்மையை குறிப்பிட - பயன்படுத்தினார்கள். இது நம்மை மக்களிடம் முரட்டுத்தனமாகவும் மென்மை யாகவும் இருக்க அனுமதிக்கின்றது: தேவைப்படும் போது முரட்டுத்தனமா யிருக்கும், மென்மைத் தன்மை சிறந்ததாயிருக்கும் பொழுது மென்மையாய் இருக்கவும் அனுமதிக்கின்றது. [3]Aesop's Fables* (Norwalk, Conn.: Heritage Press, 1969), 23.

# சபை வளர்ச்சியின் நியமங்கள் (4:7-16)

*பயிற்சிக் கப்பற்படைப் பகுதிக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த இரண்டு போர்க் கப்பல்கள் திட்டமிட்ட நடவடிக்கையின் நிமித்தமாக கடலில் இருந்தன. தட்பவெப்ப நிலையானது ஊற்றியெடுக்கும் மழை, அதிக காற்று மற்றும் தொடர்ந்து மாறியடிக்கும் நீர் ஆகியவற்றுடன் அச்சமூட்டுவதாக இருந்தது. அடர்ந்த பனிமூட்டத்துடன் இந்தத் தட்பவெப்ப நிலை ஒரு இரவில் தொடர்ந்து நிலவிக் கொண்டிருந்தது. கப்பலின் மேல் பாலத்தில் நின்றிருந்த கப்பல் தலைவர் சூழ்நிலையை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.*

*இருட்டத் தொடங்கிய சற்று நேரத்தில் பாலத்திலிருந்து வெளியே கண்ணோக்கிக் கொண்டிருந்த ஒருவர் “நட்சத்திர வளைவில் ஒரு ஒளி காணப்படுகிறது” என்று கூவினார்.*

*கப்பல் தலைவர், ‘‘அது நிலையாக உள்ளதா அல்லது நகர்ந்து கொண்டுள்ளதா?” என்று கேட்டார்.*

*“தலைவரே, அது நிலையாக உள்ளது”*

*அவர்கள் தாங்கள் இன்னொரு கப்பலுடன் மோதப் போவது உறுதி என்று நினைத்தார்கள்.*

*கப்பல் தலைவர், “அந்தக் கப்பலுக்கு, ‘நாம் மோதப் போகிறோம், எனவே உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளுங்கள்’ என்று அறிவுறுத்துங்கள்” என்று கட்டளையிட்டார்.*

*“நீங்கள் 20 பாகை அளவு மாற்றுவதே உகந்தது” என்று பதில் வந்தது.*

*கப்பல் தலைவர், “நான் ஒரு கப்பல் தலைவன்; உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளவும்” என்று இன்னொரு செய்தி அனுப்பச் செய்தார்.*

*“நான் இரண்டாம் நிலை கடல் மாலுமி, நீங்கள் 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளுவதே சாலச் சிறந்தது” என்று பதில் வந்தது.*

*அவ்வேளையில் கப்பல் தலைவர் கடுங்கோபமுற்றார். “ ‘நாங்கள் ஒரு யுத்தக் கப்பலில் உள்ளோம், உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றுங்கள்’ என்று செய்தி அனுப்பு”*

*மினுக்கிடும் சைகை ஒளியுடன், ‘‘நான் ஒரு கலங்கரை விளக்கம். உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவுக்கு மாற்றிக் கொள்ளுக’’ என்று பதில் திரும்ப வந்தது.*

*கப்பல் தலைவர் உடனடியாக கப்பலின் ஓட்டத்தை மாற்றும்படி தம் மனிதர்களுக்குக் கட்டளையிட்டார்.*[1]

*கப்பல் தலைவர் சூழ்நிலை பற்றிய தமது கண்ணோட்டத்தின் யூக உணர்வில் இயங்கிக் கொண்டிருந்தார். அவர் உண்மை நிலையை எதிர் கொள்ளும் வரையில் தொடர்ந்து அவ்விதமாகவே செயல்பட்டார். வெளிச்சம் ஒரு கலங்கரை விளக்கத்திலிருந்து வந்தது என்பதை அறிந்த பொழுது அவர் தம் கப்பலின் ஓட்டத்தை மாற்றுவதற்கு முடிவு செய்தார்.*

*கலங்கரை விளக்கம் என்பது நாம் கொள்கைகள் என்று அழைக்கின்ற வற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடும். வேதாகமத்தில் கலங்கரை விளக்க மாதிரியிலான கொள்கைகள் பல அடங்கியுள்ளன. அவைகள் ஒருக்காலும் மாறுவதில்லை. அவைகள் முற்றானவைகளாய் உள்ளன. அவைகள் நேற்று உண்மையாய் இருந்தன, இன்று உண்மையாய் உள்ளன, நாளையும் அவைகள் உண்மையுள்ளவையாக இருக்கும்.*

*வாழ்வு முழுவதற்கும் ஒரு ஆணுக்கு ஒரு பெண்தான் இருக்க வேண்டும் என்பது போன்ற நியமத்தை திருமணத்திற்கான கலங்கரை விளக்க நியமமாக வேதாகமம் தருகின்றது (ரோமர் 7:1-3). அது பிள்ளைகளை இயேசுவை நோக்கி வழிநடத்திச் செல்லும் வகையில் வளர்க்க வேண்டும் என்பது போன்ற கலங்கரை விளக்கக் கொள்கைகளை (எபே. 6:4) பெற்றோருக்குத் தருகின்றது. அது பிள்ளைகளுக்கும் (6:1-3), வேலைக்காரர் களுக்கும் வேலைக்கு அமர்த்துபவர்களுக்கும் (6:5-9), பணத்தைக் கையாளுவதற்கும் (1 தீமோ. 6:9, 10), திட்டங்கள் தீட்டுவதற்கும் (யாக். 4:13-15) மற்றும் வாழ்க்கை முழுவதற்கும் (2 பேது. 1:3) கூட கலங்கரை விளக்க நியமங்களைத் தருகின்றது.*

*புதிய ஏற்பாடானது சபைக்கும்கூடக் கலங்கரை விளக்க நியமங்களை வழங்குகின்றது. அவற்றில் சிலவற்றை எபேசியருக்கு எழுதிய நிருபம் தன்னில் கொண்டுள்ளது. தேவன் அளிக்கின்ற ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங் களும் கிறிஸ்துவுக்குள் காணப்படுகின்றன (1:3). கிறிஸ்து, சபைக்குத் தலைவராக இருக்கின்றார் (1:22). சபை, கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது (1:23). நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகின் றோம் (2:8). நாம் ஒரே சரீரத்தின் உறுப்புக்களாக ஒன்று கூட்டப்பட்டுள் ளோம் (3:6). ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே நம்பிக்கையும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே தேவனும், ஒரே பிதாவும் உள்ளன(ர்) (4:4-6).*

*4:7ல் தொடங்கி, நாம் சபை வளர்ச்சியைப் பற்றிய வசனப் பகுதி ஒன்றைக் கண்டறிகின்றோம். இது சபை வளர்ச்சியை நாடுவதில் நமக்கு உதவ கலங்கரை விளக்க நியமங்கள் சிலவற்றை நமக்கு அளிக்கின்றது.*

## சபை வளர்ச்சிக்குப் போதுமானதல்லாத நியமங்கள்

*வேதாகம ரீதியான நியமங்களை நாம் ஆராய்வதற்கு முன்பு, நாம் சபை*

*வளர்ச்சிக்கென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பின்வரும் நியமங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம். இவைகள் உதவிகர மானவைகளாய் இருக்கக் கூடுமென்றாலும், அடிக்கடி இவைகள் மிகையாக வலியுறுத்தப்படுகின்றன. இவைகள் தங்களில் போதுமானவைகளாய் இருப்பதில்லை.*

*1. "நாம் நவீனத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு நடைமுறைப் படுத்தும் போது/செயல்படுத்தும்போது சபை வளர்ச்சி நடைபெறுகின்றது." சபை வளர்ச்சி கொண்டிருப்பதற்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றி நமக்குக் கூறுவதற்கு பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகள், வீடு சந்திப்பு, விளம்பரப்படுத்துதல், பிரசங்கித்தல், வேதாகமப் பள்ளி, மற்றும் பல விருப்பத் தேர்வுகளின் மூலம் சபை வளர்ச்சியை ஏற்படுத்துவது எப்படி என்று விளக்கப்படுத்துகின்றன. சபை வளர்ச்சி பற்றி புத்தகங்களுடன் கூடுதலாக, வெற்றிகரமான சபைகளை அடிக்கடி ஆராய்ந்து கற்கப் படுகின்றன. வளருகின்ற சபையின் நடத்துனர்கள் சரியாகச் செய்வது என்ன என்பதைக் கண்டறிய பிற சபைகளின் நடத்துநர்கள் அந்தச் சபைக்கு வந்து கூடுவார்கள். அவர்கள் புத்தகங்களையும் ஒலி நாடாக்களையும் வாங்கு வார்கள், கருத்தரங்குகளுக்குச் செல்வார்கள், மற்றும் தங்கள் உள்ளூர் சபையை வளரச் செய்யத் தங்கள் கைகளில் திட்டங்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் வீடு திரும்புவார்கள்.*

*2. "நன்கு பயிற்சி பெற்ற, திறமை மிக்க ஊழியர்களை ஒன்றுகூட்டும் பொழுது சபை வளர்ச்சி நடைபெறுகின்றது." நாம் பல பணியாளர்களின் யுகத்தில் வாழ்கின்றோம். நாம் பிரசங்கிக்கும் ஊழியர்கள், ஈடுபாட்டு ஊழியர்கள், இளைஞர்களுக்கான ஊழியர்கள், குடும்ப ஊழியர்கள், கல்வி ஊழியர்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஊழியர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளோம். ஊழியர் எவ்வளவு திறமையானவராக இருக்கின் றாரோ, அவ்வளவு அதிகமாக சபை வளர்ச்சியைக் காணும்படி எதிர் பார்க்கலாம்.*

*3. "ஒவ்வொரு உறுப்பினரும் சபையின் திட்டங்கள் ஒன்றில் பயிற்று விக்கப்பட்டு, ஈடுபடுத்தப்படும் பொழுது சபை வளர்ச்சி நடை பெறுகின்றது." ஒவ்வொரு உறுப்பினரும் ஈடுபாடு கொண்டவராய் இருக்க வேண்டும் என்று சபை நடத்துநர்கள் விரும்புகின்றனர். மக்கள் பல்வேறு திட்டங்களுக்கென்று தேர்வு செய்யப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, "பொருத்தப்பட" வேண்டும். இது சபை வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.*

*4. "சபையின் வளர்ச்சியானது நபர் வருகை, காணிக்கை மற்றும் சபையினால் ஆதரிக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் வளர்ச்சியி னால் அளக்கப்பட முடியும்." ஒரு உள்ளூர் சபையானது அதன் நபர் வருகையிலும் காணிக்கையிலும் கடந்த ஆண்டில் இரட்டிப்பாகியுள்ளது என்று அறிவிப்புப் பலகையில் மக்கள் வாசிக்கின்ற பொழுது, "அது ஒரு வளருகிற சபையாக உள்ளது. அவர்கள் முன்னேறிக் கொண்டிருக் கிறார்கள்" என்பதாக அவர்கள் நினைக்கின்றார்கள். சில வேளைகளில் ஒரு உள்ளூர் சபையானது கூட்டங்கள், பணிக்கால அளவைகள், கருத்தரங்கு*

*கள், தியானங்கள், பகல் நேரப் பராமரிப்புத் திட்டங்கள் மற்றும் முதிர் வயதுக் குடிமக்களின் குழுக் கூட்டங்கள் போன்றவற்றில் மும்முரமாய் ஈடுபட்டுள்ளதைக் கவனிக்கின்றோம். அந்த சபையைப் பற்றி நாம், "அது வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும்" என்று முடிவு செய்கின்றோம்.*

*இந்த நான்கு கொள்கைகள் இன்றைய நாட்களில் சபையின் நடத்துனர்கள் பலரால் மேற்கொள்ளப்படுகின்ற அணுகுமுறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. இந்த நான்கு கூற்றுகளில் ஒவ்வொன்றிலும் சத்தியத்தின் ஒரு கூறு நிலவுகின்றது, ஆனால் இந்த அணுகுமுறைகள் மாத்திரமே சபை வளர்ச்சியை உண்டாக்கப் போதுமானவைகளாய் இருப்பதில்லை.*

## சபை வளர்ச்சிக்கான கலங்கரை விளக்க நியமங்கள்

*சபை வளர்ச்சி பற்றி கலங்கரை விளக்க நியமங்கள் சிலவற்றை நாம் ஆராய்கையில், பவுல் எபேசியருக்கு (இதைப் பற்றி) எழுதியது என்ன என்பதை நாம் வாசிப்பது அவசியம்:*

> *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது ... மேலும் நாமனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும், இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது (4:7-16).*

### நியமம் ஒன்று

*இரட்சிப்பைப் போலவே சபை வளர்ச்சியும் கூட கிருபையின் விஷயமாகவே உள்ளது. பவுல், "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" (4:7) என்று கூறினார். இரட்சிப்புக்கான கிருபை உள்ளது (2:8), மற்றும் வல்லமை*

*யளிக்கும் கிருபையும் உள்ளது, அதையே பவுல் இவ்வசனத்தில் குறிப்பிட்டார். வல்லமையளிக்கும் கிருபை என்பது தேவனுடைய மகிமைக்காகக் குறிப்பிட்ட சிலவற்றைச் செய்யும் வல்லமை என்பதாக உள்ளது. இந்தக் கருத்தைப் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் எடுத்துரைத்தார்: "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே" (ரோமர் 12:6). வல்லமையளிக்கும் கிருபை என்பது சபையின் உண்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உள்ளது. வளர்ச்சி என்பது நமது திட்டங்கள் அல்லது வியூகங்களின் விளைவாக மட்டுமே நடைபெறுவதில்லை. இது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இயேசு கொடுக்கின்ற கிருபையின் மூலமாக - ஒவ்வொரு நபரையும் வரம் பெற்றவராக்குகின்ற கிருபையின் மூலமாக - நடைபெறுகின்றது.*

*இதைப் பற்றிப் பவுல் ஸ்டீவென்ஸ் எழுதிய பின்வரும் பகுதியை நான் விரும்புகின்றேன்:*

> *ஒவ்வொரு உறுப்பினரும் கிறிஸ்துவிடமிருந்து கிருபை அளிக்கப்பட்டுள்ளார் என்று புரிந்து கொள்ளுகின்ற சபையில், ஒவ்வொரு உறுப்பினரும் உயர்வாய் மதிக்கப்படுவார், ஒவ்வொரு ஊழியமும் பாராட்டப்படும், கிறிஸ்துவின் கிருபையினுடைய மாறுபடும் ஒவ்வொரு அனுபவமும் போற்றிப் பாதுகாக்கப்படும். இப்படிப்பட்ட ஒரு சுற்றச் சூழலானது "நீங்கள் எங்களுக்குத் தேவை!" என்று அறிவிக்கும்.*[2]

*ஒவ்வொரு உறுப்பினரும் இன்றியமையாதவராக இருக்கின்றார்! அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று உள்ளூர் சபையைச் சுற்றிலும் கண்ணோக்குங்கள். நீங்கள் அங்குள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்குச் சம அளவில் தேவனுடைய கிருபையின் காணக்கூடிய வெளிப்பாடுகளினால் சூழப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வல்லமையளிக்கும் கிருபையின் மூலமாக சபை வளர்ச்சிக்குத் தேவையான வரங்களையும் கிருபையையும் தேவன் அருளுகின்றார்.*

## நியமம் இரண்டு

*எல்லாக் கிறிஸ்தவர்களும் தாங்கள் பெற்றுக் கொண்டுள்ள கிருபையுடன் ஊழியம் செய்கின்ற பொழுது சபை வளர்ச்சி ஏற்படுகின்றது. பல சபைகள் தங்கள் கடிதத் தாள்களில், மூப்பர்கள் உதவிக்காரர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிடுகின்றன. "ஊழியர்கள்" என்று அட்டவணையிடப்படும் பெயர்கள் வழக்கமாகப் பிரசங்கிப்பவர்களாய் உள்ள ஊழியர்களின் பெயர்களாக உள்ளன. இது தவறாக வழிநடத்தக் கூடும். உண்மையில், உள்ளூர் சபையின் உறுப்பினர்கள் யாவரும் அதன் ஊழியக்காரர்களாக உள்ளனர். ஊதியம் பெறும் ஊழியப் பணியாளர் உட்பட மற்ற ஒவ்வொருவரைப் போலவும் நீங்களும் கிறிஸ்துவின் ஊழியக்காரராக இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் கிருபையினால் ஊழியக்காரராக இருக்கின்றீர்கள்.*

4:16ல் நாம், "அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது'' என்று வாசிக்கின்றோம். இந்த வேத வசனமானது, பிற மக்களைத் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடும்படி நான் உற்சாக மூட்டும் வழிமுறையை மீண்டும் ஆராய்ந்து பார்க்கும்படி எனக்கு அறைகூவல் விடுக்கின்றது. அதை நான் எப்பொழுதுமே பின்வரும் வழிமுறையில் அணுகுவது உண்டு: ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு உதவி தேவைப்பட்டால், அந்த ஊழியத்தைச் செய்வதற்காக மக்களைப் பணிக்கமர்த்த நான் முயற்சி செய்தேன். ஊழியத்தில் ஏற்கனவே உள்ள (பல) பகுதிகளில் மக்களைப் பொருத்த என்னால் இயன்ற அளவு சிறப்பாக முயற்சி செய்தேன். மிகச் சிறந்த அணுகுமுறை என்பது, தனிநபர்களிடம், நீங்கள் மிகவும் விரும்பி கர்த்தருக்குச் செய்யக்கூடிய காரியம் என்ன? இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்தும் ஊழியம் என்ற வகையில் நீங்கள் செய்யும்படி இயேசு எதை விரும்புவார் என்று நீங்கள் நம்புகின்றீர்கள்? அதை நீங்கள் செய்ய உங்களுக்கு உதவும்படி நாங்கள் விரும்புகின்றோம்" என்று கூறுவதாயிருக்கும்.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் சபையில் கிருபையின் ஊழியராக இருக்கின்றார். இயேசு உங்களுக்கென்று தம் சிந்தையில் கொண்டுள்ள ஊழியத்தைச் செய்வதற்கென்றே உங்களை சபையில் வைத்திருக்கின்றார்.

## நியமம் மூன்று

*ஊழியத்திற்கென்று மக்களைத் தகுதிப்படுத்த/தேவையானவற்றை அளிக்க நடத்துனர்கள் ஒப்புக் கொடுத்தல் உள்ளவர்களாகும் பொழுது, சபை வளர்ச்சி நடக்கின்றது.* பவுல் பின்வருமாறு கூறினார்:

> பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (4:12, 13).

நாம் பவுலின் அறிவுறுத்தல்களை எடுத்துக்கொண்டு, அவற்றை வகுப்புகள், பயிற்சித் திட்டங்கள், மற்றும் பணி மனைகள் - சபையில் பயன்படுத்தும்படி திறன்களை மக்களுக்குப் போதிக்கக்கூடிய மற்ற எந்த விஷயங்கள் - ஆகியவற்றில் நடைமுறைப்படுத்துகின்றோம். இருப்பினும், இது "சீர்பொருந்தும் பொருட்டு" என்ற கருத்தை வரையறைக்கு உட்படுத்து கின்றது. சீர் பொருந்துதல் என்பது ஒரு நபர், ஊழியத்திற்கான திறன்களை மேம்படுத்த உதவுவதைக் கொண்டுள்ளது; ஆனாலும், இன்னும் அதிகமாக இது பண்பு, சிந்தை மற்றும் அந்த நபரின் இருதயம் ஆகியவற்றை வடிவமைத்தல் என்றும் கூட அர்த்தப்படுகின்றது.

*ஊழியத்திற்கு மக்களை சீர்பொருந்தச் செய்வதில் இயேசு விற்பன்னராக இருந்தார். அவர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களைச் சீர்பொருந்தச் செய்வதற்காக அவர்களுடன் மூன்று ஆண்டுகளைச் செலவிட்டார். தொழுநோயாளிகளுக்கு ஊழியம் செய்வதற்காகப் பத்து படிநிலை முறைமைகளை அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும் என்று இயேசு கேட்டுக் கொண்டதாக நான் ஒருக்காலும் வாசித்திருக்கவில்லை. அவர்களுக்கு சபை நிர்வாகம் பற்றி இயேசு போதித்த இடத்தை என்னால் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களுடன் அவர் நேரத்தைச் செலவிட்டார். அவரது வல்லமையைக் கண்டார்கள் மற்றும் அவர்கள் முழங்காலிடும்படி கொண்டு வரப்பட்டார்கள். அவர் ஜெபித்ததை அவர்கள் கேட்டார்கள், மற்றும் ஜெபிக்கும்படி (அவரால்) போதிக்கப்பட்டார்கள். இயேசுவுடன் இருப்பதன் மூலம் சீஷர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பது எவ்வாறு என்று கற்றுக் கொண்டார்கள்.*

*இந்த உதாரணத்தை சபை நடத்துநர்கள் பின்பற்றுவது அவசியமாக உள்ளது. இயேசுவுடன் இருப்பதன் மூலம்—அதாவது வசனத்தில், வழிபாட்டில் மற்றும் ஜெபத்தில் அவருடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலம்—கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்வது எவ்வாறு என்று கற்றுக் கொள்வார்கள். தேவனுக்காகப் பசியும் தாகமும் கொண்டுள்ளவைகளாக நமது இருதயங்களை மாற்றுகின்ற ஆராதனைக் கூட்டங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. நம்மை உருமாற்றி நமது சிந்தைகளைப் புதுப்பிக்கின்ற அறிவுறுத்தல்கள் தேவ வசனத்திலிருந்து நமக்குத் தேவைப்படுகின்றன. நமது ஒப்புக் கொடுத்தலையும் ஒருவர் பிறரின் மீது சார்ந்திருத்தலையும் ஆழப்படுத்துகின்ற உரையாடல்களைப் பிற கிறிஸ்தவர்களுடன் நாம் மேற்கொள்வது அவசியமாக உள்ளது. இயேசு சபை நடத்துநர்கள் சீர்பொருந்தும்படி அழைக்கின்றார், இது கிறிஸ்தவர்கள் ஊழிய இருதயத்தையும் இயேசுவின் ஆவியையும் தங்களுக்குள் மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வாழ்வுமுறையை அவர்களுக்கு ஈந்தளிக்க அழைக்கின்றது.*

## *நியமம் நான்கு*

*சபை வளர்ச்சியானது தேவனுடைய பார்வையில் பக்குவத்தை அளவிடுதலில் உள்ளது. "கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புகின்ற" (4:12) பணியின் ஊழியங்களுக்காகத் தேவனுடைய மக்கள் சீர் பொருந்தும் படியாக்கப்படுகின்றனர். இது நடப்பதற்குப் பவுல், "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப் பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்" (4:11)படி அழைத்தார். அவர் இந்தப் பக்குவப்படுத்தலின் செயல்முறையை, சரீரத்தின் வளர்ந்தேறுதல் (4:15) மற்றும் அது தன்னையே கட்டியெழுப்புதல் (4:16) ஆகியவற்றைக் குறிப்பிடுவதினால் மீண்டும் வலியுறுத்தினார். பக்குவப்படுதலின் கருத்தானது பவுலின் எழுத்துக்களில் ஊடுருவிக்கிடந்தது.*

*தேவனுடைய பார்வையில் சபை வளர்ச்சி என்பது பக்குவம் என்பதாக உள்ளதேயன்றி எண்ணிக்கை என்பதாக இருப்பதில்லை. தேவன் தாம் அங்கிகரிக்கின்ற ஒருவருடைய சாயலை நமது இருதயங்களில் கண்ணோக்க விழைகின்றார். அவர் தமது குமாரனின் சாயல் நமக்குள் தோன்றத் தொடங்குவதைக் கண்டறிய நம்பிக்கையாய் இருக்கின்றார். நாம் கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி அவர் விரும்புகின்றார்.*

## *முடிவுரை*

*நாம் சபை வளர்ச்சிக்கான கலங்கரை விளக்க மாதிரியிலான நான்கு நியமங்களை ஆய்வு செய்துள்ளோம். இந்தக் நியமங்களுக்கு ஏற்ப நம்மை நாம் சரி செய்து கொண்டால், தேவன் நமது உள்ளூர் சபைகளை வளருகின்றவைகளாகக் காண்பார்.*

*தனிநபர் என்ற வகையில் உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் உறுப்பினராய் உள்ள சபைக்கு நீங்கள் உங்களையே கொடையாக அளிக்கின்றீர்களா? பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதாக உள்ள இயேசுவின் கிருபை சிலவற்றை நீங்கள் உங்களுக்குள் கொண்டிருக் கின்றீர்கள். நீங்கள் அந்தக் கிருபைக்கு உண்மையுள்ள ஊழியராக இருக்கின்றீர்களா?*

*நடத்துநர்களே, நீங்கள் திட்டங்களில் துளைகளை நிரப்புகின்றீர்களா? அல்லது தனிநபர்கள் சபைக்கான தங்களின் தனிச்சிறந்த திறன்களை உணர உதவுகின்றீர்களா? மக்கள் ஊழியம் செய்யும் இருதயங்களையும் ஆவிகளையும் (தங்களில்) மேம்படுத்திக்கொள்வதற்குரிய சூழ்நிலையில் உங்களால் இயன்ற அளவு அவர்களை உற்சாகப்படுத்துகின்றீர்களா?*

*நாம் ஒவ்வொருவரும் பக்குவத்தின் இலக்கைச் சிந்தையில் கொண்டுள்ளோமா? நாம் கிறிஸ்துவின் சிந்தையைக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றோமா? நான் எனது பங்கையும் நீங்கள் உங்களது பங்கையும், நடத்துநர்கள் தங்களது பங்கையும் நிறைவேற்றினால், சபையானது தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும் வகையில் வளரும் என்று இயேசு உறுதியளித்துள்ளார்.*

---

*குறிப்புகள்*

[1]Frank Koch, quoted by Stephen Covey, *The 7 Habits of Highly Effective People: Powerful Lessons in Personal Change* (New York: Simon & Schuster, 1989), 33. [2]R. Paul Stevens, *Liberating the Laity: Equipping All the Saints for Ministry* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1985), 30.

# உங்கள் அலமாரியைக் கவனியுங்கள் (4:17-24)

*People's Weekly என்ற பத்திரிகையானது ஒவ்வொரு ஆண்டிலும் "நன்கு உடுத்தியவர்கள்" மற்றும் "மோசமாக உடுத்தியவர்கள்" என்ற தேர்ந்தெடுத்த அழகிகளின் பட்டியல் ஒன்றை அச்சிடுகின்றது.[1] நாகரீகம் பற்றி அக்கறை கொள்ளுகின்ற மக்கள் யாரெல்லாம் நயப்பாங்குக்கு "உள்ளாக" மற்றும் "புறம்பாக" இருக்கின்றனர் என்பதைக் காண்பதற்கு இதை வாசிக்கின்றனர்.*

*உங்கள் அலமாரியைப் பற்றி தேவன் அக்கறையாய் இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆம், அவர் அக்கறையாய் இருக்கின்றார். நீங்கள் புதிய முழுக்காற் சட்டைகளை அணிகின்றீர்களா அல்லது புகழ் மிக்க பாணியிலான காலணிகளை அணிகின்றீர்களா என்பதைப் பற்றி அவர் பொருட்படுத்துவதில்லை. அவர் வேறு வகையான அலமாரியை - நம்மில் ஒவ்வொருவரும் உடுத்துகின்ற ஆவிக்குரிய உடுப்புக்களை - பற்றி அவர் அக்கறை கொண்டு கண்ணோக்குகின்றார்.*

*இந்த அலமாரியைப் பற்றிப் பவுல் விளக்கப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் எவற்றைக் களைந்து போட்டு, எவற்றை உடுத்திக் கொள்வது அவசியம் என்று அவர் விவரித்தார்:*

> *ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால், தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களை யும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்து வைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின் படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப் பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர் களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (4:17-24).*

*இங்கு ஒரு அடிப்படையான சத்தியம் உள்ளது: கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் முற்றிலும் புதிதான ஒரு வழிமுறையில் தங்களை உடுத்துவித்துக் கொள்வது அவசியம்.*

## பழைய உடைகள்

ஜோசப் ஃப்ளெட்சர் என்பவர் 1960களில் சூழ்நிலைக்கேற்ற ஒழுக்க நெறி (Situation Ethics) என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இந்தப் புத்தகத்தில், அவர் முற்றான ஒழுக்க நெறிகள் நிலவுகின்றன என்ற கருத்தை மறுத்துரைத்திருந்தார். அவர், சரியானது, என்பது எப்பொழுதுமே சரியானதாகவும், தவறானது என்பது எப்பொழுதுமே தவறானதாகவும் இருப்பதில்லை என்ற கருத்துக் கொண்டிருந்தார். ஒழுக்க நெறி என்பது சூழ்நிலைகளைச் சார்ந்ததாக உள்ளது என்று அவர் ஆலோசனையளித்தார்: ஒரு செயலானது ஒரு நாள் சரியானதாகவும் அடுத்த நாளில் அது தவறானதாகவும் இருக்கலாம்.

ஃப்ளெட்சரின் சூழ்நிலை ஒழுக்க நெறிகள் வெளியிடப்பட்டு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் கழிந்த இன்றைய நாட்களில், அவை சமூகத்தை ஆள்கின்றவைகளாகக் காணப்படுகின்றன. ஒரு தலைமுறைக்கு முன்பு, மக்கள் முற்றானவைகளின் அடிப்படையில் ஒழுக்கங்களின் மீது நம்பிக்கைகளைப் பற்றிக் கொண்டிருந்தனர்: ஒரு சில மக்கள் (தான்) திருமணம் வரையில் கன்னித் தன்மையுடன் இருத்தல், நேர்மையான ஒரு நாள் வேலைக்கு நேர்மையான ஒரு நாள் கூலி, ஓரினச் சேர்க்கை என்பது பிறழ்வு நிலை கொண்ட வாழ்க்கை, அல்லது பொய் கூறுதல், திருடுதல், ஆபாசப் படம் பார்த்தல் அல்லது விபசாரம் செய்தல் ஆகியவை சரியல்ல போன்ற கருத்துக்கள், சரியானதுதான் என்பதைப் பற்றிக் கேள்வியெழுப் பினார்கள்; இந்தக் கண்ணோட்டங்களில் பலவற்றை சமூகமானது இன்று உறுதிப்படுத்திக் கொண்டிருப்பதில்லை.

பவுலின் வார்த்தைகள், அவர் ஏறக்குறைய நமது சமூகத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு நேரடியாக எழுதப்பட்டவை போன்றே ஒலிக்கின்றன. அவர், "ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள்" (4:17) என்று கூறினார். ஒரு மொழிபெயர்ப்புப் பதிப்பானது இதை, "கூட்டத் தோடு உடன் சென்று விடுதல் ஆகாது என்று நான் - இதைப் பற்றித் தேவன் எனக்கு அறிவுறுத்தியபடி - வலியுறுத்துகின்றேன்" என்று கூறுகின்றது (TM).

"கூட்டத்தார்" செய்கிறது போன்ற வழியில் வாழ்வது என்பது எதைப் போன்றதாக உள்ளது? பவுல் இதை, மரணத்தை நோக்கி நடைபோடுதல், ஒவ்வொரு அடி வைப்பும் நித்திய அழிவை நோக்கி இன்னும் நெருங்குதலாக அமைதல் என்று சித்தரித்தார்.

பிடிவாதம் என்பது முதல் அடிவைப்பாக உள்ளது. தேவபக்தியுள்ள வாழ்வை வெறுத்து ஒதுக்குகின்றவர்கள் "புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனு

டைய ஜீவனுக்கு அந்நியராய்'' (4:18) இருக்கின்றனர். இருதயங்கள் கடினப்பட, கல்லாய்ப் போக, அல்லது சுண்ணாம்பாகக் கூடும். வசனம் 18ல் பயன்படுத்தப்பட்டுள்ள "கடினம்'' என்ற வார்த்தையானது, உடைந்த எலும்பு சீராகுகையில் உண்டாகின்ற கடினத் தன்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட முடியும். இந்தக் கடினத் தன்மையுள்ள பொருளானது உண்மையில் எலும்பை விடக் கடினமானதாக ஆகின்றது. பாவம் என்பது ஒரு நபருடைய இருதயத்தில் இதே விதமான வளர்நிலை கடினச் செயல் விளைவைக் கொண்டுள்ளது.

நான் ஒரு இளம் பையனாக இருந்த பொழுது, அண்டை வீட்டு நண்பன் ஒருவன் தனது தந்தையின் ஆபாசப் படப் பத்திரிகைகளில் ஒன்றை வீட்டை விட்டு வெளியே யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்தான். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் காண்பதற்கென்று அவனும் நானும் ஒளிப்பிடம் ஒன்றைக் கண்டோம். அது தவறு என்று நாங்கள் அறிந்திருந்தோம். நாங்கள் அதைச் செய்வதை மக்கள் அறிந்து கொள்வதை விரும்பாதிருந்தோம், எனவே நாங்கள் ஒளிந்து கொண்டோம். அந்த நாளில் என் இருதயம் கடினமடையத் தொடங்கிற்று. ஒரு சில ஆண்டுகளில் நான் எனக்கென்று சொந்தமாக அவ்விதமான பத்திரிகைகளை வாங்கத் தொடங்கினேன். பாவத்தின் அடிமைப்படுத்தும் வல்லமையை நான் சந்தித்தேன்: நாம் பாவத்திற்கு "சரி" சொல்லுகின்ற வரையிலும், அது நம்மீது தணிக்க முடியாத ஒரு தாகம் போன்று செயல்படுகின்றது. இதிலிருந்து இயேசு ஒருவர் மாத்திரமே நம்மை விடுவித்து, மீண்டும் நம் இருதயங்களை மென்மைப் படுத்தக்கூடும் என்று நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.

அந்தகாரம் என்பது இரண்டாம் அடி வைப்பாக உள்ளது. தேவ பக்தியுள்ள வாழ்வை வெறுத்து ஒதுக்குகின்றவர்கள், "தங்கள் புத்தியில் அந்தகாரப்படுகின்றனர்'' (4:18). இருளில் தடுமாறிச் சுற்றுவதை நான் வெறுக்கின்றேன், நீங்கள் அதை வெறுப்பதில்லையா? காரிருளில் தடுமாறித் தடவிச் செல்லுதல் என்பது ஒரு நபர் தனக்குக் காயம் ஏற்படுத்திக் கொள்ளக் காரணமாகக் கூடும். அதையே பாவம் நமக்குச் செய்கின்றது. அது வாழ்வை இருளாக்குகின்றது. இருளில் ஒரு நபரால் வழியைக் காண இயலாது. எடுத்துக்காட்டாக, மதுபானம் கொடுக்கின்ற "உயரப்'' பறக்கும் கண நேர உணர்வு மதுபானத்திற்கு அடிமையானவரின் உயிருக்கு ஊறு விளைவிப்பதாகின்றது. அந்தகாரப்பட்ட சிந்தை மட்டுமே சிறிது நேரத்தில் ஒழியக் கூடிய பரவச உணர்வுக்காக எல்லாவற்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தும். பாவம் என்பது நாம் தெளிவாய்ச் சிந்திப்பதைத் தடை செய்கின்றது.

முடிவெடுத்தல் என்பது மூன்றாவது அடி வைப்பாக உள்ளது. பாவம் ஒரு நபரை "தேவனுடைய ஜீவனிலிருந்து'' பிரிக்கின்றது (4:18). பாவம் நம்மை தேவனுடன் தொடர்பு கொண்டு இருப்பதை இழக்கச் செய்கிறது - இது ஒரு வகையான முடிவெடுத்தலாக உள்ளது - மற்றும் இது நேர்மையாகச் சிந்திக்கும் திறனை இழக்கச் செய்கின்றது. ஒரு மொழிபெயர்ப்பு கூறுகின்றபடி, ''அவர்கள் இனியும் தேவனுடன் செயல்படுவதை மறுத்து, தேவனுடன் மட்டுமல்ல உண்மை நிலையுடனும்

தங்களுக்குள்ள தொடர்பை இழந்து போயுள்ளார்கள். இனியும் அவர்கள் நேர்மையாகச் சிந்திக்க முடியாமல் போகின்றனர்" (4:18; TM). மதுபானம், சூதாட்டம், ஆபாச இலக்கியம், போதைப் பொருட்கள் மற்றும் அக்கறையற்ற பாலுறவு ஆகியவை இந்தச் செயல்விளைவைக் கொண்டுள்ளன.

அக்கறையின்மை என்பது இந்த மரண நடையில் நான்காவது அடி வைப்பாக உள்ளது. தேவபக்தியுள்ள வாழ்வை வாழாத மக்களைப் பற்றிப் பவுல், "உணர்வில்லாதவர்களாய், சகல வித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காம விகாரத்திற்கு (அவர்கள்) ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்" (4:19) என்று கூறினார். அதை நான் வாசிக்கும் பொழுது, நம்மில் ஒவ்வொருவரும் காம உணர்வும் அசுத்தமும் உள்ளவர் களாவதற்கு நமக்குள் நிலவுகின்ற சாத்தியக்கூறு என் நினைவுக்கு வருகின்றது. நம்மில் எவரும், ஒரு சிலவற்றிற்காக மனநிறைவு ஏற்படுத்த இயலாத இச்சையையும் நம் வாழ்வின் கட்டுப்பாட்டை இழக்கும் தன்மையையும் நமக்குள் வளர்த்துக் கொள்ளும் இயல்புக்கு அப்பாற் பட்டவர்களாக இருப்பதில்லை.

பழங்காலக் கிரேக்கர்கள், ஒரு நரியைத் திருடிப் பிறகு அதன் உரிமையாளனை சந்திக்க நேர்ந்த ஸ்பார்ட்டா நகரத்துப் பையன் ஒருவனைப் பற்றிய கதை கூறினார்கள். தான் செய்திருந்ததை மறைப்பதற் காக அந்தப் பையன் அந்த நரியைத் தனது உடைகளுக்குள் போட்டுக் கொண்டான். அவன் அப்படியே நின்றான். பயமடைந்த நரியானது தனது நகங்களினால் அவனைக் குத்திக் கிழித்து, அவனது முக்கியமான உறுப்புக்களைப் பீரிட்டுப் போட்ட போதும் அவன் விழிக்கவில்லை. வேதனை நிறைந்த மரணத்தை விலையாகச் செலுத்த நேர்ந்த வேளையிலும் கூட, அவன் தவறு செய்திருந்ததை ஒப்புக் கொள்ளாதிருந்தான்.[2]

பாவம் அதையே செய்யும். அது, மக்களைத் தங்கள் "வாழ்வின் வழிமுறை" உண்மையில் மரணத்திற்கான வழியாக உள்ளது என்று ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு மாறாக, எல்லா வகையான துன்பங்களையும் அவர்கள் சகிக்கும் வரையிலும் அவர்களை வலையில் ஆழ்த்திப் பிடிக்கிறது.

## புதிய உடைகள்

பாவம், நாம் மரணத்தை நோக்கி நடைபயின்று செல்லக் காரண மாகின்றது, ஆனால் இயேசுவால், நமது நடையின் திசையை மாற்றியமைக்க முடியும். பழைய வாழ்க்கையைப் பற்றிப் பவுல், "நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை" என்று கூறினார் (4:20). அவரை அறிதல் என்பது நாம் வாழும் வழிமுறையில் மாற்றத்திற்கென்று (நம்மை) அழைக்கிறது.

கிறிஸ்துவுக்குள் இருப்பதை நாம் பள்ளிக்குச் செல்லுதலுடன் ஒப்பிட முடியும். எவற்றைக் களைய வேண்டும், எவற்றை உடுத்த வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்வதற்காக கிறிஸ்துவுக்குள் நாம் பள்ளிக்குச் செல்லுகின்றோம். கிறிஸ்துவே நமது வாழ்வின் பாடத் திட்டமாக,

ஆசிரியராக மற்றும் வகுப்பறையாக இருக்கின்றார். நாம் கிறிஸ்துவை அறிகின்றோம் (4:20). கிறிஸ்து தாமே, நமது பாடத் திட்டமாக இருக்கின்றார். எப்படி வாழ்வது என்பதை அறிவதற்கு நாம் அவரைக் கற்றுக் கொள்கின்றோம். நாம் கேள்விப்பட்டும் இருக்கின்றோம் (4:21). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்து நமது ஆசிரியராக இருக்கின்றார். நாம் அவருக்குள் போதிக்கப்பட்டோம் (4:21). கிறிஸ்து நமது வகுப்பறை யாக இருக்கின்றார். அவருக்குள் நாம், நமது ஒழுக்க சிந்தனைகளை நேராக்குவதற்குத் தேவையானவற்றைக் கொண்டுள்ளோம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாவதைப் பவுல் நமது உடைகளை மாற்றிக் கொள்ளுதல் என்ற விஷயத்துடன் ஒப்பிட்டார். அவர், "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு" (4:22) என்று எழுதினார். கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது, அழுக்கான ஆடைகளைக் களைந்துபோட்டு, அவற்றை ஒரு பையினுள் வைத்து அடைத்து, இனியும் அவற்றை நீங்கள் உடுத்தாத வகையில் தூர எறிந்து விடுதலுக்கு ஒப்பாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் நாம் பழைய வாழ்வை இவ்வாறாகவே தூக்கி எறிகின்றோம்.

பின்பு பவுல், "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி" என்றும் கூடச் சொன்னார் (4:23). "புதிதான" என்பது உங்களை மீண்டும் இளைஞராக்குதல் - இளமையும் வனப்பும் அளித்தல், என்றென்றும் இளைஞராக்குதல் மற்றும் என்றென்றும் தூய்மையாய் இருக்கச் செய்தல் - என்று அர்த்தப்படுகின்றது.

வசனம் 24, இன்னும் ஒரு அடி வைப்பை எடுத்து வைக்கின்றது: நாம் "மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ள" போதிக்கப் பட்டுள்ளோம். இதை இன்னொரு வகையில் கூறுவதென்றால், இயேசு தமது வாழ்வை நாம் அணிந்து கொள்ளும்படியாக நம்மை அழைக்கின்றார்.

## முடிவுரை

கிறிஸ்துவின் புது வாழ்வை அணிந்து கொள்ள நமக்கு உதவுவதற்கு நாம் மேற்கொள்ளக் கூடிய அடிவைப்புக்கள் யாவை?

ஒரு முடிவை மேற்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் ஒழுக்க ரீதியான தெரிவுகளை எதிர்கொள்ளுகின்றீர்கள். ஒவ்வொரு கணத்திலும்/ வேளையிலும் நீங்கள் முடிவு செய்கின்ற விஷயங்கள் நீங்கள் ஏற்கனவே என்ன வகைப்பட்ட நபராயிருக்கும்படி ஏற்படுத்தியிருக்கிறீர்களோ, அந்த முடிவினால் மாபெரும் செல்வாக்குச் செலுத்தப்படும். நீங்கள் கிறிஸ்துவைப் போலிருப்பதற்கு முடிவை மேற்கொள்ளுங்கள்.

சரியான திசையில் நாளைத் தொடங்குங்கள். ஒவ்வொரு நாளையும் தேவனிடம் ஜெபத்துடன் தொடங்குங்கள். தேவனுடைய வசனத்தை வாசிக்கவும் நாளுக்கான தொனியை அமைக்கவும் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

கோட்டை வரைந்து அதன் பின்னாலேயே நிலைத்திருங்கள். பெரும் பாலான கிறிஸ்தவர்கள் பலமுள்ளவர்களாயிருக்க விரும்புகின்றனர். நாம் யாவரும் பலவீனங்களைக் கொண்டுள்ளோம் என்பதுதான் பிரச்சனையாக உள்ளது. நமது பலவீனங்கள் எவை என்று நாம் அறிந்து, அவற்றினின்று நம்மைப் பிரிக்கும் கோட்டை வரைந்து, அந்தக் கோட்டுக்குப் பின்னா லேயே நிலைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் வாழ்வின் எந்தப் பகுதியுடன் நீங்கள் நிலையாக/தொடர்ந்து போராடுகின்றீர்கள்? நீங்கள் மீண்டும் மீண்டும் செய்வதாக நீங்களே காணும் பாவங்கள் யாவை? உங்கள் கவனத்தைக் கவருவதற்கு சாத்தான் கொண்டுள்ள மிகச் சிறந்த "தீனி" என்ன? கோடு வரையவும் அதன் பின் நிலைத்திருக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இரண்டு எஜமானர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. இயேசு உங்கள் எஜமானராய் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் வாழ்விலிருந்து சில கருத்துக்களும் நடவடிக்கைகளும் நீக்கப்பட வேண்டும்.

உங்கள் சிந்தையைக் காத்துக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தையை எதன் மீது அமைக்கின்றீர்களோ, அதுவே கடைசியில் யுத்தத்தின் விளைவைத் தீர்மானிக்கும்.

உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் காத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு நல்லதாயிராமல் போகலாம் என்று நீங்கள் அறிந்துள்ள எந்த ஒரு சிந்தனையும் அல்லது செயலும் உங்கள் ஆவிக்குரிய வாழ்வைச் சிதைக்கப் போதுமானதாக உள்ளது. "அதை என்னால் கையாள முடியும்," "அது அவ்வளவு மோசமானதல்ல" அல்லது "வேதாகமம் இதைப் பற்றிக் குறிப்பாக விளக்கவில்லையே" என்பது போன்ற சொற்றொடர்களைக் கொண்டு நியாயப்படுத்துவதைத் தவிர்த்து விடுங்கள். மிகச் சிறு சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றையும் கூடக் காத்துக் கொள்ளுங்கள்.

தேவன் நமது ஆவிக்குரிய அலமாரியைக் குறித்து அக்கறை கொள்ளு கின்றார். நீங்கள் உங்கள் ஆவிக்குரிய அலமாரியைப் பற்றிச் சிந்திக்கையில், ஜெபத்தில் கர்த்தரிடம் செல்லுங்கள். நீங்கள் மேற்கொள்ள அவசியமான எந்த அறிக்கைகளையும் உறுதிப்பாடுகளையும் மேற்கொள்ளுங்கள். கிறிஸ்துவைக் கொண்டு உங்களை உடுத்திக் கொள்ளுவதில் அவருடைய பலத்தைக் கேளுங்கள்.

---

குறிப்புகள்

[1]"Best & Worst Dressed: 1994," *People Weekly* (19 September, 1994): 58-117. [2]John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), 170.

# கோபம் கொள்வதற்குச் சரியான வழி (4:25-27)

மகா அலெக்சாண்டர் அரசுகள் பலவற்றை வெற்றிகொள்ள முடிந்தது, ஆனால் பலம் வாய்ந்த அந்தத் தளபதியினால் கோபத்துடனான தனது தனிப்பட்ட யுத்தத்தில் வெற்றி கொள்ள முடியாது போயிற்று. அலெக்சாண்டர் கொண்டிருந்த நெருங்கிய நண்பர்களில் ஒருவரின் பெயர் கிலிட்டஸ் என்பதாகும். அவர்கள் சிறு பையன்களாயிருந்த பொழுதே நண்பர்களாகியிருந்தனர். கடைசியில் கிலிட்டஸ், அலெக்சாண்டரின் படையில் தலைமை அதிகாரியாகப் பணியாற்றினார். ஒரு நாள் கிலிட்டஸ் அதிகமாய்க் குடித்துவிட்டுப் போர் வீரர்களின் முன்னிலையில் அலெக் சாண்டரை அவமானப்படுத்தினார். அலெக்சாண்டர் கோபத்தினால் வெடித்து, தனது ஈட்டியை எடுத்து கிலிட்டஸை நோக்கி வீசினார். அந்த ஈட்டி தனக்கு நியமிக்கப்பட்ட இலக்கை அடைந்தது, கிலிட்டஸ் கொல்லப்பட்டார்.

அலெக்சாண்டர் தமது நண்பரின் மரணத்தைத் தொடர்ந்து கொடிய மனவருத்தத்திற்கு உள்ளானார். குற்ற உணர்வு அவரை மூழ்கடித்தது. ஒரு வேளையில் அவர் தாம் கிலிட்டஸைக் கொன்ற அதே ஈட்டியினால் தம்மையே குத்திக் கொல்லவும் முயற்சி செய்தார், ஆனால் அவரது நண்பர்கள் அதைத் தடுத்து விட்டனர். அலெக்சாண்டரின் மனவருத்தம் அவரை உடல்ரீதியாக சுகவீனமுள்ளவராக ஆக்கிற்று. அவர் படுக்கையில் படுத்து நாள்தோறும் கிலிட்டஸின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் தம் நண்பனைக் கொன்ற விஷயத்தைத் தமது சிந்தை யிலிருந்து எடுக்க இயலாதவராயிருந்தார். அலெக்சாண்டர் யுத்தங்கள் பலவற்றில் வெற்றி கொண்டு, அந்தக் காலத்தில் இருந்த நாகரீகம் அடைந்த உலகின் பெரும்பகுதியை ஆட்சி செய்தார், ஆனால் அவரால் தனது சொந்த ஆவியுடனான போரில் வெற்றி கொள்ள முடியவில்லை. அவர் கோபத்தினால் தோற்கடிக்கப்பட்டார்.[1]

மனிதனின் உணர்வுகள் எல்லாவற்றிலும் கோபம்தான் மிகச் சாதாரணமாக வெளிப்படுத்தப்படுகிறது என்று தோற்றம் அளிக்கின்றது. கடந்த சில நாட்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கோபம் கொண்டவர் களின் வரிசைகளில் அநேகமாக நீங்களும் நானும் உள்ளடங்குபவர்களாய் இருக்க முடியும். இது ஒரு உடமையை இடமாற்றி வைத்தல் அல்லது

*யாரேனும் ஒருவரால் கேலி செய்யப்படுதல் போன்ற சிறு நிகழ்ச்சிகளாய் ஏற்பட்டதாகவும் இருக்கலாம். இது உங்கள் ஆண் நண்பர் அல்லது பெண் நண்பர் உங்களால் இழந்து போகப்பட்டது, எவ்வித காரணமுமின்றி உங்கள் முதலாளி உங்களைத் திட்டியது, அல்லது நிதிநிலை விஷயங்களில் உங்கள் துணைவருடன்/துணைவியுடன் கருத்து வேறுபட்டது, போன்ற பெரிய விஷயமாகவும் இருக்க முடியும்.*

*நாம் யாவருமே அவ்வப்போது கோபம் கொள்ளுகின்றோம். கோபம் என்பது எல்லா மனிதர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற உணர்வாக உள்ளது. இது - வீடு, பணியிடம், பள்ளி அல்லது ஒரு கடை என்று - எங்கு வேண்டுமானாலும் நடக்க இயலும். சில வேளைகளில் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கூட்டங்களில் (கூட) கோபம் வெளிப்படுகின்றது. எங்கெல்லாம் மக்கள் உள்ளார்களோ அங்கெல்லாம் நீங்கள் சிறிது நேரம் காத்திருந்தால், ஏதாவது ஒரு வேளையில் கோபத்தைப் பெரும்பாலும் காணலாம்.*

*தேவனுடைய வசனமானது கோபத்தைப் பற்றி நிறையக் கூறுகின்றது. பவுல் எபேசியருக்குத் தனது நிருபத்தை எழுதிய பொழுது, அவர் இந்த உணர்வைப் பற்றி எடுத்துரைத்தார். ஏன்? ஏனென்றால், கிறிஸ்தவராக இருத்தல் என்பதில், கோபம் கொள்வதற்குச் சரியான வழி எது என்பதைக் கற்பதும் அடங்கியுள்ளது. அவர் பின்வருமாறு கூறினார்:*

> *அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிற படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யா திருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் (4:25-27).*

*சரியான வழியில் கோபம் கொள்வது எப்படி?*

## நேர்மையாயிருங்கள்

*மாற்கு கோஸ்குரோவ் என்பவர் கோபத்திற்கான ஆலோசனை நெறிகள் (Counseling for Anger) என்ற தமது புத்தகத்தில், திருமணத் தம்பதியான ஜார்ஜ் மற்றும் ஜேன் என்பவர்களைப் பற்றிக் கூறினார். ஜேன் வெளிப்படையாய்ப் பேசுபவளாக இருந்தாள்; அவள் ஏதொன்றைப் பற்றியும் அல்லது எந்த ஒரு நபரைப் பற்றியும் தனது கருத்துக்களையும் திருப்தியின்மையையும், தயக்கம் இன்றிப் பகிர்ந்து கொண்டாள். அத்துடன் ஜேன் தனது உணர்வுக் கட்டுப்பாட்டைத் திடீரென்று இழக்கக் கூடியவளாகவும் இருந்தாள். அவள் கூச்சல் போடுபவள் மற்றும் கதவை அறைந்து மூடுபவள் என்ற வகைப்படுத்தப்படக் கூடியவளாக இருந்தாள்.*

*ஜார்ஜ் இதற்கு நேர் மாறானவராயிருந்தார். அவர் வாழ்வை அமைதியாக அணுகக் கூடியவராக இருந்தார். அவர் தம் நற்பெயர் பற்றி அக்கறை கொண்டிருந்தார், எனவே அவர் தம்மையும் தமது உணர்வையும் கட்டுப்படுத்தியிருக்கும் உருவகம் ஒன்றை முன்னிறுத்த முயற்சித்தார். அவர்*

கோபத்தை மிக அரிதாகவே வெளிப்படையாகக் காண்பித்தார்.

ஜார்ஜ் மற்றும் ஜேன் ஆகியோர் விவாதித்த பொழுது, ஜார்ஜ் அமைதியாக, சலனமற்ற நிலையில் இருக்க முயற்சி செய்தார். அவர் தமது கோபத்தை வெளிப்படுத்தினால், ஜேன் மிகுந்த எரிச்சல் அடைவாள், சூழ்நிலை மிகவும் மோசமாகி விடும் என்று பயந்தார். ஜேன் கோபம் அடையும் பொழுது காணப்படுவது போன்ற கட்டுப்பாடு இழந்த நிலையில் தாம் இருப்பதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை. இருப்பினும் ஜார்ஜ் உள்ளாகக் கோபம் கொண்டார். அவரது கோபம் உண்மையானதாக இருந்தது, ஆனால் அது வெளிப்படுத்தப்படாதிருந்தது. அவர் உள்ளாக மட்டுமே கொதிப்படைந்த நிலையிலும் ஜேன் அறை விட்டு வெளியேறும் பொழுது முணுமுணுப்பவராகவும் காணப்பட்டார்.

ஜார்ஜும் ஜேனும் கோபத்தைக் கையாளுவதில் மாறுபட்ட இரு வகைகளைக் கொண்டிருந்தனர். ஜேன் வெளியரங்கமாகக் கோபம் அடைந்தாள். ஜார்ஜ் தம் உணர்வுகளை உள்ளாகக் கொண்டிருந்தார்; கோபத்தை அவர் கையாண்ட வழிமுறையானது அதை மூடி வைப்பதாக இருந்தது.[2]

ஜேன் செய்தது போன்று அடித்து நொறுக்கும் வகையில் செயல்படும் நபர் ஒருவர் கோபம் பற்றிய பிரச்சனையை அதிகம் அறிந்திருப்பதுடன், அதைக் குறித்து ஏதாவது செய்ய வேண்டும் என்ற அதிக ஆர்வம் உடைய வராகவும் இருக்கின்றார். தனது கோபத்தை உள்ளடக்கி வைக்கிற ஜார்ஜைப் போன்ற ஒரு மனிதர் செயல்படுவதில் சிரமம் கொண்டவராக இருக்கின்றார். இந்த நபர் பெரும்பாலும் சுயநீதியின் பக்கம் சாய்ந்து, வெறுப்புணர்வு மற்றும் கசப்புணர்வைப் பற்றிய பிரச்சனையை ஒப்புக் கொள்ள அல்லது கையாள மனவிருப்பம் இல்லாதிருக்கின்றார்.

நேர்மையை நாடும்படி - பிறருடன் வெளிப்படையாக மற்றும் உண்மையாக இருக்கும்படி வேதாகமம் நமக்குப் போதிக்கின்றது. இதைப் பவுல், "அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிற படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன்" (4:25) என்று எழுதியதன் மூலம் வலியுறுத்தினார். பிறர் மீதான நமது கோபத்தை எதிர்கொள்ளுதல் என்பது நேர்மையாயிருப்பதன் ஒரு பாகமாக உள்ளது.

கோபத்தை விழுங்குதல், அதைப் புதைத்து விடுதல் அல்லது அதை மறுத்தல் என்பது கோபத்தைக் கையாளுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையாக இருப்பதில்லை. கோஸ்குரோவ் பின்வருமாறு கூறினார்:

> புதைக்கப்பட்ட கோப உணர்வுகள் தவறான இடத்தில் காட்டப் படும் கோபமாக உருமாற்றம் அடையும் விளைவை ஏற்படுத்தக் கூடும். கோபமானது தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்பட்டு, பின்பு கோபத்திற்கான தொடக்கக் காரணத்திலிருந்து புறம்பே திசை திருப்பப்பட்டு, இன்னொரு நபர் அல்லது விஷயத்தின் மீது திருப்பி விடப்படுகின்றது. ஒரு மனிதர் தனது முதலாளியின் மீதோ அல்லது தனது பணியின் மீதோ கோபத்தைக் காண்பிக்க இயலாத பொழுது, அவர் அதைத் தனது இல்லத்திற்குக் கொண்டுவந்து, தனது

பிள்ளைகளிடம் கோபத்தைக் காண்பிப்பதென்பது சுலபமான தாகின்றது.[3]

கோபத்தைக் கையாளுவதற்கு அதைக் கட்டியெழுப்பும் வகையில் வெளிப்படுத்துதல் என்பதுதான் சரியான வழியாக உள்ளது. இது, கோபத்தைக் குறித்துப் பிறரிடம் தாக்கும் வழிமுறையில் அல்ல ஆனால் உண்மை நிறைந்த வகையில் பேசக் கற்றுக் கொள்ளுதல் என்று அர்த்தப் படுகின்றது. இதற்குப் பதிலாக, நாம் நம்மையே அன்பின் ஆவியில் வெளிப் படுத்தி, பிரச்சனையைத் தீர்த்து உறவை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர நாட வேண்டும். கட்டியெழுப்பும் வகையில் கோபத்தை நாம் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்?

1. அந்த நபரிடத்தில் தனிமையில் பேசச் செல்லுங்கள்.

2. யார் தவறு செய்கின்றோம் என்று விவாதிப்பதற்குப் பதிலாக நீங்கள் உணருகிற புண்படுதலைப் பற்றிப் பேசுங்கள்.

3. கடந்த காலத்தை (நினைவுக்கு) கொண்டு வராமல், தற்போதய பிரச்சனையின் மீது (மட்டும்) கவனம் செலுத்துங்கள்.

4. மன்னிப்பு வேண்டுதல்களுக்கு மறைமுகமாய் பிசுபிசுவென்று பேசாமல் இருங்கள். உணர்வுகளை மட்டும் வெளிப்படுத்துங்கள்.

5. எதிர்மறை மற்றும் நேர்மறைக் கூற்றுக்களுக்கிடையில் சமான நிலையைக் காத்துக் கொள்ளுங்கள்.

6. பயமுறுத்துதல்களை ஏற்படுத்தாதிருங்கள். அமைதியாக சலனமற்ற வகையில் பேசுங்கள்.

7. நீங்கள் பேசுகின்ற அந்த மற்ற நபரை இடையூறின்றி பதில் கூற அனு மதியுங்கள்.

8. உறவு மேம்படக் கூடியதற்கு என்ன செய்யலாம் என்று அந்த நபர் நினைப்பது பற்றிக் கேளுங்கள்.[4]

கோபத்தைக் கையாளுவதற்குச் சரியான வழி என்ன? நேர்மையாக இருங்கள். அதை (கோபத்தை) வெளிப்படுத்தி, அதை விசேஷமாய்க் கிறிஸ்துவின் சரீரத்தினுள் நேர்மறையான வழியில் கையாளுங்கள்.

## பகுத்து உணருபவர்களாய் இருங்கள்

நீதியுள்ள கோபம் மற்றும் பாவம் நிறைந்த கோபம் ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது அவசியம். இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய ஞாயிற்றுக் கிழமையன்று அவர் ஒரு (கோவேறுக்) கழுதையின் மீது அமர்ந்து எருசலேமுக்குள் பிரவேசித்தார். மக்கள் புகழ்ச்சியின் ஆரவாரத்துடன் அவரைக் கனப்படுத்தி, அந்தக் கழுதையின் முன்பாகச் சாலையில் தங்கள் மேலாடைகளை விரித்தார்கள். அவர்கள் அவரைக் கடந்து செல்லுகையில் அவரைக் கனப்படுத்துவதற்காகக் குருத்தோலைகளைத் தங்கள் கைகளில் ஏந்தி அசைத்தார்கள். இயேசு நகருக்குள் பிரவேசித்தவுடன் அவர் என்ன செய்தார் என்பதைப் பற்றி மாற்கு 11:11 பின்வருமாறு நமக்குக் கூறுகின்றது: “அப்பொழுது, இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து,

எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து, சாயங்காலமானபோது, பன்னிரு வரோடுங் கூடப் பெத்தானியாவுக்குப் போனார்."

அடுத்த நாளில் இயேசு ஆலயத்திற்குத் திரும்ப வந்தார், ஆனால் இந்த வேளையில் அவர் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு மட்டும் இருக்க வில்லை. அவர் ஆராதிக்கும் இடத்தை அநாவசியமாய்ப் பயன்படுத்தியவர் களுக்கு ஒரு செய்தியை அனுப்பும் நோக்கம் கொண்ட ஒரு ஊழியத்தில் இருந்தார்:

> அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர் களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோக விடாமல் (மாற். 11:15, 16).

இயேசு எருசலேமில் (மிகவும்) கோபம் கொண்டவரானார். பஸ்காவுக்கு வந்திருந்த திருப்பயணிகள் செலவிடுவதில் அதிக லாபம் ஈட்டுவதற்காக புறா விற்பவர்கள் தங்கள் (புறாக்களின்) விலையை அதிகப்படுத்தியது அவருக்குக் கோபமூட்டியது. காசுக்காரர்கள் மக்களை ஏமாற்றியதும், தேவனை ஆராதிக்கவும் கனப்படுத்தவும் வந்த மக்களின் பணப் பைகள் ஆராதிக்கச் செல்லும் வழியில் பறிக்கப்பட்டதும் அவருக்குச் சினமூட்டியது. செய்ய வேண்டிய சிலவற்றைச் செய்யப் போதுமான அளவுக்கு இயேசு கோபம் உள்ளவரானார்.

சில வேளைகளில் தேவன் எவ்விதம் கோபம் உள்ளவராகக் கூடும் என்று இயேசு நமக்குக் காண்பித்தார். பவுல் வலியுறுத்தியபடி, கோபம் என்பது தன்னிலே பாவம் உள்ளதல்ல: "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்" (4:26). இதைச் சில மொழிபெயர்ப்புகள், "கோபம் கொள்ளுங்கள், பாவம் செய்யாதீர்கள்" என்று கூறுகின்றன. கோபம் என்பது தேவன் நமக்களித்த உணர்வாக உள்ளது. சில வேளைகளில் நாம் கோபமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இந்த உண்மையை இயேசு விவரித்தார். தேவனுடைய வசனம் வெளிப்படையாகக் கீழ்ப்படியப் படாமல் போகின்ற பொழுது, பாவம் ஆர்ப்பாட்டம் செய்கின்ற பொழுது அது நம்மைக் கோபப்படுத்த வேண்டும். தேவனுடைய நாமம் தூஷிக்கப் படும் பொழுது, அது நம்மைக் கோபப்படுத்த வேண்டும். மக்கள் பிறரால் தவறாக நடத்தப்படும் பொழுது, கோபம் என்பது சரியான பதில் செயலாக உள்ளது. சில வேளைகளில், தேவனுடைய மக்கள் கோபத்தை அறிந்து அனு பவிக்க வேண்டியுள்ளது. நீதியுள்ள கோபத்திற்கான சோதனை இதுதான்: ஒரு விஷயம் தேவனைக் கோபப்படுத்தும் என்றால், அது தேவனுடைய மக்களைக் கோபப்படுத்த வேண்டியதாக உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, எனது எல்லாக் கோபமும் அந்த வகையான கோபமாய் இருப்பதில்லை. சிலவேளைகளில் நான் கோபம் கொள்கின்ற பொழுது, அது தேவனைப் பொறுத்ததாயிருப்பதில்லை. அது என்னை - எனது சுயநலத்தை, மேட்டிமையை, அல்லது பொறாமையை - ப் பொறுத்த

*விஷயமாகின்றது. அந்த வகையான கோபத்தைப் பற்றியே பவுல் எச்சரிக்கை விடுத்தார். சுயநலமான, சுயத்தை மையங்கொண்ட, சுயத்திற்கு ஊழியம் செய்கின்ற கோபமானது தேவனுடைய பிள்ளையின் வாழ்வில் இடம் கொண்டிருப்பதில்லை.*

*சுயத்திற்கு ஊழியம் செய்கின்ற கோபமானது ஒரு வைபவத்தை அல்லது குடும்ப ஒன்றுகூடுதலை ஒரு சில நொடிப் பொழுதுகளில் அழித்து விடக் கூடும். இது திருமணங்களைச் சீரழித்து, நட்புறவுகளைச் சிதைத்து, ஒரே உள்ளூர் சபையில் உள்ள சக கிறிஸ்தவர்களை உண்மையிலேயே விரோதிகளாக்கி விடக் கூடும்.*

*கோபம் கொண்டிருப்பதற்கான சரியான வழிமுறை என்ன? பகுத்துணருபவர்களாய் இருங்கள். கோபத்தின் சரியான வகைக்கும் தவறான வகைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளுங்கள்.*

## பாதுகாப்புள்ளவர்களாய் இருங்கள்

*எபேசியக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" (4:26, 27). கோபத்தைக் குறித்து அவர் இரு பாதுகாப்பு காரணிகளைக் கொடுத்தார்:*

*"கோபத்தைக் கொதிப்படைய அனுமதிக்காதிருங்கள்" என்பது முதல் பாதுகாப்புக் காரணியாக உள்ளது. கோபத்தின் செயல்விளைவை நீடித்திருக்க விடாதீர்கள். "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது." அடிக்கடி தன் மனைவிக்கு எரிச்சல் மூட்டிய கணவன் ஒருவனைப் பற்றிப் பவுல் ஃபாக்னர் அவர்கள் எடுத்துரைத்தார். அவனால் அவ்வாறு செய்யாதிருக்க முடியாதிருந்தது. எடுத்துக்காட்டாக, அவன் குளிர்பதனப் பெட்டியில் உரிக்காத வெங்காயம் ஒன்றை அவ்வப்போது வைப்பதுண்டு, அது அவனது மனைவிக்கு உதவியாய் இருக்கும் என்று அவன் நினைத்தான். அந்த வெங்காயம் குளிர்பதனப் பெட்டியிலிருந்து துர்நாற்றங்களை உறிஞ்சி விடும் என்று அவன் நினைத்தான். (ஆனால்) அதற்குப் பதிலாக, அவனது மனைவி வெங்காய வாசனையை நீக்க வேண்டி, குளிர்பதனப் பெட்டி முழுவதையும் சுத்தம் செய்ய வேண்டியதாயிற்று. அது அவளுக்கு எரிச்சல் மூட்டியது, ஆனால் அதைப் பற்றி அவள் அவனிடத்தில் ஒன்றும் கூறவில்லை. அவன் அதை வைத்த போதெல்லாம் அவள் வெங்காயத்தை எடுத்துப் போட்டு விட்டு, குளிர்பதனப் பெட்டியைச் சுத்தம் செய்வாள், ஒரு வார்த்தை கூட அதைப் பற்றிப் பேச மாட்டாள். அடுத்த நாள் குளிர்பதனப் பெட்டி நல்ல வாசனையுடன் இருக்கும், அவனோ தனது வெங்காயம் நல்ல ஒரு பதிலாக இருந்தது என்று நினைத்துக் கொள்வான்.*

*இரவு வேளைகளில், அம்மனிதன் ஜன்னலைத் திறந்து வைத்து விடுவான். தனது மனைவிக்குத் தூய காற்று கிடைக்கும் என்று எண்ணி*

ஒவ்வொரு இரவிலும் அவன் இவ்வாறு செய்து வந்தான். உண்மையில் அவள் குளிரினால் அவதிப்பட்டாள். ஒவ்வொரு இரவிலும் அவள் படுக்கையிலிருந்து எழும்பி, இன்னொரு போர்வையை (தேடி) எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இது அவளுக்குக் கோபமூட்டியது, ஆனால் அதை அவள் ஒருக்காலும் அவனிடத்தில் கூறவில்லை.

கடைசியில், பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு, குளிர்பதனப் பெட்டியில் உரிக்காத இன்னொரு வெங்காயத்தைக் கண்ட பொழுது, அவள் கோப உணர்வைக் கட்டுப்படுத்தும் திறனை இழந்து போனாள். அவள் கூக்குரலிட்டு அழுது அலறினாள். அவளது கணவனால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன், "அது ஒரே ஒரு சிறிய வெங்காயம் தானே. அந்தச் சிறிய வெங்காயத்திற்காக ஏன் இப்படி அலறுகிறாய்?" என்று கேட்டான். அது ஒரு சிறிய வெங்காயம் அல்ல. அது குளிர்பதனப் பெட்டியில் பதினேழு ஆண்டுகளாக வைக்கப்பட்ட வெங்காயங்களாகவும், பதினேழு ஆண்டுகளாகப் பற்கடிப்பை உண்டாக்கிய குளிராகவும் இருந்தன.

நாம் பின்வரும் பாடத்தைக் கற்றுக் கொள்வோமாக: யாரேனும் உங்களுக்கு எரிச்சல் மூட்டினால், நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டை இழக்குமுன்பாக அதைப் பற்றிப் பேசி விடுங்கள். அந்த மனைவி, "அன்பே, நீங்கள் சமையல் அறையில் எனக்கு உதவுவதை நான் பாராட்டுகின்றேன், ஆனால் உரிக்காத வெங்காயம் குளிர்பதனப் பெட்டி முழுவதிலும் கெட்ட நாற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. ஒவ்வொரு வேளையிலும் நான் அதைச் சுத்தம் செய்ய வேண்டியதாகின்றது. அது என்னைக் கோபப்படுத்துகின்றது, நான் அவ்வாறு கோபம் கொள்ள விரும்பவில்லை" என்று தன் கணவனிடம் கூறியிருக்கலாம். அந்த நபர் உங்கள் உணர்வு பற்றி உங்களிடம் விவாதித்து அறியவும் நீங்கள் அதன் மூலம் செயல்படும் வகையைப் பின்பற்றவும் கூடும்படிக்கு அவர் அல்லது அவள் உங்கள் உணர்வைப் பற்றி அறிந்து கொள்ள அனுமதியுங்கள். கோபத்தை நீட்டிப்பதினால் பாவம் உங்களுக்குள் ஊர்ந்து ஏறிவிட அனுமதியாதீர்கள். கூடிய விரைவில் - உங்களால் முடியுமென்றால் ஒரு நாள் முடிவதற்கு முன்பே பிரச்சனை களைத் தீர்த்து விடுங்கள்.[5]

"பிசாசுக்கு இடங்கொடாதீர்கள்" என்பது இரண்டாவது பாதுகாப்புக் காரணியாக உள்ளது. நாம் எல்லாருமே, கோபமாயிருக்கும் பொழுது சோதனைகளை எதிர்கொள்ளுகின்றோம். நாம் கோபமாய் இருக்கும் பொழுது, சாத்தான் நம்முடன் வருகிறான், அவன் நம் உறவுகளைச் சிதைப்பதற்கு அந்தக் கோபத்தை பயன்படுத்துகின்றான். மனம் புண்படுத்துவதில் அவன் விசேஷித்த கவனம் செலுத்துகின்றான், எனவே ஒரு மோசமான மனநிலை கொண்டிருத்தலையோ அல்லது அதைப் பற்றி நகைச்சுவையாய்ப் பேசுவதையோ தவிர்த்து விடுங்கள். கோபத்தை ஞானமாய்க் கையாளுங்கள், ஏனென்றால் வெளிப்படுத்தப்படாமல் அல்லது ஆராய்ந்து பார்க்கப்படாமல் செல்லுகின்ற கோபமானது உங்கள் வாழ்விற்குள் சாத்தானுக்குத் திறந்த கதவொன்றை அளிக்கின்றது. அது சாத்தான் இயங்குவதற்கு அவன் ஒரு முகாமிடத்தை அமைக்க உதவு

*கின்றது. சாத்தான் காலூன்ற இடம் தராதீர்கள்.*

## *முடிவுரை*

*கோபம் கொள்வதற்குச் சரியான வழிமுறை என்ன? நேர்மையாய் இருங்கள். கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு கட்டியெழுப்பும் வகையில் உணர்வுகளை வெளிப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். பகுத்து உணருபவர்களாய் இருங்கள். நீதியுள்ள கோபத்திற்கும் பாவம் நிறைந்த கோபத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கற்றுக் கொள்ளுங்கள். பாதுகாப்புள்ளவர்களாய் இருங்கள். கோபத்தைக் கையாளுவதற்கு தேவன் தம்முடைய வசனத்தில் நமக்களித்துள்ள பாதுகாப்புக் காரணிகளை நடைமுறைப்படுத்துங்கள்.*

*மக்கள் பல வழிமுறைகளில் மாறுபடுகின்றனர், ஆனால் நாம் பொதுவான பண்புகளையும் அதிகம் கொண்டிருக்கின்றோம். கோபத்தின் உணர்வு என்பது நாம் யாவரும் பொதுவாய்க் கொண்டுள்ள குணமாகும். இயேசு உங்கள் கர்த்தராய் இருக்கிறார் என்றால், அவர் உங்கள் கோபத்தின் மீது(ம்) கர்த்தராய் இருத்தல் என்பதைக் காட்டிலும் குறைவான விஷயத்துடன் அமைந்து விடமாட்டார். தேவனைக் கோபப்படுத்துகின்ற சில விஷயங்கள் உடன் வருகிற பொழுது, அது உங்களையும் கோபப் படுத்தி, தேவனுக்கேற்ற வகையில் செயல்படும்படித் தூண்ட வேண்டும். இதற்கு மறுபுறத்தில், மேட்டிமை, சுயத்தை மையங் கொள்ளுதல், அல்லது தவறாக புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் கோபம் கனன்று எரிகின்ற பொழுது, அது நீங்கள் அதைத் தீர்ப்பதற்கு கட்டி யெழுப்பும் துரிதமான செயல்பாட்டை மேற்கொள்ளக் காரணமாக வேண்டும். இதையே தேவன் தம்முடைய மக்களிடம் எதிர்பார்க்கின்றார்.*

---

*குறிப்புகள்*

[1]Clarence E. Macartney, comp., *Macartney's Illustrations* (Nashville, Tenn.: Abingdon Press, 1945), 20-21. [2]Mark P. Cosgrove, *Counseling for Anger,* Resources for Christian Counseling, gen. ed. Gary R. Collins (Dallas: Word Publishing, 1988), 62-63. [3]Ibid., 64. [4]Ibid., 97. [5]Paul Faulkner, *Making Things Right When Things Go Wrong: Ten Proven Ways to Put Your Life in Order* (Dallas: Word Publishing, 1986), 143.

---

### *"நடை"*

*1. அன்பில், ஒருவர் மற்றவரை மன்னித்து நடத்தல் (4:32; 5:2).*

*2. ஒளியில், உலகத்தில் கிறிஸ்துவுக்காகப் பிரகாசித்து நடத்தல் (5:8).*

*3. ஞானத்தில், சூழ்நிலைக்கேற்றவாறு, நமது காலத்தைத் தக்க வகையில் பயன்படுத்தி நடத்தல் (5:15).*

*4. ஆவியில், கர்த்தருக்குப் பாடல்கள் பாடி இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி நடத்தல் (5:19; கலா. 5:16).*

# மக்களைக் கட்டியெழுப்புபவர்கள் (4:29-32)

*டெக்ஸாஸின் அர்லிங்டனில் பல ஆண்டுகளாகத் திட்டமிடுதல் மற்றும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்குப் பிறகு சமீபத்தில் ஒரு பேஸ்பால் விளையாட்டுப் பூங்காவானது திறக்கப்பட்டது. ஒரு சில வாரங்களுக்கு முன்பு வரையிலும் பழைய விளையாட்டுப் பூங்காவானது புதிய பூங்கா விற்கு அருகில் நின்றிருந்தது. கடைசியில் அது (பழைய பூங்கா) இடித்து வீழ்த்தப்பட்ட பொழுது, அதன் கட்டுமானப் பகுதிகளில் கடைசியாக வீழ்த்தப்பட்ட பகுதியானது விழுகின்ற போது எடுக்கப்பட்ட புகைப்படம் செய்தித் தாளில் வெளியாயிற்று. இது எனக்கு வாழ்வின் அடிப்படைக் கொள்கையொன்றை நினைவூட்டியது: ஒன்றைக் கட்டியெழுப்ப ஆகும் கால அளவை விட அதை இடித்துத் தள்ளுவதற்குக் காலம் அதிகம் தேவைப் படுவதில்லை.*

*இந்த சத்தியத்தைத் தேவன் நமக்கு, பவுலினால் எழுதப்பட்ட பின்வரும் வசனங்களின் மூலம் நினைவூட்டுகின்றார்:*

> *கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங் கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (4:29-32).*

*சபையானது, மக்களைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*நமது வேத வசனப் பகுதியான 4:29-32, இயேசுவைப் போலிருத்தல் மற்றும் மக்களைக் கட்டி எழுப்புகின்றவர்களாகுதல் ஆகியவற்றின் இன்றி யமையாத (பின்வரும்) இரு பகுதிகளின் மீது கவனம் செலுத்துகின்றது: நமது வார்த்தைகள் மற்றும் நமது செயல்கள்.*

# மக்களைக் கட்டி எழுப்பும் வார்த்தைகள்

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் நமது வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். "கெட்ட வார்த்தையிலிருந்து" (4:29அ) விலகியிருத்தல் என்பது நமது வார்த்தைகள்/பேச்சைக் காத்துக் கொள்ள நாம் ஈடுபடும் ஒரு வழிமுறையாகும். "கெட்ட" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது அழுகிப்போன அல்லது கெட்டுப்போன உணவைக் குறித்து விவரிப் பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஒரு சில வாரங்களுக்கு முன்பாக உள்ளூர் சபையின் உணவு உதவி ஊழியக் குழுவானது ஒரு உணவு வங்கியில் இருந்து பழங்கள் சிலவற்றைப் பெற்றது. அதைத் தேவையில் உள்ளவர்களுக்கு விநியோகிப்பதற்காகத் தன்னார்வப் பணியாளர்கள் தயார் செய்கையில், அந்தப் பழங்களில் அதிகமானவற்றின்/பெரும்பாலானவற்றின் தண்டின் அருகே பூஞ்சைக் காளானின் துணுக்கு இருந்ததை யாரோ ஒருவர் கவனித்தார். அது நன்கு கவனித்தால் மட்டுமே காணக் கூடியதாயிருந்தது. அந்த பீச் பழங்களில் ஒன்றைத் தன்னார்வப் பணியாளர்களில் ஒருவர் வெட்டி அதனுள்ளாகப் பார்த்த பொழுது, அது முற்றிலும் காளான் படிந்திருந்ததைக் கண்டார். எல்லாப் பழங்களும் அழுகிப் போயிருந்தன.*

*நம்மில் எவரும் அழுகிப் போன கனியை நமது வாயில் இட்டுக் கொள்வதை விரும்ப மாட்டோம். அதைப் பற்றி நினைப்பதே நம்மை நோயில் ஆழ்த்துவதாக உள்ளது; ஆனால் தேவனுடைய கண்ணோக்கத்தில் நாம் அடிக்கடி நம் வாயில் அழுகிப் போனவை இருக்கும்படி அனுமதிப் பவர்களாய் இருக்கின்றோம். யாரேனும் ஒருவர் ஆபாச நகைச்சுவையைக் கூறும்பொழுது, சிரிப்பதற்காக கெட்ட வார்த்தைகளை அர்த்தப்படுத்திக் கூறும்பொழுது, ஒரு பொய் கூறும்பொழுது அல்லது கிசுகிசுப்பைப் பரவ விடும்பொழுது, அவர் தம் வாயில் அழுகிப்போன பொருள் இருக்க அனு மதிக்கின்றார்.*

*நமது வார்த்தைகள் எவ்விதமானவைகளாய் இருக்க வேண்டும்? பவுலினால் அளிக்கப்படுகின்ற மூன்று வழிகாட்டுதல்களைக் கவனியுங்கள். முதலாவது, நமது வார்த்தைகள் கட்டியெழுப்ப வேண்டும். நாம் "பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளை"(4:29ஆ)ப் பேச மட்டுமே சுயாதீனம் பெற்றவர்களாய் இருக்கின்றோம். கிறிஸ்தவர்கள் மற்றவர்களிட மிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக்கொண்டு வரக் கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.*

*இரண்டாவது, நமது வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளா யிருக்க வேண்டும். அவைகள் "காலத்தின் பிரயோஜனத்தின்படி" பேசப்பட வேண்டும் (4:29இ). நாம் நமது வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கையில் எப்பொழுதும் பிறருடைய மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.*

*மூன்றாவது, நமது வார்த்தைகள் கிருபை பொருந்தினதாக இருக்க வேண்டும். பிறருடனான நமது வாய்மொழிச் செய்தித் தொடர்பிற்கு நோக்கம் ஒன்றை வேதாகமம் தருகின்றது: "பக்திவிருத்திக்கு ஏதுவான"*

*(4:29இ). நாம் பேசுகின்ற வார்த்தைகளின் மூலமாகத் தேவன் பிறருடைய வாழ்வில் தம்முடைய கிருபையை ஊற்றுகின்றார். சாலொமோன், "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11) என்று கூறினார்.*

*உங்கள் வார்த்தைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் உள்ளன? பரிசுத்த ஆவியானவரின் உணர்வெழுச்சிகளைச் சித்தரிப்பில் கொண்டு வருவதற்குப் பவுல் செயல்பட்ட வகையில் இதைக் குறித்து நாம் ஒளியூட்டப்பட அவர் நமக்கு உதவினார்: "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' (4:30). பல்வேறு செயல்பாடுகள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகின்றன. அவைகளில் ஒன்றாக உள்ளது, அவர் நிலைநிற்கிற ஒவ்வொன்றிற்கும் எதிராகச் செல்லுகின்ற கெட்ட வார்த்தைகளாக உள்ளன. நமது வார்த்தைகளைக் கவனித்தல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.*

*உங்கள் கணவரிடத்திலோ அல்லது உங்கள் மனைவியிடத்திலோ உற்சாகமூட்டும் வார்த்தைகளை மட்டுமே நீங்கள் பேசுவதென்று முடிவெடுத்தால், அது உங்கள் திருமண வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்? உற்சாகமூட்டும் வார்த்தைகள் என்ற நிலையான ஆகார மானது உங்கள் குழந்தைகளுக்கு எதைச் செய்யும்? உள்ளூர் சபையொன்றில் இருக்கின்ற உறுப்பினர்கள் யாவரும் பிறரை இடித்து வீழ்த்தும் "அழுகிப் போன'' வார்த்தைகளைக் கூறுவதைத் தவிர்த்து, ஒருவர் பிறரைக் கட்டியெழுப்பும் வார்த்தைகளை மட்டுமே கூறினால் அது சபையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்?*

## மக்களைக் கட்டி எழுப்பும் செயல்பாடுகள்

*நமது பேச்சுக்களுடன், நமது செயல்பாடுகளும் கூட மக்களைக் கட்டியெழுப்ப வேண்டும். இது பிறரிடத்தில் நேர்மறையாகச் செயல் படுவதை உள்ளடக்குவது மட்டுமின்றி, பிறரிடத்தில் எதிர்மறையாகச் செயல்பட மறுப்பதையும் உள்ளடக்குகின்றது.*

*எதிர்மறையான செயல்பாடுகளைத் தவிர்த்து விடுங்கள். மக்களைத் துன்புறுத்துகின்ற எந்த விதமான எதிர்மறைச் செயல்பாடுகளையும் கிறிஸ்தவர்கள் நீக்கிப் போட்டு விட வேண்டும். 4:31ல் பவுல் எதிர் எச்சரிக்கை செய்துள்ள செயல்கள் மற்றும் எண்ணப்போக்குகளின் பின்வரும் அட்டவணையைக் கவனியுங்கள்:*

1. *"கசப்பு" –*
   *ஒரு நபர் பிறரைக் குறித்து எரிச்சல் அடையும்படி செய்கின்ற முரட்டுத்தன்மை*
2. *"கோபம்" –*
   *மக்களை நோக்கிய கோபத்தின் திடீரென்ற வெடிப்பு*
3. *"மூர்க்கம்" –*

யாரேனும் ஒருவரிடத்தில் நீண்ட காலமாக ஆழ்ந்து வேரூன்றிய விரோதம் பாராட்டுதல்

4. "கூக்குரல்" –
   பிறரிடத்தில் கோபமாக உரத்துப் பேசுதல்
5. "தூஷணம்" –
   பிறருடைய நற்பெயரைக் குலைக்கும் வகையில் வதந்திகளைப் பரப்புதல்
6. "துர்க்குணம்" –
   யாரேனும் ஒருவரைத் துன்புறுத்துவதற்கென்று செய்யப்படும் முயற்சி

நீங்கள் உங்கள் வீட்டை ஒருக்காலும் தூய்மைப்படுத்தாமல் இருந்தால், அது அழுக்காக அல்லது அசுத்தம் நிறைந்ததாக ஆகிவிடுகின்றது. ஒரு வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் என்பது அதில் அசுத்தங்களை நீக்குதல் என்று அர்த்தப்படுகின்றது. சில செயல்கள் நம்மை மாசு படுத்தி விடாதபடிக்கு அவற்றை நாம் நீக்கிப் போட வேண்டும் என்று பவுல் நமக்குக் கூறினார்.

நேர்மறையான செயல்பாடுகளை மேற்கொள்ளுங்கள். தவிர்க்க வேண்டிய எதிர்மறையான செயல்பாடுகளைப் பட்டியலிட்ட பிறகு பவுல், நாம் மேற்கொள்ள வேண்டிய நேர்மறையான செயல்பாடுகளாகப் பின்வரும் மூன்று செயல்பாடுகளை அளித்தார்:

1. "தயவாயிருத்தல்" –
   பிறருக்கு மிகச் சிறந்தவற்றையே நினைத்து, அவர்களிடமிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு உங்களால் இயன்ற ஒவ்வொன்றையும் செய்தல்.
2. "மன உருக்கமாயிருத்தல்" –
   பிறருடைய தேவைகள் குறித்துத் திறந்த மனதுடனும், பதில்செயல் புரியும் தன்மையுடனும் இருத்தல்.
3. "மன்னிப்பவர்களாய் இருத்தல்" –
   தேவன் உங்களுடைய தவறுகளை எவ்விதம் நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அவ்விதமாகவே நீங்களும் மற்றவர்களின் தவறுகளை நடத்துதல்.

ஜார்ஜ் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர், தன்னைத் தவிர மற்ற யாவரும் காதுகேளாதவர்களாய் இருந்த ஒரு குடும்பத்தில் பிறந்தார். அவர் தம் குடும்பமானது தனக்கு "பிறந்தநாள் வாழ்த்து" பாடியதை ஒருக்காலும் கேட்டதில்லை. அவர் விளையாட்டுக்களை விளையாடுகையில் அவருக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அவரது தந்தையார் உரக்கக் கூவியதை அவர் ஒருக்காலும் கேட்டதில்லை. அவர் ஏதோ ஒரு வகையில் தமது பெற்றோர்களின் அமைதியான உலகில் இருந்து துண்டிக்கப்பட்டவராக இருந்தார். அவர் அந்த வலியுறுத்தத்தை/அயர்ச்சியை நன்கு கையாளாதிருந்தார். அவர் மட்டுமீறிக் குடித்தும் தங்களின் நேரத்தைச் சறுக்கு பலகைகளின் மீதும் செலவிட்டுக் கொண்டிருந்த மற்ற வாலிபர்களின் குழு ஒன்றில் இணைந்து கொண்டார். அவர் தமது தலையை வாரிக் கொள்ளாமல், கிழிந்த

*சட்டைகளையும், தோல் கையுறைகளையும் அணிவதை விரும்பித் தேர்ந்து கொண்டார். ஜார்ஜின் சூழ்நிலையானது வாக்குறுதியளிப்பதாகக் காணப் படாதிருந்தது. இருப்பினும் ஜார்ஜ் குறிப்பிடத்தக்க ஒரு சபையை சார்ந்திருந்தார். இளைஞர் குழுவினர் ஜார்ஜால் "மாசு படுத்தப்பட்டு" விடுவார்களோ என்று கவலைப்படுவதற்குப் பதிலாக, அந்த உள்ளூர் சபையின் உறுப்பினர்கள் அவரை எப்பொழுதும் தாங்கள் வரவேற்பதை உணரச் செய்தார்கள். அவரை அன்புகூர்ந்த அவர்கள், அவரைப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்தார்கள். அவர் அருகாமையில் அவர்கள் நின்றார்கள். ஜார்ஜை அன்புடன் வழிநடத்துதல் என்பது சில வேளைகளில் அவரை எதிர்த்து நிற்றல் என்பதை அர்த்தப்படுத்தினாலும், அவர்கள் அவரை வழிநடத்துகின்ற பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அவருக்குப் போதிக்க தாங்கள் கொண்டிருந்த ஆவியும், அவரைக் கையாளுவதில் அவர்கள் காண்பித்த ஞானமும் அவர்களின் உண்மையான அன்பைத் தெரிவித்தன.*

*கடைசியில், அவர்களின் அன்பான அணுகுமுறையானது ஜார்ஜ் ஒரு கிறிஸ்தவராகும்படி வழிநடத்திற்று. அவர் ஒரு செய்தித்தாளின் புள்ளி விவர மாகவோ அல்லது மாகாணச் சிறையின் கைதியாகவோ ஆகாதிருந்தார். கடைசியில் அவர் ஊழியத்தைப் பற்றிய முதன்மைப் பாடம் படிப்பதற்குத் தன்னை ஒரு கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொண்டார்.*

*ஒவ்வொரு சபையும் ஒவ்வொரு நபருக்கும் கூற வேண்டியதை ஜார்ஜின் சபையும் வார்த்தைகளிலும் செயல்களிலும் அவருக்குத் தெரிவித்திருந்தது: "விசுவாசிகளின் இந்த உள்ளூர் அமைப்பில் இருந்த ஒவ்வொரு உறுப்பினரும் அந்த நபர் எவ்வளவு சிறியவராக, பலவீனராக, அல்லது இடர்ப்பாடு அடைந்தவராக இருப்பினும் முக்கியமானவராக கருதப்படுவார்."[1]*

*நீங்கள் ஆராதிக்கின்ற சபையில் ஜார்ஜைப் போன்றவர்கள் அங்கம் வகிக்கின்றார்களா? நீங்கள் "ஆமாம்" என்று தலையசைக்கும் பொழுது அவர்களின் முகங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்களை உங்கள் சிந்தையில் நிலைநாட்டுங்கள். தேவன் நம்மை, மக்களைக் கட்டி எழுப்புபவர்களாக இருக்கும்படி அழைப்பது ஏன் என்பதை அவர்களின் உருவங்கள் நமக்குக் கூறும்.*

## *முடிவுரை*

*"மக்களைக் கட்டியெழுப்புபவராக" இருக்க வேண்டும் என்ற பவுலின் அறிவுறுத்தல்களுக்கு நீங்கள் எவ்விதமாகப் பதில்செயல் செய்வீர்கள்? உங்கள் வார்த்தைகளை நீங்கள் ஆராய்வீர்களா? நீங்கள் மக்களுக்குக் கூறுகின்றவைகள் அவர்களை ஆவிக்குரிய வகையில் கட்டி எழுப்புபவை களாய் உள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்வீர்களா? உள்ளூர் சபையின் சூழ்நிலையானது ஆரோக்கியமானதாகவும் நேர்மறையானதாகவும் இருக்க உதவுதல் என்பதை நீங்கள் உங்கள் வாழ்வின் முன்னுரிமையாக்கிக் கொள்வீர்களா? ஆம், பாவத்திலிருந்து ஓய்ந்திருக்கக் கூடிய மக்கள் நமக்குத்*

தேவை, ஆனால் அவர்களுக்கு உதவ முயற்சிப்பதற்கான நமது வழியானது வெற்றி மற்றும் தோல்விக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடும்.

மிகவும் நடைமுறைக்கு உகந்த பின்வரும் இரு ஆலோசனைகள் (நமக்கு) உதவலாம். முதலாவது, மக்களைக் கட்டி எழுப்புபவராக இருப்பது எப்படி என்பதற்கு இயேசுவை உங்கள் உதாரணமாகக் கண்ணோக்குங்கள். சுவிசேஷங்களை மீண்டும் மீண்டும் வாசிப்பதில் தொடங்கி, மக்களுடன் அவர் உரையாடிய வழிமுறையை உற்றுக் கவனியுங்கள். இரண்டாவது, உற்சாக மூட்டுதல் என்பதைத் தனிப்பட்ட முன்னுரிமையாக இப்பொழுதே தொடங்க முடிவு செய்யுங்கள். உற்சாக மூட்டும் வார்த்தைகள் சிலரிடமிருந்து இயல்பாகவே பெருக்கெடுத்தோடுகின்றன. நம்மில் பெரும் பாலோருக்கு இதை மேற்கொள்வதற்கு உணர்வு ரீதியான முயற்சியும் நடைமுறையும் அவசியமாகின்றது, ஆனால் நாம் “மக்களைக் கட்டி எழுப்புபவர்களாய்” இருப்பதற்கு இவற்றை மேற்கொள்வது என்பது தகுதியானதாகவே உள்ளது.

---

குறிப்பு

[1]David K. Lewis, Carley H. Dodd, and Darryl Tippens, *Dying to Tell: The Hidden Meaning of Adolescent Substance Abuse* (Abilene, Tex.: ACU Press, 1992), 101-2.

# தூய்மை

# (5:1-7)

*பாலியல் விவகாரம் பற்றி அமெரிக்காவில் சமீபத்தில் வெளியிடப் பட்ட அறிக்கையானது நல்ல மற்றும் கெட்ட ஆகிய இரு வகைச் செய்திகளையும் கொண்டுள்ளது. அமெரிக்கக் கலாச்சாரமானது பாலியல் விவகாரத்தின் கொதிக்கும் கொப்பரை போல உள்ளது என்ற தொடர்பு சாதனச் சித்தரிப்பு ஒரு உண்மையான சித்தரிப்பாக இருப்பதில்லை. அமெரிக்காவின் விடலைப் பருவத்தினரில் பெரும்பான்மையோர் "ஆச்சரியப்படுத்தும் அளவுக்குப் பழைமைவாதிகளாக" இருக்கின்றனர். நியூயார்க்கின் மாநிலப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றுகின்ற ஜான் H. கேக்னன் என்பவர், திருமணம் முடித்த பெண்களில் 85 சதவிகிதத்தினரும் திருமணம் முடித்த ஆண்களில் 75 சதவிகிதத்திற்கும் அதிகமானோரும், தாங்கள் தங்கள் துணைவருக்கு/ துணைவிக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்திருந்ததாகக் கூறினர் என்று அறிக்கை தந்தார்.[1] அது ஒரு நற்செய்தியாக உள்ளது.*

*4 கணவர்களில் ஒருவரும், 6 மனைவிகளில் ஒருத்தியும் தங்கள் துணைவிக்கு/துணைவருக்கு உண்மையற்று நடக்கின்றனர் என்பது கெட்ட செய்தியாக உள்ளது. அமெரிக்க ஆண்களில் பாதிப் பேர் தங்கள் வாழ் நாளில் தற்போதய மனைவியர், முன்னாள் மனைவியர் மற்றும் பெண் தோழிகள் உள்ளிட்ட ஆறுக்கும் மேற்பட்ட பெண்களைப் பாலியல் தொடர்புப் பங்களிகளாகக் கொண்டிருந்தனர். பெண்களில் பாதிப் பேர், தாங்கள் வேறுபட்ட மனிதர்கள் இரண்டு பேருக்கும் அதிகமானவர் களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்ததாகக் கூறினர். அமெரிக்காவின் விடலைப் பருவத்தினரில் 26 சதவிகிதம் பேர் மட்டுமே தாங்கள் வாழ் நாளில் ஒரு துணைவரை மட்டும் கொண்டுள்ளதாகக் கூறினர்.[2]*

*பாலியல் தூய்மை பற்றி தேவ வசனம் என்ன கூறுகிறது என்று கவனியுங்கள்:*

> *ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.*
>
> *மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது. அப்படியே*

*வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாரதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது, தேவனுடைய இராஜ்யமாகிய கிறிஸ்துவின் இராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள் (5:1-7).*

*வடக்கு ஐரோப்பாவில் வாழ்கின்றதும் எர்மைன் என்று அழைக்கப்படுகிறதுமான ஒரு மிருகம் பற்றி நான் (புத்தகத்தில்) வாசித்துள்ளேன். இந்த எர்மைன், கோடை காலத்தில் பழுப்பு நிறமான மென்மயிரைக் கொண்டுள்ளது. குளிர்காலத்தில் அதன் மென்மயிரானது பனி போன்ற வெண்மையாக மாறுகின்றது. இந்த மிருகமானது தனது வெள்ளை மென்மயிர் குறித்து மிகவும் பெருமை கொண்டுள்ளது. அதைச் சுத்தமாகக் காத்துக் கொள்வதற்கு இம்மிருகம் எதை வேண்டுமானாலும் செய்யும். உண்மையில், வேட்டைக்காரர்கள் எர்மைனின் தங்குமிடம் ஒன்றைக் கண்டறிந்ததும் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துள்ளார்கள். (தங்குமிடத்தின்) திறப்பைச் சுற்றிலும் கரு நிறமான நிலக்கீல்/தார் என்ற திரவத்தை தடவி விட்டு, பின்பு அம்மிருகத்தைக் கண்டு பிடித்து, அதன் கூண்டிற்குள் அதைத் துரத்துவதற்கு நாய்களைப் பயன்படுத்துகின்றனர். தாரைப் பார்க்கும் பொழுது எர்மைன் கூண்டிற்குள் செல்ல மறுக்கின்றது, ஏனெனில் அது தனது மேல் தோல் அழுக்கடைவதை விரும்புவதில்லை. அந்த மிருகமானது நாய்களையும் வேட்டைக்காரர்களையும் எதிர்கொண்டு வலையில் அகப்படுத்தப்படும். வெள்ளை நிற மென்மயிரைக் கொண்ட எர்மைன், தூய்மை என்பதைத் தனது வாழ்வைக் காட்டிலும் மேலானதாக மதிக்கின்றது. கிறிஸ்துவின் நாமத்தை அணிந்துள்ள யாவருக்கும் கூட இதுவே உண்மையானதாக இருக்க வேண்டும்.*

*நமது பாலியல் தூய்மையானது தேவனுக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? பின்வரும் பதிலைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்:*

*தூய்மை என்பது அதன் சாராம்சத்தில், நமது வாழ்வில் தேவனுடைய பண்பு மற்றும் பிரசன்னம் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக உள்ளது. நாம் பாலியல் ரீதியாகத் தூய்மையுடன் வாழ்கின்ற அளவு வரைக்கும், தேவன் நமக்குள்ளாகச் செயல்பட்டு, நமது விருப்பங்களையும், நமது தேர்வுகளையும், நமது செயல்களையும் வெறும் ஹார்மோன்களால் என்பதைக் காட்டிலும் அதிகமாக செயல்படுகின்றார் என்பதை நாம் இந்த முழு உலகத்திற்கும் பிரதிபலிக்கின்றோம்.*

*... பாலியல் ரீதியாக நாம் தூய்மையாய் இருக்கும்படி அழைப்பதில் தேவன், தம்முடைய உண்மைத் தன்மைக்கு நாம் அவருடைய மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்படி கேட்கின்றார் (எபே. 5:29-32ஐக் காணவும்). நமது நன்மைக்காகத் தேவன் அமைத்து*

*வைத்துள்ள எல்லைகளை நாம் கடந்து அப்பால் செல்லுகின்ற பொழுது, ஒரு குறுகிய காலத்திற்கு இன்பம் தரும் பாதையை நாம் தேர்ந்து கொள்ளுகையில், தேவனிடம் நமது நம்பிக்கையைக் குறைத்து மதிப்பிடுவதுடன் நமக்கு எது மிகச் சிறந்தது என்று அவர் அறிகின்றார் என்று நாம் உண்மையில் நம்புவதில்லை என்று(ம்) கூறுகின்றோம்.*[3]

*5:1-7ல் பவுல், கிறிஸ்தவர்களைத் தூய்மைக்கான தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றும்படி அழைத்தார். பின்பு அவர், அந்தத் திட்டத்தைப் பின்பற்றத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளை விவரித்தார்.*[4]

## வேண்டுகோள்

*கிறிஸ்தவர்கள் ''தேவனைப் பின்பற்றுகிறவர்களாக'' (எபே. 5:1) வேண்டும் என்று பவுல் வேண்டுகோள் விடுத்தார். தேவனைப் போன்றிருங்கள். தேவனைப் போன்று செயல்படுங்கள். மாறுவேடமிட்டு நடிப்பவர்கள் என்று நாம் அழைக்கும் கேளிக்கை நிகழ்ச்சி நடத்துபவர்களை நான் விரும்புகின்றேன். அவர்களில் பெரும்பான்மையானோர் நகைச்சுவையாளர்களாய் உள்ளனர். அவர்கள், புகழ் மிக்க மனிதர்களின் பேசும் பாணிகள் மற்றும் பழக்க நடைகள் ஆகியவற்றைக் கற்றறிந்து, அவற்றைப் போலச் செய்ய முயற்சிக்கின்றனர். நம் கண்களுக்கு முன்பாக அவர்கள் யாரைப் போல் வேஷமிடுகின்றனரோ அந்த மக்களாகவே பெரும்பாலும் மாறி விடுகின்றனர்.*

*பவுல், "கிறிஸ்தவர்களே, நீங்கள் தேவனைப் போலாவதில் தீவிரமாய் இருக்க வேண்டும்" என்று கூறினார். பவுல் ஏன் இவ்வாறு கூறினார்?*

*''ஏனென்றால் நீங்கள் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாய் இருக்கின்றீர்கள்'' என்று அவர் எழுதினார். "நீங்கள் அவருக்கு உரிமையானவர்கள். நீங்கள் (அவருடைய) குடும்பப் பெயரைச் சூடியிருக்கின்றீர்கள், எனவே அதை நீங்கள் வாழும் வகையினால் கனப்படுத்துங்கள். தேவனைப் போன்று இருங்கள்." தேவனைக் கனப்படுத்துவதற்கும் அவரைப் போன்று இருப்பதற்கும் பவுலின் வார்த்தைகள் நமக்குப் பின்பற்ற ஒரு மாதிரியைக் கொடுக்கின்றன.*

## *மாதிரி*

*5:2ல் பவுல், தூய்மையான அன்பின் உதாரணத்தைக் கொடுத்தார்: ''கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.'' தேவகுமாரனுடைய தியாகம் நிறைந்த அன்பே, தேவனைப் போன்று இருப்பதற்கான நமது மாதிரியாக உள்ளது. சுயநலத்தின் ஒரு சிறு குறிப்பு கூட இயேசுவில் காணப்படுவதில்லை. இயேசு ஒருபோதும் சுயவிருப்பத்திற்கு அடி பணிந்ததில்லை. அவர் மக்களை ஒருபோதும் தனது சுய இன்பத்திற்காகப் பயன்படுத்தியதில்லை. இயேசு மக்கள்மீது அன்புகூர்ந்தார். அவர்கள்*

*இயேசுவுக்கு அவருடைய சுய விருப்பங்களை விட மேலானவர்களாய்க் கருதப்பட்டனர். அவர்களிடமிருந்து அவர் தம்மால் இயன்றதைப் பெற்றுக் கொண்டு பின்பு அவர்களைப் புறம்பே தூக்கியெறிந்து விடுதல் என்பதல்ல, ஆனால் அவர்களுக்கு (மக்களுக்கு) ஊழியம் செய்தல் என்பதே அவருடைய விருப்பமாய் இருந்தது.*

*பாலியல் ஒழுக்கக் கேடு என்பது இதற்கு நேர்மாறானதைப் பிரதிநிதித்து வப்படுத்துகிறது. இன்னொரு நபரை வெறும் விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும் சுயநலமிக்க செயல் வேறொன்றும் இருக்க முடியாது. காமம் என்பது நாம் மக்களை நேசிப்பதற்குப் பதிலாக அவர்களைப் பயன்படுத்தக் காரணமாகின்றது.*

## முறைகேடு

*பாலியல் ஒழுக்கக் கேடு என்பது, ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் தேவன் வடிவமைத்த அன்பின் முறைகேடாக உள்ளது. வசனம் 3ல் பவுல், சுயதியாகத்தின் பூரணமான உதாரணத்தில் இருந்து, சுயவிருப்பத்திற்கு அடி பணியும் நிறைவான உதாரணத்தை எடுத்துரைக்க மாறுகின்றார். அவர் அழகற்ற மூன்று வார்த்தைகளைப் பயன்படுத்தினார். "வேசித்தனம்"* (Gk.: *porneia*) *என்பது, வேசித்தனம், விபசாரம், ஓரினச் சேர்க்கை, இருவருடன் உறவுகொள்ளுதல், மற்றும் திருமணத்திற்குப் புறம்பே கொள்ளும் எல்லா வகைப் பாலுறவு ஆகியவற்றை உள்ளடக்குகின்ற பாலியல் ரீதியான எல்லாப் பாவத்தையும் குறிக்கின்றது. "அசுத்தம்"* (Gk.: *akatharsia*) *என்பது சுத்தமற்ற தன்மையைக் குறிக்கின்றது. இது ஒழுக்க ரீதியாக அசுத்த மாயிருத்தல் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றது. கல்லறையில் சிதைந்து கொண்டுள்ள ஒரு உடலின் அழுகும் தன்மையை விவரிப்பதற்கு மத்தேயு 23:27ல் இதே வார்த்தை காணப்படுகின்றது. "பொருளாசை"* (Gk.: *pleon-exia*) *என்பது சுயவிருப்பம், சுய திருப்தி மற்றும் பிறரைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றைத் தெரிவிக்கின்றது.*

*நமது செயல்பாடுகளில் பாலுணர்வு பற்றிய தமது சிந்தனைகளுடன் பவுல் வரையறுத்துக் கொள்ளவில்லை. அவர் தமது பேச்சையும் உள்ளடக் கினார்: "அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும், தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும்" (5:4). நாம் பாலுறவை மலிவு படுத்துவதைத் தேவன் விரும்புவதில்லை. பாலுறவு என்பது அவர் கணவர்களுக்கும் மனைவிகளுக்கும் அருளிய கொடையாக உள்ளது. "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப் படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந் தீர்ப்பார்" (எபி. 13:4). தேவன் நமக்குக் கொடுத்துள்ளவைகளைப் பற்றி நாம் ஒருக்காலும் நகைச்சுவை/சிரிப்பு ஏற்படுத்தி விடக் கூடாது. தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களில் பெரும்பாலானவைகளின் நகைச்சுவையானது பாலுறவு பற்றியதாகவே உள்ளது. தேவன் ஆழ்ந்த சிந்தனையோடு கருதுகின்ற இதனை (மக்கள்) விளையாட்டாக எடுத்துக் கொள்ளுகின்றனர்.*

## தண்டனை

நாம், "விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய இராஜ்யமாகிய கிறிஸ்துவின் இராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக் கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள்" (5:5, 6) என்று வாசிக்கின்றோம். அசுத்தத்தின் இந்த வகையைக் குறித்து தேவனுடைய எண்ணப்போக்கு என்னவாக உள்ளது? பாலுறவு ரீதியான பாவம் அவரது கோபத்தை முழு வீச்சாகத் தூண்டுகின்றது. இது (பாலுறவுப் பாவம்) தேவனுக்கு முற்றிலும் எதிரானதாகச் செல்லுகின்றது.

## திட்டம்

The Right Stuff (சரியான விஷயம்) என்ற திரைப்படத்தில் சோதனை ஓட்ட விமானிகள் எப்பொழுதுமே தாங்கள் எவ்வளவு உயரமாக, எவ்வளவு வேகமாகப் பறக்க முடியும் என்ற தங்கள் வரையறைகளையும், தங்களையும் தங்கள் விமானங்களையும் எவ்வளவு தூரம் செலுத்த முடியும் என்பதையும் எப்பொழுதும் சோதித்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் கடந்து செல்ல முடியாது என்று நினைத்த எல்லைக்கோடுகளைக் கடந்து செல்ல தைரியம் கொண்ட - மற்றும் அதைப் பற்றிக் கூறுவதற்கு உயிர் வாழ்ந்திருந்த - விமான ஓட்டிகள் "சரியான விஷயம்" கொண்டிருந்ததாக நினைக்கப் பட்டனர்.

பாலியல் விஷயங்கள் என்று வரும் பொழுது, அழிவைச் சந்திக்காமல் நாம் (அந்தப்) பாவத்திற்கு எவ்வளவு நெருக்கமாய் இருக்க முடியும் என்று காண்பது என்பது "சரியான விஷயமாக" இருப்பதில்லை. ஒரு நபர் எவ்வளவு தூரம் செல்ல முடியும் மற்றும் அப்பொழுதும் அவர் கன்னித் தன்மையுடனே இருக்க முடியும் என்று காண்பது என்பது தேவனுடைய சிந்தையில் உள்ள விஷயமல்ல. திருமணமான நபருக்கு "ஒன்றுமறியாத காதல் நடிப்பு" என்பது நிலவுவதில்லை. கிறிஸ்தவருக்கு, நீங்கள் பாதிக்கப் படாமல் எவ்வளவு அசுத்தத்தைக் காண முடியும் மற்றும் வாசிக்க முடியும் என்பது ஒரு விஷயம் அல்ல. தேவனைப் பிரியப்படுத்துவது என்ன என்பதே காரியமாகும்.

பின்வரும் கொள்கையை நாம் தீவிரமாய்க் கருத வேண்டும்: அசுத்தத்துடன் போலி நடிப்பு செய்ய வேண்டாம்.

இரண்டாவது கொள்கை பின்வருமாறு: திருமணத்திற்கு மதிப்பு அளியுங்கள். நீங்கள் திருமணமாகாதவராயிருந்தால், அந்த நாளுக்கென்று சுத்தமானவராக நிலைத்திருங்கள். நீங்கள் திருமணமானவராயிருந்தால், உங்கள் கணவர் அல்லது மனைவிக்கு உண்மையுள்ளவராயிருங்கள் வெறுமனே "நுட்ப அளவில் உண்மையுடனிருத்தல்" என்று மட்டும் இருக்காதீர்கள். உங்கள் இணையை அன்புகூருங்கள். அந்த நபரை வளப் படுத்துங்கள். அவர் அல்லது அவள் உங்களுக்கு எவ்வளவு விலையேறப்

*பெற்றவராயிருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் வகையில் வாழுங்கள். இதில் நீங்கள் எவ்வளவு அதிகம் முயற்சிக்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமாய் உங்கள் திருமண வாழ்வு பலம் கொண்டு விளங்கும். உங்கள் திருமண வாழ்வு எவ்வளவு அதிகம் பலம் கொண்டு விளங்குகின்றதோ, அவ்வளவுக்கு நீங்கள் உங்கள் உடன்படிக்கையை மீறுவது குறைவுபடும்.*

## *முடிவுரை*

*இரு விஷயங்கள் என்னைக் கவலையில் ஆழ்த்துகின்றன. முதலாவதாக, தூய்மை பற்றிய பவுலின் வசனங்களை எவரொவரும் படித்த பின்னர் அவைகள் பொருத்தமற்றவை என்று எவ்வாறு நினைக்க முடியும்? நமக்குத் தெரிந்த கிறிஸ்தவர்கள் இந்தப் பாவத்தினால் கீழே கொண்டு வரப் பட்டுள்ளதை அறிந்தும் அதை மறக்கின்றவர்களாக நாம் இருக்கின்றோமா? அவர்களில் பெரும்பான்மையானோர், “நான் இப்படிப்பட்ட காரியத்தை ஒருக்காலும் செய்ய மாட்டேன். நான் எனது திருமணத்தை ஒருக்காலும் இடர்ப்பாட்டுக்குள்ளாக்க மாட்டேன். நான் திருமணத்திற்குப் புறம்பே வேறு எவருடனும் ஒருக்காலும் அவ்வகையான உறவு கொண்டிருக்க மாட்டேன்'' என்று நினைத்திருக்கக் கூடிய காலம் ஒன்றிருந்தது. நாம், ‘‘அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை'' (நீதி. 16:18) என்று வாசிக்கின்றோம். நாம் நமது சுய காவலைத் தாழச் செல்ல - நாம் வாழும் இவ்வுலகத்தில் சென்று விடுவதை - அனுமதித்து விடக் கூடாது.*

*நான் பின்வரும் கவலையையும் கொண்டுள்ளேன்: சிலர், ஏற்கனவே விழுந்து போனவர்களாயிருந்து, தங்களுக்காகத் தேவனுடைய உதவியைக் கேட்பதென்பது மிகவும் தாமதமானதாக உள்ளதென்று நினைக்கின்றனர். அது அவ்வாறு இருப்பதில்லை. தேவனுடைய சபையானது பூரணமான வாழ்வில் நடந்து கொண்ட மக்களால் ஆனதாக இராமல், மன்னிக்கப் பட்டுள்ள மக்களால் ஆனதாகவே உள்ளது:*

> *அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத் தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச் சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக் காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனு டைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர் கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1 கொரி. 6:9-11).*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையானது பாலுறவில் ஒழுக்கமற்ற மக்கள் (அப்பாவத்தில் இருந்து மனந்திரும்பி வாழ) உதவி பெறுவதற்குச் சிறந்த இடமாக உள்ளது. பாலுறவு ரீதியில் நீங்கள் பாவம் செய்திருந்தால்,*

*நீங்கள் முன்னாள் வஞ்சனையாளர்கள், பொய்யர்கள் மற்றும் பிற பாவிகளாயிருந்து இயேசுவில் மன்னிப்பைக் கண்டறிந்தவர்களுடன் சபையில் சேர்ந்து கொள்ளும்படி வரவேற்கப்படுகின்றீர்கள். நமது பாவத்தை நமக்குப் பின்னால் போட்டு விடுவதற்கு அவரது பலம் தேவைப்படுபவர்களுடன் சேர்ந்து கொள்ளும்படி நீங்கள் வரவேற்கப்படுகின்றீர்கள்.*

*கடந்த காலத்தை நீங்கள் மாற்றி விட முடியாது, ஆனால் நீங்கள் மன்னிக்கப்பட முடியும். நீங்கள் மீண்டும் ஒரு கன்னித்தன்மை கொண்டவராகி விட முடியாது, ஆனால் நீங்கள் மன்னிக்கப்பட முடியும், மற்றும் உங்கள் திருமண நாள் வரையிலும் தூய்மையுடன் நிலைத் திருப்பதினால் தேவனை கனப்படுத்த முடியும். உங்கள் துணைக்கு நீங்கள் உண்மையற்று நடந்ததன் உண்மை நிலையை நீங்கள் அழித்து விட முடியாது, ஆனால் நீங்கள் மன்னிக்கப்படவும், இப்பொழுது தொடங்கி தியாகமான அன்பின் வாழ்வை வாழ்வதினால் தேவனைக் கனப்படுத்தவும் முடியும். கடந்த காலத்தில் நீங்கள் பேசிய ஆபாசமான வார்த்தைகளை நீங்கள் மாற்றி விட முடியாது, ஆனால் நீங்கள் மன்னிக்கப்படவும், எதிர்காலத்தில் நீங்கள் பேசும் யாவற்றிலும் தேவனைக் கனப்படுத்தவும் முடியும்.*

*தேவன் மன்னிப்பார். அவர் உங்களுக்குப் பெலம் கொடுப்பார். நீங்கள் தூய்மையாய் இருக்க வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகின்றார்.*

---

*குறிப்புகள்*

[1]"Sex Study Reveals America to be Hotbed of Monogamy," *Fort Worth Star Telegram* (7 October 1994): 1a. [2]Ibid. [3]Jerry Kirk, "God's Call to Sexual Purity" in *Seven Promises of a Promise Keeper,* ed. Al Janssen (Colorado Springs, Colo.: Focus on the Family Publishing, 1994), 92-93. [4]*பின் தொடரும் பகுதிக்கான புறக்குறிப்பானது* John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), 193-203 *என்ற புத்தகத்திலிருந்து தழுவப் பெற்றது.*

# “வெளிச்சத்தின் பிள்ளைகள்” (5:8-13)

*பல சபைகளில் பிள்ளைகள் மிகவும் சிறுவர்களாய் இருக்கும் நாட்களில் இருந்தே, “இது என் சிறு விளக்கு, இதனை நான் ஒளிவிடும்படி செய்வேன்” என்று பாடுவதை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். இருப்பினும் இது பிள்ளைகளின் பாடல் என்பதை விட அதிகமானதாக உள்ளது; இது வாழ்வு பற்றிய மிகச் சரியான கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றது. வாழ்வு என்பது இருளுக்கும் ஒளிக்கும் இடையில் நடக்கின்ற ஒழுக்க ரீதியான போராட்டமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் இந்தப் போராட்டத்தின் மத்தியில் இருக்கின்றோம்.*

*நாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டுமென்று - இருளான உலகில் ஒளியாய் இருக்க வேண்டுமென்று - தேவனுடைய வசனம் நம்மை அழைக்கின்றது. எபேசியர் 5ல் கிறிஸ்தவர்களை “வெளிச்சத்தின் பிள்ளை கள்” என்று வேதாகமம் அடையாளப்படுத்துகின்றது:*

> *முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளை களாய் நடந்து கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது (வ. 8-13).*

*வசனம் 8 கூறுகின்றது என்ன என்பதை மீண்டும் கவனியுங்கள்: “முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.” நமது கடந்த கால வாழ்வு எதைப் போலிருந்தது என்று குறிப்பிடுவதில் பவுல் ஒரு பலனை/ஆதாயத்தைக் கண்டார். கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு இல்லாதிருந்த நமது நிலையை மறந்து விடுவதை அவர் (பவுல்) விரும்பாதிருந்தார். இந்த வசனப் பகுதியானது “அந்தகாரம்” என்ற ஒரே வார்த்தையில் நமது முன்னாளைய வாழ்வைப் பற்றித் தொகுத்துரைக்கின்றது. நாம் அந்தகாரத்தில் ஜீவித்திருந்தது மாத்திரமல்ல; நாம் அந்தகாரமாய் இருந்தோம். தேவனுடைய வசனமானது*

*இந்த அந்தகாரத்தை விவரிக்கின்றது.*

## அந்தகாரத்தில் வாழ்தல்

*அந்தகாரம் என்பது தவறு செய்வதில் மகிழ்வுற்று துன்மார்க்கத்தினால் உண்டாக்கப்படும் விகாரமான செய்கைகளில் அகம் மகிழுகின்றது (நீதி. 2:14). காரிருள் என்பது பொல்லாதவர்களின் வழியாக உள்ளது (நீதி. 4:19). இது தேவனுடைய ஆணைகளைத் திருப்பிப் போடுகின்றது, தீயதை "நல்லது" என்றும் நல்லதைத் "தீயது" என்றும் அழைக்கின்றது (ஏசாயா 5:20). இருள் மக்களைச் சிறைப்படுத்துகின்றது (ஏசாயா. 42:6).*

*இருளுக்கு நமது முழு சரீரத்தையும் கெடுத்துப் போட வல்லமை உள்ளதென்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (மத். 6:23). நியாயத்தீர்ப்பில் பாவிகள் வெளியிருளில் தள்ளப்படுவார்கள் என்று வேதாகமம் அறிவிக் கின்றது (மத். 8:12). வெளிச்சத்தை பார்க்கிலும், இருளை நேசிக்கிறதினால்ஸ மக்கள் இயேசுவை புறக்கணிக்கிறார்கள் என்றும் கூறுகிறது (யோவா. 3:19). இருளில்/அந்தகாரத்தில் மக்கள் சாத்தானுடைய வல்லமையின் கீழ் வருகின்றனர் (அப். 26:18). உண்மையில் அந்தகாரம் என்பது தன்னிலேயே ஒரு வல்லமையாக—நாமாகவே தப்பிக்க இயலாத ஒரு வல்லமையாக—உள்ளது (கொலோ. 1:12, 13). இருள் என்பது மக்களைப் பார்வையற்றுப் போகச் செய்கின்றது (1 யோவா. 2:11). எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் பிற்பகுதியில் நாம், "ஏனெனில், மாம்சத் தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங் களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (6:12) என்று வாசிக்கின்றோம்.*

*வேதாகமத்தில், எண்ணிக்கையில் ஒரு நூறுக்கு நெருங்கிய வசனப் பகுதிகளில் நாம் பொல்லாங்கு மற்றும் ஒழுக்கரீதியான அந்தகாரம் ஆகியவற்றைக் கண்டறிகின்றோம். உலகத்தின் அந்தகாரம் உண்மையில் எவ்வளவு இருளானதாக உள்ளது என்று கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்று நான் நினைக்கவில்லை. நாம் அதைப் பற்றி நினைப்பதில்லை, நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்பதைப் பற்றிச் சிந்திக்க முன்னுரிமை அளிக்கலாம், ஆனால் நாம் அந்தகாரத்தின் அபாயத்தை மறந்து விடக்கூடாது.*

*செய்தித்தாளில் நாம் வாசிக்கும் குற்றப்புள்ளி விபரங்கள் ஒவ்வொன் றிற்கும் பின்னால் அந்தகாரம் உள்ளது. செய்யப்பட்டுள்ள பாவத்தின் செயல் ஒவ்வொன்றிலும் அந்தகாரமானது செயல்படும் வல்லமை கொண்டுள்ளது. அந்தகாரம் திருமணங்களை அழிக்கின்றது; அது போதைப் பொருளுக்கு அடிமைகளை உண்டாக்குகின்றது; அது வெறுப்புணர்வைப் பிறப்பிக்கின்றது. அது காமத்திற்கு உருவாகும் தளம் அமைத்து, தவறான பயன்பாட்டிற்கும் வன்முறைக்கும் எரிபொருளை அளிக்கின்றது. அந்தகார மானது விரோதத்தை ஊக்கப்படுத்துகின்றது, கலகத்தைத் தூண்டுகின்றது, மற்றும் சுயநலம் செழித்து வளரக் காரணமாகின்றது. அது மனிதர்களை*

*நினைக்கக் கூடாத செயல்பாடுகளுக்கு இட்டுச் செலுத்துகின்றது. வேதாகமம் பின்வருமாறு தெளிவாக்குகிறது:*

> *அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளி னாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது ...*
>
> *தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகல வித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங் கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞ ருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர் களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர் களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய் இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:21, 28-31).*

*கிறிஸ்துவுக்கு முன்னால், நாம் அந்தகாரத்தில் மட்டும் இருந்ததில்லை. நாமே அந்தகாரமாயிருந்தோம்.*

## வெளிச்சத்தில் நடந்து கொள்ளுதல்

*ஒரு காலத்தில் நாம் அந்தகாரத்தில் இருந்திருப்பினும், இப்பொழுது நாம் கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கின்றோம் (5:8). கிறிஸ்தவர்கள் ''வெளிச்சத்தின் பிள்ளைகளாய்'' நடந்து கொள்ளும்படிக்குப் பவுல் அழைத்தார். வெளிச்சத்தைப் பற்றித் தேவனுடைய வசனம் கூறுவது என்னவென்று கவனியுங்கள்:*

*1. வெளிச்சம் நற்கனியை உற்பத்தி செய்கின்றது. "(வெளிச்சத்தின்/ ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும்)" (5:9). "நற்குணம்"* (Gk.: *agathosune*) *என்பது ஒழுக்க மேன்மையைப் பற்றிய விஷயமாக உள்ளது. நாம் சத்தியத்தை அறிதலுக்கு அப்பாலும் செல்லு கின்றோம்; நாம் அதனில் வாழ்கின்றோம். வெளிச்சம் கனியை உற்பத்தி செய்கின்றது. அது பிறரின் பயனுக்காக மனப்பூர்வமாய் மற்றும் தியாக உணர்வுடன் ஊழியம் செய்வதில் தனது முழுமையான வெளிப்பாட்டைக் காண்கின்றது. "நீதி"* (Gk.: *dikaiosune*) *என்பது "மனிதர்களுக்கும் தேவனுக் கும் அவர்களுக்குரியதைச் செலுத்துதல்"*[1] *என்பதாக உள்ளது. இது தேவன் மற்றும் மக்களிடத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டிய பிரகாரம் நடந்து கொள்ளுதல் என்று அர்த்தப்படுகின்றது. "உண்மை"* (Gk.: *aletheia*) *என்பது அதிக அளவில் நாம் அறிந்தது (மட்டுமாக) இராமல், நாம் செய்கின்ற*

*விஷயமாக உள்ளது. வெளிச்சமானது நம்மை, சத்தியத்தைப் போதுமான அளவுக்கு அறிபவர்களாய் மாத்திரமல்ல ஆனால் அதை வாழ்பவர்களாகவும் ஆக்குகின்றது.*

*2. வெளிச்சம் கர்த்தருக்குப் பிரியமானதைக் கண்டறிகின்றது (5:10). "கற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்" (தமிழில் இது "சோதித்தறியுங்கள்" என்றுள்ளது) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது* (Gk.: *dokimazo*) *"கண்டு பிடித்தறிதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இந்த வார்த்தையானது பழங்காலக் கிழக்கு நாடுகளின் சந்தையிடங்களில் இருந்து வெளி வந்தது. கும்பல் நிறைந்த அந்தக் கடைவீதிகளில் இருந்த சிறு கடைகளில் ஜன்னல்கள் இருப்பது மிகவும் அரிது. அவைகள் இருட்டாய் இருந்தன. வர்த்தகப் பொருட்களைக் காண்பது மிகவும் கடினமாயிருந்தது. கவனமாய் ஆய்வு செய்தல் என்பது ஏறக்குறைய இயலாத செயலாயிருந்தது. மக்கள் ஒரு மண் பானையையோ, ஒரு துணித் துண்டையோ அல்லது தாங்கள் வாங்க விரும்பிய பொருள் எதனையுமோ எடுத்துக் கொண்டு வெளிச்சத்தில் அதைப் பிடித்துப் (பார்க்க) வெளியில் செல்வது உண்டு. அப்பொழுது அவர்கள் இருளான கடையினுள் தாங்கள் பார்க்க இயலாத குறைபாடுகள், சிறு பிளவுகள் அல்லது கறைகளை காண முடியும்.*

*இயேசுவுடன் நெருங்கி வாழ்தல் என்பது இதே விஷயத்தை நமக்குச் செய்கின்றது. அவருடைய வெளிச்சமானது நமது நோக்கங்கள், செயல் பாடுகள் மற்றும் வார்த்தைகள் ஆகியவை உண்மையில் எது போன்றுள்ளன என்று காண நமக்கு உதவுகின்றது. அவருடைய வெளிச்சமானது இயேசுவைப் பிரியப்படுத்தும் வகையில் நமக்குள் உள்ளது எது என்பதையும், அத்துடன் கூட நமக்குள் நிலவுகின்றதும் நம் வாழ்விலிருந்து நீக்கிப் போட வேண்டியவைகளுமான ஒழுக்கரீதியான தவறுகளும் பாவங்களும் யாவை என்று நாம் காண உதவுகின்றது.*

*3. வெளிச்சமானது பொல்லாங்கை வெளியாக்குகின்றது. "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்க மாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது" (5:11-13). பொல்லாங்கின் மீது சத்தியத்தின் பாய்வொளியைப் பிரகாசிக்கச் செய்தல் என்பதே பொல்லாங்கை வெளியாக்கும் வழி வகையாக உள்ளது.*

*கடந்த கோடை காலத்தில் என் குடும்பத்தினர் யாவரும் மத்திய டெக்ஸாஸில் உள்ள லாங்ஹார்ன் மலைக் குகையைப் பார்க்கச் சென்றிருந் தோம். எங்களது அந்தப் பயணத்தின் ஒரு வேளையில் பயண வழிகாட்டி விளக்குகளை அணைத்து விட்டார். நாங்கள் முழுமையான இருளை அனு பவித்து உணர்வதற்கு அவர் எங்களுக்கு ஒரு வாய்ப்பளித்தார். அது (இருள்) எங்களை ஏறக்குறைய மூழ்கடிக்குமளவுக்கு எங்களைச் சுற்றிலும் மூடிக் கொண்டதாகக் காணப்பட்டது. அந்த இருளில் என்னால் ஏதொன்றையும் காண முடியவில்லை. பயண வழிகாட்டி மீண்டும் விளக்கின் சுவிட்சைப் போட்ட பொழுது, உடனடியாக இருள் மறைந்து விட்டது.*

*வெளிச்சமானது இருளை வெற்றி கொண்டது. இவ்விஷயமானது மத்திய டெக்ஸாஸின் ஒரு குகையில் உண்மையாயிருந்தது, மற்றும் இது நமது ஆவிக்குரிய வாழ்விலும் உண்மையானதாக உள்ளது. இயேசுவின் ஒளியானது இருளை வெற்றி கொள்ளுகின்றது.*

*கிறிஸ்துவுக்குரியவராயும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக தேவனுடைய பிள்ளையாயிருக்கிற ஒவ்வொருவரும், இருளின் மீது வெற்றி கொள்ளுகிற அந்த வெளிச்சத்திற்கு உயிருள்ள சாட்சியாக இருக்கின்றார். ஒரு காலத்தில் நாம் இருளில் இருந்தோம், ஆனால் இப்பொழுது நாம் கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கின்றோம். இயேசு, நமது வாழ்வில் தமது ஒளியைப் பிரகாசிக்கச் செய்வதற்கு—இருளைத் துளைத்து நம்மை ஒளிக்குக் கொண்டு வருவதற்கு—ப் போதுமானவைகள் கிடைக்கும்படி அக்கறை காண்பிக்கின்றார்.*

## *முடிவுரை*

*நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ்வோமாக. இவ்வாரத்தில் நீங்கள் பள்ளிக்குச் செல்லுங்கள், அந்த இடத்தில் நீங்கள் வெளிச்சமாய் இருக்கின்றீர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இந்த வாரத்தில் நீங்கள் பணிக்குச் செல்லுங்கள், உங்களைச் சுற்றிலும் உள்ள மக்களுக்கு வெளிச்ச மாயிருங்கள். உங்கள் இல்லத்தில் உள்ள மக்களுக்கு வெளிச்சமாயிருங்கள். அவர்கள் உங்களைக் காணும் பொழுது இயேசுவை (உங்களில்) காணட்டும்.*

*நீங்கள் கிறிஸ்தவராயிராவிட்டால், கிறிஸ்துவிடம் திரும்புங்கள், உங்கள் இருளான வாழ்விலிருந்து மனந்திரும்புங்கள். உங்கள் பாவமன்னிப் புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள். இருளில் இருந்து ஒளிக்குள் கடந்து வாருங்கள்.*

---

*குறிப்பு*

[1]William Barclay, *The Letters to the Galatians and Ephesians,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 164.

# விழித்தெழுவதற்கான வேளை (5:14-18)

*நம்மில் மிகப் பலர், கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய வகையில் நமது வெளிச்சங்கள் பிரகாசிக்க அனுமதிப்பதைப் புறக்கணித்து விடுகின்றோம். நாம் இருளில் உறங்குகின்றவர்களாகக் காணப்படுகிறோம். சுவிசேஷத்தின் செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்லவும் இயேசுவின் நாமத்தினால் மக்களுக்கு ஊழியம் செய்யவும் நாம் ஏராளமான ஆதார மூலங்களையும் வாய்ப்புக்களையும் கொண்டுள்ளோம்; ஆயினும் நாம் தூக்கத்தில் நடப்பதாகவே தோன்றுகின்றது. செல்லும் இலக்கு பற்றி நாம் குறைவான அறிவுணர்வுடையவர்களாகவே காணப்படுகின்றோம். நாம் யார் மற்றும் என்னவாயிருக்கிறோம் என்பது பற்றி சிறிதளவு அறிவையே/விழிப்புணர்வையே நாம் செயல்விளக்கப்படுத்துகின்றோம். தேவன் நமக்களித்துள்ள பணிப்பொறுப்பிற்கான அவசரத் தன்மையின் அறிவுணர்வு எதையும் நாம் காண்பிப்பது இல்லை.*

*எடுத்துக்காட்டாக, சுவிசேஷ ஊழியத்திற்கான நமது தீவிரத் தன்மை எங்கே? அணிவகுத்துச் செல்வதற்கான கட்டளையைக் கர்த்தர் நமக்குக் கொடுத்தார்: "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத். 28:19, 20). இதைச் செய்வதற்கான ஒரு அவசரத் தன்மைக்கான ஆதாரத்தை நாம் எங்கு காண முடியும்? நமது உறக்கத்திலிருந்து நம்மை விழித்தெழுப்பக் கூடியது எது?*

*ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் அர்ப்பணிப்பில்/வழிபாட்டில் மயங்கிக் கிடந்த பொழுது அவர்களை விழித்தெழுப்பியது எது? அவர்கள் ஆவிக்குரிய வகையில் தூங்கிக் கிடந்தனர். எபேசியர் 5ல் பவுல் அவர்களுக்கு விழித்தெழும் அழைப்பைக் கொடுத்தார்:*

> *"ஆதலால், தூங்குகிற நீ விழித்து,*
> *மரித்தோரை விட்டு எழுந்திரு,*
> *அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்" (வ. 14).*

*உறங்கிக்கிடந்தவர்களைப் பவுல் பின்வரும் செய்தியுடன் எழுப்பினார்:*

> ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து

> *கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து (5:15-18).*

*பவுலின் வார்த்தைகள் நமக்குச் சில கருத்துக்களைத் தரக் கூடும்.*

## ஞானத்தைப் பயன்படுத்துங்கள்

*விழித்தெழுவதற்கான பவுலின் அழைப்பு ஞானத்திற்கான அழைப்பாக உள்ளது: ''ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்'' (5:15, 16).*

*இந்த நூற்றாண்டில் மக்கள் அதிகமாகக் கண்டு பிடித்தல்களைச் செய்து, உலகின் வரலாறு முழுவதிலும் இருந்துள்ளதை விட அதிகமான அறிவை ஆதாயப்படுத்திக் கொண்டுள்ளனர். நற்பயன்களை எடுத்தாளத் தொடங்கக் கூடுவதற்கு முன்பு நமக்கு அதிகமான உண்மைகளும் புள்ளி விவரங்களும் கிடைக்கின்றன, ஆனால் நமது உலகமானது ஞானத்தில் குறைவு பட்டுள்ளது. ஞானம் என்பது உண்மைகளை அறிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகின்றது. ஞானம் என்பது - வாழ்வைக் குறித்து தேவனை மையங் கொண்டுள்ள ஒரு அணுகுமுறை சார்ந்த - கொள்கைகளைக் கையாளுவதாக உள்ளது.*

*சாலொமோன் ஒரு "இடைவாழ்வு இடர்ப்பாட்டின்" ஊடாகக் கடந்து சென்றார். அவர் தேவனை விட்டுப் புறம்பே திரும்பி தேவனில்லாத நிலையில் சந்தோஷத்தைக் கண்டறிய முயற்சி செய்தார். அவர் வாழ்வில் ஒரு சிலிர்ப்புள்ள மகிழ்வை உட்புகுத்துவதற்குத் தாம் நினைத்த எதையும் முயற்சி செய்வதற்கு விருப்பம், பணம், நேரம், சக்தி மற்றும் வாய்ப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தார். சாலொமோன் ஞானமாய் இருப்பதற்குப் பதில் மதியீனமாய் இருப்பதைத் தேர்ந்து கொண்டார். தேவனின்றி சந்தோஷத்தைக் காண்பதற்கான அவருடைய தேடுதலானது அவரை குறைவுள்ளவராக, சோர்வுள்ளவராக, மற்றும் ஒளியற்றவராக விட்டு விட்டது. இப்பொழுது நாம், தேவனின்றி திருப்தியைக் கண்டறிய முயற்சித்துத் தவறிய விஷயங்கள் பற்றிய சாலொமோனின் கை நூலாகிய பிரசங்கியைக் கொண்டுள்ளோம்.*

*பவுலின் வார்த்தைகள் நமக்கு சாலொமோனின் அனுபவத்தை நினைவூட்டுகின்றன. பவுல், ''மதியற்றவர்களாய் இராதீர்கள்'' என்று கூறினார். பவுல் இன்றைய நாட்களில் இங்கிருந்தால், அவர் பின்வருமாறு கூறுவார்:*

> *அதிகம் பணத்தைப் பெறுவதினால் நீங்கள்*
> *அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*

*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அளவற்ற விதத்தில் நீங்கள் விரும்பிய அவ்வீட்டை வாங்குவதினால் அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அழகுத் தோற்றம் கொண்ட இளைஞனை அல்லது இளம் பெண்ணை அருந்துணையாய்ப் பெறுவதினால் அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அந்த வேலை மட்டும் கிடைத்து விட்டால் அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*மதுபானத்தினால் அல்லது போதை மருந்தினால் நீங்கள் அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*
*அதிகாரத்துவம் அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு நீங்கள் விரும்புவதை மட்டும் செய்வதினால் அகமகிழ்வைக் காணலாம் என்று நினைக்கின்றீர்களா?*
*மதியற்றவராய் இராதீர்கள்.*[1]

*வாழ்வுக்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது, ஒவ்வொரு வாய்ப்பையும் மிகவும் அதிகமாய்ப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது - தேவனுக்காக வாழுங்கள் என்பதே அவ்வழியாகும். தேவனின்றி நாம் எதனை முயற்சி செய்தாலும் நாம் திருப்தி காண மாட்டோம்.*

*விழித்தெழுதல் என்பது ஞானம் என்பதுடன் தொடங்குகின்றது.*

## *புரிந்து கொள்ளுதலைப் பயன்படுத்துங்கள்*

*விழித்தெழுதல் என்பது தேவனுடைய சித்தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் பற்றியதாகவும் உள்ளது: "ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" (5:17). ஜான் ஸ்ட்டாட் அவர்கள், "தேவனுடைய சித்தத்தைக் கண்டறிந்து அதைச் செய்வதைக் காட்டிலும் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் வேறெதுவும் இல்லை" என்று (இதற்கு) விளக்கம் அளித்தார்.*[2]

*விழித்தெழுந்து தேவனுடைய சித்தத்தை உணர்ந்து கொள்ளுவதற்கு இதுவே கிறிஸ்தவர்களுக்கான காலமாய் உள்ளது. தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே அடியெடுத்து வைத்துள்ள ஒரு உலகத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். உலகம் தேவனுக்கெதிராக நிற்கிறது. அது தேவனுடைய சித்தத்திற்கு இசைய மறுக்கின்றது.*

*அன்றாடம் நம் மீது மோதும் செய்திகள் தேவனுடைய சித்தத்திற்கு எதிர் விளைவை ஏற்படுத்துகின்றன, இவை எல்லாக் காலங்களிலும் கிறிஸ்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. நாம் யாவருமே தேவனை விட்டு விலகி அடியெடுத்து வைக்கின்ற கலாச்சாரத்தின்*

அழுத்தத்தை உணருகின்றோம். நம்மில் சிலர் விழித்தெழுந்து பொழுது போக்கிற்கான நமது ஆதார மூலங்களைப் பற்றி சிந்திப்பது அவசியமாக உள்ளது. நாம் விழித்தெழுந்து, நாம் வாசிக்கின்ற புத்தகங்கள், நாம் செல்லுகின்ற இடங்கள், நாம் நேரத்தைச் செலவிடும் வழிவகை ஆகிய வற்றை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. நாம் தேவனுடைய சித்தத்திற்கு விழித்தெழ வேண்டியது அவசியமானதாக உள்ளது.

## வல்லமையைப் பயன்படுத்துங்கள்

ஆவிக்குரிய வகையில் உறக்கத்தில் இருப்பவர்களை விழித்தெழுப்பு வதற்கு, வல்லமை என்பது மூன்றாவது திறவுகோலாக உள்ளது. சபைக்கான வல்லமையானது (பின்வரும்) ஒரே ஒரு ஆதார மூலத்திலிருந்து மட்டுமே வருகின்றது: கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர். எபேசியர் 5:18 வசனம், “துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து” என்று கூறுகின்றது.

ஒரு நபர் மதுபானம் அருந்தியிருக்கும் பொழுது, அவர் மதுபானத்தின் “ஆதிக்கத்தின் கீழ்” இருப்பதாக நாம் கூறுகின்றோம். அதன் விளைவுகள் அவரை அடக்கி ஆள்கின்றன. மதுபானம் அருந்தியுள்ள நபர், வித்தியாச மாக நடக்கின்றார், வித்தியாசமாகப் பேசுகின்றார், வித்தியாசமாகச் சிந்திக் கின்றார், மற்றும் அவர் தாம் தெளிவான நிலையில் இருக்கும்போது செய்வதிலிருந்து மாறுபட்ட நிலையில் பிற மக்களை நடத்துகின்றார். யாரேனும் ஒருவர் மதுபானம் அருந்தியிருக்கின்ற பொழுது, அவர் ஒரு வித்தியாசமான நபராகி விடுகின்றார்.

பவுல், கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்களாகும்படி - தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்படி - அழைப்பு விடுத்தார். ஆவியானவர் தேவ வசனத்தின் மூலம் நம் வாழ்வில் நிறைய நாடுகின்றார். இருப்பினும் நமது பாவங்கள், முரட்டுத்தனம், மற்றும் மனந் திரும்ப மறுத்தல் ஆகியவை ஆவியானவரின் வல்லமையை நம்மிடத் திலிருந்து அபகரிக்கக் கூடும். நாம் தேவனுக்குத் திறந்தவர்களாகவும் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் இருக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்மை நிரப்புகின்றார்/நம்மில் நிரம்புகின்றார். அவருடைய வல்லமை நம் வாழ்வில் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

அப்படியானால், நாம் ஆவியானவரால் நிரப்பப்படுவது எவ்வாறு ஆகும்? முதலாவது, நிரப்பப்படும்படி விரும்புங்கள். ஆவியானவரின் வல்லமையின் மீதான விருப்பத்தில் நாம் குறைவுபட்டால் அவர் நமது வாழ்வில் வல்லமையூட்ட மாட்டார். நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> ... இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன்

*உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார் (யோவா. 7:37ஆ-39அ).*

*நமது வாழ்வில் ஆவியானவரின் வல்லமையுடன் நடந்து கொள்ளுதல் என்பது இயேசு அளிக்கின்றவற்றின் மீதான - அவரைப் போன்றிருப்பதற் கான வாய்ப்பின் மீதான - தாகத்துடன் தொடங்குகின்றது. நம்மை இயேசு வைப் போலாக்குதல் என்பது வசனத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் விசேஷித்த செய்கையாக உள்ளது, ஆனால் இதை நாம் விரும்பினால் மட்டும் அவர் செய்கின்றார்.*

*இரண்டாவது, தேவனுடைய வசனத்தை அறியப் பெறுவதினால் ஆவியானவரால் நிறையப் பெற்றிருப்பதற்கான அழைப்புக்கு நாம் கவனத் துடன் செவி கொடுக்க வேண்டும்: "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (கொலோ. 3:16). ஆவியானவர் நம்மை நிறைக்கும்படி அனுமதிக்க வேண்டும் என்று எபேசியர் 5:18 நமக்குக் கூறுகின்றது. ஆவியும் வசனமும் ஒன்றாய் இணைந்து செல்லுகின்றன(ர்). ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்பது நாம் வசனத்தை அறியவும் நமக்குள் வசனம் தங்க வேண்டியதையும் கேட்கின்றது. நமது வாழ்வில் ஆவியானவர் நிரப்பப்படுதல் என்பது நமக்குள் தேவ வசனம் ஜீவனுள்ளதாயிருக்கக் காரணமாகின்றது. ஆவியும் வசனமும் ஒன்றாய் இணைந்து செயல்படுகின்றன(ர்).*

*மூன்றாவது, ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு நாம் நம் வாழ்வு முறையை இயேசுவுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஆவியானவரால் நிரப்பப் பட்டிருப்பதற்கான திறவுகோலானது நாம் அடிக்கடி பாடும் பாடல் ஒன்றின் வரிகளில் காணப்படுகின்றது: "இயேசுவுக்கு எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றேன்." இந்த வார்த்தைகள் மணிக்கு மணி, கணத்திற்கு கணம் என்ற அடிப்படையில் நமது இலக்காகின்ற பொழுது, ஆவியானவர் நமது வாழ்வில் நிரம்புவார். நாம் தூக்கத்தில் நடப்பதை நிறுத்தி விடுவோம். நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாயிருந்து, ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து, அவரது வல்லமையில் பலப்படுவோம்.*

## *முடிவுரை*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நீங்கள் தூக்கத்தில் நடந்து கொண்டு இருக்கின்றீர்களா? ஞானத்திற்கும், புரிந்துகொள்ளுதலுக்கும், ஆவியான வரால் நிரப்பப்பட்டிருத்தலுக்கும் மீண்டும் திரும்புங்கள். இது மேலிருந்து வரும் ஞானத்தைப் புரிந்துகொள்ளுதலுக்கும், கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு கீழ்ப்படிதலுக்கும், ஆவியானவரால் நிரப்பப்பட்டிருப் பதிலிருந்து வருகின்ற வல்லமையை நாடி ஏற்றுக் கொள்ளுதலுக்குமான காலமாக உள்ளது. தேவன் தமது சபை மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.*

*நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இல்லாதிருந்தால், கிறிஸ்து உங்களுக்காகச்*

செய்துள்ளது பற்றி நீங்கள் விழிப்படைய இதுவே காலமாய் உள்ளது. அவரிடமாய்த் திரும்பி, உங்கள் பழைய வாழ்விலிருந்து மனந்திரும்பி, உங்கள் பாவங்கள் கழுவப்படுவதற்கு ஞானஸ்நானம் பெறுங்கள். உலகத்தில் கிறிஸ்துவின் வெளிச்சமாய்ப் பிரகாசிப்பதற்காக ஞானஸ்நானத் தண்ணீரில் இருந்து எழும்புங்கள்.

---

குறிப்புகள்

[1]Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 147-48. [2]John R. W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 203.

# இன்னிசை ஏற்படுத்துபவர்கள் (5:19, 20)

*நியூ மெக்சிகோ என்ற இடத்தில் மலைகளின் மீதிருந்த புளூ ஹெவன் முகாமில், ஆரம்பப் பள்ளியில் நான் இருந்த பொழுது எனது வீட்டிலிருந்து வெளியே ஒரு குளிர்ந்த இறுகிய இரவு ஒன்று என் நினைவுக்கு வருகின்றது. சூரியன் மறையும் பொழுது அங்கு மிகவும் இருட்டாகி விடுவதுண்டு. நாங்கள் ஒரு குறுகிய வழியில் நடந்து செல்லுகையில் எங்களது கை விளக்குகளைப் பயன்படுத்தினோம். காடுகளினூடே எங்களது பயண மானது ஒரு சமமான பகுதிக்குச் செல்வதில் முடிந்தது, அங்கு ஆலோசனை யாளர்கள் பிரியாவிடை நெருப்பை மூட்டியிருந்தார்கள். நாங்கள் யாவரும் அதைச் சூற்றிலும் அமர்ந்து கொண்டு நெருப்பிலிருந்து எழும் தீப்பொறிகள் ஆகாயத்தில் பறப்பதையும் புகையில் மறைவதையும் கவனித்துக் கொண்டிருந்தோம். நான் மேலே நிமிர்ந்து பார்த்து, ஒரே வேளையில் நான் இதுவரை கண்டுள்ளவற்றைக் காட்டிலும் அதிகமான விண்மீன்களைக் கண்டேன், என்னருகில் ஒரு சிறிய நீரோடை சலசலத்துக் கொண்டிருந்தது. பைன் மரக் காட்டின் அற்புதமான புதுமணம் காற்றை நிரப்பிற்று; அங்கு நாங்கள் அந்த இரவில் பாடிய பாடலை இன்னும் நான் கேட்க முடிகின்றது:*

*என் தேவனே! உம் கரங்கள் படைத்த*
*உலகம் யாவையும் நான் நினைக்கையில்;*
*விண்மீன் கண்டு இடியோசையும் கேட்டு*
*நான் வியந்து, உம் ஆற்றல் காண்கையில்*

*எத்தனை பெரியவர் நீரென்று*
*பாடுகிறேன், பாடுகிறேன்.*[1]

*அந்த இரவில் அந்தப் பாடல் என்னிடத்திலிருந்து பெருக்கெடுத் தோடிய வேளையில் "நான் வீட்டில் இருந்ததாக உணர்ந்தது" பற்றி இப்பொழுதும் நான் நினைக்க முடிகின்றது. நான் டெக்ஸாஸின் மிட்லன்ட் என்ற இடத்திலிருந்து பல மைல்கள் தொலைவில் நியூமெக்ஸிகோவின் வட பகுதியில் இருண்ட மலைப் பகுதியில், என் குழந்தைப் பருவத்தின் காட்சிகளுக்கும் ஒலிகளுக்கும் வெகு தொலைவில் இருந்தேன். (ஆயினும்) அந்தப் பாடலைப் பாடியதில் நான் வீட்டில் இருந்த உணர்வைப் பெற்றுக்*

*கொண்டதை நான் இன்னமும் என் இதயத்தில் - எனது அப்பாகம் எனது உண்மை இயல்பாகும் - அறிகின்றேன்.*

*எனது மகள் சாராள் பெரும்பாலான இளம் பெண்களைப் போலவே இருக்கின்றாள். அவள் தன்னை இந்த உலகத்திற்கு (வனப்புள்ளவளாகக்) காண்பிக்க காலைதோறும் (அலங்கரிப்புச்) சடங்குகள் செய்வதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறாள். ஒரு நாள் காலையில் நான் காலை உணவு உண்டு கொண்டிருக்கையில் அவள் தனது (தலை) முடியை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். முடி உலர்த்தும் கருவி சத்தமிட்டது, ஆனால் இன்னொரு குரலொலியானது என்னை நிறுத்தி, நிதானித்து கவனிக்கச் செய்தது. அது ஸ்படிகம் போலத் தெளிவான குரலாக—தேவனுக்குத் திறந்த ஒரு இதயமாக - இருந்தது. எனது மகள், "இயேசுவே, நீர் தேவ ஆட்டுக் குட்டி, உமது நாமம் தகுதி வாய்ந்தது" என்ற வார்த்தைகளைப் பாடிக் கொண்டிருந்தாள்.*

*நான் எனது மகளின் பாடலைக் கவனித்து, "இது இல்லத்தின் உணர்வை உண்டாக்குகிறது" என்று எண்ணமிட்டேன். நான் எனது சமையல் அறையில் அமர்ந்திருந்த காரணத்தினாலோ, அல்லது எனது முழுக் குடும்பமும் என்னுடன் இருந்த காரணத்தினாலோ கூட இந்த உணர்வைக் கொண்டிருக்கவில்லை. இந்த உணர்வானது அந்தப் பாடலினால் - தேவனிடத்திற்குத் திறந்த இதயத்திலிருந்து பெருக்கெடுத்து வந்த இசை வெள்ளத்தினால் ஏற்பட்டது.*

*நீண்ட நாட்களுக்கு முன்பு, ஒரு இரவின் பிற்பகுதியில் ஒரு சிறை யறையை இரு மனிதர்கள் பகிர்ந்து கொண்டனர். அந்த இரவுக்கு முந்திய நாளில் அவர்களின் விரோதிகள் அவர்களைக் குறித்துப் பொய்யுரைத்து, அவர்களை அடித்துப் புடைத்திருந்தனர். அம்மனிதர் இருவரும் பசியினா லும் தாகத்தினாலும் வாடினார்கள். அது நள்ளிரவு நேரமாயிருந்த போதிலும் அவர்கள் உறங்கச் செல்ல முடியாத அளவுக்கு மிகவும் மோசமாக துன்புற்றுக் கொண்டிருந்தனர். இந்த மனிதர்களைப் பற்றி நாம் நடபடி களில் வாசிக்கின்றோம்: "நடு ராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர் கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்" (அப். 16:25). அவர்களின் வேதனையிலும், பரிதபிக்கப்படத் தக்க அவர்களின் சூழ்நிலைகளிலும் அவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கையில் மற்ற கைதிகள் அதைக் கவனித்துக் கேட்டு, ஒரு இருண்ட சிறையினுள் இவ்வளவு சந்தோஷத்தைக் கண்டறிய முடிந்தது எவ்வாறு என்று வியப்புற்றார்கள். நான் பவுல் மற்றும் சீலாவைப் பற்றி வாசித்து, "அவர்கள், அந்த இரவில் இல்லத்தில் இருந்தனர் - இல்லத்தில் தேவனுக்குப் பாடல்களை அர்ப்பணித்தனர்" என்று நினைக்கின்றேன்.*

*நாம் தேவனுடைய வசனத்தை வாசிக்கும் பொழுது, தேவனைப் பாடுவதில் இல்லத்தில் இருத்தல் என்பதன் கருத்துணர்வு ஏற்படுகிறது: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (5:18). கிறிஸ்தவர்கள் (தங்கள் இதயங்களை) தேவனுக்குத் திறந்தவர்களாய்க் கீழ்ப்படியும் பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்மில்*

நிரம்புகின்றார். அவரது பிரசன்னம் நமக்குச் சக்தியூட்டி நம்மை மாற்று கின்றது. அதுவே ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுதலாக உள்ளது.

இந்த உள்ளாக வாசம் பண்ணுதலினால் தெளிவாய் அறியக் கூடிய வகையில் நேரிடும் விளைவு என்ன? இருதயத்திலிருந்து கர்த்தருக்கென்று பாடுதல் என்பது தெளிவான ஒரு செயல்விளைவாக உள்ளது. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து (5:18-20).

"ஆவியினால் நிறைந்து" இருத்தல் என்பது இன்னிசை ஏற்படுத்துபவராக ஆகுதல் - தேவனுக்குப் பாடல்களை ஒப்புக் கொடுப்பதில் இல்லத்தில் இருக்கும் உணர்வு பெறுதல் - என்று அர்த்தப்படுகின்றது.

எபேசியர் 5:19, 20 வசனப் பகுதி பாடுதல் பற்றிக் கூறுகின்றது. பாடலில் ஆராதித்தலின் விஷயம் பற்றி இவ்வசனங்கள் பொதுவான வகையில் என்ன கூறுகின்றன என்று கவனியுங்கள்.

## பாடலில் ஆராதனை

பாடலில் ஆராதனை என்பது ஆவிக்குரியதாக உள்ளது. இது தேவனு டைய ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுதலின் விளைவாக வருகின்றது. இது தேவனுடைய ஆவியானவர் நமது ஆவிகளைத் தொடுகின்றதன் விளைவாக வருகின்றது. பாடுதல் என்பது இசைக் கோட்பாட்டின் நுணுக்கமான அம்சங்களை அறிதல் என்பதைச் சார்ந்திருப் பதில்லை. ஆவிக்குரிய வகையில் பாடுதல் என்பதற்கு இசைக் குறிப்புகளை வாசிக்கும் திறனோ அல்லது ஒரு மெட்டினை கொண்டிருத்தலோ கூட அவசியமில்லை. பாடலில் ஆராதனை என்பது நமக்குள் தேவனுடைய ஆவியானவர் செயல்படுவதால் நடைபெறுகின்றது.

பாடலில் ஆராதனை என்பது உணர்வுப் பூர்வமானதாகவும் உள்ளது. நாம் நமது இருதயங்களில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. நாம் பாடுகின்ற பொழுது அதில் நமது உணர்வுகள் ஈடுபாடு கொண்டிருக்கவில்லையென்றால், ஏதோ தவறு உள்ளது என்றாகின்றது. பாடலில் ஆராதனை என்பது அறிவுக் கூர்மையின் அனுபவத்தைக் காட்டிலும் அதிகமானவற்றைச் சேர்க்கின்றது. இது நமது பலமிக்க உணர்வுகளை ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது.

பாடலில் ஆராதனை என்பது மகிழ்ச்சி நிறைந்ததாக உள்ளது. பாடுதலைச் சூழ்ந்துள்ள மகிழ்ச்சி, உத்வேகம் மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றை உணராமல் நாம் எபேசியர் 5ல் உள்ள பவுலின் வார்த்தை

*களை வாசிக்க முடியாது. சங்கீதம் 145:7, "அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்" என்று கூறுகின்றது.*

*நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டாடுவதற்கு ஏராளமானவற்றைக் கொண்டுள்ளோம்! அவர் நமக்கு இதை கெட்ட குமாரனின் உவமையின் மூலம் போதித்தார். காணாமற்போன மகன் வீடு திரும்பிய பிறகு ஏன் அப்படிப்பட்ட கொண்டாட்டம் நடைபெற வேண்டியிருந்தது என்பதைத் தந்தை தனது மூத்த மகனுக்கு விளக்கப்படுத்தினார்: "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்;" (லூக். 15:31, 32).*

*நமது கொண்டாட்டமானது பயபக்தியுள்ளதாகவும், பயங்கரமும் மகத்துவமும் உள்ள தேவனுடைய பிரசன்னத்தில் தாழ்மையானதாகவும் இருக்க வேண்டும். இருப்பினும் பயபக்தி என்பது உற்சாகத்தை புறக் கணித்து விடுதல் என்பதுடன் சமானப் படுத்தப்படக் கூடாது. நமது தேவன் உயிருள்ளவராயிருக்கின்றார்! நமது கர்த்தர் தமது சபையில் வாழ்கின்றார்! பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வை நிரப்புகின்றார்! நாம் அகம் மகிழ்ந்து சந்தோஷமடைவோமாக! பாடலில் ஆராதித்தல் என்பது மகிழ்ச்சி நிறைந்ததாக உள்ளது.*

*பாடலில் ஆராதனை என்பது விளக்கப்படுத்துவதாக இருக்கின்றது. இது தேவனைக் கனப்படுத்துகின்றது. நமது பாடல்கள் தேவனுடைய தகுதித்தன்மைக்கு உரியவைகளாகின்றன. நமது ஆவியானது அவருடைய ஆவியைச் சென்றடைகின்றது.*

*பாடலில் ஆராதனை என்பது ஒன்றிணைந்து செயல்படுதல் என்பதாக உள்ளது. நாம் இதனை "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாடல்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லுதல்" என்ற வகையில் பிற கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் சிலாக்கியத் தைப் பெற்றுள்ளோம். பாடுதல் என்பது நமக்கு, பிறருடன் நமது இருதயங் களையும் குரல்களையும் இணைக்க வாய்ப்பொன்றை அளிக்கின்றது. நாம் தனியாகப் பாடுகின்ற பொழுது நடைபெறாத சில விஷயங்கள் நாம் ஒன்று கூடிப் பாடும்பொழுது நடைபெறுகின்றன. எனது காலை வேளை தியானத்தில் கர்த்தரிடத்தில் நான் - நான் மட்டும் - பாடுகின்றேன். நான், "கர்த்தாவே உம்மில் நான் அன்புகூருகின்றேன்" என்று பாடுகிறேன். அது என்னைப் பற்றிய சில விஷயங்களை தேவனுக்கு அறிவிக்கின்றது. நாம் பாடுதலில் சக கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து கொள்ளும் பொழுது, பாடலானது புதிய வடிவை/பரிமாணத்தை மேற்கொள்ளுகின்றது, நான் என்னையும் எனது சொந்த உலகத்தையும் விட பெரிதான ஒன்றின் பாகமாய் இருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகின்றது. நான் கொண்டுள்ள விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்ற கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திற்கு உரியவனாக நான் ஆகின்றேன்.*

*நிறைவாக, பாடுதலில் ஆராதனை என்பது நன்றி நிறைந்ததாக உள்ளது. நற்பண்பற்ற, எதிர்மறையான நபர் பாடுவதை விரும்பாதவராக இருக்க*

வாய்ப்பு உண்டு. தேவனுடைய ஆவியானவர் நம்முடைய இருதயங்களை மாற்றுவதற்காக நமக்குள்ளாக வந்து சேர்ந்து இருக்கும் பொழுது, மகிழ்ச்சி மற்றும் நன்றி ஆகியவற்றின் பாடல்கள் விளைகின்றன.

பாடுதலில் ஆராதனை பற்றி பவுலின் வார்த்தைகள் நமக்குப் போதிக் கின்றன. அவற்றைப் பற்றியும் பாடலில் உங்கள் சொந்த ஆராதனையைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். "ஆவிக்குரிய," "உணர்வு ரீதியான," "சந்தோஷம் நிறைந்த," "வெளிப்படுத்துகின்ற" மற்றும் "நன்றி நிறைந்த" என்ற வார்த்தைகள் பாடுதலில் உங்கள் ஆராதனையை விவரிக்கின்றனவா? அவை விவரிக்க வேண்டும்.

## ஆவியினால் நிறைந்த இருதயத்திலிருந்து ஆராதனை

நாம் பாடலில் ஆராதிக்கையில் ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதில் ஏற்படும் குறிப்பிட்ட சில திட்டவட்டமான விளைவுகளைக் கவனியுங்கள். முதலாவது, இது பிறருக்கு ஊழியம் செய்வதை விளைவிக்கின்றது. வசனம் 19, "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு" என்று கூறுகின்றது. கிறிஸ்தவர்கள் தீவுகளாக இருப்பதில்லை. எனக்கு நீங்கள் தேவை, உங்களுக்கு நான் தேவை. பாடலில் பகிர்ந்து கொள்ளுகின்ற நமது நேரங்கள் இதை நமக்கு நினைவூட்டுகின்றன. நமது குரல்களை ஒன்று கலத்தல் என்பது உங்களுக்கு நான் ஊழியம் செய்வதற்கும் எனக்கு நீங்கள் ஊழியம் செய்வதற்குமான ஒரு வழியாக உள்ளது. உங்கள் விசுவாசத்தை வெளிப் படுத்துகின்ற பாடல்களைப் பாடுவதில் உங்களுடன் நான் இணைந்து கொள்கின்றேன், மற்றும் நீங்கள் எனது இருதயம் தேவனிடத்தில் அனுப்ப ஏங்குகின்ற செய்தியை பாடுவதில் என்னுடன் இணைந்து கொள்கின்றீர்கள். ஒருவர் பிறருக்காக அதைச் செய்தல் என்பது சுயத்தை வெறுமை யாக்குதலாக, இயேசுவின் ஊழியத்தைப் பிறருக்குச் செய்தலாக உள்ளது.

இரண்டாவது, இது கர்த்தராகிய இயேசுவுக்கு ஆராதிப்பதை விளை விக்கின்றது. வசனம் 19, "உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" என்று கூறுகின்றது. நமது பாடல்களில் ஒரு சமான நிலை நமக்குத் தேவைப்படுகின்றது. பல பாடல்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களை நோக்கி திருப்பி விடுகிற வார்த்தைகளையும் செய்திகளையும் கொண்டுள்ளன. "நானு ம் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம், நீயும் சேவிப்பாயா?" என்பவை நாம் தேவனுக்குப் பாடுகின்ற வார்த்தைகள் அல்ல; நாம் ஒருவருக்கொருவர் அவற்றைப் பாடுகின்றோம். நாம் அதைச் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்; ஆனால், "நீரின்றி வாழ்வேது இறைவா" மற்றும் "தேவா உம் பாதம் தொழுகின்றோம்" என்பவை போன்ற கீர்த்தனைகளும் நமக்குத் தேவைப்படுகின்றன, இவற்றைக் கொண்டு நாம் நமது இருதயங்களில் கர்த்தருக்கு இசையமைக் கின்றோம்.

*மூன்றாவது, இது ஒவ்வொன்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துதலை விளைவிக்கின்றது. வசனம் 20, " ... எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" என்று கூறுகின்றது.*

*உங்கள் வாழ்வின் தொனியை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? நீங்கள் முறுமுறுப்பவராக இருக்கின்றீர்களா அல்லது இன்னிசை ஏற்படுத்துபவராக இருக்கின்றீர்களா? ஆராதனை ஊழியத்தில் நீங்கள் சிலவற்றைக் குறித்து முறையிடுபவராக இருக்கின்றீர்களா அல்லது ஒரு சகோதரனுடனோ சகோதரியுடனோ பாடல் ஒன்றைப் பகிர்ந்து கொள்பவராக இருக்கின்றீர் களா? உங்கள் இருதயம் குளிர்ந்து போய் விட்டாதா அல்லது கர்த்தருக்குப் (பாடும்) பாடல்களினால் அனல் கொண்டுள்ளதா?*

## *முடிவுரை*

*"ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லா வற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து." ஆவியினால் நிரம்பி யுள்ள இருதயங்களில் இருந்து பெருக்கெடுத்து ஓடும் கீர்த்தனைகளை நாம் பாடக் கடவோம். பிறருடன் நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் பாடல்களை நாம் பாடக் கடவோம். நம்மை தேவனுடைய இருதயத்திற்கு நெருக்கமாய்க் கொண்டு வருகின்ற, நாம் இல்லத்தில் இருக்கும் உணர்வை நமக்குக் கொடுக்கின்ற இசையை நாம் பாடக் கடவோம்.*

---

*குறிப்பு*

[1]Carl Boberg, "How Great Thou Art," trans. Stuart K. Hine. This quotation is used by permission of ACU Press.

# பரஸ்பரம் கீழ்ப்படிதல் (5:21)

*கடந்த காலத்தில் நான் ''வேதாகமத்தை சரியாகப் புரிந்து கொள்ளுதல்'' என்ற தொடர் பாடம் ஒன்றை போதித்தேன், இது வேதாகமத்தை விளக்கும் அறிவியலுக்குப் புனை/கற்பனைப் பெயராக உள்ளது. இது, வேதாகமம் கூறுவது என்ன; அது அர்த்தப்படுத்துவது என்ன மற்றும் அது அவற்றிற்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பவற்றை கண்டறியும் வழிகளை மாணவர்களுக்குப் போதிக்கின்றது. வேதாகமத்தின் சில பகுதிகளைப் புரிந்து கொள்ளச் சிறிதளவு முயற்சியே தேவைப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, "களவு செய்யாதிருப்பாயாக" என்ற கட்டளை தெளிவானதாக/எளிமையானதாக உள்ளது. இது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு, வசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் என்ற தொடர் பாடம் தேவைப்படுவதில்லை.*

*அன்றாட வாழ்வில் நாம் யாவரும் விளக்கப்படுத்துதலை நடைமுறைப் படுத்துகின்றோம். அதில் சில எளிமையானதாக உள்ளது. நிற்கும்படி கூறுகின்ற அடையாளப் பலகையை வாசித்தல் என்பதற்கு அதிகமான விளக்கம் தேவைப்படுவதில்லை; அந்த அடையாளம் எதனை அர்த்தப் படுத்துகின்றது என்பதை நாம் உடனடியாக அறிகின்றோம். பிற சூழ்நிலை கள் நம்மிடம் அதிகமானவற்றைக் கேட்கக் கூடும். உட்கரு இயற்பியல் பற்றிய புத்தகம் ஒன்றை வாசித்துப் புரிந்து கொள்வதற்கு அதிகமான முயற்சி தேவைப்படும்.*

*நாம் 5:21 என்ற ஒரு வசனத்தைப் பற்றி நினைத்துப் பார்ப்போம். இது புரிந்து கொள்வதற்குக் கடினமானதாயிருப்பதில்லை. இதைப் புரிந்து கொள்வதில் அல்ல ஆனால் இந்த போதனையை வாழ்வதில்தான் அறைகூவல் உள்ளது.*

*இவ்வசனமானது ''ஆவியினால் நிறைந்து'' என்ற பவுலின் புத்தி கூறுதலினுடைய சந்தர்ப்பப் பொருளில் தோன்றுகின்றது. 5:18ல் பவுல், "துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" என்று கூறினார். பின்பு பவுல், ஆவியினால் நிறைந்து வாழ்வதின் செயல் விளைவுகள் சிலவற்றை விவரித்தார்.*

*முதலாவது, ஆவியினால் நிறைந்த வாழ்வு என்பது ஒருவரோடொருவர் ஆவிக்குரிய வழிகளில் பேசுவதன் ஐக்கியத்திற்கு வழிநடத்துகின்றது. நாம் பாடுகையில், நாம் ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து'' (5:19அ) க்*

கொள்ளுகிறோம். இருதயத்தில் கர்த்தருக்கு கீர்த்தனம் பண்ணுதல் என்பது இரண்டாவது செயல்விளைவாக உள்ளது. எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துதல் (5:20) என்பது மூன்றாவது செயல்விளைவாக உள்ளது, மற்றும் நான்காவது செயல்விளைவு வசனம் 21ல் காணப்படுகின்றது. இது நிற்கச் சொல்லும் அடையாளக் குறி போன்றதாக உள்ளது; இதைப் புரிந்து கொள்வதற்கு அதிகமான முயற்சி தேவைப்படுவதில்லை. இது நான்கு தெளிவான எளிமையான வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

## ஒரு தெளிவான கட்டளை

பவுல், ஆவியினால் நிறைந்திருத்தல் என்பது பிறர் நிமித்தம் நமது சுய விருப்பங்களை விட்டுக் கொடுத்தல் என்பதற்கு நம்மை வழிநடத்துகின்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். "கீழ்ப்படிதல்" அல்லது "ஒப்புவித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது[1] தோற்றத்தில் ஒரு இராணுவச் சொற்றொடராக இருந்தது. இது "கீழே வகைப்படுதல்" என்று அர்த்தப்படுத்திற்று. ஆவியினால் நிறைந்த கிறிஸ்தவர்கள் தங்களை ஒருவர் பிறரின் கீழ் வகைப்படுத்திக் கொள்ளுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த வழியில் செல்லுதல் என்ற விஷயத்தைத் தேர்ந்து கொள்வதில்லை.

இது அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் யாவரும் அறிகின்றோம். இதை நடைமுறைக்குக் கொண்டு வருதல் என்பதுதான் நாம் எதிர்கொள்ளுகின்ற மிகப் பெரிய அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது, ஏனென்றால் நமது உரிமைகளை வலியுறுத்தும் கருத்தை நமது இருதயங்களில் வலிவாய்ச் செலுத்துகின்ற ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். மற்ற யாரேனும் பெறுவதற்கு முன்னர் நாம் நம்மால் இயன்ற எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு விட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளோம்.

நான் ஒரு பண்ணையில் வளர்ந்ததில்லை, ஆனால் ஒருவேளை நீங்கள் அவ்வாறு வளர்ந்திருக்கலாம். நீங்கள் கோழிக் குஞ்சுகளைக் கொண்டிருந்தால், தானியக் களஞ்சியத்தில் கொத்தும் முறைமை ஒன்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். மேலுள்ள கோழிக் குஞ்சானது எதை வேண்டுமானாலும் கொத்த முடியும், விளைவுகளைப் பற்றி வருத்தப்படத் தேவையில்லாதும் இருக்கும். கீழே உள்ள கோழிக் குஞ்சானது தீவிரமான விளைவுகள் இன்றி ஏதொன்றையும் கொத்த முடியாது. மேலுள்ள மற்றும் கீழுள்ள கோழிக் குஞ்சுகளுக்கிடையில் (மற்ற) எல்லாக் கோழிக்குஞ்சுகளும் ஏதோ ஒரு வகையில் வரிசை அமைத்து நிற்கின்றன. இரு கோழிக் குஞ்சுகளுக்கிடையில் தரையில் ஏதேனும் தானியம் கிடந்தால், கொத்தும் முறைமையில் உயர் வரிசை நிலையில் உள்ள கோழிக் குஞ்சு அதைப் பெற்றுக் கொள்கின்றது. இன்னொரு கோழிக் குஞ்சு அதை எடுக்க முயற்சி செய்தால், அவைகளுக்கிடையில் சண்டை வெடிக்கின்றது. சண்டை முடியும் பொழுது, வென்ற கோழிக் குஞ்சு கொத்தும் வரிசை முறையில் தன் இடத்தைக் காத்துக்

கொள்கின்றது அல்லது மேலே முன்னேறிச் செல்லுகின்றது.

தானியக் களஞ்சியத்தில் கோழிக் குஞ்சுகளுக்கிடையில் நடைபெறும் இதே விஷயம் மனிதர்களுக்கு இடையிலும் ஒவ்வொரு நாளிலும் நடைபெறுகின்றது. உலகப் புகழ்பெற்ற டல்லாஸ் கௌபாய்ஸ் கால் பந்துக் குழுவினர் ஒரு புதிய தலைமைப் பயிற்சியாளரைப் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியை நான் நினைவு கூறுகின்றேன். பயிற்சி முகாமில் உதவிப் பயிற்சியாளர்கள் யாவரும், யார் மிக உயர்ந்த உதவியாளராக இருப்பார் என்பதைக் காண முயற்சி செய்து பதவிக்காகப் பந்தயமிட்டுக் கொண்டிருந்தனர். பணியிடங்களில் எல்லாக் காலத்திலும் இது நடை பெறுகின்றது, மற்றும் இதே விஷயத்தை நாம் பள்ளிகளிலும் காண முடியும் - மக்கள் தங்கள் வழியை அடிக்கடி பெற்றுக் கொள்ளும் பொருட்டு செல்வாக்கின் தகுதிகளுக்கு முண்டியடித்துக் கொண்டு தங்களை வெளிக் காட்டுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் அவ்வாறான வகையில் வாழ்வதைத் தேர்ந்து கொள்ளக் கூடாது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினார். விஷயங்களை நாம் விரும்பும் வகையில் வரிசையில் அமைக்கப்படுவதற்கு நாம் திட்டமிட்டு உழைப்பதில்லை. கிறிஸ்தவர்கள் இவ்விளையாட்டை விளையாட மறுக்கின்றனர். ஒருமுறை இயேசுவின் சீஷர்களில் இருவர் இதைச் செய்தனர்:

> அப்பொழுது செபதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: “போதகரே, நாங்கள் கேட்டுக் கொள்ளப்போகிறதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்” என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: “நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள்” என்று கேட்டார். அதற்கு அவர்கள்: “உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்” என்றார்கள் (மாற்கு 10:35-37).

யாக்கோபும் யோவானும் மற்றவர்களை விட உயர்வான இடத்தில் தங்களை வரிசைப்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். வரப் போகிற இராஜ்யத்தில் மேலான கோழிக்குஞ்சுகளாக இருக்க அவர்கள் விரும்பினார் கள். தங்களுக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள அவர்கள் விரும்பினார்கள். வாழ்க்கைக்கு ஒரு புதிய அணுகுமுறையை இயேசு அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது:

> புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்து கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி

*வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற். 10:42ஆ-45).*

இயேசு அவர்களிடத்தில், ''இது இராஜ்யத்தில் செயல்பாட்டுக்கு உதவாது. இது கடந்த காலத்தின் வழிமுறையாக இருந்துள்ளது, ஆனால் இராஜ்யம் என்பது மாறுபட்டதாக உள்ளது. இராஜ்யத்தில் பெற்றுக் கொள்ளுதல் என்பது கொடுத்தலைப் போன்று அவ்வளவு முக்கியமானதாக இருப்பதில்லை'' என்று கூறினார்.

ஆவியினால் நிறைந்த மக்கள் தங்கள் சொந்த வழியைப் பெறுவதை வலியுறுத்துவது இல்லை. அவர்கள் முதலாவது பிறரைக் கண்ணோக்கு கின்றார்கள். அவர்கள் "ஒருவருக்கொருவர் கீழ்ப்பட்டிருக்கின்றார்கள்."

மீண்டும் 5:21ஐ வாசியுங்கள். பரஸ்பரம் கீழ்ப்படிதலுக்கான தெளிவான நோக்கத்தைக் கவனியுங்கள்: "தெய்வ பயத்தோடே." இது நேர் மறையான அர்த்தத்தில் "தெய்வ பயத்தின் விளைவாக" என்று கூறுகின்றது. Phobos என்பது "பயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை யாக உள்ளது. இது நமக்கு "Phobia" என்ற ஆங்கில வார்த்தையைத் தருகின்றது. பயம் என்பது "மரியாதை" என்பதை விட அதிகக் கனமுடைய தாக உள்ளது. சாலொமோன், "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே'' (பிர. 12:13ஆ) என்று கூறினார். தேவனுக்குப் பயப்படுதல் என்றால் தேவனை (அவரது கட்டளைகளை) தீவிரமாய் மேற்கொள்ளுதலாக உள்ளது. தேவன் யார் என்பதையும் நாம் யார் என்பவற்றையும் நாம் கணக்கில் கொள்ளு கின்றோம், அது நம்மை முழங்காலிடச் செய்கின்றது. அது தேவனைப் பற்றித் தீவிரமான சிந்தனை மேற்கொள்வதை விளக்குகின்றது. சாராம் சத்தில் பவுல் நமக்கு, "நீங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிகின்ற பொழுது கிறிஸ்துவைப் பற்றித் தீவிரமாய்ச் சிந்திக்கின்றீர்கள் என்பதை காண்பிக் கின்றீர்கள்'' என்று கூறுகின்றார்.

பிறருடனான நமது எல்லா உறவுகளிலும் கீழ்ப்படிதலுள்ள எண்ணப் போக்கொன்று தேவையாக உள்ளது. உங்கள் இல்லத்தில் நீங்கள் ஒரு ஊழியக்காரராக இருக்கின்றீர்களா? நீங்கள் பணிபுரியும் இடத்தில் அல்லது படிக்கின்ற பள்ளியில் மக்கள் உங்களை, பிறரிடமிருந்து பெற்றுக் கொள்பவர் என்பதற்குப் பதில் பிறருக்குக் கொடுப்பவர் என்ற நினைவில் அதிகம் வலியுறுத்தம் வைக்கின்றார்களா? உள்ளூர் சபையைப் பற்றிய விஷயம் என்ன? அதிலிருந்து நீங்கள் என்ன பெற்றுக் கொள்ளலாம் என்பதற் காக நீங்கள் அங்கு இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் சகோதர சகோதரி களின் தேவைகள், அக்கறைகள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கின்றீர்களா?

சபையானது பரஸ்பரம் கீழ்ப்படிதலுக்கான பயிற்சிக் களமாக உள்ளது. எல்லா வகைப்பட்ட மக்களையும் தேவன் சபைக்குள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கின்றார். நாம் ஒருவரையொருவர் மதிக்கவும், கனப்படுத்தவும் மற்றும் ஒருவருக்கொருவர் அர்ப்பணிக்கவும் கற்றுக் கொள்ளுகின்றோம்.

*“நான் எனது வழியில் சென்றால் நல்லது இல்லையென்றால் நான் மகிழ்ச்சி யாய் இருக்க மாட்டேன்” என்று உலகப் பிரகாரமான சிந்தை அமைவு சபைக்குள் நாம் நம்முடன் கொண்டு வரக் கூடிய மிக மோசமான எண்ணப் போக்காக உள்ளது. அது கிறிஸ்துவின் ஆவியை அல்ல, இந்த உலகத்தின் ஆவியையே தழுவிக் கொள்வதாக உள்ளது.*

## ஒரு தனிப்பட்ட விளக்கவுரை

*5:21ன் மீதான மிகச் சிறந்த விளக்கவுரையானது பிலிப்பியர் 2ல் காணப்படுகின்றது. பிலிப்பியர் நிருபமானது பவுல் எபேசியருக்கு நிருபத்தை எழுதிய காலத்திற்கு அண்மையில் எழுதப்பட்டது. நாம் உறவு முறைகள், பிறருடன் ஒத்துப் போகுதல் மற்றும் பெறுதலின் எண்ணப் போக்கிற்குப் பதிலாகக் கொடுத்தலின் எண்ணப்போக்கைக் கொண்டிருத் தல் ஆகியவற்றில் சிரமப்படுவது போன்றே தொடக்க காலத் திருச் சபையும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது என்பது தெளிவு. பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மை யானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவை களையல்ல, பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி. 2:3, 4).*

*அது ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலின் கருத்தை விளக்கப் படுத்துகின்றது. இப்பொழுது, கீழ்ப்படிதலுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தைக் கவனியுங்கள். இது கிறிஸ்துவினுடையதாக உள்ளது.*

> *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:5-11).*

*பரஸ்பரம் கீழ்ப்படிதல் என்பது தாழ்மை குணத்துடன் வருகின்றது. தாழ்மை என்றால் என்ன என்று இயேசு நமக்குக் காண்பித்தார். அது ஆவி யினால் நிறைந்த வாழ்வின் அடையாளமாக உள்ளது. தாழ்மையில்லை யென்றால், மக்களுடனான நமது உறவுகள் தேவன் விரும்புகின்ற வகையில் இருக்காது. அது நம்மை (சரியான) பாதையில் வைத்துக்*

*காக்கின்றது. அது நம்மை (சாரம் இல்லாத வெற்று) போதனைச் சட்டத்தைக் கைக் கொண்டு மூடிய சிந்தையுள்ளவர்களாய் இருத்தலில் இருந்து காத்துக் கொள்கின்றது. தாழ்மை என்பது நாம் பிறரின் உறவுகளை உணர்ந்தறியச் செய்கின்றது. அது நம்மைப் பிறரின் குறைபாடுகளைச் சகித்துக் கொள்ளும்படிக்கு உதவுவது டன் நம்மை நமது சுயத்தை நாடும் வழிகளில் இருந்து விடுவிக்கின்றது. தாழ்மை என்பது நாம் ஒருவரையொருவர் (சுலபமாய்) அணுகச் செய்வது டன் ஒருவருடன் ஒருவர் வாதிடாமல் இருக்கவும் உதவுகின்றது.*

*இது நாம் பிறரிடத்தில் காணக் கூடிய ஒவ்வொரு பிழையையும் தவறையும் ஆராய்ச்சி செய்யக் காரணமாவதற்குப் பதிலாக, மற்றவர்களைக் கிருபையின் ஆவியுடன் கண்ணோக்கக் காரணமாகின்றது. தாழ்மை என்பது நாம் ஒருவருக்கொருவர் மிகச் சிறந்தவற்றை நாடும்படி நம்மைத் தூண்டுவதுடன், யூகம், புறங்கூறுதல், பதவிகளுக்காக போட்டியிடுதல் ஆகியவற்றினின்று நம்மைப் புறம்பே விலக்கிக் காத்துக் கொள்ளுகின்றது. தாழ்மை என்பது கிறிஸ்துவின் மீதான பயபக்தியினிமித்தம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலாக உள்ளது.*

*நமது இல்லங்களில், மக்களுடன் நம் அன்றாட பழக்கங்களில் மற்றும் சபையில் நாம் தாழ்மையைக் காட்சிப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.*

## ஒரு நடைமுறைக்கான ஆழ்ந்த சிந்தனை

*“தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்” (5:21). இது தெளிவானதாகக் காணப்படுகிறது அல்லவா? இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதை விட இதைப் புரிந்து கொள்ளுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. இதை ஒவ்வொரு நாளும் வாழ்வதில் நன்கு செயல்பட நமக்கு உதவுகின்ற மூன்று கருத்துக்களை நாம் காண்போம்:*

*1. இயேசுவின் போதனைகளுக்கு எதிராகச் சொல்லுகின்ற உலகப் பிரகாரமான சிந்தை அமைவில் இருந்து வெளியேறும் விருப்பத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இது உண்மையிலேயே என்னவாக உள்ளது என்பதை நாம் காணாத வரையில் நாம் அநேகமாக நமது சுயவழியையே நியாயப்படுத்தி வலியுறுத்திக் கொண்டிருப்போம்.*

*2. ஒவ்வொரு உறவுமுறைக்குள்ளாகவும் பின்வரும் கேள்வியைக் கேட்டு உள் நுழையுங்கள்: ‘‘இந்த நபருக்கு என் மூலமாக எதைக் கொடுக்கும்படிக்கு இயேசு விரும்புகின்றார்?”*

*3. பின்வரும் வேண்டுகோளுடன் அன்றாட ஜெபத்தில் கர்த்தருக்கு முன் வாருங்கள்: ‘‘நான் எவ்விடத்தில் பிறருக்கு நீர் விரும்பும்படி கீழ்ப்படியாமல் உள்ளேன் என்று எனக்குக் காண்பியும்.” பிறருடனான உங்கள் நடவடிக்கைகளில் எவ்விடத்தில் நீங்கள் மாற்றங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியது அவசியம் என்று காண இயேசு உங்களுக்கு உதவுவாராக.*

# முடிவுரை

நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவுதான் இவ்வாழ்வில் மிகவும் முக்கியமான உறவாக உள்ளது. நாம் தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும். தேவன், இயேசுவைப் பற்றி, "இவர் என் குமாரன்; இவருக்குச் செவி கொடுங்கள்" என்று அறிவித்தார். நாம் இயேசுவுக்குச் செவி கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். நமது வாழ்வானது இயேசுவுடன் சரியாய் இராதவரைக்கும் இவ்வாழ்வில் நமது பிற உறவுகள் எதுவும் அது இருக்க வேண்டிய பிரகாரம் இருக்காது.

உங்கள் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணியுங்கள். அவர் பாவங்களுக்கு மன்னிப்பையும் வாழ்வில் ஒரு புதிய தொடக்கத்தையும் வழங்குகின்றார். அவருக்குச் செவி கொடுத்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள். இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (இ.வ. மாற். 16:15, 16) என்று கூறினார். நீங்கள் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றீர்களா?

கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் வசனம் 21ன் மூலம், கிறிஸ்துவுக்குப் பயபக்தியைக் காண்பிக்காத(வராயிருந்தால்) குற்றம் உணர்த்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் சமீபத்தில் உங்கள் வழியை வலியுறுத்தி பிறரைக் குறித்து அக்கறையற்று இருந்திருக்கலாம். இது ஒரு யுத்தமாக உள்ளது. நாம் யாவரும் சுயநலம் என்ற உணர்வுடன் போராட்டம் நடத்துகின்றவர்களாய் இருக்கின்றோம். உங்கள் தனிப்பட்ட போராட்டத்தில் உங்களைப் பெலப்படுத்தும்படி ஜெபத்தில் கர்த்தரிடம் கேளுங்கள். "தெய்வ பயத்துடனே ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்." மக்கள் ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது அது நடைபெறுகிறது.

---

குறிப்பு

[1]Hupotasso என்பது இந்தக் கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது தனது இராணுவப் பயன்பாட்டில் மேலான அதிகாரிக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தது. இது அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிவது என்பதில் பயன்பாடு கொண்டிருந்தது. இது ஒருவர் தனது சொந்த உரிமை அல்லது விருப்பத்தை விட்டுக் கொடுப்பதைக் கூறக் கூடியதாக உள்ளது.

# மனைவிகளுக்கு ஒரு வார்த்தை (5:22-24)

*மியாமி ஹெரால்டு என்ற பத்திரிகையில் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த இளம் தம்பதிகள் தங்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியின் போதே மணமுறிவு பெற முடிவு செய்தனர் என்ற வழக்கத்திற்கு மாறான செய்தி வெளியாயிற்று. மணமகன் தனது முன்னாள் பெண் தோழியுடன் பேசிக் கொண்டிருந்ததை மணமகள் கண்ட பொழுது காரசாரமான வாக்குவாதம் வெடித்தது, திருமணமானது உண்மையில் தொடங்கு முன்பாகவே முறிந்து போயிற்று. திருமணத்தில் நீண்ட காலம் நிலைத்திராத மக்களைப் பற்றி நான் அறிவேன், ஆனால் திருமண வரவேற்பு நிகழ்ச்சியின் பொழுதே முடிவுற்றதாக நான் முதன் முதலாகக் கேள்விப்பட்டது இதுதான்.*

*திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். மக்கள் இருவர் (ஆணும் பெண்ணும்) தங்களை அவருடைய திட்டத்திற்கு ஒப்புக் கொடுத்தால் அது (வாழ் நாள் முழுவதும் திருமணம் நீடித்திருப்பது என்பது) நடைபெறுவதற்கான வழியை அவர் நமக்குக் காண்பிக்கக் கூடும். எபேசியர் 5ன் பிற்பகுதியானது அவரது திட்டத்தில் சிலவற்றைக் காண்பிக்கின்றது. இது தேவன் விரும்புகின்ற வகையில் திருமணத்தை ஒன்று சேர்த்து வைப்பதில் திறவுகோல் கட்டு மானக் கருத்துக்கள் சிலவற்றைத் தருகின்றது. உண்மையில் பவுல் கூறிய வற்றைக் கணவனும் மனைவியும் தீவிரமாய்க் கடைப்பிடித்தால், மணமுறிவு என்பது வழக்கற்றதாகி விடும். மனைவிகளுக்கு ஒரு வார்த்தை யுடன் பவுல் தொடங்கினார்:*

> *மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (5:22-24).*

*கணவரின் தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படியத் தகுதிப்படுதல் என்பதே*

*மனைவி தனது கணவரிடத்தில் கொண்டுள்ள பொறுப்பாக உள்ளது என்று பவுல் விளக்கப்படுத்தினார். மனைவி தனது வழியை வற்புறுத்துமளவுக்கு சுயமையங் கொண்டிருக்கக் கூடாது. அவர்களின் வாழ்வினை ஒன்று கூட்டிக் கட்டுப்படுத்துதல் என்பது அவளிடத்தில் இல்லை. மனைவி யானவள் தனது கணவனின் தலைமைத்துவத்திற்கு மனப்பூர்வமாய்ப் பின் செல்லும்படியாகவே தேவனுடைய திட்டம் அவளுக்கு உரைக்கின்றது. இதை அவள் செய்கின்ற பொழுது, அவள் கிறிஸ்துவைக் கனப் படுத்துகின்றாள்.*

*தேவனுடைய திட்டத்தில் கணவர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர். உண்மையில், பவுல் மனைவி களுக்குக் கூறியதைப் போன்று இரண்டு மடங்கு விஷயங்களைக் கணவர் களுக்குக் கூறினார். தேவனுடைய திட்டத்தைக் கணவர்களும், மனைவி களும் தீவிரமாய் மேற்கொண்டார்களென்றால், மணமுறிவு வழக்கறிஞர் கள் தங்கள் பிழைப்புக்கு வேறு வழிகளைக் கண்டறியும்படி நிர்ப்பந்திக்கப் படுவார்கள். தேவனுடைய திட்டத்தை நாம் இன்னும் நெருக்கமாகக் காண்போம். மனைவிகளுக்கான அவரது திட்டத்தை நாம் இந்தப் பாடத்தில் காண்போம். அடுத்த பாடத்தில் நாம் கணவர்கள் மீது கவனம் செலுத்துவோம்.*

## கீழ்ப்படிதலுக்கான அழைப்பு

*மனைவிகளுக்குத் தெளிவான அறிவுறுத்தல்களைப் பவுல் கொடுத்தார்: "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்." ஒன்றும் ஒளித்து வைக்கப்படவில்லை. சிறிய அச்செழுத்துக்கள் எதுவும் இல்லை—தெளிவான எளிய சத்தியமே உள்ளது. "நீங்கள் நீங்களாகவே இருங்கள்" என்ற தனிப்பட்ட உரிமைகளை யும் பெண் விடுதலையையும் வலியுறுத்துகின்ற (இந்தக்) காலத்தில் கீழ்ப்படிதலுக்கான அழைப்பானது பல பெண்களுக்குப் பிரியமானதாக இருப்பதில்லை. திருமணத்திற்கு அன்பைக் காட்டிலும் அதிகமானது தேவை என்ற புத்தகத்தில் கரோல் மேஹால் பெண் எழுத்தாளர் இதை விளக்கப்படுத்தினார்:*

> *கீழ்ப்படிதல்! அந்த வார்த்தையை நான் எவ்வளவாய் வெறுத்தேன். அது என் சிந்தையில் பளிச்சிடும் பொழுது, உயிர்ப் பொருளாயிராத, ஆமாம் போடும் பெண் என்பதை மட்டுமே யூகித்து உணர முடிந்தது. இன்னொரு நபரின் பிரதிபிம்பமாக மட்டும் நான் இருப்பதற்கு விரும்பவில்லை.*
>
> *இருப்பினும், இந்த இடத்தில் தேவனிடமிருந்து மதியீனமற்ற கட்டளை ஒன்றை நான் எதிர்கொண்டேன், "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபே. 5:22). இவ்வசனமானது மேலோட்டமாகக் காணப்படுவது போன்று அர்த்தப்பட முடியாது என்று நான் தேவனிடத்திலும் மற்ற ஒவ்வொருவரிடத்திலும் விவாதித்திருந்தேன்;*

அது வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் மட்டுமே அர்த்தம் கொண்டிருந்த கலாச்சாரக் கூற்றாகவே இருந்ததென்பது உறுதி. (என்று எண்ணமிட்டேன்.) இவ்வசனத்தை, "மனைவிகளே, உங்கள் கணவர்கள் கர்த்தரைப் போன்று செயல்படும் போது நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" என்று மறு கட்டுமானம் செய்வதென்பது எனது அடுத்த முயற்சியாயிருந்தது. ஆனால் அது அப்படி அர்த்தப் படுவதில்லை என்று நான் அறிந்திருந்தேன்.

எங்களுக்குத் திருமணாகி ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட சூழலில், இந்த வசனத்தை நான் ஆராய்ந்து பார்க்கையில், இவ்வசன மானது நான் இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய விரும்புகின்ற வழி வகையிலேயே அதே வகையிலான சுயாதீனம் மற்றும் "ஒன்றும் பின் வைத்துக் கொள்ளாத நிலையில்" ஜேக்(எனது கணவர்)க்கும் கீழ்ப் படிய வேண்டும் என்று அர்த்தப்படுவதாகவே முடிவெடுக்க வேண்டியதாயிற்று.

அந்தத் தருணம் வரையிலும் நான், திருமணம் என்பது 50/50 முன் மொழிதலாக இருந்ததென்று உணர்ந்திருந்தேன், மற்றும் ஜேக் தனது 50%ஐக் கொடுத்தால், நான் என்னுடையதைக் கொடுப்பேன். இருப்பினும், அந்த 50%ஐக் கொடுக்க வேண்டிய வரிசை முறை யாருடையது என்பதைத் தீர்மானிக்க நாங்கள் அடிக்கடி சண்டை யிட்டுக் கொள்வோம். வேதாகம ரீதியான மகிழ்ச்சிகரமான திருமணம் என்பது தம்பதிகள் இருவரும் 100% கொடுக்க மனதாக உள்ள 100% முன்மொழிதலாக உள்ளது என்பதை நான் இன்னமும் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.[1]

மனைவிகள் (கணவர்களுக்குக்) கீழ்ப்படிந்திருக்கும்படி தேவன் அழைக்கின்றார். மனைவி தனது கணவனின் தலைமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இதை அவள் செய்கின்ற பொழுது, அது கிறிஸ்துவுக்கு அவள் காண்பிக்கும் பயபக்திக்கு ஆதாரம் அளிக்கின்றது. இது அவருடைய திட்டத்தில் அவளுடைய நம்பிக்கையைச் செயல்விளக்கப்படுத்துகின்றது. தன் கணவனுக்குக் கீழ்ப்படியாத பெண்ணொருத்தி தான் கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூற முடியாது.

நீங்கள் ஒரு மனைவியாயிருந்தால், நீங்கள் உங்கள் கணவருக்குக் கீழ்ப்படிகின்றீர்களா? ஒரு கவனிப்பாளராக இருந்து உங்கள் திருமணத் தைக் கண்ணோக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் பிள்ளைகள் காணுகின்ற வகையில் அதைக் கண்ணோக்குங்கள். அடிக்கடி விவாதங்கள் எழுகின்ற னவா? உங்கள் உரையாடல்கள், முறையிடுதல், குற்றஞ்சாட்டுதல் அல்லது குறைகூறுதல் போன்றவற்றைக் குணங்களாகக் கொண்டுள்ளதா? நீங்கள் உங்கள் கணவரைக் கட்டியெழுப்புகின்றீர்களா அல்லது அவரைக் கிழித்துப் போடுகின்றீர்களா? காரியங்களைக் கட்டுப்படுத்த விரும்புகின்றீர்களா அல்லது வழிநடத்த அவரை அனுமதிக்கின்றீர்களா? உங்கள் கணவரின் தலைமைத்துவத்தை நீங்கள் பின்பற்றும் வழிமுறையை இயேசு அங்கிகரிக்கின்றாரா?

## கீழ்ப்படிதலுக்கான தூண்டுதல்

மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பதற்குப் பவுல் குறிப்பிடுகின்ற தூண்டுதல்களைக் கவனியுங்கள்: "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்" (5:23அ). இந்தத் தூண்டுதலானது, கணவன் குடும்பத்தின் தலையாய் இருக்க வேண்டும் என்ற தேவனுடைய திட்டத்தைப் பிணைக்கின்றது. குடும்பத்தில் ஆடவருடன் உரிய இடமானது தலைமைத்துவத்தின் இடமாயிருக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டுள்ளார். இதற்கும் சமூகப் பழக்கங்கள் அல்லது கலாச்சாரப் பாரம்பரியங்கள் ஆகியவற்றிற்கும் ஒன்றும் தொடர்பு இல்லை.

"தலை" (கிரேக்கம்: kephale) என்பது ஒரு மேலாளரைக் குறிக்கின்றது: இது அதிகாரம் அல்லது இயக்குதல் என்பதை வலியுறுத்துகின்றது. இது பிறரிடமிருந்து பெற்றுக் கொள்பவற்றிற்காக அவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்ற சர்வாதிகாரி அல்லது கொடுங்கோலரசன் என்ற கருத்தைக் குறிப்பிடுவதில்லை. அதற்குப் பதிலாக, அக்கறைக்குரிய வகையில் பொறுப் பேற்றுக் கொள்ளுகின்ற ஒருவரை இது குறிப்பிடுகிறது. அவர், மக்களின் நன்மைக்காக அவர்களை நிர்வாகிக்கின்றார். அவரது இயக்குதல், அவரது கண்காணிப்பின் கீழ் உள்ளவர்களின் நலனுக்காக இயன்ற வரையிலும் நன்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஒருவேளை, நமது சட்ட சபையானது, இல்ல அமைவுகளில் செய்யப் படுகின்ற ஒவ்வொன்றும் தனிப்பட்ட மனிதருடைய முடிவைச் சார்ந்த தாகும் என்று சட்டம் இயற்றுகிறது என்று வைத்துக் கொள்வோம். அச்சட்டமானது கணவரிடத்திலிருந்து அவருடைய தலைமைத்துவத்தின் பாரம்பரியப் பணிப்பொறுப்பை எடுத்துப் போட்டு விடும். குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் கணவர் மற்றும் தந்தையின் தலைமைத் துவத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுவார்கள். அப்படிப்பட்ட ஏற்பாடானது வேலைக்கு உதவுமா? தலைமைத்துவமின்றி ஒரு குடும்பம் இயங்க முடியுமா?

மக்கள் தங்களுடைய வாகனங்களை எவ்வாறு ஓட்ட வேண்டும் என்று கூறுவதற்கு காவல்துறைக்கு இனிமேல் அதிகாரமில்லை என்று உங்கள் நகர சபையில் ஒரு சட்டம் இயற்றினால் எப்படியிருக்கும்? ஒருவேளை அவ்விஷயம் மக்களிடத்தில் ஒப்புவிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். யாரோ ஒருவர் வந்து சைகை விளக்குகள் எல்லாவற்றையும் அணைத்துப் போட்டுவிட்டு, நிறுத்தக் குறிப்பலகைகள் எல்லாவற்றையும் எடுத்துப் போட்டு விட்டு, வேக வரையரை அடையாளப்பலகைகள் யாவற்றையும் நீக்கிப் போடுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அது பயன்படுமா? இல்லை, அது குழப்பத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்தும். அப்படிப்பட்ட நகரத்தில் நீங்கள் காரோட்டிச் செல்ல விரும்புவீர்களா?

சமூகம், சபை மற்றும் இல்லம் ஆகியவற்றில் நமக்கு தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. இல்லத்தில் தலைமைத்துவப் பணிப் பொறுப்பைத் தேவன் கணவர்களிடம் கொடுத்துள்ளார். மனைவியர்களே,

பின்வருவனவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

1. கீழ்ப்படிதல் என்பது கீழாயிருத்தல் என்று அர்த்தப்படுவதில்லை. ஆணும் பெண்ணும் தேவனுடைய சாயலாகவே படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தேவனுக்கு முன்பாக மதிப்பிலும் தகுதியிலும் சமமாகவே உள்ளனர் (கலா. 3:28).

2. ஒரு பெண் தனது வாழ்விலும் திருமணத்திலும் முழு மகிழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு கீழ்ப்படிதல் அவசியமாக உள்ளது. ஒரு பெண் கிறிஸ்துவுக்கும், தனது வாழ்விற்கான அவருடைய திட்டத்திற்கும் தன்னை முழுமையாகக் கீழ்ப்படுத்தும்போது மட்டுமே அவள் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டடைய முடியும்.

3. மனைவி (தன் கணவனுக்குக்) கீழ்ப்படியத் தவறுதல் என்பது ஒரு கணவனை, தேவன் அவரிடம் இருக்கும்படி நோக்கம் கொண்டிராத ஒரு வேலைக்குள் அவரைத் தள்ளுகின்றது. அது அவர், மனைவியைக் கட்டுப் படுத்துவதற்காக சண்டையிடும்படியும் ஒரு சர்வாதிகாரியாகும்படியும் அவரைத் தூண்டுகின்றது அல்லது அது அவரைத் தனது சொந்த வீட்டிலேயே ஒரு “ஆமாம் போடும்” மனிதராகக் காரணமாகி விடுகின்றது.

4. கீழ்ப்படிதல் என்பது கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் என்று அர்த்தப்படுவதில்லை. எந்தக் கணவரும் தனது மனைவி தவறான பயன் பாட்டை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தவோ அல்லது தேவனுடைய சித்தத்திற்கு எதிராகச் செயல்படவோ உரிமை கொண்டிருப்பதில்லை.

5. கீழ்ப்படிதல் என்பது, குடும்பத்தின் முடிவுமேற்கொள்ளும் செயல்களில் அல்லது பிள்ளைகளை ஒழுங்குபடுத்தும் செயலில் மனைவி பங்கேற்க முடியாது என்று அர்த்தப்படுவதில்லை. கணவர், குடும்பம் தொடர்பானவற்றைத் தனது மனைவியுடன் அமர்ந்து கலந்துரையாடு வதினால் தனது தலைமைத்துவத்தை விட்டுக் கொடுத்து விடுவதில்லை. அவர்கள் ஒருமித்த முடிவு எடுக்கக் கூடியவர்களாயிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், மனைவி தன் கணவருடைய தலைமைத் துவத்தில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

## முடிவுரை

மனைவியர்கள் தங்கள் கணவர்களின் தலைமைத்துவத்தைப் பின்பற்று வதற்கான அவசியத்தை வலியுறுத்தும்படி தேவன் நோக்கம் கொண்டிரா திருந்தாரென்றால், பவுல் கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் ஒப்பிட்டிருக்க மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான ஒரு வலிவான உறவைப் பற்றிப் பவுல் பேசினார். ஒரு கணவனும் மனைவியும் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் கூடியிருப்பதில் கிறிஸ்து மற்றும் சபையின் வாழ்வைச் சித்தரிக்கின்றனர் என்று தேவன் நமக்குக் கூறுகின்றார். மனைவியர்களே, நீங்கள் இந்த உலகத்திற்கும் விசேஷமாக உங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளை களுக்கும் அவர்கள் கிறிஸ்து மற்றும் அவரது சபைக்கிடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ள உதவுவதற்கு உங்களுக்கும் உங்கள் கணவருக்கும்

இடையில் உள்ள அன்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றச் சித்தரிக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளீர்கள். உங்களுக்குள் அவர்கள் உற்று நோக்கு கின்றவைகள், அவர்கள் கிறிஸ்துவைச் சார்ந்து இருப்பதை விரும்பக் காரணமாகலாம்.

மனைவியர்களுக்கான மூன்று நடைமுறை ஆலோசனைகள் பின்வருமாறு:

முதலாவது, உங்கள் கணவருக்கு நீங்கள் எவ்வளவு நன்கு கீழ்ப்படிவது என்று காண்பிக்கும்படி கர்த்தரைக் கேளுங்கள்.

இரண்டாவது, உங்கள் கணவரிடத்தில் உள்ள தேவத்துவத் தலைமையை உறுதிப்படுத்தும் வாய்ப்புக்களை நாடுங்கள். அவருக்குள் இருக்கிற மிகச் சிறந்தவற்றை வெளிக் கொண்டுவர உங்களால் முடிந்த வற்றைச் செய்யுங்கள். இவ்வாறு நீங்கள் அவருக்கு உதவுகையில், அது உங்களுக்குள் இருக்கிற மிகச் சிறந்தவற்றை வெளிக் கொண்டுவரும்.

மூன்றாவது, உங்கள் கணவரைப் பற்றிய நேர்மறையான சிந்தனை களுடன் அவரைக் கனப்படுத்துங்கள்.

தயவு செய்து பின்வரும் ஜெபத்தில் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள்: “தேவனே, இல்லத்திற்கான உம்முடைய திட்டத்திற்காக உமக்கு நன்றி. இயேசுவைப் பின்பற்றத் தேர்ந்து கொண்டதன் காரணமாக உம்மைக் கனப் படுத்துகின்ற பெண்களுக்காக உமக்கு நன்றி. அவர்கள் எங்களுக்கு அவ்வள வாகப் பலமாயிருக்கின்றனர். தங்கள் கணவர்களின் தலைமைத்துவத்தைப் பின்பற்றுகின்ற மனைவியர்களுக்காக உமக்கு நன்றி. உமது வசனத்திற்குக் கீழ்ப்படிவதுடன் வரும் சந்தோஷத்தை அவர்களுக்குத் தந்தருளும். எங்கள் இல்லங்களைப் பெலப்படுத்தும். மனிதர்கள் ஆவிக்குரிய தலைவர்களாக வும், தங்கள் மனைவியர்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும், ஆசீர்வாதங் களாகவும் இருக்கும்படி அவர்களை எழுப்பும். இயேசுவுக்காகவும், அவருடைய சபையில் இருக்கும் கனத்திற்காகவும் அவரை இரட்சகர் என்று நாங்கள் அறிந்து கொண்டிருப்பதற்காகவும் உமக்கு நன்றி. அவருடைய நாமத்தினாலே, ஆமென்.”

---

குறிப்பு

[1]Carol Mayhall, quoted in Max Anders, *The Good Life: Living With Meaning in a “Never-Enough” World* (Dallas: Word Publishing, 1993), 177.

# கணவராயிருத்தல் (5:25-33)

*மனைவியர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (5:22) என்று அறிவுறுத்திய பின்பு, பவுல் கணவர்களை நோக்கி உரையாற்றி, அவர்கள் தங்கள் மனைவியர் மீது அன்புகூர வேண்டுமென்றும் அவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டுமென்றும் உற்சாகப்படுத்தினார். ஒரு மனைவிக்கு உண்மையிலேயே தேவைப்படுவது என்ன? பின்வரும் பதிலைக் கவனியுங்கள்:*

> *ஆண்களுடனான உறவுகளில் பெரும்பாலான பெண்கள் விரும்புவது என்ன? பணியிடத்தில் சமவாய்ப்பா? இல்லத்தில் மதிப்பா? இது வேறு விதமாய் இருக்க வேண்டுமென்று இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கத்திய உலகத்தில் எவராவது ஒருவர் கூட ஆலோசனை கூறுவது என்பது மிகவும் கடினமானதாகும் ... இருப்பினும், பல பெண்களுக்கு உரிமை மற்றும் வாய்ப்புக்கள், பணியிடத்திலும் மற்றும் இல்லத்திலும் பிடிகொடாதிருக்கும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளச் செய்கின்றது. பணி வாய்ப்புகள் பெரும்பாலும் திருப்தியளிக்கத் தவறிவிடுகின்றன. திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருப்பதில்லை. ஆண்களுடன் அவர்களின் அன்றாட உறவுமுறைகள் எப்படியிருந்த போதிலும், பல பெண்கள் தங்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க சில விஷயங்கள், அடிப்படையான சில விஷயங்கள் இல்லாது போய் விட்டதாகவே உணருகின்றார்கள்.*
>
> *கேட்டுக் கொள்ளப்பட்டால் சில பெண்கள் - சொல்லப் போனால், சில ஆண்கள் மட்டுமே கூட - தங்கள் விரல்களைப் பிரச்சனையின் மீது இடக்கூடியவர்களாயிருக்கின்றார்கள். 1990களில் நாம் அவ்வளவு பயங்கரத்திற்குரிய வகையில் விடுவிக்கப்பட்டுள்ளோம் - மற்றும் நமது சிந்தனைகளில் அவ்வளவு உலகப்பிரகாரமாயிருக்கின்றோம் ... ஆண்களிடத்தில் பெரும்பாலான பெண்கள் விரும்புவதும், ஆனால் மிகச் சில பெண்கள் மட்டுமே கண்டறிவதும் ஆவிக்குரிய தலைமைத்துவமேயாகும் என்பதை எவரேனும் எப்பொழுதாயினும் யூகித்திருப்பார்களா?*[1]

*எபேசியர் 5:25-33 வசனப் பகுதியில் "ஆண்பால் ஆவிக்குரிய தலைமைத் துவம்" என்று திட்டவட்டமான வார்த்தைகள் எதுவும் காணப்படுவதில்லை, ஆனால் இவ்வசனப் பகுதியில் பவுல் இதைத்தான் எடுத்துரைத்தார். மனைவி தன் கணவருடைய தலைமைத்துவத்தைப் பின்பற்றுவதினால்*

*கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிப்பது போன்றே, கணவர் தனது தலைமைத்துவத்தை ஏற்ற வகையில் செயல்படுத்துகையில் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிக்கின்றார்.*

*ஒரு கணவர், பின்வரும் கட்டளையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் பொழுது சரியாக வழிநடத்துபவராயிருக்கிறார்: "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" (5:25அ). இந்தக் கட்டளையானது ஆண்பால் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை விவரிக்கின்றது. இது "முதலாளி யாயிருத்தல்" என்பதற்கு மாறாக அன்புகூரும் ஊழியம் மற்றும் மென்மை யான கவனிப்பு ஆகியவற்றைப் பற்றியதாக உள்ளது.*

*கணவர்களுக்குப் பவுலின் அறிவுறுத்தல்களை வாசியுங்கள்:*

> *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிற தற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்ளவும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகவும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக் கடவன், மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியா யிருக்கக் கடவள் (5:25-33; TM).*

*பவுலின் வார்த்தைகள் பின்வரும் அடிப்படை சத்தியத்தைப் போதிக் கின்றன: ஒரு கணவர் தனது மனைவியை மென்மையாகக் கவனிப்பதற்கு தனது தலைமைத்துவத்தைப் பயன்படுத்துகின்றபோது அவர் கிறிஸ்து வை(ப் பற்றி) தீவிரமாக எடுத்துக் கொள்ளுவதைக் காண்பிக்கின்றார்.*

## மென்மையான கவனிப்புக்குச் சான்றளித்தல்

*கணவராயிருத்தல் என்றால் என்ன? இது ஒரு அன்புமிக்க நடத்துனரா யிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது. வசனம் 25, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் ..." என்று கூறுகின்றது. இது எளிமையான*

*தாக ஒலிக்கின்றது அல்லவா? இன்றைய நாட்களில் நாம் "அன்புகூருதல்" என்ற வார்த்தையைத் தவறாகப் பயன்படுத்துவதுதான் விஷயத்தைச் சிக்கலாக்கி விடுகின்றது. "அன்பு" என்பது அடிக்கடி இணைந்த இழைகளுடன் வருகின்றது: சிலருக்கு அன்பு என்பது அவள் இளமையுடனும் அழகுடனும் இருக்கும் வரைக்கும் அவளை நல்ல முறையில் நடத்தி வருதல் என்றாகின்றது. மற்றவர்களுக்கு, இது அவள் உங்களுக்கு நல்லவளாய் இருக்கும் வரையில் அவளுக்கு நல்லவளாயிருத்தல், பிள்ளைகளுக்காக அவளிடத்தில் மென்மையாயிருத்தல் அல்லது வீட்டைக் கவனிக்கவும் பிள்ளைகளை வளர்க்கவும் அவள் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளுக்குக் கைமாறாக அவளுக்குத் தேவையானவற்றை அளித்தல் என்பதாக உள்ளது.*

*அன்பு என்ற கருத்தைக் குறித்து நாம் விரும்புகின்ற எந்த விளக்கத்தையும் இணைத்துக் கொள்வதற்குப் பவுல் நமக்கு இடம் அளிக்கவில்லை. பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்ததை நாம் புரிந்து கொள்வதற்கு இரண்டு ஒப்புவமைகளை அளித்தார்.*

*பவுலின் முதலாவது, ஒப்பீட்டானது, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (5:25) என்று தெளிவாகக் கூறுகின்றது. கணவர்களும் மனைவியர்களும் கொண்டிருக்க வேண்டிய உறவுக்கான முன்மாதிரியானது கிறிஸ்துவிலும் அவரது சபையிலும் காணப்படுகின்றது. அது ஒரு வல்லமை மிகுந்த உதாரணமாக உள்ளது! எபேசியருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் பவுல், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமிடையே உள்ள வலிவார்ந்த இணைப்பை வலியுறுத்தினார். கிறிஸ்து, சபையின் தலையாக உயர்த்தப்பட்டிருக்கின்றார் (1:22; 4:15). கிறிஸ்து, சபையின்மீது அன்புகூர்ந்து தம்மைத் தாமே அதற்காகக் கையளித்தார் (3:19; 5:2). கிறிஸ்து தமது சொந்த மரணத்தினால் சபைக்கு இரட்சிப்பை வாங்கித் தந்தார் (1:7, 13; 2:5, 6; 2:14-18). அவர் தமது சபையின் தேவைகள் மற்றும் வளர்ச்சி குறித்து அக்கறை மிக்கவராக இருக்கின்றார் (4:11-16), மற்றும் அவர் தமது சபையைச் சேர்ந்தவர்களின் இருதயங்களில் வாசம் பண்ணுகின்றார் (3:17). கிறிஸ்து தமது சபையின் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் தேவையான எல்லாவற்றையும் அளிக்கின்றார் (4:15, 16).*

*இவை யாவற்றையும் பவுல் கூறியிருந்தார். இப்பொழுது, அதிகாரம் 5ல் பவுல், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள நம்புதற்கரிய உறவை, கணவர் தம் மனைவியின் மீது கொண்டிருக்க வேண்டிய அன்புக்கு மாதிரியாகப் பற்றி உயர்த்துகின்றார். இப்படிப்பட்ட ஒரு ஒப்பீட்டைப் பயன்படுத்தப் பவுல் துணிந்தார் என்பது, நான் எனது மனைவியுடனும் நீங்கள் உங்கள் மனைவியுடனும் கொண்டுள்ள உறவின் வழிமுறை பற்றி அவர் எவ்வளவு தீவிரமான அக்கறை கொண்டார் என்பதை சுட்டிக் காண்பிக்கின்றது.*

*அதிகாரம் 5ல் பவுல், சபையின்மீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பின் உறுதிப்பாட்டினுடைய விவரிக்க இயலாத படிநிலைகளை முன் வைத்தார்.*

இது நமக்கு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி புரிந்து கொள்ளும் உணர் வொன்றைத் தருகின்றது.

முதலாவது, கிறிஸ்து சபையின்மீது அன்புகூர்ந்தார். இது நம்மை கடந்த கால நித்தியத்துவத்திற்கு எடுத்துச் செல்லுகின்றது. படைப்புக்கு முன்னதாக, கிறிஸ்து ஏற்கனவே தமது சபையின்மீது அன்பு கூர்ந்திருந்தார். சபையானது தேவனுடைய சிந்தையில் ஒரு எண்ணமாக இருந்த பொழுதே கிறிஸ்து அதன் மீது அன்புகூர்ந்தார்.

இரண்டாவது, கிறிஸ்து சபைக்காகத் தம்மையே கையளித்தார். அவர் சபைக்கு உயிரளிப்பதற்காக பரலோகத்தை விட்டு, பூமிக்கு வந்து, மனிதனாகி, மரித்தார். அவர் ஏதொன்றையும் தமக்காக வைத்துக் கொள்ளா மல், தமக்குரிய எல்லாவற்றையும் (சபைக்காக) ஒப்புக் கொடுத்தார்.

மூன்றாவது, கிறிஸ்து சபையை வசனத்தின் மூலம், தண்ணீர் முழுக் கினால் சுத்திகரித்துப் பரிசுத்தப்படுத்தினார். இதைப் பவுல் தமது சொந்த அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவின் சபைக்கு உரியவராவதற்கு முன்பு, ஒரு பாவியாயிருந்த வேளையில், இரட்சிக்கப்படு வதற்கும், சபையில் இணைக்கப்படுவதற்கும் அவர் செய்ய வேண்டியது என்னவென்று அவருக்குக் கூறப்பட்டது. அவர் பின்வரும் வார்த்தைகளைக் கேட்டார்: "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16). பல நாமகரணக் கூட்டங்களில் இருந்து கிறிஸ்துவின் சபைகளைத் தனியே பிரித்து வைப்பது பின்வரும் நம்பிக்கையே ஆகும்: தேவனுடைய வசனத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வருகின்ற பொழுது, அந்த நபர் இயல்பான தண்ணீரி னால் அல்ல ஆனால் கிறிஸ்துவின் வல்லமையினாலேயே ஆவிக்குரிய முறையில் சுத்திகரிக்கப்படுகின்றார். கிறிஸ்து தமது சபையைச் சுத்தி கரிக்கின்றார்.

நான்காவது, சபையைப் பரிசுத்தமாக்குவதற்கான தமது முயற்சிகளில் கிறிஸ்து, சபையின் மீதான தம்முடைய அன்பைக் காண்பிக்கின்றார். இந்த வினைச் சொல்லின் காலக்குறிப்பானது கிறிஸ்து செய்ய முயற்சிக்கின்ற ஒவ்வொன்றையும் தொகுத்துரைக்கின்றது. அவர், தமது சபையைப் பண்பிலும் நடக்கையிலும் பரிசுத்தப்படுத்த விரும்புகின்றார்: "அவர் செய்கின்ற மற்றும் கூறுகின்ற ஒவ்வொன்றும் சபையினிடத்திலிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக் கொண்டு வருவதற்கானதாகவே உள்ளது" (5:27).

நிறைவாக, கிறிஸ்து தம் சபையை அன்புகூருகின்றார், மற்றும் காலங்களின் முடிவில் அவர் சபையைத் தமக்கென்று கதிர் வீசும் சபையாகத் தம்மிடத்தில் எடுத்துக் கொள்வார். "கதிர் வீசுகின்ற" என்பதற்கான கிரேக்க வார்த்தையான endoxos என்பது, நேரடியான "மகிமையுள்ள" என்று அர்த்தப்படுகின்றது. வேத வசனங்களில் "மகிமையுள்ள" என்பது தேவனு டைய பண்பின் பிரகாசிக்கின்ற, காணக் கூடிய கதிர் வீச்சாக உள்ளது. ஒரு நாளிலே கிறிஸ்துவின் அன்பானது, அவர் தமது சபையை தேவனுடைய அழகின் கதிர் வீச்சைப் பெறும் இடம் வரைக்கும் எடுத்துக் கொண்டு போகச் செய்யும். இன்னொரு அப்போஸ்தலரான யோவான், இது எவ்வாறு

இருக்கும் என்பது பற்றி நமக்குக் குறிப்பு ஒன்றைத் தருகின்றார்:

> பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி. 21:1, 2).

கிறிஸ்து தமது சபையின்மீது கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொள்ள முயற்சித்தல் என்பது நம் அறிவுக்கு அப்பாற்பட்டது. கிறிஸ்து தமது சபையின்மீது கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொள்வதைக் காட்டிலும் உலகத்தின் எல்லாக் கடற்கரைகளிலும் உள்ள மணற்துகள்களை எண்ணிக் கணக்கிடுவதென்பது நமக்குச் சுலபமானதாயிருக்கும். அவரது அன்பு நித்தியத்தின் கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் வரையிலும் மற்றும் நித்தியத்தின் எதிர்காலம் வரையிலும் பரந்து விரிந்து நிற்கின்றது.

புரிந்து கொள்ளப்பட முடியாத இந்த அன்பைக் குறித்து நாம் என்ன செய்கின்றோம்? கணவர்களே, இது நம்மை முழங்காற்படியிடச் செய்ய வேண்டும். நமது திருமணங்கள் எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அப்படியிராமல் நம்மைத் தடுக்கின்ற அழகற்ற மேட்டிமையை நாம் நீக்கிப் போட வேண்டும். நமது மனைவியர்களுக்கு வேலையாட்களாய் இருப்பதினின்று நம்மை தடுக்கின்ற சுயநலத்தை நாம் நீக்கிப் போட வேண்டும்.

எனது மனைவிக்கு ஒரு ஊழிய நடத்துனர்தான் தேவை என்று கிறிஸ்து எனக்குக் காண்பிக்கின்றார். அவளுக்குத் தன்னை நேசிக்கக் கூடிய, எடுப்பதற்கு மாறாக கொடுக்கக் கூடிய, அவளிடத்திலிருந்து மிகச் சிறந்த வற்றை வெளிக் கொண்டு வருவதை நாடக் கூடிய, மற்றும் அவள் தேவனு டைய பிள்ளை என்ற வகையில் தேவன் தம் சித்தத்தில் கொண்டுள்ளபடி அவளுக்காக மாறுவதை விரும்பக் கூடிய ஒருவர் அவளுக்குத் தேவை.

## மென்மையான கவனிப்பை அநுபவித்தல்

நாம் நமது மனைவியரிடம் கொண்டிருக்க வேண்டிய அன்பைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுவதற்குப் பவுல் இரண்டாவது ஒப்பீடு ஒன்றை யளித்தார். இது நமது சொந்த அநுபவத்திலிருந்து வருகின்றது: “அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; … ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்” (5:28, 29அ). என்னை நான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இதிலிருந்து நான் புரிந்து கொள்கின்ற விஷயமாக உள்ளது. எனக்குப் பசி எடுக்கின்ற போது, நான் உணவு உண்ணு

*கின்றேன். நான் களைப்படையும் பொழுது இளைப்பாறுகின்றேன். எனக்குக் காயம் படுகிற பொழுது, எனது வலியைக் குறைக்கக் கூடியவற்றைச் செய்து கொள்ளுகின்றேன்.*

*திருமணம் என்பது மிகவும் அற்புதமானது ஏனென்றால் - நாம் இருவர் ஒரே உடலாகின்றோம்—நான் என் மனைவியை நேசிக்கையில், என் மீதே அன்பை வெளிப்படுத்துகின்றேன். அவள் மீது நான் கொள்கிற அக்கறையானது என் மீது நான் கொள்ளும் அக்கறையாகவும் உள்ளது.*

*என்றால், நாம் நமது மனைவியர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? பின்வரும் பட்டியலானது நாம் தொடங்குவதற்கு உதவக் கூடும். கணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:*

> *உங்கள் நேரத்தைக் கொடுங்கள் ... அவள் உங்கள் முதன்மை யானவளாய் இருக்கிறாள்;*
> *உங்கள் பிரசன்னத்தைக் கொடுங்கள் ... உடல் மற்றும் உணர்வு ரீதியான பிரசன்னம் இரண்டையுமே.*
> *சத்தியத்தைக் கொடுங்கள் ... இல்லத்தில் ஆவிக்குரிய தலைமைத் துவத்தை மேற்கொள்ளுங்கள்; உங்கள் மனைவியும் குடும்பத்தவர் யாவரும் சத்தியத்தைக் கற்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்;*
> *உங்கள் அன்பைக் கொடுங்கள் ... அவளது தேவையைச் சந்திக்க;*
> *உங்கள் ஜெபத்தை கொடுங்கள் ... அவளது மென்மையான கவனிப்புக்காக பிதாவினிடம்;*
> *உங்கள் மன்னிப்பைக் கொடுங்கள் ... உறவை மீளக் கட்டியெழுப்ப;*
> *உங்கள் தலைமைத்துவத்தைக் கொடுங்கள் ... இல்லத்திற்கும் குடும்பத்திற்கும்;*
> *உங்கள் உடமையைக் கொடுங்கள் ... உங்களுக்குள்ள யாவற்றையும் அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.*[2]

## மென்மையான கவனிப்பை நடைமுறைப்படுத்துதல்

*''கீழ்ப்படிதல்'' என்பதே மனைவியர்களுக்கான தேவனுடைய வார்த்தையாக உள்ளது (5:22). ''அன்புகூருங்கள்'' என்பதே கணவர் களுக்கான தேவனுடைய வார்த்தையாக உள்ளது (5:25). உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்: "என்னைக் காட்டிலும் எனது துணையின் மீது நான் மிகுந்த அக்கறை செலுத்துகின்றேனா?"*

*அக்கறையுள்ள கணவர் ஒருவர் ஒருபோதும் தனது மனைவியின் நடக்கையினால் சலிப்படைய மாட்டார். அவள் கொடுக்க இயல்வதை விட அதிகமாக அவர் அவளிடமிருந்து எதிர்பார்க்க மாட்டார், மற்றும் அவர் தமது சுய வழியை வற்புறுத்தாமலிருக்கின்றார்.*

*கிறிஸ்தவத் திருமணத்தில் மென்மையான கவனிப்பு என்பது 1 கொரி. 13:4-8ல் மாதிரிப் படுத்தப்பட்டதாக உள்ளது. இது பொறுமை, இரக்கம் மற்றும் மன்னிப்பு ஆகிய பண்புகளைக் கொண்ட அன்பிலிருந்து வருகின்றது. இது பொறாமையுடையதாகவோ அல்லது கர்வமுடைய தாகவோ இருப்பதில்லை, ஆனால் இது கணவரை எப்பொழுதும் தம்*

*மனைவிக்கு மிகச் சிறந்தவற்றையே நினைக்கும்படி வழிநடத்துகின்றது. இப்படிப்பட்ட அன்பானது ஒருக்காலும் இறவாது.*

*கிறிஸ்துவுக்கும் தமது திருமணத்திற்கும் ஒப்புக்கொடுத்தலுடன் இருக்கின்ற கணவர், தமது மனைவி ஆவிக்குரிய வகையில் வளர்வதைக் காண்பதில் மாபெரும் மகிழ்ச்சியடைகிறார். அவள் தேவன் விரும்பிய படியெல்லாம் இருப்பதற்கு அவர் (கணவர்) உதவுகிறார், மற்றும் அவர் அவளது வாழ்வில் தேவனுடைய திட்டத்தின் மீது நம்பிக்கையுள்ள வராயிருக்கிறார்.*

## *முடிவுரை*

*கணவர்களே, நீங்கள் பரிபூரணப்பட்டவர்களாயிருக்க வேண்டு மென்று தேவன் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் உங்கள் மனைவிக்கு உங்களிடத்திலிருந்து தேவைப்படுகின்ற அன்பு மற்றும் மென்மையான கவனிப்பு ஆகியவற்றைக் காண்பிப்பதற்கு உங்களிடம் உள்ள யாவற்றையும் நீங்கள் தர வேண்டும் என்ற அவர் எதிர்பார்க்கின்றார்.*

*இயேசுவைக் கண்ணோக்குங்கள். அவர் உங்களுக்கு உதவத் தயாரா யிருக்கின்றார். தேவன் விரும்புகின்ற வகையிலான கணவராயிருக்கும் படிக்கு உங்களை மீண்டும் ஒப்புக் கொடுப்பதற்கான ஏன் சற்று நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாது? தேவன் உங்களைப் பலப்படுத்தவும் உங்களுக்கு உதவவும் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார்.*

*“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், ...”*

---

*குறிப்புகள்*

[1]F. LaGard Smith, *What Most Women Want: What Few Women Find* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1992), 7-8. [2]Max Anders, *The Good Life: Living With Meaning in a “Never-Enough” World* (Dallas: Word Publishing, 1993), 191.

# பிள்ளைகளுக்குக் கட்டளை

# (6:1-3)

*கார் அல்லது இரு சக்கர வாகனத்தை ஓட்ட விரும்புகின்றவர்கள், ஓட்டுநர்களுக்குக் கற்றுத் தருகிற பயிற்சிகளுக்காகத் தங்களின் பெயர் களைப் பதிவு செய்து கொள்கின்றனர். அவர்கள் கார்களைப் பற்றியும் போக்குவரத்து விதிகளைப் பற்றியும் மற்றும் சாலைகளில் உண்டாகும் சூழ்நிலைகள் பற்றியும் கற்றுக் கொள்வது அவசியமாகின்றது. ஓட்டுநர் பயிற்சியில், மாணவர்கள் தேர்வுகள் எழுதி, பின்பு உண்மையான ஓட்டுதலின் அனுபவத்தைப் பெறுவதற்காக பயிற்சியாளர் ஒருவருடன் தெருக்களில் வண்டியை ஓட்டிச் செல்வதுண்டு.*

*பயிற்சியாளரிடம் ஒரு நாள் ஒரு மாணவன், "நிறுத்தும்படிக் கூறும் எந்த விளக்குகளிலும் நான் நிறுத்த மாட்டேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் சொல்வதை நான் விரும்ப மாட்டேன். சிவப்பு வண்ணம் எனக்குப் பிடிக்காது. நீங்கள் என்ன சொன்னாலும் நான் கவனிக்கப் போவதில்லை. நிறுத்தும்படிக் கூறும் சிவப்பு வண்ண விளக்குகள் எதிலும் நான் நிறுத்தப் போவதில்லை" என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த மாணவர் ஒரு மோட்டர் வாகனத்தை ஓட்டத் தயாராயிருப்பவரல்ல, ஏனெனில் அவர் பயிற்சியாளருக்கோ அல்லது சட்டத்திற்கோ மரியாதை காட்டக் கற்றுக் கொள்ளவில்லை.*

*வாகனங்களை ஓட்டுவது எப்படி என்று கற்பித்தல் போன்றே - ஆனால் அதைக்காட்டிலும் மிகவும் முக்கியமான வகையில் உள்ளது - பிள்ளைகள் எவ்வாறு வாழ வேண்டும் என்று பெற்றோர் கற்பிக்கும் பணிப் பொறுப்பாகும். பவுலின் பின்வரும் வார்த்தைகளில் இதற்கு நல்லதொரு தொடக்கம் காணப்படுகின்றது:*

> *பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (6:1-4).*

*வெற்றிகரமான பயிற்சி என்பது வேதாகமம் கூறுவதென்ன என்பதை வலியுறுத்துவதைக் கொண்டுதான் தொடங்க வேண்டும். பிள்ளைகளும் பெற்றோர்களும் தேவனுடைய அழைப்பிற்கிணங்க வாழ்வது அவசியம்.*

*பிள்ளைகள் மதிப்புமிக்க வகையில் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் அழைக்கின்றார். பெற்றோர்கள் தேவனுக்கேற்ற வகையில் வழிநடத்த வேண்டுமென்று தேவன் அழைக்கின்றார்.*

இது சுலபமாயிராது என்பதை பிள்ளைகள் மற்றும் பெற்றோர் ஆகிய இருசாராரும், உணர்ந்தறிய வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒரு யுத்தம் நடத்திக் கொண்டுள்ளனர் - இது ஒருவர் மற்றவருக் கெதிரானதல்ல, ஆனால் இது சாத்தானுக்கெதிரான யுத்தமாக உள்ளது. வெற்றி கொள்ளும்படி யுத்தம் செய்யக் கூடிய ஒரே யுக்தியை தேவன் வழங்குகிறார். தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுபவர்கள் வெற்றி பெறலாம் என்று நம்பிக்கையாயிருக்க முடியும். தேவனுடைய திட்டத்தை தீவிரமாய்ப் பின்பற்றாதவர்கள் தோல்வியை எதிர்பார்க்கலாம்.

நம்மில் எவரும் இந்த யுத்தத்தில் தோற்பதை விரும்புவோம் என்று நான் நினைக்கவில்லை, எனவே நாம் இல்லத்திற்கான தேவனுடைய திட்டத்தை நோக்குவோம். இந்தப் பாடத்தில் நாம், பவுல் 6:1-3ல் பிள்ளைகளுக்குக் கூறியதைக் கவனிப்போம். நாம் அதை இவ்வாறு தொகுத்துரைக்க முடியும்: *பிள்ளைகள் மரியாதையுடன் கீழ்ப்படியும்படி தேவன் அழைக்கின்றார்.*

## பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு மரியாதை செலுத்தும்படி தேவன் அழைக்கின்றார்

மரியாதை செலுத்துவதற்கான அவசியம் 6:3ல் வலியுறுத்தப்படுகின்றது: "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக." பிள்ளைகளுக் கான இந்தக் கட்டளை வாழ்நாள் முழுமைக்குமானதாகும். நீங்கள் இன்னு ம் இளையவர்களாயிருந்து, உங்கள் பெற்றோருடன் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அல்லது நீங்களே ஒரு பெற்றோராயிருந்து உங்கள் சொந்தக் குடும்பத்தைக் கொண்டிருந்தாலும், இன்னமும் நீங்கள் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளீர்கள்.

"கனம்பண்ணுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையான *timao* என்பது, "மதிப்புள்ளதாகக் கருதுதல், மதித்தல், பயபக்தி செலுத்துதல்" என்று அர்த்தப்படுகின்றது. இது, யாரேனும் ஒருவரை நீங்கள் உயர்வாக மதிப்பதைச் சுட்டிக் காண்பிக்கும் வகையில் அவரை நடத்துதல் என்று அர்த்தப்படுகின்றது. இது உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்வில் கொண்டுள்ள, தேவனால் நியமிக்கப்பட்ட பணிப் பொறுப்பினிமித்தம் நீங்கள் அவர்களை மதிப்புடன் கண்ணோக்க வேண்டும் என்று அர்த்தப் படுகிறது.

எனது இளம் வயதின் நாட்களில் சில வேளைகளில், விசேஷமாக அவர்கள் என்னை வெளியில் நண்பர்களுடன் சென்று மிட்டாய் வாங்கித் தின்றுகொண்டு திரியாமல், வீட்டில் அமர்ந்து வீட்டுப் பாடத்தைச் செய்ய வேண்டும் என்று கூறிய வேளையில் நான் எனது பெற்றோரை மதிக்க

வேண்டிய பிரகாரம் மதித்ததில்லை. நான் கலக்கமடைந்தேன், ஆனால் நான் எனது தாயையும் தந்தையையும் அன்புகூர்ந்தேன். ஆண்டுகள் சென்ற பொழுது, என் வாழ்வில் அவர்கள் கொண்டுள்ள பணிப்பொறுப்பை அதிகமதிகமாக மதிக்கத் தொடங்கினேன்.

பெற்றோருக்குத் தேவன் நியமித்துள்ள பணிப்பொறுப்பு என்ன? இந்தப் பணிப் பொறுப்பைப் பற்றி நாம் 6:4ல் காண்கின்றோம்: "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்த்தல்." பிள்ளைகளுக்கு தேவபக்தியுள்ள வழிகாட்டிகளாயிருக்கும் அடிப்படைப் பொறுப்பை தேவன் பெற்றோருக்குக் கொடுக்கின்றார். பெற்றோர் அன்றாட - நண்பர்களுடன் வெளியில் சென்று விளையாடுவதற்குப் பதிலாக வீட்டுப் பாடம் செய்ய வேண்டும் என்பது போன்ற - விஷயங் களில் பிள்ளைகளை வழிநடத்துகின்றனர், ஆனால் மிக முக்கியமாக, பெற்றோர்கள் பிள்ளைகளைத் தேவனிடத்திற்கு வழிநடத்துகின்றனர்.

> அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி,
> இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து,
> அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி
> நம்முடைய பிதாக்களுக்கு கட்டளையிட்டார்.
> இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின் சந்ததியார் அதை அறிந்து
> கொண்டு,
> அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச்
> சொல்லும்படிக்கு;
> தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து,
> தேவனுடைய செயல்களை மறவாமல்,
> அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும் ...
> இவைகளைக் கட்டளையிட்டார் (சங். 78:5-7).

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை ஏன் மதிக்க வேண்டும்? ஏனென் றால் தேவன் பெற்றோரைத் தமக்காகப் பேசுபவராக, தம் வரலாற்றின் செய்தியாளராக, மற்றும் தேவனுடைய கட்டளைகளைப் போதிப்பவராகக் காண்கின்றார்.

நமது பெற்றோர்கள் தங்களின் கைகளில் விசுவாசத்தின் தடியைக் கொண்டிருப்பதாலும், அதை நமக்குக் கையளிக்கும் பணிப் பொறுப்பைத் தேவன் அவர்களிடம் தந்துள்ளதாலும், நாம் நமது பெற்றோரை கனப் படுத்தி, மதிக்கின்றோம். பெற்றோர்கள் எப்பொழுதுமே அந்தப் பொறுப்புக் கேற்றபடி வாழ்வதில்லை. சில வேளைகளில் அவர்கள் அந்தத் தடியைக் கீழே போட்டு விடுகின்றனர், எனவே அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் பெற்றோரைக் கனப்படுத்துவதின் மூலமாக தேவனைக் கனப்படுத்துங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அதைச் செய்யுங்கள்.

சில இளமைப் பருவத்தினரும், சில வயது வந்த பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களை ஜன்னலில் உள்ள தூசியைப் போன்று நடத்துகின்றனர். தூசிக்கு மிகச் சிறிய அளவுதான் மதிப்புள்ளது; அது ஒரு தொந்தரவாகவும்

*கண்ணுக்கு உறுத்துதலாகவும் உள்ளது. நாம் நமது பெற்றோரிடம் இவ்வகையான எண்ணப்போக்கு கொண்டிருக்கக் கூடாது என்று பவுல் நம்மை எச்சரிக்கின்றார். பெற்றோரை ஒரு தொந்தரவாக நினைக்கின்ற எந்தப் பிள்ளையும் வாழ்வில் அதிகமானவற்றைப் பெற்றுக் கொள்வ தில்லை. வேதாகமம், "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக ..." (6:2, 3) என்று கூறுகின்றது.*

*நம் பெற்றோரைக் கனப்படுத்துவதற்குப் பவுல் இரண்டு நல்ல காரணங்களைக் கொடுத்தார். முதலாவது, "உனக்கு நன்மை உண்டாயிருப் பதற்கும்." "நன்மை" என்பதற்கான கிரேக்க வார்த்தை eu என்ற மிகச் சிறிய வார்த்தையாகும். இது நமது ஆங்கில வார்த்தையான* "eulogy" *- ஒருவரைப் பற்றிய நல்ல வார்த்தைகள் - என்பதில் தோன்றுகின்றது. பவுலின் நாட்களில் இந்தச் சிறிய வார்த்தையானது ஒருவருக்கு வணக்கம் தெரிவிக்கவும் ''நன்கு செய்தீர்கள்! மிகவும் நன்று!'' என்று கூறவும் பயன்படுத்தப்பட்டது. நீங்கள் உங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்தும் போது, தேவன் உங்களிடத்தில் "நன்கு செய்தீர்கள்! மிகவும் நன்று!" என்று கூறுவதை அறிய முடியும்.*

*உங்கள் பெற்றோரைக் கனப்படுத்துவதற்கான இன்னொரு நல்ல காரணம் பின்வரும் வார்த்தைகளில் காணப்படுகின்றது: "பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்.'' இதை கேரி ஸ்மால்லியும் ஜான் ட்ரெண்ட்டும் எவ்வாறு விவரித்துள்ளனர் என்று பாருங்கள்:*

> *உண்மையாகவே தங்கள் பெற்றோரைக் கனம் பண்ணுகின்றவர் கள் ஜீவனைப் பெறுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்துள் ளார்! இது எவ்வாறாகும்? அநேக வைத்தியர்களையோ, ஆலோசனை யாளர்களையோ அல்லது [ஊழியர்களையோ] கேளுங்கள். அவர்கள் தங்கள் அலுவலகங்களில், பெற்றோர்களைக் கனப்படுத்தாதபடியி னால் தங்கள் வாழ்வில் அடித்து நொறுக்கப்பட்டு, அதன் விளைவாகத் தங்கள் பலம் யாவையும் வடிந்து போன நிலையிலிருக்கும் பலரைக் கண்டுள்ளனர்.*
>
> *... கோபம், கசப்பு அல்லது வெறுப்புணர்வு ஆகியவற்றின் காரணத்தினால், மனிதர்கள் தங்கள் பெற்றோர்களை வெறுக்க அல்லது கனப்படுத்தாதிருக்கத் தேர்ந்து கொள்கின்ற பொழுது, அவர்கள் ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான, மற்றும் சரீரப்பிரகார மான விலையைச் செலுத்துகின்றனர்.*[1]

*நீங்கள் உங்கள் பெற்றோரைக் கனப்படுத்தும் பொழுது, நீங்கள் அவர்களின்மீது உயர்வான மதிப்பை வைக்கின்றீர்கள். இப்படிப்பட்ட ஒரு எண்ணப்போக்கானது இந்தப் பூமியில் உங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தும் என்று தேவன் கூறுகின்றார்.*

*பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை எவ்வாறு கனப்படுத்த முடியும்? இன்னமும் தங்கள் பெற்றோருடன் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்குப் பின்வரும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

1. தேவன் உங்கள் பெற்றோருக்கு அளித்துள்ள பணிப்பொறுப்பை மதியுங்கள். அவர்கள் உண்மையாகவே உங்கள் நன்மைக்காக தேவன் அருளிய கொடைகளாயிருக்கின்றனர்.

2. வாழ்வை அவர்களின் கண்ணோக்கிலிருந்து காண முயற்சி செய்யுங்கள். அவர்கள் அன்றாடம் வாழ்வில் எதிர்கொள்ளுகின்ற அழுத்தங் களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் தங்கள் சிந்தையில் கொண்டிருக்கக் கூடிய யாவற்றையும் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தந்தை செய்கின்ற கடினமான வேலையை அல்லது உங்கள் தாயார் சில வேளை களில் உணர்கின்ற தனிமையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் பெற்றோர் கொண்டுள்ள தேவைகளில் சிலவற்றைக் கண்ணோக்கி அவற்றைச் சந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

3. உங்கள் பெற்றோரின் அறிவுரையைக் கேளுங்கள். இதற்கு எதிரான செயலைச் செய்யவே பெரும்பாலான இளம் வயதினர் விரும்புகின்றனர் என்று நான் அறிவேன், ஆனால் பிறருடைய அறிவுரையை மனப்பூர்வமாய் நாட விரும்புவதுதான் பக்குவமடைந்த நிலையின் அடையாளமாக உள்ளது. உங்கள் பெற்றோர் அதை அறிவார்கள், மற்றும் நீங்கள் கேட்பதற் காக உங்களை மதிப்பார்கள்.

4. உங்கள் பெற்றோருக்கு பாராட்டுதலைக் காண்பியுங்கள். அவர்களுக்காக உணவு தயாரித்துக் கொடுங்கள். அவர்களின் பாரத்தைக் குறைக்கும் வகையில் சில செயல்களைச் செய்யுங்கள். நீங்கள் செய்கின்ற செயலில் இருந்து அவர்கள் உங்களுக்கு எவ்வளவாக அர்த்தப்படுகின்றனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

5. அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் பெற்றோருக்காக நீங்கள் ஜெபிக்கின்றீர்களா? அதை நீங்கள் தொடர்ந்து செய்தால், அது தேவனைப் புன்முறுவல் பூக்கச் செய்யும் என்று நான் அறிவேன்.

6. உங்கள் பெற்றோரிடத்தில் அவர்களை நேசிப்பதாகக் கூறுங்கள். உங்கள் தாயையோ அல்லது தகப்பனையோ நீங்கள் எவ்வளவு நாட்களுக்கு முன்பாக கட்டிப்பிடித்து ‘‘உங்களை நான் நேசிக்கின்றேன்’’ என்று கூறினீர்கள்?

வயது வந்த பிள்ளைகளாயிருப்பவர்களுக்கு ஆலோசனை என்ன வென்றால், உங்கள் பெற்றோர் உங்களுடன் இருக்கையில் அவர்களைக் கனப்படுத்த வழிகளைக் கண்டறியுங்கள். அவர்களின் முதிர் வயதில் அவர்களைக் கனப்படுத்தி கவனித்துக் கொள்ளுங்கள். இது, அவர்கள் தங்கள் வாழ்வை முடிக்கும் வரையிலும் அவர்கள் உங்களைப் பிள்ளை யாகப் பெறாதிருந்தது போன்று நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விடக் கூடாது என்று அர்த்தப்படுத்துகின்றது. அவர்களைக் கனப்படுத்தவும் அதை உறுதிபடுத்தவும் வழிகளைக் கண்டறியுங்கள். அவர்கள் உங்களை விட்டுச் சென்ற பிறகு அவர்களை நீங்கள் கனப்படுத்துவது போல இப்பொழுதும் கனப்படுத்துங்கள். ‘‘உன் தகப்பனையும் உன் தாயையும் கனப் படுத்துவாயாக.’’

# பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும்படி தேவன் அழைக்கின்றார்

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங் கள், இது நியாயம்" (6:1). "கீழ்ப்படியுங்கள்" (கிரேக்கம்: hupakouo) என்பது இரண்டு கருத்துக்களின் இணைப்பாக உள்ளது: "கேட்க" மற்றும் "கீழா யிருக்க." "கீழ்ப்படிய" என்பது நேர்மறையான அர்த்தத்தில் "கேட்டுக் கீழ்ப் படிதல்" என்று அர்த்தப்படுகின்றது. இது, இன்னொருவரின் அதிகாரத்தின் கீழ் இருப்பவர், அந்த அதிகாரி என்ன கூறுகின்றாரோ அதைக் கேட்டு கடைப்பிடிப்பது அவசியம் என்ற யூகத்தைத் தருகின்றது.*

*நீதிமொழிகள் 13:1, "ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்'' என்று கூறுகிறது. வேதாகமம் கீழ்ப்படிதலைப் போதிக் கின்றது, ஆனால் இது இன்றைய நாட்களில் பிரபலமான கருத்தாக இருப்ப தில்லை. இதற்கு நேர்மாறானதைச் செய்யும்படிக்கு நமது கலாச்சாரம் நம்மை வற்புறுத்துகின்றது: "உங்கள் பெற்றோர் கூறுவதைக் கவனிக்க வேண்டாம்''; ''அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை."*

*நான் இவ்விதமாக நினைத்ததுண்டு. ''நான் பதினான்கு வயதுப் பையனாக இருந்த போது, எனது தந்தை இந்த உலகில் வாழ்ந்தவர் களிலேயே புத்தியீனமான மனிதர் என்று நான் நினைத்ததுண்டு, ஆனால் எனக்கு இருபது வயதான பொழுது அந்த ஏழு ஆண்டுகளில் அவர் எவ்வளவு அதிகமாய்க் கற்றிருந்தார் என்று பெரு வியப்படைந்தேன்" என்று கூறிய மார்க் ட்வைன் என்பவருடன் என்னை நான் அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். மார்க் ட்வைன் கடைசியில் தனது தந்தை எப்பொழுதுமே எவ்வளவு அதிகமான ஞானத்தைக் கொண்டிருந்தார் என்று தனது நகைச்சுவையான பாணியில்தான் கூறினார்.*

*தேவன் மிகத் தெளிவானவராயிருக்கின்றார். அவர் தமது பிள்ளைகளுக் கான தமது திட்டமானது தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதை விரும்புவதில்லை: "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.'' சில வேளைகளில் நீங்கள் உங்கள் பெற்றோரின் அறிவுறுத்துதல்களை புரிந்து கொள்ளாமலோ அல்லது ஒப்புக் கொள்ளாமலோ கூட இருக்கலாம். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.*

*நிக்கொல் தனது தோழி பெக்கியுடன் தனது வீட்டிற்குள் நுழைந்தாள். நிக்கொலின் தாயார் அவளைப் பார்த்து, "நிக்கொல், இப்போதே மாடிக்குப் போ! நீ உன் அறையை ஒரு குப்பைக் காடாக்கி விட்டுச் சென்றுள்ளாய்" என்று கூறினாள்.*

*"மன்னியுங்கள் அம்மா, நான் அதை சுத்தம் செய்து விடுவேன்."*

*நிக்கொலும் பெக்கியும் மாடிக்குச் சென்றனர். பெக்கி, ''உங்கள் அம்மாவுக்கு என்ன ஆயிற்று? நீ எப்படி அவளை வாயை மூடும்படி ஏதேனு ம் வார்த்தை சொல்லாமல் வந்தாய்? என் அம்மா வந்து இப்படி என் தோழிகளில் ஒருத்தியின் முன்னிலையில் இவ்வாறு கூறியிருந்தால், நான்*

*பதிலுக்கு நன்கு திட்டியிருப்பேன்!" என்று கூறினாள்.*

*நிக்கொல் சில துணிகளை எடுத்து மடித்துக் கொண்டே, "பெக்கி, இது நானே வரவழைத்துக் கொண்டது தானே. நான் என் அம்மாவிடம், இன்று காலை வெளியே கிளம்பு முன் என் அறையைச் சுத்தம் செய்து விடுவதாகக் கூறியிருந்தேன். அவள் கூறியது சரியே. அத்துடன், அவளுக்கு இன்று முழுவதும் எதுவுமே சரியில்லை" என்று கூறினாள். இதுதான் பெற்றோரைக் கனப்படுத்துவதாகும்.*

*இல்லத்திற்கான தேவனுடைய திட்டத்தைப் புறக்கணிப்பதும் ஒரு பிள்ளை என்ற வகையில் தேவன் உங்களிடம் எதிர்பார்ப்பதை மறுத்து உங்கள் பெற்றோரிடம் யுத்தத்தை அறிவிப்பதும் ஒரு பரிதாபமான வாழ்க்கையைப் பெறுவதற்கான வழிமுறையாக உள்ளது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் சுயநலத்துடன் இருப்பதென்று முடிவு செய்தால், உங்கள் இல்லமானது மிகவும் மகிழ்ச்சியற்ற இடமாகி விடும். இதற்கு மாறாக, நீங்கள் சாத்தியக் கூறுள்ள மிகச் சிறந்த வகையிலான இல்ல வாழ்வைப் பெற்றுக் கொள்வதென்று விரும்பினால், தேவனுடைய திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்குங்கள்.*

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங் கள்" என்ற கட்டளை - இளைய மற்றும் வயது வந்த - எல்லாப் பிள்ளை களுக்கும் அவர்கள் வீட்டில் (பெற்றோருடன் சேர்ந்து) இருக்கும் வரைக்கும் அவர்களுக்குக் குறிக்கப்பட்டதாக உள்ளது. தேவன் உங்களை, உங்கள் பெற்றோருடன் எதிர்த்துப் பேசிக் கொண்டிராமல், புலம்பிக் கொண்டிரா மல் ஆனால் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களை மதித்து நடக்கும்படி அழைக்கின்றார்.*

*இயேசுவைப் பற்றி வேதாகமம் கூறுவதென்ன என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். அவருக்குப் பன்னிரு வயதான போது, "அவர் அவர்களுடனே (அவரது பெற்றோருடன்) கூடப் போய், நாசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக் குக் கீழ்ப்படிந்திருந்தார்" (லூக். 2:51). ஒரு வேளை அவர், "இயேசு, உன் அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்"; "இயேசு, உனது வீட்டு வேலை யைச் செய்"; "இயேசு, பள்ளியில் நன்றாய்ப் படிக்க வேண்டும்"; "இயேசு, படுக்கைக்கு செல்"; "இயேசு, மக்களிடம் இரக்கத்துடன் நடந்து கொள், பெரியவர்களுக்கு மரியாதையை காண்பி" என்றெல்லாம் கேட்டிருக்கக் கூடும். இயேசு ஒரு குழந்தையாயிருந்தார் என்பதை நாம் மறந்து விட்டோம் என்று நான் நினைக்கின்றேன். அவர் பெற்றோர்களைக் கொண்டிருந்தார், மற்றும் தமது சுய அடையாளம், பாணி ஆகியவற்றின் மேம்பாட்டுப் படிநிலைகளினூடாகக் கடந்து சென்றார் - ஆனால் இவற்றையெல்லாம் இயேசு, மரியாதையுடனும் கீழ்ப்படிதலுடனும் செய்தார்.*

*இளம் மக்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்கு நான் மூன்று கேள்விகளைக் கேட்க அனுமதியுங்கள்.*

*1. நீங்கள் கீழ்ப்படிதலினால் உங்கள் இல்லத்தில் இசைவை மேம்படுத்து கின்றீர்களா, அல்லது உங்கள் ஒத்துழைப்புக் குறைவினாலும் கீழ்ப்படியா மையினாலும் உங்கள் இல்லத்தில் கலகம் உண்டாக்கிக் கொண்டிருக் கின்றீர்களா?*

*2. உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிகின்றீர்களா, அல்லது உங்களால் இயன்ற அளவுக்குப் புறம்பே செல்ல முயற்சி செய்கின்றீர்களா?*

*3. உங்கள் பெற்றோரை எவ்வாறு நடத்துகின்றீர்கள் என்ற யுத்தத்தில் வெல்லுவது யார் - சாத்தானா அல்லது கர்த்தரா?*

## முடிவுரை

*வாழத் தயாரிக்கும்படியாகத் தேவன் பெற்றோருக்குப் பிள்ளைகளைக் கொடுக்கின்றார். பிள்ளையைப் பொறுத்தமட்டில் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் இருத்தல் என்பது அவனது வாழ்வில் செய்யக் கூடிய மாபெரும் தவறாக உள்ளது. அது ஒருவேளை மிகப் பெரியதாகக் காணப்படாதிருக்கலாம், ஆனால் அது பெற்றோருக்கு எதிராகச் செல்லுமென்றால், அது தேவனுடைய வசனத்திற்கு எதிராகவும், தேவனுக்கு எதிராகவும் செல்வதாக உள்ளது.*

*சில வேளைகளில் பெற்றோர் நியாயமாக இருப்பதில்லை. அதைப் பற்றி நாம் அடுத்த பாடத்தில் பேசுவோம். இருப்பினும், அப்பொழுதும் கூட, பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்தி அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றுதான் தேவன் அழைக்கின்றார். தவறான நடத்தையைத் தேவன் பார்த்துக் கொள்ளட்டும். நீங்கள் உங்கள் நடக்கையில் கவனமாயிருங்கள்.*

*தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றுவது என்பதுதான் மகிழ்வான இல்லத்தைப் பெற்றிருப்பதற்கு ஒரே நம்பிக்கையின் வழியாக உள்ளது. தேவன் ஒருவரே அந்த நம்பிக்கை. அந்த வழியை அவருடைய வசனமே நமக்குக் காண்பிக்கின்றது.*

---

*குறிப்பு*

[1]Gary Smalley and John Trent, *The Blessing* (Nashville, Tenn.: Thomas Nelson Publishers, 1986), 203.

# தந்தையர்களுக்குத் தேவனுடைய வார்த்தை (6:4)

*1800களின் போது, அமெரிக்க எல்லைப் பகுதிகளில் தங்களின் உரிமை கோருதல்களை ஏற்படுத்துவதற்காகப் பல குடும்பங்கள் தங்களின் இல்லங்களை விட்டு மேற்கு நோக்கிப் பயணப்பட்டன. இந்த முன்னோடிக் குடும்பங்கள் பெரும்பாலும் சரக்கு இரயில்களில் ஒன்றுகூடிப் பயணப் பட்டன. எந்த ஒரு சரக்கு இரயிலிலும் சாரணர் என்பவர் முக்கியமான வராயிருப்பார். அவர் சூழ்நிலையை ஆராய்வதற்காக சில வேளைகளில் ஓரிரு நாட்கள் இரயிலுக்கு முன்னதாகவே சென்று விடுவார். அவர் இந்தியர்களை (செவ்விந்தியர்களை) கவனிப்பார். அவர் தண்ணீர் இருக்கும் துளைகளைக் கவனித்து, ஆறுகளைக் கடக்க மிகச் சிறந்த இடங்களைக் கண்டறிவார். அச்சுறுத்தும் தட்பவெப்ப சூழ்நிலைகள் ஏதேனும் உள்ளதா என்று காண்பதற்காக அவர் ஆகாயத்தை கண்ணோக்கி ஆராய்வார். வரக்கூடிய ஆபத்துக்களை சுட்டிக்காட்டுதல், எதிரிகள் வருகின்றனரா என்று கவனத்துடன் பார்த்தல், மற்றும் சரக்கு இரயிலானது செல்வதற்கு மிகவும் பாதுகாப்பான வழியைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை சரக்கு இரயில் சாரணரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.[1]*

*ஒரு கருத்தமைவில், தந்தையர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இந்த சரக்கு இரயில் சாரணர்களைப் போலப் பணியாற்றுகின்றனர். நீங்கள் ஒரு தகப்பன் என்ற வகையில் உங்கள் குடும்பத்தை வாழ்வு முழுவதும் எடுத்துச் செல்லுகின்றீர்கள், உங்கள் மனைவிக்குத் தலையாயிருந்து உங்கள் பிள்ளைகள் தங்கள் சொந்த வாழ்க்கையை நடத்தத் தேவையானவற்றை அளிக்கின்றீர்கள். உங்கள் பணிப் பொறுப்பு தேவனை நோக்கிய திசையில் உங்கள் முழுக் குடும்பத்தையும் - அப்பா, அம்மா, மற்றும் பிள்ளைகள் ஆகிய அனைவரையும் - காத்துக் கொள்வதை உள்ளடக்கியிருக்கின்றது.*

*உங்கள் குடும்பம் ஒரு சரக்கு இரயிலில் செல்லுகின்றதாகச் சித்தரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பயணம் செய்கின்ற எல்லைப் பகுதி மிகவும் அபாயம் உள்ள பகுதியாகும். எதிரிகள் தாக்குவதற்குத் தயாராக உங்களைச் சுற்றிச் சூழ்ந்துள்ளனர். சுற்றுச் சூழல் மிகவும் கடுமையானதாக உள்ளது. எதிர்பாராத அச்சுறுத்தல்கள் ஒவ்வொரு வளைவிலும் சுற்றிச் சூழ்ந்துள்ளன. அவையெல்லாவற்றையும் கடந்து செல்வதற்கு உங்கள் குடும்பம் உங்களைத் தான் நம்பியிருக்கின்றது. அவர்கள் உங்களை சாரணராகப் பார்க்கின்றனர்.*

*செல்லும் வேகத்தை அமைக்கவும் செல்லும் திசையைத் தீர்மானிக்கவும் அவர்கள் உங்கள் முடிவுகளையே சார்ந்துள்ளனர். எல்லாப் பேரழிவுகளை யும் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.*

*பவுல், 6:4ல் இல்லத்தில் தந்தையின் தலைமைத்துவத்தை எடுத்துரைத் தார்: "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர் களாக." இந்த வசனப் பகுதியின் அத்தியாவசியமான சத்தியம் பின்வருமாறு: தந்தையர்கள் தங்கள் இல்லங்களில் தேவபக்தியுள்ள வழிநடத்துதலைச் செய்யும்படி தேவன் அழைக்கின்றார்.*

*நீங்கள் ஒரு தனியார் வியாபாரத்திலோ அல்லது தபால் சேவையிலோ பணியாற்றலாம். நீங்கள் சுய வேலை வாய்ப்புடையவராக இருக்கலாம். உங்கள் குடும்பத்தின் மேற்கூரைக்காகவும், உணவுக்காகவும் நீங்கள் ஏதேனும் வேலை செய்யலாம், ஆனால் அது உங்களின் முக்கியமான பணியல்ல! ஒவ்வொரு வாரமும் நீங்கள் செய்யும் வேலைக்குக் கொடுக்கப் படுவது உங்களின் முக்கியமான பணியல்ல. உங்கள் குடும்பம்தான் உங்களின் முக்கியமான பணியாக உள்ளது! அவர்களை வழிநடத்தும் பணிப் பொறுப்பைத் தேவன் உங்களிடம் தந்துள்ளார். அவர்களுக்காகத் தேவன் நியமித்துள்ள அடைவிடத்தை அவர்கள் பத்திரமாய் சென்றடையும் படி அவர்களை அபாயகரமான எல்லைப் பகுதிகளில் நீங்கள் ஜாக்கிரதை யாய் நடத்திச் செல்ல வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார். அதை அவர்களுக்காக அவர் ஆயத்தப்படுத்தி வைத்துள்ளார். இந்தப் பணியைச் செய்து முடிக்க தேவனுடைய வசனம் நமக்குத் தருகின்ற உட்கண் ணோட்டங்கள் யாவை? வசனம் 4ல் பவுல், தந்தையர்களுக்கு எதிர்மறை மற்றும் நேர்மறையான அறிவுறுத்தல்களைத் தந்தார்.*

## உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதீர்கள்

*பவுல், "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தா மல்" (6:4அ) என்று கூறினார். "கோபப்படுத்துதல்" (கிரேக்கம்: parorgizomai) என்ற வார்த்தையானது "கோபத்தைத் தூண்டுதல், கோபத்தை, கசப் புணர்வை எழுப்புதல்" என்று அர்த்தப்படுகின்றது. இது, நமது பிள்ளைகள் வெறுப்புணர்வினால் கொதிக்குமளவுக்கு அவர்களைக் கோபப்படுத்துதல் என்பதாக உள்ளது. இது நடக்கும் போது, அவர்கள் நம்மைக் கவனிப்பதை நிறுத்தி விடுகின்றனர். அவர்கள் நமது நடத்துவத்தைப் பின்பற்றுவதை நிறுத்தி விடுகின்றனர். மக்கள் தங்களுக்காகத் தேவன் தேர்ந்தெடுத்துள்ள நடத்துனர்களைப் பின்பற்றுவதை நிறுத்தி விடுகின்ற போது இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. நாம் எல்லைக் கோட்டைக் கடந்து சென்று நமது பிள்ளைகள் வெறுப்படையும் அளவுக்கு அவர்களை எரிச்சலூட்டும் சில வழிகள் யாவை?*

*1. அளவுக்கு அதிகமான பாதுகாப்பு. நாம் நமது பிள்ளைகள் அளவுக்கு மீறி அன்பைப் பொழிந்து அவர்களுக்கு மூச்சு முட்டச் செய்யக் கூடும்.*

இதை நாம் அவர்கள் தங்கள் சுயசாதனைகளை ஆராய்ந்து செய்ய ஒருக்காலும் அனுமதிக்காதபோது செய்கின்றோம். அவர்கள் ஒருக்காலும் சுதந்திரமாய்ச் செயல்படாதபடியும் விஷயங்களை எவ்வாறு சுயாதீனமாகக் கையாள்வது என்று கற்றுக் கொள்ள அவர்களுக்கு வழியை அனுமதிக் காமலும் நாம் அவர்கள் மீதான நமது கட்டுப்பாடுகளினால் மிகவும் குறுக்கி வைத்துக் கொள்ள முடியும்.

2. பட்சபாதம். குடும்பத்தில் உள்ள பல்வேறு பிள்ளைகளின் ஆர்வம், அக்கறை அல்லது ஈடுபாடு ஆகியவற்றில் நாம் சமநிலையில் இல்லாத வேளையில் பட்சபாதம் காண்பிக்கின்றவர்களாகிறோம். யோசேப்பு, அவரது தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் ஆகியோரின் வரலாற்றைப் படித்துப் பாருங்கள். பட்சபாதத்தினால் அவர்கள் பெற்றிருந்த போராட்டங்களைக் கவனியுங்கள்.

3. உற்சாகம் இழக்கச் செய்தல். "நீ எதையும் உருப்படியாகச் செய்ய மாட்டாய்" அல்லது "நீ எதையும் சரியாகச் செய்ய இயலாது" என்பது போன்ற சிந்தனைகள் தந்தையிடம் இருப்பதாக அல்லது அவ்விதமான வார்த்தைகளை தந்தையிடமிருந்து ஒரு பிள்ளை கேட்பதாக ஒருக்காலும் நேரக் கூடாது.

4. படியெடுத்தல். தந்தையர்கள் ஒவ்வொரு பிள்ளையையும் ஒரே மாதிரி உருவாக்க முயற்சி செய்யக் கூடாது. நாம் நமது சிந்தையில் கொண்டுள்ள அச்சில் அவர்களைப் பிழிந்து வார்க்க முயற்சி செய்யக் கூடாது. பிள்ளைகள் தங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்குச் சுதந்திரம் தேவைப்படுகின்றது.

5. புறக்கணித்தல். பின்வருமாறு எழுதும் பொழுது இராபர்ட் கோல்ஸ் அவர்கள் தமது இலக்கில் இருந்தார்:

> அமெரிக்காவில் உள்ள பிள்ளைகளுக்கு ஒழுக்க நோக்கம் ஒன்று மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறதென்றே நான் நினைக்கின் றேன். அவர்களைச் சரியான கல்லூரிகளில் சேர்க்கவும், அவர்களுக்கு மிகச் சிறந்த உடைகளை வாங்கித் தரவும், அயலகத்தில் நேர்த்தியான மற்றும் செல்வாக்குள்ள வாழ்வை வாழும்படி செய்து அங்கு அவர்கள் மிகச் சிறந்த பொம்மைகளைப் பெற்றுக் கொள்ளவும் உற்சாகமான வகையில் விடுமுறையைக் கழிக்கவும் மற்றும் பலவகையானவற்றைப் பெறவும் வாய்ப்புக்களைத் தரவும் அவர்கள் பெற்றோர்களைக் கொண்டுள்ளனர் ... இந்த நாட்களில் பெற்றோர்கள் மிகவும் கடினமாக உழைக்கின்றனர்; மற்றும் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்ததென்று தாங்கள் உணருகின்றவைகளை வாங்கித் தருகின்றனர். இருப்பினும் மிகச் சிறந்த விஷயம் அதிகமாக நடை பெறுவதில்லை. அவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் குறைந்தபட்சம் அதிக நேரம் செலவிடுவதில்லை.[2]

6. கொடுமை. தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளிடம் கொடுமையாக நடந்து கொள்ளவோ அல்லது, தங்கள் சொந்த கோபம் அல்லது கசப்பு அல்லது வெறுப்பை அவர்கள் மீது சுமத்தவோ உரிமை கொண்டிருப்ப

தில்லை. (தங்கள் பிள்ளைகளைத்) தவறாக நடத்துபவர்களில் பெரும்பாலா னோர் ஒரு காலத்தில் தவறாக நடத்தப்பட்டவர்களாகவே உள்ளனர், ஆனால் கிறிஸ்தவத் தந்தை இப்படிப்பட்ட சுழற்சியைத் தொடர அனு மதிப்பவராயிருக்கக் கூடாது.

தந்தையர்கள் நியாயமாக நடந்து கொள்ளுதலைச் சோதனையிடுகை யில் தவறி விடுவதும் மற்றும் நமது பிள்ளைகளைக் கோபப்படுத்துவதுமான செயல்களைத் தவிர்த்து விட வேண்டும். சில வேளைகளில் எனது பிள்ளைகளை என்னிடத்தில், "நீங்கள் நியாயமாக நடந்து கொள்வதில்லை" என்று கூறுவது உண்டு. சில வேளைகளில் அவர்கள் கூறுவது சரியாகவே இருக்கின்றது; நான் நியாயமாயிருப்பதில்லை. தேவன் என்னிடத்தி லிருந்தும் ஒவ்வொரு தந்தையிடத்திலிருந்தும் அதிகமானவற்றை எதிர் பார்க்கிறார்.

## உங்கள் பிள்ளைகளை வழிநடத்துங்கள்

மூன்று கால்களுள்ள முக்காலியொன்றைப் பற்றி ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அது (சரியாக) நிற்பதற்கு மூன்று கால்களும் தேவைப்படுகின்றது. அதில் ஒரு காலை எடுத்து விட்டால், அது சரியாக நிற்க முடியாது. உங்கள் பிள்ளைகளை வழிநடத்துவதற்குப் பவுல் மூன்று கூறுகளைக் குறிப்பிட்டுள்ளார். தந்தையின் தலைமைத்துவம் வெற்றிகர மாவதற்கு இந்த மூன்று கூறுகளும் தேவைப்படுகின்றன.

1. மென்மைத் தன்மை. இந்தக் கருத்தானது "வளர்ப்பீர்களாக" (கிரேக்கம்: ektrepho) என்ற சொற்றொடரில் காணப்படுகின்றது. நேர்ப் பொருளில் இது "பக்குவமடையும்படி போஷித்தல், வளமூட்டுதல், வளர்த்தல், வளர்வித்தல் அல்லது மென்மையான கவனிப்புடன் தேவை யானவற்றை அளித்தல்" என்று அர்த்தப்படுகின்றது. தேவபக்தியுள்ள தந்தையர்கள் மென்மையான மனிதர்களாக உள்ளனர். ஆலன் லாய் மெக்கின்ஸ் அவர்கள், "உறவுமுறைகள் என்பவை இரக்கம் என்ற அடுக்குப் பாளங்களைக் கொண்டு நேர்த்தியான ஒரு பளபளப்புப் பூச்சு போன்று கட்டியெழுப்பப்படுகின்றன" என்று கூறினார்.[3]

தந்தையர்களே, உங்கள் பிள்ளைகளை வழிநடத்துவதற்கு நீங்கள் மென்மை மற்றும் இரக்கம் ஆகியவற்றில் நன்கு தேர்ச்சியடைய வேண்டும். நாம் எவ்வாறு மென்மைத் தன்மையை மேம்படுத்திக் கொள்ள முடியும்?

(1) உங்கள் பிள்ளைகள் கூறுவதை கவனியுங்கள், அவர்களின் உணர்வு களை நீங்கள் மதிப்பதை அவர்கள் அறிய அனுமதியுங்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை மதிப்பதை அவர்கள் அறிய அனுமதியுங்கள்.

(2) நீங்கள் தவறு செய்யும் போது அல்லது மிகவும் கடுமையாக நடந்து கொள்ளும் போது அதை அறிக்கையிட்டு அவர்களின் மன்னிப்பைக் கேட்பதற்குப் போதிய அளவு பெரிய(மனமுள்ள)வராயிருங்கள்.

(3) தொடக்கூடியவராயிருங்கள் - அணைப்புகளில் தாராளமா யிருங்கள்.

(4) பிள்ளைகளை உறுதிப்படுத்துங்கள்; அவர்களின் முயற்சிகளில்

*அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.*

*(5) நீங்கள் உங்கள் பிள்ளைகளை நடத்தும் விதம் பற்றி உங்கள் துணை (கணவர்/மனைவி) தரும் கருத்துக்களைக் கவனியுங்கள்.[4]*

*மென்மையான தலைவர்களாய் இருக்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார், அது மனிதத்துவமல்லாதது அல்ல. மனிதர்கள் தங்கள் பிள்ளைகளைப் பேணிக்காக்கும் போது அவர்கள் தங்களுக்குத் தேவன் அர்த்தப்படுத்துவதின்படி இருக்கின்றனர்.*

*2. ஒழுக்கம். பிதாக்கள் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற ''சிட்சையில்'' (கிரேக்கம்: paideia) அல்லது ''ஒழுக்கத்தில்'' வளர்க்க வேண்டும். இது, "விதிகள் மற்றும் முறைமைகள், வெகுமதிகள் மற்றும் அவசியமாகின்ற பொழுது தண்டனைகள் ஆகியவற்றினால் பயிற்று வித்தல்"[5] என்பதைக் குறிப்பிடுகின்றது. பிலாத்து இயேசுவைப் பற்றிக் கூறியதைப் பதிவு செய்வதற்கு லூக்கா இந்த வார்த்தையைப் பயன் படுத்தினார்: "ஆனபடியால் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்" (லூக். 23:16). நாம், "எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷ மாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி. 12:11) என்று வாசிக்கின்றோம்.*

*ஜேம்ஸ் டோப்ஸன் அவர்கள், மனவிருப்பத்தை உருவமைத்தல் என்று சிட்சையை விவரிக்கின்றார். இதைச் செய்வதற்கான அவருடைய ஆலோசனைகளில் பின்வரும் கருத்துக்களும் உள்ளன:[6]*

*(1) எல்லைகளை அவை அமுல் படுத்தப்படுவதற்கு முன்னதாகவே விளக்கப்படுத்துங்கள். ஒரு பிள்ளைக்கு, அவன் ஒரு விஷயத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்தாகவே, ஏற்புடையது எது என்பதை அவன் அறிய வேண்டியது அவசியமாகின்றது.*

*(2) எதிர்ப்புடன் அறைகூவல் விடப்படும் பொழுது, தன்னம்பிக்கை மிக்க தீர்மானத்துடன் பதில் அளியுங்கள். மனவிருப்பங்களின் யுத்தம் நடைபெறும் பொழுது, பெற்றோர்கள் திட்டவட்டமாகவும் தன்னம் பிக்கையுடனும் வெற்றி பெறுவது அவசியமாகின்றது.*

*(3) மனப்பூர்வமான எதிர்ப்பு மற்றும் சிறுபிள்ளைத்தனமான பொறுப் பின்மை ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசத்தைக் கண்டுணருங்கள். மனப்பூர்வமான எதிர்ப்பற்ற ஒரு விஷயத்திற்காக ஒரு பிள்ளை அடிக்கப்படக் கூடாது. அவன் குப்பையை வெளியே கொண்டு போக மறந்து விட்டதற்காக அடிக்கப்படக் கூடாது. மனப்பூர்வமான எதிர்ப்பு என்பது வேறு விஷயமாக உள்ளது. அது நேரடியாகக் கையாளப்பட வேண்டிய விஷயமாக உள்ளது.*

*(4) நேருக்கு நேரான எதிர்நிற்றலுக்குப் பிறகு மறுஉறுதிப்படுத்திப் போதியுங்கள்.*

*(5) சாத்தியப்படக் கூடாத செயல்களை வற்புறுத்துவதைத் தவிர்த்து விடுங்கள். ஒரு பிள்ளையினால் அவ்வேளையில் செய்ய இயலாத செயலுக் காக அவனை ஒருபோதும் தண்டியாதீர்கள்.*

*(6) அன்பே உங்கள் வழிகாட்டியாக இருப்பதாக.*

*மென்மையான கவனிப்பும் (பேணி வளர்த்தல்) சிட்சையும், தந்தையர்களுக்கான முக்காலியில் இரு கால்களாக உள்ளன. இது நம்மை அத்தியாவசியமான மூன்றாவது காலினிடம் கொண்டு வருகின்றது.*

*3. போதனை. போதனை (கிரேக்கம்: nouthesia) என்ற வார்த்தையானது "சிந்தைக்கு முன்பாக வைத்தல்" என்று நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது. இது வாய்மொழியான அறிவுறுத்துதல் அல்லது வாய் மொழியான எச்சரிக்கையைக் குறிப்பிடுகின்றது. பிரதான ஆசாரியரான ஏலி, தம் பிள்ளைகளுக்குச் செய்யத் தவறி விட்டார். என்ன நடந்தது என்று கவனியுங்கள்:*

> *கர்த்தர் சாமுவேலை நோக்கி: "இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்: அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும். நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன் மேல் அந்நாளிலே வரப் பண்ணுவேன், அதைத் தொடங்கவும் முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப் பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற் போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத் தீர்ப்பைச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்" (1 சாமு. 3:11-13).*

*செப்துவஜிந்த்து மொழிபெயர்ப்பில், வசனம் 13ல்,* "rebuke" *என்ற வார்த்தையானது 6:4ல் காணப்படுகின்ற "போதனை" என்ற வார்த்தைக்கான அதே வேறு வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏலி தேவனைச் சேவிப்பதில் தமது வாழ்வைச் செலவிட்டார். அவர் இஸ்ரவேலின் ஆராதனையை வழிநடத்தினார், ஆனால் தன் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டிய வேளைகளில் அவர் அவர்களைக் கண்டிக்கவில்லை. சில வேளைகளில் தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வது அவசியமாக உள்ளது. தக்க வகையிலான பெற்றோர்களாயிருப்பதற்கு நேரடியான அறிவுறுத்துதல் அவசியமாக உள்ளது.*

## *முடிவுரை*

*ஒவ்வொரு தந்தையும் தமது குடும்பத்தை, வாழ்வின் அபாயங்கள், போராட்டங்கள் மற்றும் அறைகூவல்களினூடே வழிநடத்திச் செல்லும் பொறுப்பைத் தேவன் கொடுத்துள்ளார். உங்கள் பிள்ளைகளுக்கு வெறுப்பைத் தூண்டாத வகையில் அவர்களை வழிநடத்துங்கள். நேர்மறையான முக்கூற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் வழிநடத்துங்கள்: மென்மையான கவனிப்பு (பேணிக்காத்தல்), சிட்சை (தண்டித்தல்) மற்றும் போதனை.*

குறிப்புகள்

[1]Stu Weber, *Tender Warrior: God's Intention for a Man* (Sisters, Oreg.: Multnomah Books, 1993), 21-26. [2]Robert Coles, "Reflections," *Christianity Today* (16 June 1989), 45, quoted in Steve Farrar, *Point Man: How a Man Can Lead a Family* (Portland, Oreg.: Multnomah Press, 1990), 209. [3]Allan Loy McGinnis, quoted in Farrar, 211-12. [4]Ibid., 213-16. [5]Ibid., 215-16. [6]An excellent resource for exploring the scope of discipline is James Dobson, *Dare to Discipline* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1970), 15-62.

# கிறிஸ்தவர்கள் வேலைக்குச் செல்லும் பொழுது [6:5-9]

*கிறிஸ்தவராயிருப்பது என்றால், நாம் வேலை செய்யும் வழிமுறை உட்பட, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்து நம்மை வடிவமைக்கின்றார் என்று அர்த்தப்படுகின்றது. அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குப் பணி செய்வது குறித்து பவுல் அவர்களுக்கு அறிவுறுத்துதல் அளித்தார். அந்த அறிவுறுத்தலில் நாம் பணியாளர்களுக்கு உதவியான சில அறிவுரைகளைக் காண முடியும்:*

> *வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள். எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் (6:5-9).*

*இந்த வசனங்கள் "ஆவியினால் நிறைந்து" (5:18) என்ற பவுலின் கட்டளைகளின் சந்தர்ப்பப் பொருளில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் வாழும்படிக்குப் பவுல் அழைத்தார். இது தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலைப் பற்றிய விஷயமாக உள்ளது. இது நமக்குள் அவருடைய வசனங்கள் வாழும்படி அனுமதிப்பதை உள்ளடக்கி இருக்கின்றது. ஆவியினால் நிறைந்திருப்பதின் சில விளைவுகளைப் பவுல் பட்டியலிட்டார்: சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாடல்களின் மூலம் ஆவிக்குரிய செய்தித் தொடர்பு; எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துதல்; மற்றும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல். இந்தக் கீழ்ப்படிதல் கணவர்களையும்*

*மனைவியர்களையும், பெற்றோர்களையும் பிள்ளைகளையும் மற்றும் அடிமைகளையும் வேலைக்காரர்களையும் உள்ளடக்கியிருக்கின்றது.*

*சந்தர்ப்பப் பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். பணியிடங் களுக்கான அறிவுறுத்தல்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டிருத்தலில் இருந்து நேரடியாகப் பாய்ந்தோடி வருகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், வேலை(செய்கை)யில் நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கத் தவறினால், நம்மில் எவரும் தேவன் விரும்புகின்றவாறு கிறிஸ்தவர்களா யிருப்பதாக உரிமைகோர முடியாது. கிறிஸ்தவர்கள் உண்மை நிறைந்த வேலைக்காரர்களாய்ப் பணியாற்றும் போது ஆவியானவரால் நிரப்பப் பட்ட தங்கள் வாழ்வைக் காண்பிக்கின்றனர்.*

## உண்மை நிறைந்த வேலைக்காரர்கள்

*பவுல், அடிமைகளுக்கும் எஜமானர்களுக்கும் இடையில் உள்ள உறவு முறையைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றார். அவரது நாட்களில், அது ஒரு அடிப்படையான பணியிட உறவுமுறையாக இருந்தது. விரிவாக்கத் தினால் நாம் இதை தற்காலத்து வேலையளிப்பவர்/வேலை செய்பவர் உறவுமுறைகளுக்கு நடைமுறைப்படுத்தலாம். வேலை செய்பவர்களுக்கு பவுல் நான்கு அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்.*

*1. கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருங்கள். பவுல், "வேலைக்காரர்களே, சரீரத்தின்படி உங்கள் எஜமானர்களாயிருப்பவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் ..." (6:5) என்று கூறுகின்றார். இது ஒரு நிலைத்த எண்ணப்போக்காக இருக்க வேண்டும். தொடர்ந்து நடைபெறும் கீழ்ப்படிதலை வலியுறுத்துகின்ற வினைச் சொல்லின் காலத்தைப் பவுல் இங்கு பயன்படுத்தினார். வேலையளிப்பவர் சட்டத்திற்கு விரோதமான, ஒழுக்கக் கேடான அல்லது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு எதிரானவற்றைச் செய்யும் படி கேட்டுக் கொள்ளாத வரைக்கும் வேலையளிப்பவரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வேண்டுகோள்கள் ஆகியவற்றுக்குத் தடங்கலற்ற வகையில் இணங்கியிருத்தல் என்பதை அப்போஸ்தலர் தம் சிந்தையில் கொண்டிருந் தார். வேலையளிப்பவர்களில் சிலர் நியாயமற்றவர்களாக, ஞானமற்றவர் களாக, வேலைநோக்கமற்றவர்களாக, கடுமையானவர்களாக, மதியீனமான வர்களாகக் கூட இருக்கக் கூடும்; ஆனால் கிறிஸ்தவ வேலைக்காரர்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியவர்களிடத்தில் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறந்த வகையில் நடந்து கொள்ள வேண்டும். 1 பேதுரு 2:18-20ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> *வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக் குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங் கள். ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினி மித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு, உபத்திரவங்ளைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால்*

*என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.*

நமது பணிகள் ஏற்புடையதாயில்லையென்றால், இரட்சிப்புக்கான நமது செய்திக்கு மக்கள் அதிக கவனம் தர மாட்டார்கள். பணியில் நாம் மிகப் பெரிதாக முறையிடுகின்றவர்களாயிருந்தால், நாம் அளிக்க வேண்டிய வற்றை அவர்கள் (காதினாலும்) கேட்க மாட்டார்கள். நாம் பிறருக்காக வேலை செய்கின்ற வரைக்கும், கீழ்ப்படிதல் மற்றும் ஒப்புக் கொடுத்தலின் ஆவியுடன் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்.

2. *மரியாதைமிக்கவர்களாயிருங்கள்.* பவுல், "வேலைக்காரரே, நீங்கள் ... சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு(ம்) பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து ..." என்று கூறினார். வேலையளிப்பவர்கள் சுலபமாய் மதிக்கத்தக்கவர்களாயிருந் தாலும் இல்லாவிட்டாலும் கிறிஸ்தவ வேலைக்காரர்கள் (அவர்களை) மதிக்கின்றவர்களாயிருக்க வேண்டும். இது நபரைப் பற்றியதல்ல, இது தேவனுடைய திட்டம். அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும்படியாகவே தேவனு டைய திட்டம் அழைக்கின்றது. வாழ்வின் இழையில் தேவன் அந்தத் திட்டத்தை கட்டியிருக்கின்றார். அதிகாரத்துவத்தின் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் கலகம் செய்வதைத் தேர்ந்து கொண்டால் சமூகம் செயல்பட முடியாது. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், அல்லது வேலை தருபவர் வேலை செய்பவர் என்ற யாராயிருப்பினும் அதிகாரத்துவக் கொள்கை மற்றும் கீழ்ப்படிதல் என்பவை நடைமுறைக்குரியதாயிருக் கின்றது. இதை நாம் புறக்கணித்தால், பல பிரச்சனைகள் மேல் எழும்பும். உண்மைமிக்க கிறிஸ்தவர் தேவனுடைய அமைப்பின் மீது கொண்ட மதிப்பினால் கீழ்ப்படிகின்றார். இதை அவர், முறையிடுதல், விமர்சித்தல், அல்லது அமைப்பிற்கு எதிராகக் கலகம் செய்தல் ஆகியவையற்ற நிலையில் செய்கின்றார்.

3. *உங்கள் நோக்கத்தைத் தூயதாகக் காத்துக் கொள்ளுங்கள்.* வேலையளிப்பவருக்குக் கீழ்ப்படிவதன் நோக்கம் என்ன? நாம் கிறிஸ்துவுக் குக் கீழ்ப்படிவது போலவே நமது பூமிக்குரிய எஜமானர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கின்றதாகப் பவுல் கூறினார் (6:5). நமது பணி உட்பட நாம் இந்த வாழ்வில் செய்கின்ற ஒவ்வொரு செயலும் கர்த்தரை மகிமைப்படுத்துவதாக இருக்க வேண்டும்: "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யுங்கள்" (1 கொரி. 10:31); "வார்த்தை யினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல் லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலை யாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலோ. 3:17); "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை

*மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ. 3:23, 24).*

*உங்கள் வேலை இன்றியமையாதது அல்ல என்பது போல நீங்கள் உணரலாம். நீங்கள் செய்கின்றது உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். உங்களை வேலைக்கு அமர்த்தியவரை உங்களுக்குப் பிடிக்காது இருக்கலாம். இருப்பினும் உங்கள் வேலையை தேவனுக்கான ஒரு பலியாகக் கண்ணோக் குவதினால் நீங்கள் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும். அதை நீங்கள் தேவனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள். அதுவே உங்கள் வேலைக்கும் உங்களை வேலையில் அமர்த்தியவருக்கும் மிகச் சிறந்தவற்றை நீங்கள் கொடுக்கக் காரணமாயிருக்கட்டும்.*

*4. மிக மேன்மையான தன்மைக்கு ஒப்புக் கொடுத்தவர்களாயிருங்கள். நாம் யாவரும் கூறுகின்றதும் செய்கின்றதுமான எல்லாமே தேவனை மகிமைப்படுத்துவதற்கானதாக இருப்பதால், வேலை செய்யுமிடத்தில் நாம் மிக மேன்மையான தன்மைக்கு ஒப்புக் கொடுத்தவர்களாயிருக்க வேண்டும். பவுல் கிறிஸ்துவை நிலையாகச் சித்தரிப்பில் கொண்டு வருவதன் மூலம் இதை வலியுறுத்தினார். நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது போலவே பூமிக்குரிய நமது எஜமானர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் (6:5). அவர் (பவுல்) வசனம் 6ல், "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' என்று கூறினார். மிக மேன்மையான தன்மைக்கான வேண்டுகோளானது வசனம் 7லும் காணப்படுகின்றது: ''மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யால், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்."*

*உயர் நிலைப் பள்ளியில் நடக்கும் உடற்பயிற்சி வகுப்புகள் என் நினைவிற்கு வருகின்றது. அந்த வகுப்பின் போது ஒவ்வொரு நாளும் உடற் பயிற்சி செய்யும்படி நாங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டோம். பயிற்சியாளர் (மாணவர்கள்) குழுவின் நடுவில் நின்ற ஒவ்வொரு வேளையிலும் அவரால் வகுப்பின் பாதிப் பேர்களை மட்டுமே பார்க்க முடிந்தது. அவர் வலது புறம் திரும்பிப் பார்க்கையில், வலது புறம் இருக்கும் ஒவ்வொருவரும் மிகத் தீவிர மாக உடற்பயிற்சி செய்வதுண்டு; ஆனால் இடப்புறத்தில் இருப்பவர்கள் சற்றே ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அவர் இடது புறம் திரும்பிப் பார்க்கை யில், இடது புறம் இருப்பவர்கள் கடினப்பட்டு உடற்பயிற்சி செய்வதுண்டு; ஆனால் வலது புறத்தில் இருப்பவர்கள் சற்றே ஓய்வெடுத்துக் கொள்வார் கள். வேலை செய்யும் இடங்களில் சில நேரங்களில் இது நடைபெறுகின்றது. சில வேலையாட்கள் முதலாளி இருக்கும் போது மட்டும் மிகச் சிறந்த முறையில் முயற்சி செய்வதுண்டு. இவர்கள் மிக மேன்மையான தன்மைக் குத் தங்களை ஒப்புக் கொடுத்தலில் குறைவு படுகின்றனர்.*

*தேவன் ஒரு பணியாளராயிருக்கின்றார் என்பதை ஆதியாகமம் 1ம் அதிகாரம் காண்பிக்கிறது. அவர் இந்த உலகத்தைப் படைத்தார். அவர் தமது வேலையில் மிக மேன்மையான தன்மைக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த வராயிருந்தார். "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கிய எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" (ஆதி. 1:31). கிறிஸ்தவர்கள்*

எப்பொழுதுமே கடினமாய் உழைத்து தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செய்ய வேண்டும். அவர்கள் எங்கு பணியாற்றினாலும் மிகவும் ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாயிருக்க வேண்டும். ஜான் ஸ்டாட் அவர்கள் பின்வரும் ஆலோசனையைத் தந்தார்:

> ஒரு இல்லத் தலைவியினால், இயேசு உணவு உண்ணப் போகின்றார் என்ற எண்ணத்துடன் உணவு சமைக்க முடியும், அல்லது இயேசு கிறிஸ்து மதிப்பிற்குரிய விருந்தினராக வரப் போகின்றார் என்ற எண்ணத்துடன் வீட்டை சுத்தம் செய்ய முடியும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி போதித்தல், மருத்துவர்கள் நோயாளி களுக்குச் சிகிட்சையளித்தல் மற்றும் மருத்தவத் தாதிகள் அவர்களைக் கவனித்தல், வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரருக்கு உதவுதல், கடை உதவியாளர்கள் வாடிக்கையாளர்களுக்குப் பணியாற்றுதல், கணக் காளர்கள் கணக்குப் புத்தகங்களைச் சரி பார்த்தல் மற்றும் செயல் உதவி யாளர்கள் கடிதங்களைத் தட்டச்சு செய்தல் போன்ற ஒவ்வொரு வேலையிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வது போல் செயல்பட முடியும்.[1]

## மதிக்கின்ற எஜமானர்கள்

கிறிஸ்தவர்கள் மதிக்கின்ற வேலை தருபவர்கள் என்ற வகையிலும் ஆவியினால் நிரப்பப்பட்ட தங்கள் வாழ்வைக் காண்பிக்கின்றனர். எஜமானர்கள் அல்லது வேலை தருபவர்களுக்குப் பவுல் என்ன கூறினார் என்பதை சுருக்கமாகக் கண்ணோக்குங்கள்: "எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறா ரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்" (6:9).

இன்றைய நாட்களில் வேலை தருபவர்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிநடத்தும் குறிப்புகள் மூன்றைப் பவுல் கொடுத்தார்:

1. கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருங்கள். அவர், "அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து" என்று கூறினார். "அப்படியே" என்பது, அவர் (பவுல்) வேலைக்காரர்களுக்கு முன் அமைத்த நீங்கள் சொல்வது அல்லது செய்வது எல்லாவற்றிலும் கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் என்றனநோக்கம் அல்லது இலக்கைக் குறிப்பிடுகின்றது என்றே நான் புரிந்து கொள்கிறேன். இதை வேலை தருபவர் என்ற வகையில் உங்கள் முதல் பொறுப்பாகத் தேவன் ஏற்படுத்தியுள்ளார். நீங்கள் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் வழிநடத்தவும். உங்களுக்குப் பதில் அளிப்பவர் களை தேவனுடைய தர அளவையின்படி இயக்கவும், பொன் விதியின் (லூக். 6:31ஐக் காணவும்)படி இயங்கவும் மற்றும் வேலை செய்கின்றவர்கள் நீங்கள் சேவிக்கின்ற தேவனை அவமதிப்பதற்குக் காரணம் கொண்டிராத வகையில் அவர்களை நீங்கள் மதிப்புடன் நடத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

*2. இரக்கத்துடன் இருங்கள்.* நீங்கள் கொடுமைக்காரராக அல்லது பயமுறுத்துபவராக இருக்க வேண்டாம். தேவபக்தியுள்ள தலைமைத்து வமானது யார் முதலாளி என்று ஒவ்வொருவரையும் அறியச் செய்வதை அனுமதிப்பதில்லை. வேலை தருகின்ற கிறிஸ்தவர் ஒருவர் திட்டுபவராக அல்லது மதிக்காதவராக ஒருபோதும் இருக்க மாட்டார், ஆனால் எப்பொழுதும் இரக்கமும் அக்கறையும் உள்ளவராக இருக்க முயற்சி செய்கின்றார். (ஆனால்) இது உங்களை, தேவை ஏற்படும் வேளையில் பிடிவாதத்துடனும் அழுத்தத்துடனும் இருப்பதைத் தடை செய்வதில்லை, ஆனால் உங்கள் எண்ணப்போக்கும் நடக்கையும் எப்பொழுதுமே உங்களில் உள்ள கிறிஸ்துவின் சிந்தையினால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

*3. தாழ்மையுள்ளவர்களாயிருங்கள்.* பவுல் பின்வரும் நோக்கத்தை முன் வைத்தார்: ''அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து.'' எல்லா நியாயாதிபதிகளுக்கும் நியாயாதிபதியாகப் பாரபட்சம் இல்லாம லிருக்கின்ற அவர், ஒரு வேலை தருபவராக நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர் கள் என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் ஒரு முதலாளி யாக இருக்கின்றீர்கள் என்பதினால் மட்டும் வேலையாட்களை நீங்கள் மோசமாக நடத்துவதை அவர் கண்டும் காணாமல் விட்டு விட மாட்டார். நாம் மற்றவர்களிடத்தில் நடந்துக் கொள்வதைப் பற்றி எப்பொழுதும் அவர் நம்மைக் கணக்கொப்புவிக்கும்படி செய்கின்றார்.

## முடிவுரை

ஞாயிற்றுக் கிழமையன்று கிறிஸ்தவராக இருக்கின்ற ஒருவர் திங்கட் கிழமையன்றும் கிறிஸ்தவராக இருக்க வேண்டும். ஆராதனையில் கிறிஸ்தவ ராக இருக்கின்ற ஒருவர் வேலையிலும் கிறிஸ்தவராக இருக்க வேண்டும்.

நம்மில் பலர் வேலை செய்கின்றவர்களாக இருக்கின்றோம். நம்மில் சிலர் வேலை செய்பவர்களாகவும், மற்றும் சிலர் வேலைக்காரர்களுக்குப் பொறுப்பாளர்களாகவும் இருக்கின்றோம். நாம் யாவருமே தேவனுடைய வசனம் கூறுவதென்ன என்பதைப் பற்றி நினைத்துப்பார்ப்பது அவசியமான தாக உள்ளது. நீங்கள் பின்வரும் கேள்விகளை உங்களிடத்திலேயே கேட்டுக் கொள்ளுங்கள்:

- "தேவனுக்கு மகிமை கொண்டுவரும் வகையில் நான் நடந்து கொள்கின்றேனா?"
- "மிக மேன்மையான தன்மைக்கு என்னை நான் ஒப்புக் கொடுத்துள்ளேனா?"
- "பிறரிடம் நான் இரக்கத்துடன் மற்றும் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடக்கின்றேனா?"
- "நான் எனது மேலாளர்களுக்கு நேர்மையான, நாணயமாக மற்றும்

*மதிப்பளிப்பவனாக இருக்கின்றேனா?"*

- *"நான் எனது வேலையின் மூலம் அளித்தவற்றுக்காக இயேசு என்னிடத்தில் 'நன்கு செய்தீர்கள்' என்று கூறுவாரா?"*

இந்தக் கேள்விகள் யாவற்றுக்கும் நேர்மையாகப் பதில் தந்த பின்பு, நீங்கள் சில பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்க விரும்பலாம். நாம் வேலையில் செய்கின்றவை உட்பட, நாம் செய்கின்ற எல்லாவற்றின் மூலமாகவும் தேவனை மகிமைப்படுத்துவதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

---

குறிப்பு

[1]John R. W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 252.

# இது ஒரு யுத்தம்!
# [6:10-12]

*என் நண்பர்களில் ஒருவரான பில்லி என்பவர் காவலராகப் (போலீஸ்) பணியாற்றுகின்றார். நவம்பர் 1994ல் பில்லியும் சட்ட அமலாக்க அலுவலர் கள் சிலரும் இணைந்து, டெக்ஸாஸின் ஃபோர்ட் வொர்த் என்ற இடத்தில் இருந்த வீடு ஒன்றில் (குற்றவாளிகள் சிலரைக்) கைது செய்யும் நடவடிக்கை யில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். குண்டுகள் சுடப்பட்டன. தோட்டா ஒன்று பில்லியின் காலை துளைத்தது. அந்தத் தோட்டா அவரின் உடலுக்குள்ளாகப் பயணித்த பொழுது, அது அவருடைய இரத்தத் குழாய் ஒன்றைத் தாக்கியது. பில்லி ஏறக்குறைய சாவுக்கேதுவாக இரத்தம் சிந்தினார். ஆயினும் அவர் பிழைத்துக் கொண்டார், தேவனுக்கு நன்றி!*

*பில்லி மயிரிழையில் உயிர் பிழைத்த நிகழ்ச்சியானது, பல ஆண்டு களுக்கு முன்பு நான் காவலர் ஒருவரைப் பற்றி நான் பார்த்த திரைப்படம் ஒன்றை எனக்கு நினைவூட்டுகின்றது. அதில் ஒரு காட்சியில் அந்தக் காவலர் தனது கூட்டாளியொருவர் தோட்டாவினால் மரணத்திற்கேதுவாகத் துளைக்கப்பட்டு மருத்துவமனைப் படுக்கையில் இருக்கும் வேளையில் அவரருகே அமர்ந்திருந்தார். படுத்திருப்பவரின் மனைவியும் அங்கிருப்பாள். அவள் காவலரைப் பார்த்து, தன் கண்களில் கண்ணீருடன், "இதை நான் ஒருக்காலும் உய்த்துணரவில்லை ... இப்பொழுது வரை நான் அதை உண்மையில் ஒருக்காலும் புரிந்து கொள்ளவில்லை. அங்கே ஒரு யுத்தம் நடக்கின்றது அல்லவா?" என்று கூறுவாள்.*

எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் தமது நிருபத்தை எழுதி முடிக்கையில், அவர் கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி ஏறக்குறைய இதே கூற்றையே கூறினார்: "இது ஒரு யுத்தமாக உள்ளது." வாழ்வினூடாக ஒரு சுலபமான பயணத்தை எதிர்பார்க்கக் கூடாது என்பதை நாம் அறியச் செய்தார். கிறிஸ்தவம் என்பது ஒரு போராட்டமாக, ஒரு யுத்தமாக, "முடிவு வரையிலும் ஒரு சண்டையாக" உள்ளது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த யுத்தத்தில் நம்மில் எவரும் நமது சொந்த முயற்சியினால் வெற்றியடைய இயலாது. தேவன் நமக்குத் தருகின்ற சர்வாயுதவர்க்கத்தின் பெலம் என்ற ஒரே வழியினால் மட்டுமே நாம் இந்த யுத்தத்தில் வெற்றியடைய முடியும்:

> கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய

*சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங் களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு (6:10-12).*

பவுலின் வார்த்தைகள் நமக்கு, பின்வரும் காலங்கடந்த சத்தியத்தை அளிக்கின்றன: கிறிஸ்தவர்கள் சாத்தானுக்கெதிரான யுத்தத்தில், தேவனு டைய யுத்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொழுது வெற்றியடை கின்றனர்.

## யுத்தத்தில் வெற்றியடைய யுத்தத்திற்கு ஆயத்தம் செய்தல் அவசியமாகின்றது

ஆவிக்குரிய யுத்தத்தில் நமக்குத் தேவையான பலத்திற்கான ஆதார மூலம் நம்மிடத்திலிருந்து வருவதில்லை; இது தேவனிடத்திலிருந்து வருகின்றது. பவுல் "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" என்று கூறினார். நேர்ப் பொருளில் அவர், "நாம் கர்த்தருக் குள் பலப்பட வேண்டும்" என்று அவர் கூறினார்.[1] நாம் "முரட்டுத்தனம்" உள்ளவர்களாக வேண்டும் என்றோ அல்லது நமது வலிமையைக் காண்பிக்க வேண்டும் என்றோ பவுல் கூறவில்லை. பிசாசின் தீமையான தொலைவான செயல்களை எதிர்த்து நிற்கக் கிடைக்கின்ற பலத்தின் ஒரே ஆதார மூலத்திலிருந்து அதைப் பெற்றுக் கொள்ளும்படி பவுல் நமக்கு வேண்டு கோள் விடுத்தார். இதைத் தெளிவாகக் கூறுவதென்றால், தேவனுடைய பலம் இல்லாத வரையில் நாம் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறோம்.

தேவனுடைய பலத்துடன் (இருக்கையில்) நாம் இந்த யுத்தத்தில் வெற்றியடைய மிகச் சரியாகத் தேவையானவற்றைக் கொண்டுள்ளோம். தேவனுடைய பலத்தினால் நாம் கொண்டுள்ள நம்புதற்கரிய சாத்தியக் கூற்றினைப் பற்றிப் பவுல் கூறினார். அதிகாரம் 1ல் பவுல், "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம்" (1:19) என்று குறிப்பிட்டார். இயேசுவை உயிர்ப்பித்த வல்லமையானது ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெற்றுக் கொள்ளக் கிடைப்பதாக உள்ளது.

நாம், தேவனுடைய வசனத்தை வாசிக்கையிலும் அதை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்துகையிலும் இந்த வல்லமையைக் காண்கின்றோம். நாம் ஜெபத்தில் தேவனைத் தேடுகையில் அவர் இந்த வல்லமையை நமக்குக் கிடைக்கச் செய்கின்றார். நாம் தேவனை ஆராதிக்கையில் அவருடைய வல்லமையைக் கண்டறிகின்றோம். சக கிறிஸ்தவர்களின் செல்வாக்கு, முன்மாதிரி மற்றும் உற்சாகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாகவும் தேவன் தமது வல்லமையைச் செயல்படுத்துகின்றார். நமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அவருடைய பலத்தைப் பெறுவதன் மூலம் நாம் இந்த

யுத்தத்திற்குத் தயாராக வேண்டியது அவசியமாகும்.

தேவன் நமக்கு அளிக்கின்ற பலத்தை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்று பவுல் திட்டவட்டமாக எழுதினார்: "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்" (6:11). "சர்வாயுத வர்க்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "panoplia" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் நாம் "panoply" (கவசம்) என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இது முழுமையான ஆயுதத்தைக் குறிக்கின்றது. பவுல் தாம் பல முறைகள் கண்டிருந்த ஒன்றை - யுத்தத்திற்காகக் கனத்த ஆயுதம் அணிந்து, பகைவர்களைத் தாக்கத் தயாராக இருக்கும் படைவீரர் பற்றிய விஷயத்தை ஆவிக்குரிய வகையில் சித்தரித்தார். 6:13-20ல், அவர் இந்த ஆயுதங்கள் பற்றி விவரித்தார்.

ஆயுதத்தை அணிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் கட்டளை யிட்டார். அவரது வார்த்தைகளில் இருந்த அவசரத் தன்மையை உணருங் கள். அவரால் முடிந்ததென்றால் நம்மிடத்தில் அவர், "தந்தையர்களே, ஆயுதங்களை அணிந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்பங்களுக்காக யுத்தம் செய்ய அணிந்து கொள்ளுங்கள். தாய்மார்களே, ஆயுதத்தை அணிந்து கொள்ளுங்கள். இளம் வாலிபர்களே, சாத்தான் உங்களைத் தோற்கடித்து விடக் கூடாதபடிக்கு ஆயுதத்தை அணிந்து கொள்ளுங்கள். வயதான கிறிஸ்தவர்களே, ஆயுதங்களை அணிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை யின் முடிவு வேளையின் அருகில் உங்கள் காவல் உங்களை விட்டுச் சென்று விட அனுமதித்து விடாதீர்கள். யுத்தம் அப்போது(ம்) முடிந்திருப்பதில்லை. தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்று தனிப்பட்ட வகையில் கூறியிருப்பார்.

பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு இந்த யுத்தத்தின் நோக்கத்தை அடையாளப்படுத்தினார்: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி" (6:11அ). போதைப் பொருட்கள், மதுபானம், ஆபாச இலக்கியம், மற்றும் சூதாட்டம் ஆகியவை நம்முடைய தீர்க்கமான விரோதிகள் அல்ல. அவைகள் நமது உண்மையான விரோதியினால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாக மட்டுமே உள்ளன. தனது எல்லா ஆயுதங்களுடன் நம்மிடத்தில் வருகின்ற விரோதி வல்லமை மிக்கவனாக இருக்கின்றான்! நாம் தேவனுடைய உதவியின்றி பிசாசின் கொலைச் செயல்களை எதிர்த்து நின்று பிழைக்க இயலாது. பிசாசானவன் மனிதர்களுக்கு மேலான பலம் பொருந்தியவனாக, தந்திரம் மிக்கவனாக, சூழ்ச்சித் திறனும் கொடூரமும் கொண்டவனாக இருக்கின்றான். எந்த ஒரு மனிதனும் பிசாசை எதிர்த்து யுத்தம் செய்து வெற்றி அடையவதற்கு இயேசுவின் மூலம் மட்டுமே வழி உள்ளது. இயேசுவுக்குள் தேவனுடைய உதவியின்றி எவரொருவரும் பிசாசுடனான யுத்தத்தில் தப்பிப் பிழைக்க முடியாது. பிசாசுடனான யுத்தத்தில் வெற்றியடைவதற்காக நமக்குத் தேவன் தம்முடைய பலத்தையும் ஆயுதத்தையும் கொடுக்கின்றார்.

படை வீரர்கள் யுத்த களத்தில் நுழைந்தவுடன், அவர்களுக்கு யுத்தத் திட்டம் ஒன்று தேவைப்படுகிறது. பவுல் யுத்தத் திட்டம் ஒன்றை நமக்குக் கொடுத்துள்ளார், மற்றும் நாம் மேற்கொள்ள வேண்டிய தயாரிப்புகள்

பற்றியும் அவர் நமக்குக் கூறியுள்ளார். தேவனுடைய பலத்தைப் புறக் கணித்தல் அல்லது, அவருடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளத் தவறுதல் என்பது ஆவிக்குரிய தற்கொலையாக உள்ளது. தேவனுடைய பலமும் ஆயுதமும் இன்றி வாழ்வினூடாகக் கடந்து செல்ல முயற்சி செய்கின்ற கிறிஸ்தவர்கள் உயிர் பிழைக்க மாட்டார்கள். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் விபத்து அல்லது நோயினால் இறந்தவர்களைப் போலாக்க அனுமதித்து விடாதீர்கள். "கர்த்தருக்குள் பலப்படுங்கள் ... தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்." தேவன் அளிக்கின்ற ஆவிக்குரிய ஆதாரமூலம் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவதன் மூலம் யுத்தத்திற்குத் தயாராகுங்கள். இது ஒன்றுதான் உங்களின் நம்பிக்கையாக உள்ளது!

## யுத்தத்தில் வெற்றியடைய எதிரியைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது

போராடச் செல்லும் முன்னதாக எதிரியைப் பற்றி உங்களால் முடிந்த எல்லாவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஞானம் கூறுகின்றது. விளையாட்டுக் குழுக்கள் தங்கள் போட்டியாளரைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். வியாபாரக்குழுக்கள் ஒரு விலையை முன் வைப்பதற்கு முன்பாக, தங்கள் போட்டியாளர்களைப் பற்றித் தங்களால் முடிந்த அளவுக்கு அறிந்து கொள்கின்றனர். படைத்தலைவர்கள் யுத்தத் திற்குத் தயாரித்துக் கொண்டிருக்கையில் எதிரியைப் பற்றி தங்களால் இயன்ற அளவுக்கு அதிக தகவல்களைச் சேகரித்துக் கொள்வார்கள். உங்களால் இயன்ற அளவுக்கு உங்களின் எதிரியைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத வியூகமாக உள்ளது.

விரோதியானவன் எவ்வளவு வல்லமை நிறைந்தவனாகவும் சூழ்ச்சி மிக்கவனாகவும் இருக்கிறான் என்பதற்கு கிறிஸ்தவர்கள் மதிப்பைத் தர வேண்டும் என்று பவுல் விரும்பினார். பவுல் இதை ஏன் செய்தார்? ஏனென்றால், நாம் பிசாசானவனை தயாரிப்பு இல்லாமல் எதிர்கொண்டால் அல்லது நம் வலுக்குறைந்த சொந்த பலத்தைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் இன்றி யுத்தத்திற்குச் சென்றால், பிசாசானவன் நம்மை அழித்து விடுவான்.

விரோதியைப் பற்றிய மூன்று உண்மைகளைப் பவுல் நமக்குக் கொடுத்தார். முதலாவது, நமது விரோதி பலம் பொருந்தியவனாக இருக்கின் றான். வசனம் 12, "ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" என்று கூறுகின்றது. பவுல் விரோதியைப் பற்றி பலமிகுந்த (பின்வரும்) பட்டங்களைக் கொண்டு விவரித்தார்: "துரைத்தனம்," "அதிகாரம்," மற்றும் "சக்திகள்." இந்த இயற் பெயர்களைக் கொண்டு, பவுல் தம் சிந்தையில் கொண்டிருந்த யாவற்றை யும் நான் அறிவதில்லை, ஆனால் விரோதியானவன் கொண்டுள்ள மாபெரும் வல்லமை மற்றும் அதிகாரம் ஆகியவற்றிற்கு நம் கவனத்தைத் திருப்பப் பவுல்

*சில வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பதை நான் அறிகின்றேன்.*

*பேய்த்தனமான இந்த வல்லமையைப் பற்றி வேதாகமம் சில உட்கண்ணோட்டங்களைத் தருகின்றது. இயேசுவே கூட, பிசாசானவன் இந்த உலகத்தின் இராஜ்யங்கள் யாவற்றையும் அவருக்குத் தர, தான் வல்லமை கொண்டிருந்ததாகக் கூறியபோது, அவனுடன் வழக்காடவில்லை (மத். 4:8, 9). பிசாசானவனை "இந்த உலகத்தின் அதிபதி" என்றும் இயேசு குறிப்பிட்டார் (யோவா. 12:31). பிசாசானவன், தேவனுக்கெதிராகவும் அவருக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கெதிராகவும் நிலையாக அமைந்து நிற்கின்றான். பிசாசானவனைப் பவுல், "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று அழைத்தார் (2 கொரி. 4:4). அவிசுவாசிகள் சுவிசேஷத்தின் ஒளியைக் காணக் கூடாதபடி அவர்களின் மனங்களை சாத்தானும் அவனுடைய தூதர்களும் குருடாக்கி வைத்துள்ளனர். இந்த விரோதியைப் பேதுரு, "யாரை விழுங்க லாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரியும் கெர்ச்சிக்கிற சிங்கத்திற்கு" ஒப்பிட்டார் (1 பேது. 5:8). "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக் கிறது" என்று யோவான் கூறினார் (1 யோவா. 5:19). இடைக்களம் எதுவும் இருப்பதில்லை. ஒன்று நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் கட்டுப்பாட்டின் கீழாகவோ அல்லது சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழாகவோ வாழ்ந்தாக வேண்டும்.*

*யாரேனும் சிலர், "இயேசு பிசாசானவனைத் தோற்கடித்து ஜெயங் கொண்டார் என்றல்லவா நான் நினைத்திருந்தேன்" என்று கூறலாம். ஆம், அவர் அவ்வாறே செய்தார். இருப்பினும், பிசாசும் அவனது அசுத்த ஆவி களும் தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கவில்லை. அவைகள் இன்னும் கடைசியாகவும் முழுமையாகவும் அழிக்கப்படவில்லை, எனவே அவைகள் மனித குலத்திற்கெதிரான தங்களின் "தேடி அழிக்கும்" ஊழியத்தில் ஒப்புக் கொடுத்தலுடன் நிலைநிற்கின்றன. அவைகள் தனி மனித வாழ்வுகளை அழிப்பதற்கு இன்னமும் கணிசமான வல்லமை கொண்டுள்ளன.*

*இரண்டாவது, விரோதியானவன் பொல்லாங்கனாக இருக்கின்றான். "வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" (6:12ஆ). வல்லமை என்பது தன்னிலேயே நல்லது அல்லது கெட்டதை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட முடியும். நமது விரோதியும் அவனது கூட்டாளிகளும் அழிப்பதற்கு தங்கள் வல்லமையைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அதைத் துன்மார்க்கத்தின் திசையில் திருப்பி விடுகின்றனர். அவர்கள் இருளான இந்த உலகத்தின் வல்லமை களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். அந்தகாரமே அவர்களின் ஆளுகைப் பகுதியாக உள்ளது. அவர்கள் மூர்க்கத்தனமான மற்றும் முற்றான துன்மார்க்கத்தினால், (தங்களால்) இயன்ற அளவுக்கு அதிகமான பேரழிவைத் தந்து சேதப்படுத்துகின்றனர்.*

*மூன்றாவது, விரோதியானவன் வஞ்சிக்கிறவனாக இருக்கின்றான். வசனம் 11ஐ மீண்டும் வாசியுங்கள். பவுல், "பிசாசின் தந்திரங்களோடு" எதிர்த்து நிற்கும் நிலைப்பாட்டைக் குறிப்பிட்டார். பிசாசு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, "நான் தான் பிசாசு, உங்கள் வாழ்வை அழிப்ப தற்கும், உங்களை நரகத்திற்குக் கொண்டு செல்வதற்குமே நான் இங்கு*

*வந்துள்ளேன்" என்று கூறிக் கொண்டிருக்க மாட்டான். அவன் இவ்வாறு மிகவும் நேரடியாக நம்மிடத்தில் வருவதில்லை. அவன் தந்திரங்களைப் பயன்படுத்துகின்றான். அவன் பொய்களை விரும்புகின்றான். அவன் வஞ்சனையில் மகிழ்கின்றான்.*

> *வஞ்சனையின் எஜமானன் நம்மைப் பாவம் செய்ய வைப்பதற்கு,*
> - *"இது அவ்வளவு மோசமானதல்ல. இது துன்பம் தராது" என்று நம்மை நம்பச் செய்கின்றான்.*
> - *யாரும் இதைக் கண்டுபிடிக்கப் போவதில்லை, எப்படியும் தேவன் இதை மன்னிக்கத்தான் போகிறார் என்று நம்மை நம்பச் செய்கிறான்.*
> - *அவன் நம்மைச் சோதிக்கின்ற விஷயம் நம்மை உண்மையில் திருப்தி செய்யும் என்று நம்மை நம்பச் செய்கின்றான்.*
> - *நாம் அக்கறை கொண்டிராதபடி நமது ஆவிக்குரிய உறுதிப்பாடு களைப் பலம் குன்றச் செய்கின்றான்.*
> - *நாம் உடனடியாக விடுதலையை மட்டும் விரும்பி அந்த விடுதலையை நமக்குக் கொடுக்கும் எதை வேண்டுமானாலும் செய்யுமளவுக்கு நம்மை மட்டுமீறிக் களைப்படையவும் இளைப்படையவும் செய்கின்றான்.*
> - *இதற்கு மேலும் சரியானது என்ன என்பதை நாம் அறியாதபடிக்கு நமது சிந்தனையைத் திருகச் செய்கின்றான்.[2]*

*விரோதியானவன் வஞ்சனை மிகுந்தவனாக, வழி விலக்கிச் செல்பவனாக, சூழ்ச்சிக்காரனாக இருக்கின்றான். அவன் ஒளியில் தூதன் போல் வேஷமிடுகின்றான் (2 கொரி. 11:14). அவனுடைய நிபுணத்துவமிக்க முறைமைகள் சூழ்ச்சிகளின் பல்வேறு வடிவங்களை உட்படுத்துவதாக உள்ளது. அவனுக்கு எதிராக வெற்றியடைவதற்கு நாம் கொண்டுள்ள வாய்ப்புகள் யாவை? நமக்கு நாமே வாய்ப்புகள் எதையும் கொண்டிருப்ப தில்லை. தேவனின்றி நாம் அவனுடன் போராட முயற்சி செய்தால், நாம் தோற்றுப் போவோம். இது பவுலின் வேண்டுகோளினுடைய அவசரத் தன்மையை விளக்கப்படுத்துகின்றது. விரோதியின் பலத்தை நாம் அறிகையில், நமக்கு தேவன் எவ்வளவாகத் தேவை என்பதை நாம் உணருகின்றோம்.*

*சற்று நிதானித்து விரோதியைப் பற்றி நினைத்துப் பாருங்கள். துன் மார்க்கத்தின் சக்திகள் எவ்வளவு பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள். பிசாசானவன் இந்த உலகத்தினுள் கொண்டு வந்த பொல்லாங்கு எத்தகையது என்று ஆழ்ந்த சிந்தித்துப் பாருங்கள். அவன் உங்களின் மீது தனது கண்ணை வைத்துள்ளான் என்பதை நினைவில் வையுங்கள். அவன் உங்களை விரும்புகின்றான், மற்றும் அவன் உங்களால் வெற்றிக் கொள்ளப்படுவதைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தவனாக இருக்கின்றான். பிசாசும் அவன் கூட்டாளிகளும் எவ்வளவு பொல்லாதவர் களாய் இருக்கின்றனர் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் தேவன் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒவ்வொன்றையும் எதிர்த்து நிற்கின்றனர், மற்றும் அவர்கள் உங்களைத் தங்களின் பக்கமாய் இழுக்க நாடுகின்றனர். அதை நீங்கள் முற்றிலுமாகப் புரிந்து கொள்கின்ற பொழுது,*

விரோதியானவன் எவ்வளவு வஞ்சகம் நிறைந்தவனாக இருக்கின்றான் என்பதையும் நினைத்துப் பாருங்கள். இந்தக் காலத்தின் பொல்லாத சக்திகள் உங்களைத் தேவனுக்கு எதிராக (மாறச்) செய்வதற்கு சாத்தியமான ஒவ்வொரு சூழ்ச்சியையும் பயன்படுத்தும். நாம் நமது விரோதியைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் நமது கண்களை அகலத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

*கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்று தேவன் நியமித்து வைத்துள்ள அவருடைய யுத்தத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது, பிசாசுடனான யுத்தத்தில் வெற்றியடைகின்றனர்.* இரண்டு விஷயங்களை நீங்கள் செய்யும்படிக்கு நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். முதலாவது, நீங்கள் தனியாக நின்று பிசாசானவனை எதிர்த்து நிற்க முயற்சி செய்ய மாட்டீர்கள் என்றும், உங்கள் சுயபலத்தை சார்ந்திருக்க முயற்சி செய்வதை நிறுத்துவதுதான் உங்களுக்குத் தேவையானது போல் செயல்படுவீர்கள் என்றும் ஜெபத்தில் தேவனிடம் உறுதிப்படுத்துங்கள்.

இரண்டாவது, நாள் முழுவதும், ஒவ்வொரு நாளிலும் நீங்கள் தேவனுடைய பலத்தை நாடுவீர்களென்று ஜெபத்தில் தேவனிடம் (உங்களை) ஒப்புக் கொடுங்கள். அவருடைய சர்வாயுத வர்க்கம் உங்களுக்குத் தேவை என்பதை அறிக்கை செய்யுங்கள். உங்களைப் பெலப்படுத்தும்படியும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நீங்கள் தரித்துக் கொண்டு அதைப் பயன்படுத்த உதவும்படியும் தேவனிடத்தில் கேளுங்கள். நீங்கள் ஒரு யுத்தத்தில் - உண்மையில் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில், வெல்பவரே எல்லா போராட்டத்தையும் மேற்கொள்ளும்—இருப்பதை அன்றாடம் நினைவூட்டும்படிக்குத் தேவனிடத்தில் கேளுங்கள், மற்றும் இயேசுவுடன் வெற்றியடையும் பக்கம் இருப்பதே உங்கள் விருப்பமாயிருக்க வேண்டும்.

நவீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடியிலான, பவுலின் வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> … தேவன் பலமுள்ளவராயிருக்கின்றார், நீங்களும் பலமுள்ளவராயிருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்புகின்றார். எனவே, எஜமானர் உங்களுக்கு நியமித்து வைத்துள்ள யாவற்றையும் - மிகச் சிறந்த பொருட்களால் ஆன ஆயுதங்கள் யாவற்றையும் எடுத்தக் கொள்ளுங்கள். மற்றும் அவற்றை நீங்கள், சாத்தான் உங்கள் வழியில் எறிகின்ற ஒவ்வொன்றிற்கும் எதிர்த்து நிற்கக் கூடும்படிக்குப் பயன்படுத்துங்கள். இது நாம் ஏதோ ஒரு மாலை நேர விளையாட்டுப் போட்டியைக் காணச் சென்று, வெளியில் வந்த பின்பு ஓரிரு மணிவேளையில் மறந்து போகின்ற விஷயம் அல்ல. இது பிசாசு மற்றும் அவனுடைய தூதர்கள் யாவருக்கும் எதிராக முடிவு வரையிலும் நடத்த வேண்டிய வாழ்வு அல்லது சாவு என்ற போராட்டமாக உள்ளது.
>
> ஆயத்தமாயிருங்கள். நீங்கள் உங்கள் சொந்த பெலத்தினால்

> *கையாள முடிவதைக் காட்டிலும் அதிகமானவற்றிற்கு எதிராக எழுந்துள்ளீர்கள். எல்லாம் முடிந்த பின்பும் வெற்றிக் கூக்குரல் உங்கள் காலடியில் இன்னமும் இருக்கும்படிக்கு தேவன் தருகின்ற ஒவ்வொரு ஆயுதத்திலிருந்தும் உங்களால் பெற முடிந்த அளவு எல்லா உதவியையும் பெற்றுக் கொள்ளுங்கள் (6:10-13;* TM*).*

*இயேசுவும், கிறிஸ்தவர்களுக்கு அவர் அளிக்கும் பெலமும் இன்றி வாழ்வை வாழ்வதற்கு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்களா? இயேசு இல்லாமல் நீங்கள் வெற்றியடைய இயலாது. அவரை நாடுங்கள். அவர் உங்களின் பெலமாயிருப்பார். பிசாசை எதிர்த்து நிற்க உங்களுக்கு அவர் பெலம் தருவார். அவர் தமது வெற்றியை உங்களுடன் பகிர்ந்து கொள்வார்.*

*இயேசு, தாம் அளிப்பதை நீங்கள் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. நீங்கள் ஒரு முடிவெடுக்கும்படி அவர் உங்களை அனுமதிக்கின்றார். அந்தகாரத்தை எதிர்த்துப் போரிடுவதில் நீங்கள் இன்னும் ஒரு கணம் கூடத் தனியே செலவிடத் தேவையில்லை. இந்தப் பொல்லாத உலகமானது உங்களை அழித்து விடும். உங்களுக்கு இயேசு தேவை. அவர் உங்களை எடுத்துக் கொள்ளத் தயாராக உள்ளார், ஆனால் நீங்கள் அவரிடம், “இயேசுவே நீர் எனக்குத் தேவை, நீர் எனது பாவங்களுக்காக மரித்தீர். எனது பாவங்களைக் கழுவ ஞானஸ்நானம் பெறவும், உமது பெலத்தினால் நடக்கத் தொடங்கவும் நான் விரும்பு கின்றேன்” என்று கூறத் தயாராயிருக்க வேண்டும்.*

*அநேகமாக, சில கிறிஸ்தவர்கள் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளாமலே ஆவிக்குரிய யுத்தங்களில் வெற்றியடைய முயற்சி செய்திருக்கக் கூடும். சாத்தான் உங்களை, தான் விரும்பிய இடத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றான்: ஆவிக்குரிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்துள்ள யாவற்றையும் நீங்கள் புறக்கணிக்க வேண்டுமென்று அவன் விரும்புகின்றான். தேவனிடத்தில் திரும்புங்கள், பிசாசானவனை உங்களை விட்டு ஓடும்படி கூறுங்கள். தேவன் உங்களுக்கு பெலம் அளிக்கத் தயாராக இருக்கின்றார். அவர் சர்வாயுதவர்க்கத்தை தயாராக வைத்துள்ளார். நீங்கள் சரியான முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக அவர் காத்துக் கொண்டிருக்கின்றார்.*

---

*குறிப்புகள்*

[1]*Endunamoo என்பது கிரேக்க வினைச் சொல்லாக உள்ளது. இது வசனம் 10ல், நிகழ்கால, செயப்பாட்டுவினை கட்டளைச் சொல்லாகத் தோன்றுகின்றது, இது நமக்கு இரண்டு முக்கிய விஷயங்களை கூறுகின்றது. (1) “பலப்படுங்கள்” என்பது தொடர்ந்து, நிற்காமல் நமது பகுதியில் நடைபெற வேண்டியதாக உள்ளது; மற்றும், (2) இது நமக்கு நடைபெறும்படி நாம் அனுமதிக்கின்ற ஒன்றாக உள்ளது. நம்மை நாமே பலப்படுத்திக் கொள்வதில்லை; ஆனால் நம்மை பலப்படுத்த அனு மதிக்கின்றோம்.* [2]Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 234.

# தேவனுடைய சர்வாயுத வர்க்கம் (6:13-18)

நமது காவலை வீழ்த்தி நம்மைப் பிடிப்பதற்காகச் சாத்தான் வாய்ப்புக் களைத் தொடர்ந்து தேடி வருகின்றான். சாத்தான் கருணையற்றவனாக இருக்கின்றான். நமது முந்திய பாடத்தில் நாம் அவன் நம்மீது எவ்வாறு யுத்தம் தொடுக்கின்றான் என்று கண்டோம். அவன் தன்னால் இயன்ற அளவுக்கு அதிகமான உயிர்களை அழிக்க நாடுவதை விட்டுக் கொடுக்க மாட்டான். சாத்தான் உங்கள் குடும்பத்தின் மிக மோசமான விரோதியாக இருக்கின்றான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவனுடைய தாக்கு தலுக்கு உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள். அது வரும், மற்றும் அது நீங்கள் உயிரோடிருக்கும் வரைக்கும் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கும்.

இது எபேசியருக்குப் பவுலின் கடைசி அறிவுறுத்துதல்களின் அவசரத் தன்மையை விளக்குகின்றது:

> ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தை யும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங் கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர் களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை யைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச் சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (6:13-18).

நீங்கள் உங்களை எப்பொழுதாவது ஆவிக்குரிய தாக்குதலின் கீழிருக்கக் கண்டதுண்டா? நீங்கள் ஊக்கம் இழந்து அல்லது மனத்தளர்வடைந்து இருந்திருக்கலாம் அல்லது பலமான ஒரு சோதனை தொடர்ந்து இருந்திருக்

கலாம். உங்கள் இளம் வயது மகனைப் பற்றி நீங்கள் பிரமிப்புக் கொண்டிருக்கலாம்: அவன் போதைப் பொருட்களைப் பயன்படுத்திப் பார்க்கும்படி அவனது நண்பர்கள் தூண்டிக் கொண்டிருக்கின்றார்களா? அவள் பாலியல் ரீதியாகத் துடிப்புடன் செயல்படும்படி இணங்கச் செய்ய அவள் தோழிகள் அவளிடத்தில் முயற்சி செய்கின்றார்களா? உள்ளூர் சபை பற்றிய விஷயம் என்ன? மனிதர்கள் கருத்து வேறுபாடு கொண்டவர்களாய் இருக்கின்றனர் என்பதினால் மட்டும் கருத்தொருமைப்பாடு இல்லாத நிலை நிலவுகின்றதா அல்லது பிசாசானவன் ஐக்கியத்தை உடைக்க முயற்சி செய்கின்றானா? உங்கள் வாழ்வானது பெருங்குழப்பம் தவிர வேறல்ல என்பது போலவும், நீங்களும் உங்களைச் சுற்றி இருப்பவர்களும் இறங்குமுகமாய்ச் செல்வது போலவும், உங்கள் உலகமானது பிரிந்துள்ளது போலவும் காணப்பட்டால், நீங்கள் ஆவிக்குரிய தாக்குதலின் கீழ் இருக்கலாம். பவுலின் வார்த்தைகளில் உங்களுக்கு நற்செய்தி அடங்கியுள்ளது. நீங்கள் திருப்பியடிக்க முடியும். இதைப் பற்றி நீங்கள் சிலவற்றைச் செய்ய இயலும். நீங்கள் வெற்றியடைய முடியும். இதைப் பற்றி நீங்கள் சிலவற்றைச் செய்ய இயலும். நீங்கள் வெற்றியடைய முடியும்!

*கிறிஸ்தவர்கள் தேவன்மீதும் அவர் அளிக்கின்ற ஆயுதங்கள் மீதும் சார்ந்திருக்கையில் பிசாசின் தாக்குதல்களை வெற்றிக் கொள்ளுகின்றனர்.*

## யுத்தத்திற்கான ஆயுதங்கள்

ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆவிக்குரிய ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. உங்கள் குடும்பம் ஆவிக்குரிய தாக்குதலின் கீழ் இருக்கும் பொழுது துப்பாக்கிகளும், பாதுகாப்பு அமைப்புக்களும் மற்றும் கராத்தே வகுப்புக்களும் உங்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பைத் தராது. ஆவிக்குரிய தாக்குதல் என்பது இயல்பான காணக்கூடிய நமது இந்த உலகத்திற்குப் புறம்பாக உள்ள இன்னொரு வட்டாரத்திற்கு உரியதாக இருக்கிறது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் காணப்படாத, ஆவிக்குரிய சக்திகளுடனான நமது போராட்டத்தைப் பற்றி இருமுறை குறிப்பிட்டார். அதிகாரம் 2ல் பவுல் தம் வாசகர்களுக்கு கிறிஸ்து இல்லாமல் அவர்கள் வாழ்ந்த பழைய வாழ்வைப் பற்றி நினைவூட்டினார்: “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்” (2:1, 2). பவுல் அர்த்தப்படுத்தியது என்ன? அவரது வாசகர்கள் ஒரு காலத்தில், (ஆவிக்குரிய இந்த) பிசாசுடனான யுத்தத்தில் தோல்வியடையும் பக்கத்தில் இருந்தனர்.

கிறிஸ்துவுக்குள் நாம் வெற்றியின் பக்கமாக வந்து சேர்ந்திருக்கின்றோம். இது யுத்தம் முடிந்து விட்டதாக அர்த்தப்படுத்துகின்றதா? இல்லை, பிசாசு இன்னமும் இருக்கின்றானே. அவனைப் பற்றிக் கவலைப்படாதிருக்க நான் முடிவு செய்தால், அவன் என்னை வெற்றிக் கொண்டு விடுவான். இருப்

பினும், நான் தேவனுடைய வசனத்தைக் கவனித்தால், நான் தேவனுடைய பலத்தினிடத்தில் நெருங்கி வந்து பிசாசை தோற்கச் செய்வதற்கு அவருடைய (தேவனுடைய) சர்வாயுத வர்க்கத்தைப் பயன்படுத்த முடியும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் உள்ளடங்கியிருப்பவைகள் எவை? ஆறு விஷயங்களைப் பவுல் பட்டியலிட்டார்.

*சத்தியம் என்னும் கச்சையே முதலாவதாக உள்ளது.* "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் ..." (வ. 14அ) NIV வேதாகமத்தில், "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் இடுப்பை சுற்றிக் கட்டிக் கொண்டவர்களாகவும் ..." என்று கூறப்படுகின்றது. பவுலின் நாட்களில் போர் வீரனின் ஆயுதவர்க்கங்களில் அவனது இடுப்புக் கச்சை என்பதும் இருந்தது. இடுப்புக் கச்சை என்பது இரண்டு நோக்கங்களுக்குப் பயன்பட்டது: (1) அணிவகுத்துச் செல்லும் பொழுதோ அல்லது போரிடும் பொழுதோ அவனது இயக்கங்களுக்குத் தடையில்லாத வகையில் அவனுடைய உடைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்வதற்காக, மற்றும் (2) அவனுடைய பட்டயத்தை சரியான இடத்தில் செருகி வைத்துக் கொள்வதற்காக. ஒரு படைவீரன் தனது இடுப்புக் கச்சையை கட்டிக் கொள்கின்றான் என்றால், அவன் யுத்தம் செய்யத் தயாராயிருக்கின்றான் என்று அர்த்தப் படுகின்றது. இது வேலையைச் செய்ய தன்னம்பிக்கையுடன் இருத்தலை அறிவிக்கின்றது.

பிசாசானவனை நாம் எதிர்த்து நிற்கின்ற பொழுது, அச்செயலை நாம் தன்னம்பிக்கையுடன் - சத்தியத்துடன் கட்டப்பட்டுள்ள தன்னம்பிக்கையுடன் செய்ய முடியும். சத்தியம் என்பது உபதேசம் மற்றும் நேர்மை ஆகிய இரண்டு விஷயங்களையும் குறிக்கின்றது. நாம் தேவனுடைய வசனத்தை விசுவாசிப்பதோடு கூட, ஒவ்வொரு நாளும் அதன்படியே வாழ உண்மையாகவே நாட வேண்டும். நாம் தேவனுடைய சத்தியத்தை அறிவிப்பதோடு கூட, நமது வாழ்வும் அதைக் காண்பிக்க வேண்டும். சத்தியத்தின் உபதேசம் மற்றும் அதன்படி வாழ்வதில் உண்மைத் தன்மை என்ற இந்த இணைவானது பிசாசுடன் யுத்தம் செய்வதற்குக் கிறிஸ்தவத் தன்னம்பிக்கையையும் ஆயத்த நிலையையும் தருகின்றது. சத்தியத்தை மாத்திரம் அறிவது என்பது போதுமானதல்ல. அதின்படி ஜீவிப்பதில் நாம் நேர்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

*நீதியென்னும் மார்க்கவசம் என்பது ஆயுதவர்க்கத்தின் இரண்டாவது விஷயமாக உள்ளது.* "நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்தவர்களாக" (வ. 14ஆ) நாம் உறுதியாக நிலைநிற்க வேண்டும். போர் வீரன் ஒருவனின் மார்க்கவசம் என்பது அவனுடைய உடலின் முன்பகுதியை மூடி, காத்து நிற்கும் ஒரு உலோகத் துண்டாக இருக்கின்றது. தேவன் நமக்கு நீதியென்னும் பாதுகாப்பைக் கொடுத்துள்ளார் என்று பவுல் கூறினார். நீதி என்பது, நாம் தேவனுடன் நிலைநிற்பதை எடுத்துரைக்கின்றது. நாம் பாவம் செய்திருந்தாலும், தண்டனைக்குத் தகுதியானவர்களாயிருந்தாலும், தேவன் கிறிஸ்தவர்களுக்கு நீதியை கிறிஸ்துவுக்குள் அறிவித்துள்ளார். நாம், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி. 5:21) என்று வாசிக்கின்றோம்.

*நாம் நீதியாக வாழ்வதைத் தேர்ந்து கொள்ளவும் முடியும். நாம் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் வாழ்வதைத் தேர்ந்து கொள்ள முடியும். அந்தத் தேர்ந்து கொள்ளுதலானது ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் ஏற்படுத்தப்படும் பொழுது, பிசாசானவன் நமது வழியில் அனுப்புகின்ற எதையும் தவிர்த்துச் செல்ல அது நமக்கு உதவும்.*

*ஆவிக்குரிய பாதரட்சை என்பது மூன்றாவது விஷயமாக உள்ளது. நாம், "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாய்" (6:15) உறுதியாக நிற்கின்றோம். ரோமப் போர்வீரர்கள் திறந்த பாதங்களைக் கொண்ட பாதிக் காலணிகளை அணிந்தனர். அந்தக் காலணிகளின் அடிப்பகுதியில் ஆணிகள் பதிக்கப் பட்டிருக்கும். அவைகள் இன்றைய நாட்களில் கால்பந்து வீரர்களால் அணியப்படும் விசேஷித்த காலணிகளைப் போன்றே பயன்பட்டன. அவைகள் படைவீரர்களுக்கு பாதையில் சரியாக இயங்கப் பயன் பட்டதுடன், அவர்கள் யுத்தம் செய்கையில் தவறி விழுந்துவிடாதபடியும் அவர்களைக் காத்தன. அவர்கள் பெரும்பாலும் ஒருவர் இன்னொரு வருடன், கைப்பிடிச் சண்டை ஆகியவற்றிலேயே போரிட்டபடியால், ரோமப் போர் வீரர்களின் காலணிகள் அவர்களுக்கு அனுகூலம் தந்தன.*

*கிறிஸ்தவர்கள் போராட்டத்தில் வீழ்ச்சியடைவதில் இருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்குத் தேவனிடத்தில் இருந்து சமாதானத்தைப் பெற்றுள்ளனர். முதலாவது, இது தேவனுடன் சமாதானமாக உள்ளது: "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத் தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1). நாம் தேவனுடைய சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோம். இந்த சமாதானமானது எல்லா புரிந்து கொள்ளுதலையும் கடந்து செல்கின்றதாகின்றது. இது, "உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" எல்லாப் புத்திக்கும் மேலாக தேவ சமாதானமாக உள்ளது (பிலி. 4:7). நன்றாயிருக்கும் உணர்வு என்பது தேவனுடன் நெருங்கி நடத்தலி லிருந்து வருகிறது, மற்றும் பிசாசானவன் இதை வெறுக்கின்றான். அவன் நம்மைப் பெரும் குழப்பத்தில் வைத்திருக்கவே - நாம் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறித்தும், நமது நியமனப் பணிகளைக் காத்துக் கொள்வது குறித்தும் நம்மைக் கவலையில் ஆழ்த்தி வைத்திருக்க, சுகவீனங் கள் குறித்து சஞ்சலப்பட வைக்க, நிகழ்த்த வேண்டிய பணிகள் குறித்த மன அழுத்தத்தில் நம்மை கவிழ்த்துப் போட, மற்றும் உணர்வுப்பூர்வமாக களைப்படையச் செய்யவே - விரும்புகின்றான். பிசாசானவன் நமது அமைதியைக் களவாட விரும்புகின்றான். போராட்டத்தை எதிர் கொள்ளுகையில் தேவனிடமிருந்து சமாதானத்தைப் பெறுவது எப்படி என்று கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளதைக் காணுதல் என்பது அவனை ஊக்கம் குறையச் செய்கிறது.*

*விசுவாசத்தின் கேடகம் என்பது நான்காவது விஷயமாக உள்ளது. "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும்*

கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நில்லுங்கள்” (வ. 16). ரோமப் போர்ச் சேவகன் ஒருவனின் கேடயமானது மிகப் பெரிதானதாயிருந்தது. அது ஏறக்குறைய அவனது உயரமும் அகலமும் உடையதாயிருந்தது. அது அவனை முழுமையாக மூடி அவனுக்குப் பாதுகாப்பை அளித்தது, விசேஷமாக, பறந்து வரும் அம்புகளில் இருந்து அவனைப் பாதுகாத்தது. இதைத் தான் நமது விசுவாசமும் நமக்குச் செய்கின்றது. விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு பிசாசின் அம்புகளுக்கு - பயம், சோர்வு, புறக்கணிப்பு, விமர்சனம் மற்றும் அவன் நம்மைப் புண் படுத்துகின்ற எல்லாவற்றிற்கும்—எதிராக அவற்றைப் பயன்படுத்துகின்றது.

சமீபத்தில், கிறிஸ்தவர்களின் ஒரு குழுவினராக தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஒன்றுகூடிப் படித்தோம். எங்களில் ஒவ்வொருவரும் அவரவர் தம் வாழ்வில் அனுபவித்தவற்றின் காரணமாக உரிமைகோரத் தேவையான வாக்குத்தத்தம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கு மானவைகளாக உள்ளன என்று அறிவது ஒரு மாபெரும் உற்சாக மூட்டுதலாக இருந்தது. அவைகள் நம்மைத் தெரிவு செய்து, நாம் இயங்கும் படி காத்துக் கொண்டு, நம்மைப் பொல்லாங்கிலிருந்து பாதுகாக்கின்றது.

*இரட்சணியமென்னும் தலைச் சீரா,* ஆயுதத்தின் ஐந்தாவது பொருளாக உள்ளது. ‘‘இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் ... எடுத்துக் கொள்ளுங்கள்” (6:17அ). தலைச் சீரா என்பது, போர் வீரனின் தலையை மரண அடிகளிலில் இருந்து பாதுகாக்கின்றது. தேவனிடமிருந்து நமக்கு வருகின்ற இரட்சிப்பானது, தேவன் நம்மிடத்தில் “நீங்கள் விசுவாசத்தில் நடப்பதைக் காத்துக் கொண்டால், பிசாசானவன் ஒருக்காலும் உங்களுக்கு மரண அடி கொடுக்க முடியாது. அவன் உங்களின் இரட்சிப்பை எடுத்துப் போட முடியாது’’ என்று கூறுகின்ற வழியாக உள்ளது. நீங்கள் இரட்சிப்புக்கு உங்களின் முதுகைத் திருப்பிக் காட்ட முடியும், ஆனால் பிசாசானவன் அதை உங்களிடத்திலிருந்து எடுத்துப் போட்டு விட முடியாது. இரட்சிப்பின் தலைச் சீராவை தேவன் உங்களுக்குக் கொடுக்கின்றார். கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிற நித்திய ஜீவனைப் பெறுவோம் என்று தைரியமாயிருக்க முடியும்.

*ஆவியின் பட்டயம்* என்பது ஆறாவது விஷயமாக உள்ளது. தேவனிடத்தில் இருந்து வருகின்ற ஆயுதங்களில் ‘‘தேவ வசனமாகிய ஆவியின் பட்டயமும்” (6:17ஆ) உள்ளது. ஆறு ஆயுதங்களில் பட்டயம் மட்டுமே தற்காப்புக்கும் தாக்குதலுக்கும் பயன்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. தேவ வசனம் அப்படிப்பட்டதாக உள்ளது. அது பாதுகாப்பு மற்றும் தாக்குதல் என்ற திறன்களைக் கொண்டுள்ளது. வனப் பகுதியில் இயேசு சாத்தானுடனான தம்முடைய நேரடியான சந்திப்பில் வேத வசனத்தைச் சுட்டிக் காண்பித்தது போல (மத். 4:1-11), நாம் சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கு (நம்மைப்) பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தேவ வசனத்தைப் பயன்படுத்துகின்றோம். தாக்குதலின்போது, நாம் அவருடைய வசனத்தை சுவிசேஷ ஊழியத்தில் உபயோகிக்கிறோம். சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பலனாயிருக்கிறது (ரோமர் 1:16).

அந்தகாரத்தின் இராஜ்யத்திலிருந்து மக்களை வெளியே கொண்டு வந்து, அவர்களை தேவனுடைய இராஜ்யத்திற்குள் கொண்டு வந்து சேர்க்க நாம் அவருடைய வசனங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் பிசாசுடன் யுத்தத்தை மேற்கொள்வதற்கு வசனம் நமக்கு உதவுகின்றது.

இந்த ஆறு விஷயங்களும் ஒன்றிணைந்து தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை ஏற்படுத்துகின்றன. தேவன் இவற்றை அளிக்கின்றார், ஆனால் நாம் இவற்றை அணிந்து கொள்ள வேண்டும். நீங்கள் சர்வாயுதவர்க்கத்தை அணிந்திருக்கின்றீர்களா?

தேவனுடன் உண்மையான மற்றும் ஒன்றையும் நமக்கென்று பின் வைத்துக் கொள்ளாத நடையில் இருந்து வருகின்ற தைரியத்துடன் நீங்கள் பிசாசானவனை எதிர்கொள்ளுகின்றீர்களா? நீங்கள் ஏற்படுத்தும்படி தேவன் விரும்புகிறவைகள் என்று நீங்கள் அறிந்துள்ள தெரிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு அன்றாட ஒப்புக் கொடுத்தலுடன் நீங்கள் பிசாசிடத்தில் போராடுகின்றீர்களா? உங்கள் உணர்வுகளின் மீதான பிசாசின் தாக்குதல்களை நீங்கள் தேவன் தருகின்ற அமைதியான சமாதானத்துடன் எதிர்த்து நிற்கின்றீர்களா? சாத்தான் உங்கள் மீது எறிகின்ற எந்த ஒரு ஆயுதத்தில் இருந்தும் உங்களைக் காத்துக் கொள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கின்றீர்களா? உங்கள் இரட்சிப்பின் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களா? தேவனுடைய வசனத்தை உங்கள் வாழ்வில் பயன்படுத்தும்படிக்கு அதில் அன்றாடம் உங்கள் நேரத்தைச் செலவிடுகின்றீர்களா? நீங்கள் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்திருக்கின்றீர்களா? நாம் போராடுவதற்குத் தேவன் நமக்கு ஆயுதங்களைக் கொடுக்கின்றார்.

## போராட்டத்திற்காக ஜெபம்

தேவன் தம்முடைய மக்களுக்கு அளிக்கின்ற வலிவார்ந்த இன்னொரு ஆதார மூலம் பற்றிப் பவுல் குறிப்பிட்டார். தேவன் தம்முடைய மக்களுக்குப் பின்வருவதைத் தருகின்றார்: “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்” (6:18). போராடுவதற்காக ஜெபத்தைத் தேவன் நமக்குக் கொடுப்பதாகப் பவுல் கூறினார். ஏன்? ஏனென்றால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்து கொள்வதற்கு நமக்கு ஜெபம் தேவைப்படுகின்றது. ஜெபம் என்பது நாம் தேவனைச் சார்ந்திருப்பதை விளக்குகின்றது ஜெபிக்கத் தவறுவது என்பது, “எனக்குத் தேவன் தேவையில்லை. அவரின்றியே நான் நன்கு செயல்பட முடியும். நான் சொந்தமாகவே செயல்பட முடியும்” என்று கூறுவதாக உள்ளது. அந்த எண்ணப்போக்கு ஆவிக்குரிய தோல்வியை உத்தரவாதப் படுத்துகின்றது. நம்மில் எவரும், பிசாசுடனான போராட்டத்தில் நமது சொந்த செயல்பாட்டினால் வெற்றி கொள்ள இயலாது. ஜெபம் என்பது நம்மை தேவன் மீது கவனம் செலுத்தும்படி காத்துக் கொள்கின்றது.

*6:18ல் ஜெபம் பற்றிய பவுலின் அறிவுறுத்துதலில் உள்ள "எல்லா" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அவரது வார்த்தைகள், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வாழ்வில் ஜெபத்திற்கான புரிந்து கொள்ளுதலில் "எல்லா" என்ற வார்த்தையின் பின்வரும் நான்கு பயன்பாடுகளை நோக்கி நமது கவனத்தை இழுக்கின்றது.*

*1. நாம் எல்லா வேளைகளிலும் ஜெபிக்க வேண்டும். பிசாசுக்கெதிராகப் போராடி உறுதியாக நடப்பதில் நாம் ஜெபத்தை அன்றாட ஒழுங்கு முறையாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*2. நாம் எல்லா வகையான ஜெபங்களுடனும் விண்ணப்பங்களுடனும் ஜெபிக்க வேண்டும். நமது வாழ்வில் நடப்பவற்றின்படி, தேவனுடனான நமது செய்தித் தொடர்பில் பல வகைகள் தேவை. நமது சூழ்நிலைகள் நமக்கு அறிக்கையிடுதல், நன்றி செலுத்துதல், பரிந்து பேசுதல், வழிபடுதல், துதித்தல் அல்லது வேறு சில வகையான ஜெபம் ஆகியவை நமக்குத் தேவை என்று அழைக்கலாம்.*

*3. நாம் எப்போதும் விழிப்புடன் ஜெபிக்க வேண்டும். இயேசு கெத்சமெனேயில் ஜெபிக்கையில் சீஷர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். அதுவே மக்களின் போக்காக உள்ளது. நாம் ஜெபிக்க வேண்டிய வேளையில் உறங்குகின்றோம் அல்லது அவசரத் தேவைக்கான நமது உணர்வை இழந்து போகிறோம்.*

*4. நாம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். பிசாசுடனான நமது போராட்டத்தில் நாம் ஒன்றுகூடி ஊழியம் செய்வதைக் காண வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். ஒருவர் பிறருக்காக ஜெபிக்கின்ற ஒன்றுபட்ட (தேவனுடைய) குடும்பம் சாத்தானின் தாக்குதலுக்கு எதிராகப் பலத்துடன் நிலைநிற்க முடியும்.*

*ஆண்டுகளினூடே நான் ஜெபிப்பதில் நடந்து கொள்ள வேண்டிய பிரகாரம் நடக்க என்னை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்குப் போராடியிருக்கின்றேன். மற்ற கிறிஸ்தவர்கள் ஜெபித்தலில் தங்கள் சொந்தத் தோல்விகளை என்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஜெபம் என்று வருகின்ற போது நாம் ஏன் குறைவு படுகின்றோம்? பல காரணங்களை நாம் நினைக்க முடியும் என்று நான் யூகிக்கின்றேன், ஆனால் தேவனை விரும்புதல் என்ற புத்தகத்தில் ஜான் பைப்பர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது என்ன என்பதை நாம் இங்கு கண்ணோக்குவோம்:*

> *நான் தவறாகக் குறிப்பிடாத பட்சத்தில், தேவனுடைய பிள்ளைகளில் பெரும்பாலானோர் குறிப்பிடத்தக்க ஜெப வாழ்வைக் கொண்டிராததற்குக் காரணம் நாம் அதை விரும்புவதில்லை என்பதல்ல, ஆனால் நாம் அதற்குத் திட்டமிடுவதில்லை என்பதே ஆகும். நீங்கள் நான்கு வாரங்கள் விடுமுறையில் கழிக்க விரும்பினால், திடீரென்று ஒரு கோடைக்கால நாளின் காலைப் பொழுதில் எழுந்து, "ஏய்! இன்று நாம் கிளம்பிச் செல்லலாம்!" என்று கூறமாட்டீர்கள் தானே? ஏனென்றால், நீங்கள் ஏதொன்றையும் ஆயத்தப்படுத்தாமல் இருக்கிறீர்கள் அல்லவா! நீங்கள் எங்கே செல்ல வேண்டும் என்று அறியவில்லை. ஏதொன்றும் திட்டமிடப்படவில்லையே!*

ஆனால், நம்மில் பலர் ஜெபித்தல் என்பதில் இவ்வாறே நடந்து கொள்கின்றோம். நாம் ஒவ்வொரு நாளும் எழுந்து நமது வாழ்வில் ஜெபவேளை என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்க வேண்டும் என்று உணருகின்றோம், ஆனால் எப்பொழுதும் ஒன்றும் தயாராக இருப்பதில்லை. நாம் எங்கு செல்ல வேண்டும் என்று அறிவதில்லை. ஒன்றும் திட்டமிடப்பட்டிருப்பதில்லை. நேரம் இல்லை. இடமும் இல்லை. முறையான செயல்கள் எதுவும் இருப்பதில்லை. மற்றும், ஜெபத்தில் திட்டமிடுதலுக்கு எதிர்மறையான செயலானது ஆழமாகப் பாய்ந்தோடுகின்ற, தானாக எழும்புகின்ற அனுபவங்களாக இருப்ப தில்லை என்று நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம். திட்டமிடுதலுக்கு எதிர்மறையான செயலானது பள்ளம் போன்றதாக உள்ளது. நீங்கள் விடுமுறை ஒன்றிற்குத் திட்டமிடவில்லையென்றால், அநேகமாக நீங்கள் வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்! இயல்பாகத் திட்டமிடப்படாத ஆவிக்குரிய வாழ்வின் ஓட்டமானது வலிவார்ந்த தன்மை மிகவும் ஆழத்தில் மூழ்கிவிடும் நிலை என்பதாக உள்ளது. ஓட வேண்டிய ஓட்டமும் போராட வேண்டிய யுத்தமும் உள்ளது. உங்கள் ஜெப வாழ்வில் புதுப்பித்தல் தேவையென்றால், அதைக் காண நீங்கள் திட்டமிட வேண்டும்.

ஆகையால், எனது எளிய புத்திமதி பின்வருமாறு: நமது முன்னுரி மைகளையும் அவற்றில் ஜெபம் எவ்வாறு பொருந்துகிறது என்பதை யும் இன்றே திரும்பவும் நினைத்துப் பார்க்கச் சற்றே நேரம் செலவிடுவோம். சில புதிய தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். தேவனுடன் சில புதிய செயல் திட்டங்களை முயற்சி செய்யுங்கள். நேரம் ஒதுக்குங்கள், இடத்தை ஒதுக்குங்கள். உங்களை வழிநடத்த வேதவசனத்தின் பகுதியொன்றைத் தேர்ந்து கொள்ளுங்கள். மும்முர மான வேலை நாட்கள் உங்கள் மீது கொடுங்கோன்மை செலுத்த அனு மதிக்காதீர்கள். வாழ்வின் ஓட்டத்தின் இடையில் நம் யாவருக்கும் திருத்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்றைய நாளை ஜெபத்திற்குத் திரும்பும் நாளாக்குங்கள் - இதை தேவனுடைய மகிமைக்காகவும் உங்கள் சந்தோஷத்தின் நிறைவிற்காகவும் செய்யுங்கள்.[1]

## முடிவுரை

பிசாசுக்கு எதிராகப் போராடுவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுவீர்கள்? உங்கள் குடும்பம் ஆவிக்குரிய தாக்குதல்களின் கீழ் வருகின்ற பொழுது அதை(குடும்பத்தை)ப் பாதுகாக்க நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்தகாரத்தின் சக்திகளுக்கு எதிராக “முடிவு பரியந்தமான இந்தப் போராட்டத்தில்” சக கிறிஸ்தவர்களுக்கு நீங்கள் எவ்விதத்தில் உதவ முடியும்?

அப்போஸ்தலரின் வார்த்தைகளில் நீங்கள் உங்கள் பதிலைக் கண்டறிய முடியும்:

ஆயத்தமாயிருங்கள். நீங்களாகவே கையாள முடிவதற்கு அதிகமான வற்றின் ஒன்றிற்கெதிராக நீங்கள் இருக்கின்றீர்கள். எல்லாம் முடிந்த பின்பு உங்கள் காலடியில் இன்னும் வெற்றிக் கூக்குரல் இருக்கும்

*படிக்கு, தேவன் கொடுத்திருக்கின்ற ஒவ்வொரு ஆயுதத்திலிருந்தும் உங்களால் இயன்ற அளவுக்கு எல்லா உதவியையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், மற்றும் இரட்சிப்பு ஆகியவை (வெறும்) வார்த்தைகளை விட மேலானவை களாக உள்ளன. அவற்றை எவ்வாறு பயன்படுத்துவதென்று கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய வாழ்வு முழுவதும் இது உங்களுக்குத் தேவை. தேவனுடைய வசனமானது இன்றியமையாத ஆயுதமாக உள்ளது. அதே போன்றே, தொடர்ந்து நடக்கின்ற இந்த யுத்தத்தில் ஜெபமும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. வலுவாக நீண்ட நேரம் ஜெபியுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளுக்காக ஜெபியுங் கள். உங்கள் விழிகளைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். எவரொரு வரும் பின்னால் வீழ்ந்து போகாதபடி அல்லது வெளியேறிவிடாதபடி ஒவ்வொருவரும் பிறருடைய ஆவிகளைக் காத்துக் கொள்ளுங்கள் (6:13-18;* TM*).*

---

குறிப்பு

[1]John Piper, *Desiring God* (Portland, Oreg.: Multnomah, 1986), 150-51, quoted by R. Kent Hughes, *Ephesians: The Mystery of the Body of Christ* (Wheaton, Ill.: Crossway Books, 1990), 257-58.